ஜோதிஷ பாவத்

திரய நிர்ணயம்

ஸ்ரீ தேவகேரள ஜோதிஷம்

O. P. லக்ஷ்மீ நரஸிம்மாசாரியர்

அவர்களால் எழுதப்பட்டது.

சென்னை:

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார்

அவர்களால் வெளியிடப்பட்டது

1946

ஸ்ரீ

ஜோதிஷ பாவத்திரய நிர்ணயம்

இது
ஓரத்தி-பத்தங்கி. கிருஷ்ணமாசாரியர் குமாரர்
ஸ்ரீ தேவகேரள ஜோதிஷம்
O. P. லக்ஷ்மீ நரஸிம்மாசாரியர் அவர்களால்
எழுதப்பட்டது.

சென்னை, "ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1946

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை ரூ. 1-12-0.

PRINTED AT THE
"ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET
SOWCARPET, MADRAS.

முன்னுரை

கடவுளின் சிருஷ்டியிலுள்ள சகல ஜீவராசிகளிலும் மிகச் சிறந்தது மானிட ஜன்மமே. இப்படிப்பட்ட மானிட ஜன்மத்தில் பிறத்த லரிது. அதிலும் கூன், குருடு, செவிடு, நொண்டி, முடம் முதலியன இல்லாமல் பிறத்தலரிது. அப்படிப் பிறந்தும் சிலர் வெகு சுகமாக கஷ்ட மென்பதையே யறியாமலும், பலர் சுகமின்றிக் கஷ்டத்தையே அனுபவித்தும் சிலர் நடுநிலைமை யாய் வாழ்ந்தும் வருவது சகஜமாக இருக்கிறது. இதற்குக் காரணம் அவரவர்களின் பூர்வஜன்ம கர்மானுகுணமான பலனைத்தான் இந்த ஜென்மத்தில் அடைகிறார்கள் என்று சொல்லலாம். அப்படிக் கூறுவது பொருந்தாது. ஏனெனில் இந்த பூர்வஜன்ம கர்மங்களையும் அவற்றின் பலனையும் இனி வரப்போகும் பலன்களையும் தற்காலம் நடப்பதையும் ஆகிய முக்கால பலன்களையும் (சுபாசுப பலன்களை) நிதரிசனமாகக் காணும்படியாக அனேகவிதமாக சூரியன் முதலான தேவதைகளும் வஸிஷ்டர் முதலிய மகரிஷிகளும் மற்றும் பல மகான்களும் பற்பல ஜோதிட கிரந்தங்களை உலகிற்கு உபகாரமாக சுலபமாகவும் கடினமாகவும் வெகுவாக வடமொழிக் கிரந்தங்களை(யே) இயற்றி யிருக்கின்றனர். அப்படிப் பட்ட அருமையான ஜோதிட கிரந்தங்களில் உள்ள வெகு ரகசியங்கள் உலகிற்குப் பயன்படாமலும் தங்களுக்கும் யாதொரு பிரயோஜனமு மின்றியும் சிலர் சிலவற்றை வைத்துக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட அருமையான நூல்களில் பலவற்றைத் தற்போது நமது அரசாங்கத்தார் ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட்டு லைப்ரேரியில் சென்னையிலும், மற்றும் பல ஊர்களிலும் லைப்ரேரிகளில் அனேகமாக கை யெழுத்துப் பிரதிகளைச் சேமித்து வைத்து அவைகளைப் பொது ஜனங்களுக்கு உபயோகமாகும்படியாதொரு செலவுமின்றிப் படிக்கவும், அவற்றிலுள்ள சாராம்சங்களை உலகத்தாருக்கு உபயோகமாகும்படி உபயோகித்துக்கொள்ளவும் உரிமை வழங்கி யிருக்கின்றனர் மேற்படி சென்னை லைப்ரேரியில் நான் சுமார் ௨ வருஷங்களாக 'ஆராய்ச்சி செய்து சில சிறந்த ஜோதிஷ நாடிக் கிரந்தங்களை வெகு கஷ்டப்பட்டு நகல் எடுத்தும், மற்றும் சில பொதுக் கிரந்தங்களை எனது நண்பர்களிடமிருந்தும் சேமித்து வைத்துக்கொண்டும், அதனுலும் எனது ஆசாரியரிடமிருந்து பெற்றுக்கொண்டவைக

னாலும், எனக்கு ஜோதிஷத்தில் உள்ள சுமார் 20 வருஷ அனுப வத்தினுலும், மேற்படி ஆராய்ச்சியில் லைப்ரெரியில் வெகு கிரந்தங் களைச் சோதித்து அதனுலும், ஆனந்தபோதினி பஞ்சாங்க ஆசிரியர் C. G. ராஜன் B. A. அவர்களால் வெளியிடப்பட்ட ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் 1, 2 இவைகளுக்குத் தேவையான விஷயங் களைத் தேடிச் சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்துக் கொடுத்து அப்புஸ்தகங்கள் வெளியாகும்வரை உதவிபுரிந்த வகையில் ஏற் பட்ட விசேஷ அனுபவத்தினுலும் இன்றைய உலகிற்குப் பிரதான மான சில புத்தகங்களை எழுதி வெளியிடத் துணிந்து வெகு இன் னல்களுக் கிடையில் வெகு கஷ்டப்பட்டு 'ஜோதிட பாவத்திரய நிர்ணயம்' என்னும் இப் புத்தகத்தை முதன்முதலாக வெகு எளி தில் யாவரும் அறிந்து கொள்ளும்படி எழுதலானேன். ஆதலால் அறிஞர்கள் யாவரும் இதிலுள்ள குற்றங்குறைகளை நீக்கிக் குணத் தைமட்டும் கிரகிக்கும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

நிற்க, மானிட ஜன்மத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உலகில் உயிர் வாழும்வரையில் சிந்திக்கக்கூடியவை பற்பல இருந் தாலும் முக்கியமாக அடியிற்கண்ட மூன்று விஷயங்கள்தான் வெகு அவசியமானவையாகும். அவையாவன, முதலாவது ஜீவித் திருக்கும் வரையில் குடும்ப வாழ்க்கையை நடத்த சம உரிமை யுள்ள மனைவி, 2-வது ஜீவனம் செய்வதற்கு ஒருவித தொழில் அல்லது ஒரு வழி, 3-வது தம் ஆயுட்காலம் ஆகிய இம்மூன்றுமே யாம். முதலாவதாக, ஜாதகங்களில் ஏழாமிடமே விவாகம், புருஷன் மனைவி இவர்களின் வாழ்க்கையின் அன்னியோன்னியம் இவை களை உணர்த்தும் ஸ்தானமாகும். ஏனெனில் ஒவ்வொரு குடும்பத் திலும் குடும்ப வாழ்க்கையை நடத்த ஸ்திரீகள்தான் பிரதானம். 'இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை' என்பதற் கேற்ப ஸ்திரீகள் தாம் கிரகலக்ஷ்மீ எனவும், ஸகதர்மிணீ எனவும், தர்ம பத்னீ எனவும், கிரகிணீ எனவும் சொல்லப்படுகின்றனர். இப் படிப்பட்ட ஸ்திரீகளின் அமைப்பானது அவரவருடைய விதிப்படி தான் அமையும் என்றுலும், அவ்விதியை நிர்ணயிக்க முன் சொல் லியபடி அருமையான ஜோதிட நூல்களிருப்பதால் அவற்றின் உத வியைக்கொண்டு நன்கு ஆராய்ந்தறிந்து விவாகம் செய்வதுதான் மிகவும் மேன்மையாகும். ஆயினும் ஜாதகமே பாராமல் விவாகம் செய்து சில குடும்பங்கள் வெகு மேன்மையாயிருந்து வருவதும், ஜாதகம் பார்த்து விவாகம் செய்து சில குடும்பங்கள் சுகமென்ப

தையே அறியாது ஒற்றுமையின்றித் தவிப்பதும் சில, பலவாறுக இருந்து வருவதும் நிதரிசனமா யிருக்கிறது. இவற்றின் காரண மென்னவெனில், நம் நாட்டில் ஜோதிஷத்தில் போதுமான ஆராய்ச்சியின்றிப் பலர் ஜோதிஷப்பலன்கள் சொல்வதும், விவாக காலத்தில் பெற்றோரால் கொண்டுவரப்படும் ஸ்திரீ,/புருஷ ஜாதகங் களை நன்கு பரிசீலனைசெய்து அவற்றின் ஒற்றுமை,ஆயுள், யோகம் இவைகளை நன்கறிந்து அவற்றின் பலனைச் சொல்லச் சக்தியற்றோ, சாத்தியமற்றோ, திறமை யற்றோ பலனைச் சொல்வதும் காரண மாகும் என்று பலர் முறையிடுவதன் மூலம் நன்கு தெரிகிறது. இப்படி அவர்கள் சொல்லும் பலன்களால் வெகு குடும்பங்கள் (ஸ்திரீ புருஷர்கள்) தங்கள் வாழ்க்கைகெட்டுச் சீர் குலைந்திருப்ப தும் சான்றாகும். இதற்கேற்ப அங்காரக தோஷமென்று சொல் லிச் சிலர் நல்லவைகளை விலக்கியும் ஏதோ காலபேதத்தினுல் கெட்ட ஜாதகங்களை ஒன்று சேர்த்தும் விவாகம் செய்து விடுகின்ற னர். இப்படி அறியாமையால் செய்யும் தீர்க்காலோசனை யற்ற செய்கைகள் பின்னுல் வருந்தச் செய்கின்றன. இவ் விஷயங்களில் . சேவ்வாய் தோஷம் அல்லது அங்காரக தோஷம் என்பது பலமானதே என்றால் செவ்வாயைத் தவிர்த்த மற்ற கிரகங்களில் எவருக்குமின்றி இவ்வொரு சேவ்வாய்க் கிரகத்திற்கு மட்டும் தான் மேற்படி தோஷம் உண்டு என்று சொன்னால் அது எவ்விதம் ஒப்பத்தகுந்ததாகும்? அன்றியும் செவ்வாய் தவிர மற்ற கிரகங்கள் தார நாசத்தைச் செய்வ தில்லையா? அவர்கள் மேற்படி தோஷத்தைச் செய்யச் சக்தியற்றவர் களா? அப்படியானால் மேற்படி சேவ்வாய் தவிர மற்ற எட்டு கிரகங்க ளும் தார நாசத்தைச் செய்வதில்லை யென்றோ, செய்யச் சக்தியற்ற வர்க ளென்றோ, அவர்களால் நேரிடுவதில்லை என்றோ நிரூபணம் செய்ய முடியுமா? என்கிற கேள்வி உடனே எழுவதற்கு இட முண்டா கிறது. இவ்விதக் கேள்விகளுக்குரிய பதிலை சப்தம பாவத்தில் செவ்வாய் தோஷ சமாதானம் என்னும் முதல் அத்தியாயத்திலும் மற்றும் ஏழாம்பாவப் பலன் என்னும் அத்தியாயத்திலும் சந்தேக மறத் தெளிந்துகொள்ளலாம். மேலும், முதலில் பெற்றோர்கள் விவாகத்திற்கென ஸ்திரீ புருஷ ஜாதகங்களைப் பரிசீலனை செய்யும் போது நன்கு ஜோதிஷங்கற்று, ஆராய்ச்சியும், அனுபவமும் உள்ள தைவக்ஞரிடம் அணுகி, அவற்றின் ஆயுள் ஒற்றுமை யோகம் இவை களைப் பொருத்தமாக உடைய ஜாதகங்களையே சேர்த்து விவாகம் செய்வித்தால் கூடியவரை ஸ்திரீகள் பாலியத்தில் விதவைகளாவ

தும் புருஷர்கள் தாரத்தை இழந்து விடுவதும் ஒருவாறு தடுக்கப் படலாம். எனெனில், ஒரு ஸ்திரீயின் ஜாதகத்தைப் பரிசீலிக்கும் போது (சமீபகாலத்திலேயே) மேற்படி ஸ்திரீ வைதவ்வியத்தை யடையக்கூடுமென்றே, புருஷ ஜாதகத்தில் புருஷன் இப்படியே மனைவியை இழந்து விடுவானென்றே காணப்படின் அப்படிப்பட்டவைகளை அது எப்படிப்பட்டதாயினும் பண்டிதர்களும் பெற்றோரும் விலக்கி விடுவதுதான் நன்மை பயக்கும். பண்டிதர்களும் பழிக்காளாகாமல் இருக்கக்கூடும். அவர்களும் நன்மை யடைய ஹேதுவாகும். அப்படிக்கின்றி தாக்ஷிண்யத்தாலோ வேறு விதத்தாலோ பொருத்தமற்றவைகளைச் சேர்த்தால் வீண் பழிக்கு ஆளாக நேரும். இதற்குப் பண்டிதர்களின் மனச்சாக்ஷியும் நேர்மையாக இருக்கவேண்டும். பண்டிதர்கள் நேர்மையா யிருந்து ஒருவாறு விலக்கிவிட்டாலும் சில பெற்றோர்கள் இக் காலத்திலும் தங்கள் ஜாதி மதக் கோட்பாடுகளைக் காட்டி அதன் விதி அப்படியிருந்தா லப்படியே நடக்கட்டுமென்று சொல்லிச் செய்கின்றனர். அப்படிச்செய்து பிறகு வருந்துவதை விலக்க எண்ணியே ஒவ்வொருவரும் தாமாகவே அறிந்துகொள்ளச் சாத்தியமாகும்படி இது எழுதப்பட்டது.

நிற்க, மேற்கூறியதைப் போலவே தசம பாவமும் அதாவது ஜீவன பாவமும் முக்கியமாகும். உலகில் ஒவ்வொருவரும் ஜீவிக்க ஓர் தொழில் செய்தல் அவசியமாகிறது. இது விஷயமாக நீதி சாஸ்திரத்தில் சுயார்ஜிதத்தால் ஜீவனம் செய்வது உத்தமம் என்றும், பிதுரார்ஜித திரவியத்தினுல் ஜீவனம் செய்வது மத்திமம் என்றும், சகோதரனின் திரவியத்தினுல் ஜீவனம் செய்வது அதமம் என்றும், ஸ்திரீ திரவியத்தினுல் ஜீவனம் செய்வது அதமாதமம் என்றும், திருடிப் பிழைப்பது செய்வதைவிட மரித்தலே மேலென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் சுயார்ஜிதமே மிக உத்தம ஜீவனமென்றும், பயிர் செய்தும் வியாபாரம் செய்தும் ஜீவித்தல் மத்திமமென்றும் சேவகத் தொழில் செய்வது அதமம் என்றும் குலத் தொழிலைச் செய்து ஜீவித்தல் உத்தமம் என்று கூறப்பட்டுள்ளது. இவை, பொதுவானதாதலால் தற்காலத்திற் கேற்றவாறு உலகில் தினம் தினம் புதுப் புதுத் தொழில்கள் விருத்தியாகின்றனவென்றும் அவைகள் எல்லாம் எந்த சாஸ்திரத்திலும் விவரிக்கப் படவில்லையென்றும் மனிதன் தான் தொழிலை நிர்ணயிக்கவேண்டுமென்றும் தெரிகிறது. சில தொழில்கள் தாம் ஜோதிட சாஸ்திரத்

தில் சொல்லப்பட்டிருக்கிறதே யன்றி, ஒவ்வொருவரும் இன்னின்ன தொழில்தான் செய்யவேண்டுமென்று நிர்ணயிக்காமல் பொதுவாகச் சொல்லி யிருக்கிறபடியால் இன்ன தொழிலைச் செய்யுங்கால் இன்னார் மூலமாகத் திரவிய சம்பாதனை செய்யலாம் என்பதைத் தாங்கள் தாங்களே நிச்சயித்து அதன்படி நடந்துகொள்ள இதனால் காலமும் வயதும் தொழிலும் நிர்ணயிக்கப்படுகிறது. இதன்படி நடந்துகொள்வது உசிதமாகும். இவை நம் நாட்டு விஷயமாகும். இங்கு மேனாட்டினரைப்போல் விதவிதமான தொழில்கள் இத்தேசத்தில் செய்வதுபற்றி விஞ்ஞானி என்றும், யந்திரி என்றும் கூடமாகச் சொல்லப்பட்டிருக்கிறதே யன்றித் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆதலால் நாம் மேலே கூறியபடி கோடிக்கணக்கிலுள்ள தொழில்களை நவக்கிரகங்களை மட்டும் கொண்டே நிர்ணயிக்கவேண்டியிருப்பதால், அப்படி நிர்ணயிக்கத் தக்க சக்தியும் அறிவும் உள்ள மகான்கள்கூட அவ்வழிகளைக் கண்டுபிடித்து நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. அப்படி ஒரு சமயம் அவர்கள் கண்டுபிடித்து நடந்துகொண்டிருந்தாலும் அவ்வழிகள் தற்காலத்தில் நம் நாட்டில் எந்தக் கிரந்தத்திலும் இருப்பதாகவும், எவரிடத்தும் அக்கிரந்தங்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆகையாலும் முன் சொல்லியபடியே மூலக்கிரந்தங்களிலுள்ளபடியே உள்ளதைமட்டும் மொழிபெயர்த்திருப்பதால் இதிலுள்ள கிரக காரகங்களில் சொல்லியபடியும் கிரக ஜாதியானுகுணமாகவும் தொழிலைச் செய்து வந்து தனம் தேட இப் புத்தகம் மிக்க உதவியாயிருக்கும். மேலும் இது புதுத் தொழில் செய்பவர்களுக்குக் காலத்தையும், வயதையும், தேசத்தையும், குறிப்பதாலும் ஒரே தொழிலில் சிற்சில வழிகளில் பேதப்பட்டோ பேதப்படாமலோ சிலர் லாபம் சம்பாதிப்பதும் வெவ்வேறு வழிகளில் பலர் சம்பாதிப்பது(ம்) (விருத்தியாகி நஷ்டமடைவதும்) மேலும் மேலும் விருத்தியாவதும் அதிர்ஷ்ட பூர்வமான தாதலால் இத னுதவியால் தமக்குப் பொருத்தமான தொழிலைத்த ாமே தேடி நிர்ணயித்து அதன் மூலம் தான் கோரிய பலனையடைய இது பெரிய உபகாரமா யிருக்கும் என்பதையும் மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மூன்றுவதகச்சொல்வது:—

உலகில் பிறந்த சகல ஜீவராசிகளுக்கும் ஒரு க்ஷணமேனும் ஆயுளுண்டு என்பது சகலரும் அறிந்த விஷயமே. புல், பூண்டு,

செடி, கொடி, மரம் முதலியவைகளுக்கும் பக்ஷி, மிருகம், ஈ, எறும்பு முதலிய 84 லக்ஷ யோனி பேதங்களுக்கும் ஆயுளுண்டாகினும் அவற்றின் காலஅளவு காணமுடியாததா யிருக்கின்றது. இந்த ஆயுள்தான் ரகசியத்திலும் பரம ரகசிய மாகும். மேற்கூறிய பிறப்பு (ஜன்மம்) ஏற்பட்டதும் மரணம் என்பது எந்த நேரத்திலும் காத்துக் கொண்டிருக்கிறது. ஆனல் அதன் காலம் தெரியாமல் காரணம் மட்டும் தெரிகிறது. மரணத்திற்கு வியாஜமுண்டே யொழியக் காலமில்லை. எக்காலத்திலும் எந்த நேரத்திலும் எதிர்பாராமல் எச் சமயத்திலும் திடீரென்றும் ஏற்படக்கூடும். மரணத்திற்கு ஏதாவது ஒரு வியாஜமுண்டாகி அதன் மூலம் பழி ஏற்பட்டு உயிரின் பிரிவானது ரகசியமாகவே நேரிடுகின்றது. இதை யறியத் தெள்ளிய மார்க்கங்கள் ஒன்றும் இன்று கிடையாது என்றே கூறலாம். ஆயினும் இந்த ஜோதிடக் கிரந்தங்களால் ஒருவாறு அறிய மகான்களான ரிஷிகள் செய்திருக்கும் கிரந்தங்கள் சிலஇருப்பினும் அவற்றின்படி அறியவோ நடக்கவோ முடியாத காரியமா யிருக்கின்றது. மகரிஷிகளின் மார்க்கங்களால் ஒருவாறு அறிய முடியலாமென்றாலும் அதற்கு அவற்றில் கூறியுள்ளபடி சரியான காலநிர்ணயங்கள் கிடைப்பதில்லையாகையாலும் கிடைத்தவற்றைக் கொண்டு ஆயுளை அறிவதால் தப்பிதமாகும் என்றும் உண்மையாய்த் தெரிகிறது. இப்படி யிருக்கும் ரகசியத்தை யறிய ஸ்ரீ வராகமிகிரர் செய்திருக்கும் பிரஹத் ஜாதகப்படியும், பராசரராற் செயயப்பட்ட பராசர ஹோரையின்படியும், அதாவது லக்கினுயுர்த்தாயம், அம்சாயுர்த் தாயம், பிண்டாயுர்த்தாயம், நைஸர்க்கிக ஆயுர்த்தாயம், கிரக ஆயுர்த்தாயம் இவைகளும் மந்திரேசுவார் என்பவரால் பல தீபிகையில் சொல்லப்பட்டபடி அஷ்ட வர்க்காயுர்த்தாயமும் அறிய வேண்டியவைகளாகும். அப்படிச் செய்வதற்குச்சரியான சுத்தமான கிரகஸ்புடங்கள் தேவையாகும். இவற்றைத் தற்காலம் செய்யக்கூடியவர்கள் வெகு சிலரே யன்றி எல்லோராலும் செய்துவிட முடியாது. அவற்றிற் கேற்பப் பஞ்சாங்கங்களும் சரியானவைகளில் தப்பி ஒன்றல்லது இரண்டு இருப்பினும் அவை அனுஷ்டானத்தில் இல்லை யென்றும் அதன்படி ஒப்ப மறுப்பதும் சகஜமாகி யிருக்கிறது. இவற்றின் காரணம் இப் பஞ்சாங்கங்கள் அக் காலங்களில் அனுஷ்டானத்தில் இல்லை யென்பதேயாம்.

ஆயுர்தாய கணிதமென்பது சாமானியமானதல்ல. அது எளிதில் அறிய முடியாததாகும். ஏனெனில் இதற்கு முதலில்

கணிதந் தெரியவேண்டும். இரண்டாவதாக ஜோதிஷமும் அறிந்திருத்தல் வேண்டும். பிறகு கிரக ஸ்புடம் செய்யச் சரியான ஜனன கால மணி, நிமிஷம் முதலியன வேண்டும். அனுபவமும் வேண்டும். அதன் பிறகு தேசாந்திர ஸம்ஸ்காராதிகள் செய்து கிரக ஸ்புடமும் ஜாதக கணனமும் செய்யவேண்டும். இவ்வாருக, அதற்கேற்பட்ட சகலமும் ஏற்படுத்திக் கொண்டுதான் ஆயுள் நிர்ணயஞ் செய்யவேண்டும். அல்லாமல் சரியான காலம் மணி, நிமிஷம் அல்லது நாழிகை விநாடி இவைகளின்றியும் கணிதந் தெரியாமலும் செய்ய முடியாது. 'இதைத்தான் அவசியம் வற்புறுத்துகின்றோம். இவற்றிற்கெல்லாம் நன்கு கற்றறிந்தவர்கள் தவிர மற்றவர்கள் செய்வது பெரும்பாலும் பிசகிப்போம்.

இப்படிப்பட்ட ஆயுளானது ஜீவராசிகள் ஒவ்வொன்றிலும் ஒரு எல்லைக்குட்பட்டு எல்லை யற்றிருக்கின்றது. அதாவது மனிதர்களுக்கும் யானைகட்கும் வயது 120௵மும் ஐந்து நாள்களும் பரமாயுள் என்றும். குதிரைகளுக்கு 32 வயதென்றும், கழுதை ஒட்டகை இவைகளுக்கு 25 வருஷம் ஆயுளென்றும், எருமை, எருது இவைகளுக்கு 24வருஷம் ஆயுளென்றும், மான், ஆடு, இவைகளுக்கு பதினறு வருஷம் வயதென்றும், நாய்களுக்கு 12 வருஷம் ஆயுளென்றும் ஸ்ரீவராக மிகிரரும் மந்திரேசுவரரும் கூறியுள்ளனர். இந்த ஆயுளானது ஜீவராசியில் பிறந்த ஒவ்வொன்றிலும் வியாபித்திருந்து அவற்றிற்கேற்பட்ட காலம் முடிந்ததும் அதை விட்டுப் பிரிந்து விடுகின்றது. இப்படிப்பட்ட ஆயுளானது கட்டிடங்கள்; கோயில்கள்; மனை முதலியவற்றிற்கும் உண்டானதே.

மேற்படி ஆயுளானது மூன்று பிரிவுகளை உடையது. அதாவது அற்பம், மத்திமம், பூரணம், என ஆகும். இவற்றில் ஒவ்வொன்றிலும் இதே அற்ப மத்திம பூரண மெனவும் மூன்று பிரிவுனைகள் உண்டாகி மூன்றிலுமாக 9 பிரிவுகள் உண்டாகின்றன. அதைப் பற்றி விவரிப்போம்.

	அற்பம்.	மத்திமம்.	பூர்ணம்.
1. அற்பத்தில்	௵ 12	௵ 24	௵ 35
மத்திமத்தில்	௵ 48	௵ 60	௵ 72
பூர்ணத்தில்	௵ 84	௵ 96	௵ 108

2. வேதமோவெனில் 'சதமானம் பவதி,' என்று முறையிடுகின்றது.

3. ஜம்புநாதீயம், ஜாதககலா (நிதி) விதி இவற்றில் 100,120 1,000, 10,000, 30,000, 60,000, இவ்விதம் பல ஆயிரம் வருஷங் களைக் கூறுகிறது.

4. பல தீபிகையில் மொத்தம் 100ஷ மனிதர்களுடையஆயுளென்றும் அதில் 8 வயது வரை பாலாரிஷ்டமென்றும் 20 வது வயதில் யோகாரிஷ்டமென்றும் 32 அற்பாயுள் என்றும் 70 வயது மத்திமாயு ளென்றும் 100 ஷம் பூர்ணயுள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதிலும் சிசு ஜனித்த 1 வயது வரை சத்யோரிஷ்ட மென்றும் மாதா, பிதா இவர்களின் தோஷங் காரணமாகவும், பால கிரகதோஷங் காரணமாகவும் சிசு நாசத்தை யடைகிறது என்றும்,மேலும் 'ஆத்யே சதுஷ்கே ஜநநீ சிருதாகை : மத்யேச பித்ரார்ஜிதபாபசங்கை : பாலஸ்த தந்த்யாசு சதுச்சரத்ஸு ஸ்வகீய தோஷை: ஸமுபைதிநாசம்" என்கிற படியும், சிசுவுக்கு 4 வயது வரை தாட் தோஷத்தால் அரிஷ்டம் நேரு மென்றும், 8 வயது வரை பிதுரு தோஷத்தால் அரிஷ்டம் நேரு மென்றும் 12.வயது வரை ஜாதக தோஷத்தால் அரிஷ்டம் நேரும் என்றும், ஆகவே, சிசுக்களுக்கு 12 வயது வரை மானிடப் பிறவியில் மட்டும் ஆயுள் நிர்ணயம் செய்வது சாத்தியமில்லையென்று வராகமிகிரரும், மந்திரேசுவரரும் கூறியுள்ளனர். அவ்வசனம் பின் வருமாறு.

"ஆத்துவதசாப்தம் நரயோனி ஜந்மநாம் ஆயுஷ்கலா நிச்சயிதும் நசக்கியதே' என்றுளது. ஆதலாலும் பன்னிரண்டு வயதை பூர்ணமாயடையும் வரை பாலாரிஷ்ட மேற்படு மென்றும், இந்த தோஷத்திற்காகவே தகப்பன் சிசுவின் பிரதி ஜந்மதாரையிலும்(சிசு பிறந்ததும் ஜோதிஷர் மூலம் நன்கு ஆயுளை விசாரித்தறிந்துகொண்டு பின்னர்) மேற்படி பன்னிரண்டு வருஷம் வரை ஜப, தபாதிகளாலும் ஆயுர் ஹோமாதிகளை செய்விப்பதாலும், சிகித்ஸையாலும் வளர்க்க வேண்டு மென்றும் கூறியுள்ளார்; பராசர ஓரையில் 24 வயது வரை ஆயுளை நிர்ணயம் செய்வது சாத்தியமில்லை யென்று கூறப்பட்டுள்ளது.

இதே ஆயுர் தாயமானது பரம சிஷ்டர்களுக்கும், பாம தரித்திரர்களுக்கும் வெகு நாள் பெருகிக்கொண்டே வருகிற தென்றும் இவர்களுடைய ஆயுர் தாயகணிதமே தவறிக்குறிப்பிட்ட கணித அளவிற் கதிகமாக நேரிடுகிற தென்றும், வராகமிகிரர்,

"க்ஷேமத்துருமே மலினதுக்கித் நீச்ச நிஸ்வா:, ப்ரேஷ்யா: கலாச்ச" என்றும் கூறியுள்ளார். பொதுவாகவே, 'பாபீசிராயு:' என்கிறபடி பரமசண்டாள கிருத்தியங்களை உடையவர்களும் வெகு ஆயுளை அடைகின்றனர். ஆயினும்,

"ஜந்தூநாம் பாபசீலத்வாத் அரிஷ்டம் ஜாயதே பஹூ:" என்கிறபடி அதிகம் பாபம் செய்யச் செய்ய மனிதர்களுக்கு அரிஷ்டங்களும் வெகு விதங்களாக ஏற்படுகின்றன. இப்படிப் பாபம் செய்வதாலேயே அபமிருத்துவும் நேரிடுகின்றது. இந்த அபமிருத்துவுக்கு, காலம், தேசம் முதலியன ஒன்றும் தேவையில்லை. இது திடீரென்று எதிர்பாராமல் நேரிடுவதாகும். இதில் தப்பிப் பிழைப்பது தான் கண்டகால மென்பதாகும். இதை யறிய முடியவே முடியாதென்று உறுதியாய்க் கூறலாம்.

பொதுவில் ஆயுள் ஸ்தானம் ஜாதகங்களில் ஜன்ம லக்கினத்திற்கு எட்டாமிட மென்பது உலகப் பிரசித்தமானது. இதை அஷ்டமாதிபதியைக் கொண்டும் ஜன்மலக்கினபதியைக் கொண்டும் சனியைக் கொண்டும் தான் நிர்ணயிக்க வேண்டும். நமது ஆராய்ச்சியில் கண்டதில் ஒரு சுக்கிரநாடியில் ஜன்ம லக்கினாதிபதி அஷ்டமாதிபதி பன்னிரண்டுக் குடையவர் இவர்களால் ஆயுளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், வேறொரு சுக்கிரநாடியில் ஜன்ம லக்கினாதிபதி அஷ்டமாதிபதி தசமாதிபதி இவர்களைக்கொண்டு அறிய வேண்டு மென்றும், பொதுக் கிரந்தங்களில் ஜன்ம லக்கினாஷ்டமாதிபதி, ஜன்மலக்கினாதிபதி, சந்திரன் இவர்களைக் கொண்டே ஆயுளை நிர்ணயம் செய்ய வேண்டு மென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. ஆயுளின் விஷயம் பொதுப்படையாக இப்படி இருக்க, தற்போது வயது ஒரு ஜீவனுக்கு எவ்வளவென்பதைக் காண இன்று வழங்கிவரும் எந்தக்கிரந்தத்திலும் சரியான மார்க்க மெதுவும் இல்லையென்றே தைரியமாய்க் கூறலாம். அதற்கேற்பத் தற்காலம் பலதரப்பட்ட பஞ்சாங்கங்கள் அனுபவத்தில் இருப்பதால் இதில் சரி தப்பு எது என்பதை எவரும் ருசுசெய்யவில்லை. ஒன்றுக்கொன்று பலவித வித்தியாசம் உள்ளதா யிருக்கிறது. இப்படி உலகில் பஞ்சாங்கங்களின் நிலை ஒரு புறமிருக்க, ஜோதிட வித்துவான்களும் இப்படியே அபிப்பிராயபேதப் பட்டவர்களா யிருக்கின்றனர். இம்மாதிரி வித்தியாசமான பஞ்சாங்கங்களைக்கொண்டு ஆயுர்த்தாயம் கணித்தும், ஜாதகங்களைக் கணித்தும் ஜாதக பலனும்

சொன்னால், சொல்லுகிறவர் எவ்வளவு அறிவும் ஆற்றலும் படைத்தவரா யிருந்தாலும் இப் பஞ்சாங்கங்களின் முன் ஜோதிடர் கள் எவ்வளவு தூரம் முன்னுக்கு வரக்கூடும் என்பதும் சற்று ஆலோசிக்கத் தகுந்ததே யாகும்

பொதுவாகவே, ஜோதிஷ சாஸ்திரமே மர்மமானது. அதிலும் இந்த ஆயுர்த்தாயம் பின்னும் மர்மமானது. இவைகளைச்சனி நாடியி லும் ஸித்தாயுர்தாயத்திலும்தான் காணமுடியும். அக் கிரந்தங்களின் பெயர்கள்தான் தெரிகின்றனவே யன்றி, அக்கிரந்தங்கள் யாரிடத் திலும் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் நாம் மேலே கூறியபடி நமது ஆராய்ச்சியிலும் முன் சொன்னபடியும் நமக்குக் கிடைத்தவற்றில் எதையும் விடாமல் இம்மூன்று பாவ விஷயமாக மூலக் கிரந்தங்களி லுள்ளபடியே எழுதுவதில் இந்த ஆயுர்பாவத் தின் முதலில் பாலாரிஷ்டம், நக்ஷத்திர கண்டம், முதலியவற்றை விவரித்துவிட்டுப் பிறகு ஆயுர்தாயத்தை எழுதுகிறோம். ஆதலால் இதனால் வெகு எளிதில் அறிய முடியாத ஆயுளைத் தாமே ஒவ் வொருவரும் பிறருடைய உதவி இன்றித் தம் ஆயுள் இவ்வளவு தான் என்பதை நிர்ணயம் செய்துகொள்ளவும், தனக்கு இவ்வித மான தாரம், இத்தனை தாரம், இன்ன திக்கில், இன்ன காலத்தில், இன்ன காரணத்தால் ஏற்படுமென்று தெரிந்துகொள்ளவும், தனக்கு இவ்விதமான தொழிலைச் செய்தால், அதன் மூலம்தான் இவ்வளவு சம்பாதனையை, இன்ன காலத்தில் இன்னார் மூலமாக இன்ன திக்கில் இன்ன தெசையில் அடையலாம் என்று நிர்ணயம் செய்து கொள்ளவும், இப்புத்தகம் பெரிதும் உபகாரமாக இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்பதை வெகு பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

சென்னை: ஸ்ரீ தேவகேரள ஜோதிஷர்,

21—8—1941. ஓ. ப. லக்ஷிமீ நரஸிம்மாச்சாரியர்.

நாம நக்ஷத்திரத்தினால்

பலனைக் காணும் வழி

ஜோதிஷத்திற்கே சந்திரன்தான் பிரதானம், சந்திரனின் ஸ்திதியால்தான் சகல பலன்களையும் அறிய வேண்டும். சந்திரனின்றி அறியப்படும் பலன்கள் அவ்வளவு முக்கியமாகாது. சந்திரனின் தின கெதியை எந்த நக்ஷத்திரத்தில் எந்தப்பாதத்தில் (தேவையான காலத்திற்கு எந்தக்கலையில்) இருக்கிறானென்று பஞ்சாங்கங்களால் அறியலாம். நவக்கிரகங்களும் சஞ்சரிக்கும் நக்ஷத்திரம் இருபத்தேழு; அவை மேஷம் முதலாக மீனம் வரையுள்ள பன்னிரண்டு ராசிகளுக்கும் இராசி ஒன்றுக்கு இரண்டேகால் நக்ஷத்திரம் எனவும், நக்ஷத்திரம் ஒன்றுக்கு நான்கு பாதம் எனவும், ஒன்பது பாதம் அடங்கியது ஒரு ராசி யெனவும், பன்னிரண்டு ராசிகளிலும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் அவற்றின் மொத்த நூற்றெட்டுப்பாதங்களும் அடங்கியிருக்கின்றன.

இப் புத்தகத்தில் சந்திரன் இன்ன ராசியில் இன்ன பாதத்தில் இருந்தால் என நக்ஷத்திர ரீதியாகவும், நக்ஷத்திர பாதரீதியாகவும் பலனெழுதப்பட்டிருப்பதால், அதை யறிந்திருப்பவர்களும் அறியாதவர்களும் கூடச் சுலபமாக அறிந்துகொள்ளக் கூடியபடியும் இந்தப் பாதம் தரப்பட்டது. மேலும் தெசை புத்திகளைப் பொருத்தியும் பலன் எழுதியிருப்பதால் இது சகலத்திற்கும் உதவியாகும்.

இதிற் காட்டியபடியே ராசிகளும், ராசிக்கதிபதிகளும், எக்காலத்திலும், எக்காரணத்தாலும் மாறுதலியாதும்.

மீனம் உபய ராசி குரு	மேஷம் சர ராசி செவ்வாய்	ரிஷபம் ஸ்திர ராசி சுக்கிரன்	மிதுனம் உபய ராசி புதன்
கும்பம் ஸ்திர ராசி சனி			கடகம் சர ராசி சந்திரன்
மகரம் சர ராசி சனி			சிம்மம் ஸ்திர ராசி சூரியன்
தனுசு உபய ராசி குரு	விருச்சிகம் ஸ்திர ராசி செவ்வாய்	துலாம் சர ராசி சுக்ரன்	கன்னி உபய ராசி புதன்

இது உலகிற்குப் பொதுவாகும்.

நாம நக்ஷத்திர (பாத விவரமும்) அக்ஷரங்களும்.

நக்ஷத்திரம்	பாதங்கள் 1 2 3 4
அசுவனி	சு-செ-சொ-ல
பரணி	லி-லு-லெ-லொ
கார்த்திகை	அ-இ-உ-எ
ரோகணி	ஒ-வ-வி-வு
மிருகசீரிஷம்	வெ-வொ-க-கி
திருஆதிரை	கு-க்க-ங-ச்ச
புனர்பூசம்	கெ-கொ-ஹ-ஹி
பூசம்	ஹு-ஹெ-ஹொ-ட
ஆயிலியம்	டி-டு-டெ-டொ
மகம்	ம-மி-மு-மெ
பூரம்	மொ-ட-டி-டு
உத்திரம்	டெ-டொ-ப-பி
அஸ்தம்	பு-ஷ-ண-ட்ட
சித்திரை	பெ-பொ-ர-ரி
சுவாதி	ரு-ரெ-ரொ-த
விசாகம்	தி-து-தெ-தொ
அனுஷம்	ந-நீ-நு-நெ
கேட்டை	நொ-ய-யி-யு
மூலம்	யெ-யொ-ப-பீ
பூராடம்	பு-த்த-ப்ப-ட்ட
உத்திராடம்	பெ-பொ-ஜ-ஜி
திருவோணம்	கி-கு-கெ-கொ
அவிட்டம்	க-கி-கு-கெ
சதையம்	கொ-ஸ-ஸி-ஸு
பூரட்டாதி	ஸெ-ஸொ-த-தி
உத்திரட்டாதி	து-ச-ச்ச-த்த
ரேவதி	தெ-தொ-ச-சி

ராசிகளினுள்ளடக்க விளக்கம்

மேஷம்-இதில் அசுவனி 4 பாதம் பரணி 4-பாதம் கிருத்திகையின் முதற்பாதம் ஆக ஒன்பது பாதமும்.

ரிஷபம்—இதில் கிருத்திகையின் 2, 3, 4 வது பாதங்களும் ரோகிணி 4-பாதம் மிருக சீரிஷத்தின் 1, 2-வது பாதம் வரையும் ஆக 9 பாதமும்.

மிதுனம்—இதில் மிருகசீரிஷத்தின் 3, 4-வது பாதமும் திருவாதிரையின் 4 பாதமும் புனர் பூசம் 1, 2, 3-பாதம் வரையும் ஆக 9 பாதமும்.

கடகம்—இதில் புனர்பூசம் 4-வது பாதமும் பூசம் 4-பாதம் ஆயில்யம் 4-பாதமும் ஆக 9 பாதமும்.

சிம்மம்—இதில் மகம் 4 பாதம் பூரம் 4 பாதம் உத்திரத்தின் முதற் பாதம் ஆக 9 பாதமும்.

கன்னி—இதில் உத்திரத்தின் 2, 3, 4-வது பாதமும் ஹஸ்தம் 4 பாதமும் சித்திரையின் 1, 2-வது பாதமும் ஆக 9 பாதமும்.

துலாம்—இதில் சித்திரையின் 3, 4-வது பாதமும் சுவாதி 4 பாதமும் விசாகப் 1, 2, 3-வது பாதம் வரை 9 பாதமும்.

விருச்சிகம்—இதில் விசாகம் 4-வது பாதமும் அனுஷம் 4 பாதம், கேட்டை 4 பாதம் ஆக 9 பாதமும்.

தனுசு—இதில் மூலம் 4 பாதம் பூராடம் 4 பாதம் உத்திராடம் 1-வது பாதம் ஆக 9 பாதமும்.

மகரம்—இதில் உத்திராடத்தின் 2, 3, 4-வது பாதமும் திருஓணம் 4 பாதம் அவிட்டத்தின் 1-2-வது பாதமும் ஆக 9 பாதமும்.

கும்பம்—இதில் அவிட்டத்தின் 3, 4-வது பாதமும் சதயம் 4 பாதமும் பூரட்டாதி 1, 2, 3-வது பாதம் வரையும் ஆக 9 பாதமும்

மீனம்—இதில் பூரட்டாதியின் 4-வது பாதமும் உத்திரட்டாதி 4 பாதமும் ரேவதி 4 பாதமும் ஆக 9 பாதமும் அடங்கியுள்ளது.

இந்த நாமநக்ஷத்திர வழியாலும் தம் பலனை யறிந்து கொள்ளச் சிலருக்கு இது உபயோகமாகும்.

உ

ஸ்ரீரஸ்து

ஜோதிஷபாவத்திரய நிர்ணயம்

ஸப்தமபாவம் அல்லது களத்திரபாவம்

செவ்வாய் தோஷ சமாதானம்

அங்காரகதோஷம் அதாவது செவ்வாய் தோஷ மென்பது ஒன்றுண்டு என்றும், அதனால் தாரநாசம் நேரிடுகிறதென்றும், பலர் கொள்கையும் சில ரிஷிகளின் மதமுமாக இருக்கிறது; என்றும் மேற்படி தோஷத்திற்குப் பரிகாரங்களும் சில சொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படிப்பட்ட அங்காரக தோஷமென்பதுண்டானல் அது கேவலம் தார நாசத்தை மட்டும் செய்யச் சக்தியுடையதாகுமா? இன்னும் ஏதாவது வேறு (பல)வித தோஷங்களும் செய்யச் சக்தி வாய்ந்ததாக ஆகுமா? அப்படியானல் ஷை தோஷ ஸ்தானங்களாகக் கருதப்படுகிற 2, 12, 4, 7, 8 ஆகிய ஸ்தானங்கள் எல்லா லக்கினங்களுக்கும் தோஷ ஸ்தானங்களாகவே ஆகுமா? அல்லது மாறுபாடுடையதாகுமா. அப்படியானல் எந்த எந்த லக்கின ஜாதகங்களுக்கு எங்கெங்கிருந்தால் எவ்வெப்போது என்னென்ன பலன்கள் நேரிடும்? அவைகள் என்னென்ன வென்பது சொல்லப்பட்டிருக்கிறதா? ஸ்திரீ புருஷ ஜாதகங்களில் செவ்வாய்க்குத் தோஷமென்று கூறப்பட்ட ஸ்தானத்திதில் அல்லது ஒரே ஸ்தானத்தில் அல்லது ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட ஸ்தானங்களில்

முக்கியக் குறிப்பு:— ஜாதகங்களில் துவாதசபாவங்க ளிருக்கிறபடியால் ஷை துவாதசபாவாதிபதிகளை இங்கு இப்புத்தகத்தில் ஸ்தானுதி என்றும், ஸ்தானுதிபதி என்றும், ஸ்தானததிற் குடையவரென்றும் சுருக்கிக் கூறியிருக்கிறபடியால் இப்படிக் குறிப்பிட்டிருப்பதைக் குற்றமாகக் கொள்ளாமல் ஜன்ம லக்கினம் முதல் அந்தந்த ஸ்தானத்திற்குடையவராகவே கொள்ளும்படி சகலரையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

செவ்வாயிருந்தா (லும்) ல் அப்போது பலன்கள் ஒன்ருகவோ வித்தியாசமாகவோ நடக்கின்றதா? நடக்குமா? என்பது முக்கிய கேள்வியாகிறது.

ஆகையால் ஷ்டி தோஷ விஷயத்தில் லக்கின, கிரக, ஸ்தான ஆதிபத்திய குண குணம் இவைகள் வெவ்வேருக ஆனுலும், ஷ்டி தோஷத்திற்கு ஸ்தானமே பிரதானமாக ஆகுமா? அல்லது ஸ்திரீ புருஷர்களின் ஜாதகங்களில் ஒரு ஜாதகத்தில் ஷ்டி தோஷ மென்று சொல்லப்படுகிற ஸ்தானத்தில் ஷ்டி தோஷ கிரக மிருந்து, (அவைகள் வெவ்வேறு தோஷ ஸ்தானங்களாக) அதாவது ஒன்றில் 2 லும் மற்ருென்றில் 4லுமாக இருந்தாலும் அல்லது இப்படிப்பட்ட வேறு வித்தியாசமான ஸ்தானங்க ளாக ஆனுலும் பலன்கள் ஒன்ருகவோ அல்லது வித்தியாச மாகவோ நேரிடுமா? ஒரே விதமாக நேரிடுமா? இவை சதிபதி களின் ஒற்றுமையைக் குலேக்குமா அல்லது (ஒருவருக்கு) மர ணத்தையே செய்யுமா? அப்படிச்செய்யுமானுல் எந்த எந்த ஜாதகங்களில் எங்கெங்கிருந்தால் எப்போது ஷ்டி பலன் நேரி டும், எப்படி யிருந்தால் பொருந்தாது, நேரிடாது என்பதை யும் தீர ஆலோசித்துப் பலனேச் சொல்லவேண்டும். ஏனெ னில் ஜாதகங்களின் ஏழாமிடமானது சதிபதிகளின் வாழ்க் கையை வெகு அன்னியோன்னியமாக வாழ வைக்கவோ அல் லது அதற்கு மாருக இருவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விடவோ, அல்லது சதிபதிகளேப் பிரித்துவிடவோ, ஸ்திரீகளே விதவையாக்கவோ, புருஷனே மனேவியை இழக்கச் செய்து அல் லது விவாக மில்லாதவனுகச்செய்து விடவோ அல்லது இரு வரையும் விவாகமான பின்பு தேச சஞ்சாரியாகச்செய்து விடவோ, அல்லது மாரகத்தையே செய்துவிடவோ சக்தியுள்ள தாகும். ஆதலால் இதைப்பற்றி ஆலோசிக்கவேண்டியது அவ சியமாகும். மேலும் இந்த அங்காரகன் முதலிய சப்தக் கிரகங் களும் சப்தமத்தில் தனித்தனியா யிருந்தாலும் சேர்ந்திருந்தா லும் அவற்றிற்கும் பலன்கள் வேருக ஆயினும் இந்தச் செவ் வாய் தோஷமென்பது தனியாகக் கிடையாதென்றும் பல தாரங் கள் பரஸ்திரீ கமனுதிகள் இவைகள் ஏற்படுவதெல்லாம் செவ் வாய் ஒரு கிரகம் ஷ்டி 2, 12, 4. 7, 8 ஆகிய ஸ்தானங்களில் இருப்பதால் மட்டு மல்லவென்றும், அதற்கு அனேக காரணங்க

ளுள்ளனவென்றும் தெரிகிறது. அவற்றிற்குரிய சில காரணங்களையும் செவ்வாய் 2, 12, 4, 7, 8 ஆகிய ஸ்தானங்களிலிருப்பதற்குப் பலனும் மற்றும் பலவித தோஷங்களையும் செவ்வாய் எந்த எந்த லக்கினங்களுக் கெங்கெங்கிருந்தால் தோஷமில்லை யென்பதையும் மேற்படி ஸ்தானங்களிலிருந்தால் செவ்வாய்மூலம் மேற்படி ஸ்தானங்களில் ஏற்படும் பலன்களையும் சொல்லப்படுகிறது. மேலும் சிலர் ஏகதாரத்துடனே யிருத்தல் (இதில் 3 விதமுள்ளது. அவையாவன தர்மசாஸ்திர விதிப்படி விவாகம் கொண்ட மனைவியுடனிருத்தல், (1) விவாகமான மனைவி மரித்து விட்டபின் மறு விவாகம் செய்துகொள்ளாதிருத்தல், (2) விவாகமான மனைவியிருந்து அவளுடன் எக்காரணத்தாலோ காரணமின்றியோ வாழாதிருந்து(ம்) மறு விவாகமும் செய்துகொள்ளாதிருத்தல், (3) ஆகிய விதங்களுள்ளதும், காலங் கடந்து விவாகம் செய்துகொள்ளுதல்) அதாவது தாமச விவாகம் இது யுக்த காலத்தில் நடைபெருமல் பிறகு நடப்பதும், வேறு சிலர் பாலிய விவாக மடைதல், சிலர் விவாகமே யில்லாது பிரம்மாசாரியா யிருத்தல், இதிலும் இரண்டு வகையுள்ளது அவையாவன: விவாகமே செய்துகொள்ளாது பிரம்மசாரி யாசிரமத்திலிருத்தல். (1) விவாகம் நிச்சயம் செய்து அவ்விதமே நடைபெருமல் தடைபட்டு நின்று பிறகு விவாகமின்றியே யிருத்தல் (2) இவையும், எருக்கஞ்செடியை விவாகம் செய்து கிரகஸ்தாசிரமத்தை யடைதல், அல்லது கதலி விவாகம் செய்து கிரகஸ்தாசிரமத்தை யடைதல், முதலில் விவாகம் தடைபட்டுப் பிறகு சில காலம் சென்று மணம் புரிதல். விவாகம் செய்துகொண்ட மனைவியிருந்தும் அன்னிய ஸ்திரீ சேர்க்கை கொள்ளல், விவாகம் செய்துகொண்ட மனைவி இறந்தபின்பு சிலகாலம் அல்லது பலகாலம் அன்னிய ஸ்திரீயைச் சேர்த்துக்கொள்ளல், விவாகமடைந்த மனைவியிருக்கும் போதே வேறு ஒன்றல்ல, இரண்டு மூன்றும், அதிகமு மடைதல், விவாகம் செய்துகொண்ட மனைவி யிறந்த பின்பு சீக்கிரத்தில் அல்லது காலங் கடந்து விவாக மடைதல், இதன் மத்தியில் சிலகாலம் போகஸ்திரீ சேர்க்கை கொள்ளல், விதவைகளை மணத்தல், ஜாதி யந்தரத்தில் (ஸ்திரீகளை) மணத்தல், இத்தியாதிகளையும் மிருகப் புணர்ச்சி, புருஷ கமனம், சதிபதிகளிருவரும் கற்புக்கெடல், பகல் போகம், இத்தியாதிகளையும் சொல்வதுடன் மற்றும் பலவித

மும் சொல்லப்படுகிறது. முன் சொல்லப்பட்ட அங்காரக தோஷம் என்கிற செவ்வாய் தோஷமானது நிச்சயம் உண்டு என்றும் அதற்குப் பரிகாரம் சொல்லப்பட் டிருக்கிறதென்றும் பலர் சொல்லுகிருர்கள். அப்படிப் பரிகாரம் செய்வதால் பரிகார மாகாமல் தாரதோஷங்கள் நேரிடுவதும் மற்றும் பலவித பலன் கள் நேரிடுவதும் அனுபவ பூர்வமாகி யிருப்பதால் அவ்வாறு தோஷத்தாலேயே மேற்படி கெடுதலான பலன் நேரிடுவது உண் டாமயானல் அதற்கு அவர்கள் சொல்லியிருக்கும் பரிகாரம் ஏற்கத் தக்கதாகுமா என நாம் கேட்கிருேம். ஏனெனில் அவ்வாறு பரிகாரமென்று அனேகர் சொல்லியுள்ள ஜாதகங்களில் பலர் வாழ்க்கை கெட்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டிருப்பதால் அவைகளை ஏற்க முடியாததற்கு வருந்துவதுடன் செவ்வாய் தோஷம். என்பது தாரநாசம் ஒன்றையே செய்வதில்லை யென் றும், பிரதானமாக லக்கினம். ஸ்தானம், ஆதிபத்யம், காலம், பலம், குணம் இவற்றை அனுசரித்துச்செய்கிறதென்றும், மேற்படி தோஷமானது சில சமயங்களில் பிரபல யோகத்தையே கூடச் செய்து விடுவதுடன் மாரகத்தையும் கூடச் செய்யச் சக்தியும் அடைகிறது; ஆதலால் மேற்படி தோஷமானது தாரதோஷத்தை மட்டும் செய்வதில்லையென்றும், தார தோஷத்தைச் செய்ய அனேகவித கிரக அமைப்புகள் காரணமாகிறதென்றும், தெரி வித்துக் கொள்ளுகிருேம். உதாரணமாகச் சுக்கிரநாடியில் செவ் வாய் தோஷமென்பது (விவாகத்தடை யாகுமென்றும்) தோஷ மாகாதென்றும், தேவகேரளத்தில் பிரத்தியக்ஷமாக மேஷம் விருச்சிக மிவைகளுக்கு 4-லும், ரிஷபம், துலாம் இவைகளுக்கு 8-லும், மிதுனம், கன்னி இவைகளுக்கு 12-லும், தனுசு, மீன மிவைகளுக்கு 2-லும், மகர கும்பங்களுக்கு 7-லும், கடக, சிம் மங்களுக்கு எங்கிருந்தாலும் தோஷமாகாதென்றும், வேறு கிரந்தங்களில் 4, 7 இந்த இடங்களாக மேஷம், கடகம், விருச் சிகம், மகரம் இந்த ராசிகள் வந்தால் தோஷ மாகாதென்றும், இருதாரம் அல்லது முற்கூறியபடி தார பேதங்களுண்டாகும் விஷயங்களில் லக்கினத்தில் பாப ரிருந்தாலே போதுமானதென் றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் தம்பதிகளின் ஜாதகங் களில் ஜன்ம காலத்தில் 12, 2, 4, 7, 8, 1 இந்த ஸ்தானங்களும் இதேபோலச் சந்திர சுக்கிரருடைய ஸ்தானங்களைக் கொண் டுப். அறிய வேண்டுமென்றும் ஜன்மகாலத்தில் ஒரு ஜாதகத்

தில் 12-ஆம் இடத்தில் சுயம்பாபியாக அங்காரகனிருந்தாலும் உபய ஜாதகங்களிலும் ஜன்ம காலத்தில் 12-ல் செவ்வாயிருந்தால் தோஷ மாகாதென்று சில கிரந்தங்களிலும் ஸ்திரீ ஜாதகத்தில் ஜன்ம காலத்தில் 2, 8-ஆம் இடங்களிலும் புருஷ ஜாதகத்தில் 4, 8-ஆம் இடங்களிலும் செவ்வாயிருந்தால் அது தோஷ மாகா தென்று பல பொதுக் கிரந்தங்களிலும், நாரதீயத்தில் இப்படிப் பட்ட ஸ்தானங்களில் ஏற்படக் கூடியவைகளில் காலதேச தெசா பேதங்களி(னு)ல் தாரநாச முண்டாகிறதென்றும், செவ்வாய் 12 லிருந்தால் களத்திரம் பிரத்தி யுத்தரமுரைப்பவளும் நீச்ச அற்பத் தன்மையுடையவளு மாவாளென்றும், 2 லிருந்தால் தனக்கு முன்னதாகவே தாரமரணம் நேரிடுமென்றும், 4 லிருந் தால் சகல பயத்தையும் உண்டாக்குமென்றும், 7 லிருந்தால் புத்திர நாசத்தை யுண்டாக்குமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. மேலும் லக்ஷ்மீநாராயண சம்வாதத்தில் 7-ல் செவ்வாயிருந்தால் மிக்க சிவப்பான் அல்லது ரக்தசியாமள சரீரமும் மேல் நோக்கிய சமஸ்த அவயவங்களு முடையவளும், மேல் நோக்கிய தலைமயிர் அல்லது எதிர் ரோம முடையவளும் மேனேக்கான ஸ்தனமுடைய வளும் குரூரமான நேத்திர முடையவளும் சுருண்ட தலைமயிருடை யவளும் கடினச் சொல்லுடையவளும், மிக்க சூடான பித்த சரீர முடையவளும் சபல யுத்தி யுடையவளும், கபடம் திருட்டுத்தனம் தாதுர்வாதம் முதலிய அறிந்தவளும், சரீரத்தில் ரண சம்பந்த முள்ளவளும் பர்த்தாவுடனும் (சகோதரனுடனும்) துவேஷ முடையவளும் எப்போதும் துக்கமும் ரணதாபஜுரமு முடைய வளும், அம்மை, விஷம், அக்னி, சஸ்திரமிவற்ருல் வதை யுடைய வளும், அதிக போஜன முடையவளும் துர்ப்போஜனமும், உப்பு கைப்பு இவற்றில் பிரியமுடையவளும், சிவந்த வஸ்திரம் சிவப்பு சந்தனம் சிவப்பு ஆபரணம் சுகம் க்ஷேமம் அதிக (மைதுனம்) மைதுனப்பிரியம், நுரைத்த இந்திரியம் ஒட்டிய கடின அழுத்த மான யோனி இவைகளுடையவளும், சம்போக காலத்தில் பர புருஷரை நினைப்பவளும், பரபுருஷரை அணைந்து போகிப்பதாக எண்ணுபவளும், சஞ்சல மனமுடையவளும், ஷை செவ்வாயுடன் பாபக்கிரகம் கூடியிருந்தால் ஜார சோரத்தன்மைக ளுடையவளும், யோனிரோக முடையவளும் புஷ்ப மேகாதி ரோகங்க ளுடைய வளும், ஷை செவ்வாயுடன் சுபர் கூடியிருந்தால் சுபலக்ஷண சொரூபமும் கீர்த்திப் பிரதிஷ்டையும் டாம்பீகமு முடையவள்

மனைவியாக வாய்ப்பாளென்றும், இதற்கே ஜம்புநாரதீயம், ஜாதக கலாநிதி இவைகளில் 2, 4, 7, 8, 12 ஆகிய ஸ்தானங்களில் புருஷ ஜாதகத்தில் செவ்வாயிருந்தால் புருஷனுக்கு முன்னடி ஸ்திரீக்கு மரணம் சம்பவிக்கும் என்றும், ஸ்திரீ ஜாதகத்தில் இப்படி யிருந்தால் ஸ்திரீக்கு முன்னதாகப் புருஷனுக்கு நிரியாணம் சம்பவிக்குமென்றும், மேலும் 7 ஆம் இடத்தில் செவ்வா யிருந்தால் ஸ்திரீக்கு க்ஷுத்ர பீடை யுண்டாகுமென்றும், தனமின்மையும் செய்யும் என்றும், பராசர ஓரையில் 7-ல் செவ்வா யிருந்தால் நீச சேவை செய்யவும், நீசருடன் ஜாதகருக்குச் சேர்க்கையும் தாரமணமும் நேரிடுமென்றும், சுகர் வாக்கியத்தில் செவ்வாய் 7 லிருந்தால் விதவைகளைச் சேர்வான் என்றும், நயவாக்குடையவனென்றும், கபட முடையவனென்றும், விசேஷ பூமி தேடுவானென்றும், ஆளடிமை ஆபரணாதிகளுடையவனென்றும், பிடிவாதமாய் எடுத்த காரியத்தைச் சாதித்து முடிப்பானென்றும், ஸ்திரீ சொல் கேட்பவனென்றும், எத்தொழிலும் செய்ய வல்லவனென்றும், புத்திர இச்சை யுடையவனென்றும், சோர்விலாதவனென்றும், பகல் போகி யென்றும், முறைதவறிச் சம்போகம் செய்பவனென்றும், இன்னும் இவ்வாருகப் பல கிரந்தங்களில் பல தரப்பட்ட பலன்கள் சொல்லப்பட்டும் இருக்கின்றன. ஆகையால் செவ்வாய் தோஷமென்பது முதலில் இல்லாம லிருந்ததென்றும் சில நூற்றுண்டுகளுக்குப் பிறகு சமீப காலத்தில்தான் ஷை தோஷமென்பது தென்னுட்டிலிருந்து பிரசித்தமானதென்றும் பெரியோர்களும் பிரபல ஜோதிஷ வித்துவான்களும் சொல்லக் கேட்டிருக்கிருேம். நமது துணிபும் அவ்வாறே அங்காரக தோஷமே கிடையாதென்றும் ஜாதகர்களுக்குத் தாரநாசத்தைச் செய்யப் பலவித கிரக அமைப்புகளும், அவரவர்களுடைய பூர்வ ஜன்ம கர்மானுகுணமுமே காரண மாகுமென்றும் திடமான அபிப்பிராயங் கொள்ளுகிருேம்.

களத்திரபாவம்

1. ஜாதகன் பிறந்த ஜன்ம லக்கினத்திற் கேழில் சூரிய னிருந்தால் அதமத்தன்மை, அபகீர்த்தி, தகப்பனைவிட அதிக கியாதி, சிவந்த சியாமள வர்ண சரீரம்; சிவந்த தலைமயிர்; சிவந்த கண்; ரத்தபித்த சரீரம் அல்லது முகரோகமுடைய தன்மை; மேலும் சபல சித்தம், வெகு பேச்சு, சம இடை, சம ஸ்தனம்; சீக்கிர ஸ்கலனம், வெகு சல்லியம், ராஜஸ குணம், பாண்டித்தியம்; பிதுரு சுகம் இவைகளுடைய களத்திரம் வாய்க்கும்.

2. மேற்படி 7-ஆம் இடத்தில் * சம்பூர்ண சந்திரனிருந்தால் நன்மையும், நன்மையையே அனுசரித்தும், நல்ல ஒழுங்கான நடத்தையும், நல்ல கண்களும், நன்முகமும், சாத்துவீக குணமும், நீண்ட நீலநிறத் தலைமயிரும், பருத்த இடையும், பித்தாதிக்கமும், அழகிய ஸ்தனமும், அழகிய சரீரமும், பூர்ண பலமும், சம ஸ்கலிதமும், சாந்தமும், பிரியமும், சகல மித்திரமும், வெகு பந்துக் களும், தாய் சுகமும், சௌபாக்கியமும், மிருதுவும், மாதுரிய மும், குளிர்ந்த ஆகாரமும், சிலேஷ்ம சரீரமும், வெகு இந்திரியமும் எப்போதும் அரிப்புடைய யோனி யுடையவளும், வெள்ளை வஸ் திரப் பிரியமும், சுகந்த புஷ்ப பிரியமும், புருஷனுக் கனுகூலவதியும் ஆன களத்திரம் வாய்க்கும்.

3. மேற்படி ஏழாமிடத்தில் புதனிருந்தால், சரீரம் கருப்பு நிறம், நல்ல ரூபம், அழகிய முகம், அழகிய கண்கள், நற் சரித் திரம், அழகான ஹாஸியம், ரஸமான பேச்சு, நீலநிற சுருண்ட தலைமயிர், நீண்ட பருத்த வட்ட மண்டலாகாரமான அழகிய ஸ்தன மத்தியம், அழகிய சரீரம், நாட்டியம், பாட்டு, சாஹித்தி யம், ஒழுக்கம், வாகனாதி விசித்திர சிற்பம் தெரிந்த தன்மை, ரஸிக் கும் காரியங்கள் செய்தல், சாந்தமாக வெகு நன்றாய் (பேசல்) வாசித்தல், சொற்ப சம்போகம், பிறரை வசியப்படுத்துங் குணம், அதிக இந்திரியம், வெகு அரிப்புடைய யோனி, புருஷனுடன் சினேகம், ஞானமார்க்கச் செய்கை, தர்ம மார்க்கத்தில் உண்

---

* சம்பூர்ண சந்திரனென்பது பௌர்ணமி தினத்துச் சந்திரனைக் குறிக்கும்

† 7-ஆம் இட செவ்வாயின் பலன் முன்னமே சொல்லப்பட் டிருக்கிறது. அது ஆரம்பத்தில் செவ்வாய் தோஷ சமாதானத்தில் வருகிறது.

டான் சகல மந்திர ரகசிய ஞானம், பிரதாபம், வாகனம், தரும(ம்) கருமம் இவைகளமையும் களத்திரம் வாய்க்கும்.

4. மேற்படி ஏழாமிடத்தில் குரு இருந்தால், ஸ்தூல சரீரம், ஸ்தூல ஸ்தனம், வெளுப்பு நிறம், சாத்துவீகம், மனோஜயம், நிம்மதியான மனம், கருத்த நீலநிறத் தலைமயிர், சகல சௌபாக்கியம், சகல தேவதா உபாசனை, மந்திர ரகசியம், உபாசநாமந்திர ரகசியம், மேன்மையான ஞானம், ஞான மார்க்கத்தினால் திரவிய சம்பாதனை, சொர்ண சாயையான சரீரம், தேவப் பிராம்மண (சந்தர்ப்பண) பூஜா மந்திரோபதேச சாமர்த்தியம், வெகு மித்திரர், வெகு புத்திரர், வெகு பந்துக்கள், வெகு சம்பத்து, கனக தண்டிகை, வெகு வித்தியை, மணிப்ரவாள முத்தாபரணப் பிரியம், ஸகல லக்ஷணம், சம்பூர்ண ஸம்போகம், சமஸ்கலிதம், சம யோனி, வெளுப்பு வஸ்திரம் பிரீதி, வசியம், தித்திப்பில் இஷ்டம், இஷ்டத்தைச் (செய்தல்) சொல்லல், சகல போக பாக்கியம், சம போஜனம், சுகம், சுக பந்துக்கள் முதலிய சற்குணமுடைய களத்திரம் வாய்க்கும்.

5. மேற்படி ஏழாமிடத்தில் சுக்கிரனிருந்தால் நல்ல ரூபம், சௌபாக்கியம், பெருத்த சரீரம், சுபமான வெளுத்த வர்ணம், ராஜஸ குணம், பாந்த சுருட்டையான தலைமயிர், சுப லக்ஷண முடைய பெருத்த ஸ்தனங்கள், சிலேஷ்ம சரீரம், வெண்பட்டு அல்லது வெளுப்பு வஸ்திரம், முத்தாபரணம், சாந்தம், எப்போதும் பாலன்ன முண்ணல், தயிர் பிரியம், கோதுமையினால் சமைத்த (சாந்த) அன்னம், நானாவித ஷட்ரஸங்களுடன் கூடிய நித்தியான்னதானப் பிரியம், சுதந்திரம், மிருதுவான சரீரம், சுகந்த குஸுமம கஸ்தூரி கதம்ப கற்பூரப் பிரியம், மஞ்சள் வர்ண (வஸ்திர)ப் பிரியம், சதா போஜனப் பிரியம், சம்பூர்ணேந்திரியம், நீண்டகாலம் சம்போகம், வெகு சம்போகம், வெகு காமம், வீட்டில் கிரம ஒழுக்கம், வெகு சீதள சரீரம், சுவஸ்தமான மனம், நிர்மல சித்தம், எப்போதும் சம்போகப் பிரியம், க்ஷேம முள்ள தன்மை முதலியனவும் விஞ்ஞானம் அறிந்தும், விடியற்கால சம்போகம், சும்பனம், ஆலிங்கனம், காம கலா சாஸ்திர மறிந்தும், அறுபத்துநான்குவித பந்தனாதிகளில் பிரியம், சதுரங்க பிரியம், சாகித்தியம், சங்கீதம், வீணா விநோதம், கௌரீ, லக்ஷ்மீ என்னப்பட்ட பெயர்களை (உடையவள்)

கௌரீ, லக்ஷிமீ இத்யாதி தெய்வங்களைச் சதா பூஜிப்பவள், புத்திர பௌத்திரர், வெகு மித்திரர், தாஸீ தாஸ ஜன சம்பன்னுதிகள். உபய வம்சத்திற்கும் உத்தம விருத்தி, புருஷ வசியம், புருஷ வசியப் பிரியம், புருஷானுகூலம் முதலிய குணங்களுடைய தாரம் சித்திக்கும்.

6. மேற்படி ஏழாமிடத்தில் சனி யிருந்தால் அதிகக்கறுப்பு நிற(ம்), குரூபி, இளைத்த தேகம், நீண்ட தேகம், நிர்மாம்ஸ தேகம், நீண்ட நகம், தோலுக்குச் சம உடை, பருத்த பல்லு, ஹீன ஸ்தனம் அதாவது குறைந்த ஸ்தனம். அப்படி யில்லா விட்டால் ஸ்தனமே யில்லாமை. சகலகுண சுதா துக்கம், துக்க ஜீவனம், பருத்த முழந்தாள், விதண்டாவாத(ம்,) துர்க்குணம், தரித்திரம், துராசாரம், துர்போஜனம், புத்திர துவேஷம், மித்திர துவேஷம், பந்துஜன துவேஷம், நிந்திக்கப்பட்ட செய்கை யுடைய தன்மை, நிந்திக்கப்பட்டவைகளை உண்ணல், வாத ரோக பீடை, மலின வஸ்திரம் தரித்தல், அசூயை மனம், சபை நடுங்கும்படியான (குரல்,) குத்ஸித குணம், விபரீத மைதுனம். துர்க்கந்த யோனி, வெளுப்பு வஸ்திரத்தில் ஆசை, துர்போகம், ராஜதர்ம மித்திர பேதாதி குணமுள்ள தாரம் சித்தியாகும்.

7. மேற்படி ஏழாமிடத்தில் ராகு கேதுக்களிருந்தால் விஷப் பிரயோகாதி செய்கையும் மேற்படி ஏழாமிடத்திலேயே சூரியன், ராகு, சநி, குஜ, கேது இவர்கள் அல்லது சூரியன், ராகு, அல்லது சூரியன் கேது, சூரியன் ராகு குஜன், அல்லது சூரியன் கேது குஜன்; அல்லது சூரியன், சனி ராகு, அல்லது சூரியன் சனி கேது, அல்லது சனி குஜ கேது, அல்லது சனி குஜ ராகு வல்லது மேற்படி நால்வரும் அதாவது சூரியன் ராகு சனி குஜ னிவர்களாவது, அல்லது சூரியன் கேது சனி குஜ னிவர்களாவது கூடி யிருந்தாலும் விஷப் பிரயோகாதி செய்கைகள் விஷ வாகனுதிகள் முதலிய செய்கையுடைய களத்திரம் வாய்க்கும்.

8. மேற்படி ஏழாமிடத்தில் ஏழாமதிபதி, சுக்கிரன், ஷஷ்டாதிபதி, அதாவது ஜன்ம லக்கினத்திற்கு ஆறுக்குடையவன், இத்யாதி பாபர்களுடனும், சனி குஜருடனும் கூடி யிருந்தால் ஜாரத் தன்மையும்.

9. மேற்படி ஏழா மிடத்திலேயே ஏழாமாதி சுக்கிரன் ஆறுக்குடையவர், சூரியன், குஜனிவர்கள் கூடி யிருந்தால் க்ஷத்திரிய சங்கமமும், குரு புத சுக்கிரர் கூடி யிருந்தால் பிராம்மண சங்கமமும்,

10. புதன் மட்டும் மேற்சொன்னபடி ஆறு ஏழுக்குடையவர்கள் சுக்கிர னிவருடன் கூடி ஏழில் இருந்தால் விரகதாபமும் சோர பிரதேசத்தில் ஈனஸ்திரீ சேர்க்கையும்,

11. மேற்படி மேலே சொல்லியபடி கூடியவர் குருவாயிருந்தால் தேவதாகிரகத்தில் பிராம்மண (ஸ்திரீ) சங்கமமும்,

12. மேலே சொல்லியபடி மேற்படி ஏழில் சுக்கிரனுகி யிருந்தால் சயன கிருகத்தில் ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் கட்டிலிலேயே வேசி ஸ்திரீ அல்லது பாலிய வாலிப ஸ்திரீ, கர்ப்பிணி ஸ்திரீ, சங்கமமும்,

13. சனியாகில் தாஸீதாஸஜனம் வயது முதிர்ந்த ஸ்திரீ, அல்லது விருஷள ஸ்திரீ சேர்க்கையும்,

14. ராகு கேதுக்களாயின் சண்டாளஸ்திரீயல்லது, மிலேச்ச ஸ்திரீ யல்லது, தாஸி யல்லது, ரஜஸ்வலை யல்லது, குத்ஸித புஷ்பிணி ஸ்திரீயையாவது பலாத்காரமாகச் சங்கமம் செய்தல், அல்லது வனப் பிரதேசத்தில் குருபஸ்திரீ சேர்க்கை யல்லது நாற்கால் ஜீவனிடத்தில் சம்போகம், அல்லது புருஷனுடன் புருஷ கமனம் முதலியன நேரிடும்.

15. ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது ஸ்தானதிபதியும் குரு, புத, சுக்கிர சந்திரனிவர்களும் ஒன்று, நான்கு, ஏழு, பத்து, ஐந்து, ஒன்பது ஆகிய ஸ்தானங்களி லல்லது தன் உச்ச சொட்சேத்திரம், மித்திர க்ஷேத்திரம், சுபா சுப வர்க்கோத்தமாம்சம், பாரிஜாதாம்சம், குஸுமாம்சம், குங்குமாம்சம் இத்தியாதி அம்சங்க ளிருந்தால் சகல ஸௌபாக்கியங்களு முண்டாகுந் தாரம் வாய்ப்பாள்.

16. ஒன்பதாமிடத்தில் சனியும் சந்திரனும் கூடி யிருந்தால் குரு துரோகியாகியும்,

17. மேற்படி சனியும் சந்திரனுமே கூடிப் பாபநவாம்சையிலு மிருந்தால் குரு பத்னியைச் சம்போகிப்பவர்களாகியும்,

18. இவர்களுடன் ஐந்தாமாதியும் கூடி யிருப்பின் குருவின் புத்திரியைச் சம்போகிப்பார்கள் என்று சிலரும், வேறு சிலர் தன் புத்திரியையே சம்போகிப்பரென்றும், இவர்களுடன் சுபர் கூடி யிருந்தால் மேற்படி சேர்க்கை நேராமல் அபவாதம்மட்டும் நேரும் என்றும், பாபர்கள் கூடி யிருந்தால் நிச்சயம் சேர்க்கையே நேரிடும் என்றும் சொல்கின்றனர்.

19. ஜென்ம லக்கினத்திற்கு 7-ல் சூரியனிருந்தால் தகப்பனைவிடக்காமி. அபயசசு முதலியன உடைய தாரம் வாய்க்கும்.

20. க்ஷீண சந்திரன் 7-ல் இருந்தால் அங்கவீன களத்திரம் வாய்க்கும். மேற்படி சந்திரன் சுபர் வீட்டில் இருந்தால் புருஷன் 100 ஸ்திரீகளை ரமிப்பன்.

21. செவ்வாய் 2, 7-ஆம் இடங்களி லிருந்தால் தார நாச சமபலனும் ஓர்சமயம் தாரநாசமும், சூரியனில் அஸ்தங்கதமடைந்த புதன் சப்தமத்தி லிருந்தால் ஸ்திரீயை சபல சித்தமும், சடத்தன்மையும் உடையவளாகச்செய்வர்.

22. மேற்படி புதன் சுபவர்க்கத்தில் இருந்தால் ஸ்திரீயை தெளிந்த வாக்கும், வமிசத்தில் நல்லொழுக்கமும் சிலாக்கிய (ரூபமும்) குணமும் உடையவளாகவும் செய்வர்.

23. புதன் 7-ஆம் இடத்தில் சந்திரனுடன் கூடி யிருந்தால் வெகு ஸ்திரீகளை யடைவார்கள். மேற்படி புதன் ரிஷப ராசியில் இப்படி யிருந்தால் வெகு ஸ்திரீ போகமும் முதல்தார நாசமுமுண்டாகும்.

24. 7-ல் சுக்கிரனிருந்தால் ஜாதகன் வேசி ஸ்திரீஜன வல்லவனுவன்.

25. 7-ஆம் இடமாக விருச்சிகராசியாகி அவ்விடத்தில் சுக்கிரனிருந்தால் தார நாசமுண்டாகும்.

26. சனி குஜ சுக்கிர சந்திரர் 7-ல் இருந்தால் உண்மையில் மனைவி யில்லாதவனுகச்செய்துவிடுவார். அல்லது சந்ததி யில்லாமற் போய்விடும்.

27. 7-ல் 5-மாதி யல்லது 8-மாதி யிருந்தால் தார நாசமுண்டாகிப் போக ஹீனனுகி, சதா துக்கியுமாவார்.

28. செவ்வாயின் ராசியிலாவது அம்சத்திலாவது சுக்கிரன் இருந்து செவ்வாயுடன் கூடி யிருந்தாலும் செவ்வாயால் பார்க்கப்

பட்டாலும் பரஸ்திரீ போக ஆசையும், சனியின் (அம்சத்திலல்லது) ராசியில் சுக்கிரனிருந்து சனியுடன் கூடி யிருந்தாலும் நீச்ச நவாம் சத்திலிருந்து பாபருடன் கூடி யிருந்தாலும் நீச்ச ஸ்திரீ சேர்க்கை ஏற்படும்.

29. 7-ஆம் இடத்தில் சுக்கிரன் வர்க்கத்தில் இருக்கப்பட்ட சனி செவ்வா யிவர்களுடன் சந்திரனும் கூடி யிருந்தால் பரஸ்திரீ சங்கமலோலனவன்.

30. சனி குஜ சந்திர னிவர்கள் அன்னியோன்னிய வர்க்கங் களி லிருந்தால் சுபரு மிவர்களைப் பாராமலிருந்தால் எப்போதும் பரதார கமனமே நிலையாகும்.

31. எந்த லக்கினமானாலும் எந்த விடத்திலானாலும் ஒரு இடத்தில் சந்திரன், குஜன், சனி ஆகிய மூன்று கிரகங்களும் கூடி யிருந்தால் புருஷ ஜாதகன் விபவமுள்ள ஜாரனாகவும் அவன் மனை வியும் பரபுருஷ கமனஞ் செய்பவளாகவு மாவார்கள்.

32. சனி செவ்வா யிவர்களின் வர்க்கத்தில் 7-ஆம் இடத்தில் சுக்கிர னிருந்தாலும் இருந்து மேற்படியார்களால் பார்க்கப்பட் டாலும் சதிபதிகளிருவரும் மேற்படி தோஷத்தை யுடையவ ராவார்கள்.

33. ஜென்ம லக்கினத்திற்கு 7-ல் சனி செவ்வா யிவர்களி னம்சத்தில் சுக்கிரனிருந்து மேற்படி ஸ்தானாதிபதி சனி செவ்வா யிவர்களுடன் கூடியிருந்தால் அந்த ஜாதகன் மனைவி வேசியாக வல்லது ஜாரிணீயாக ஆவாள்.

34. கன்னியா நவாம்சத்தில் சனி ரிஷப லக்கினத்தி லிருந் தாலும், சுக்கிரன் கடக, மீன, விருச்சிக ராசிகளின் அந்தியாம்சங் களி லிருந்து மேற்படி ஸ்தானம் லக்கினத்திற்கு ஏழா மிட மானா லும் ஜாதகன் மலடியின் கணவனாவான். மேற்படி 7-ஆம் இடங்க ளாகிற கடக மீன விருச்சிக ராசிகளின் அந்தியநவாம்சங்களில் சனி யிருந்தால், மேற்படி ஜாதகனுடைய ஸ்திரீகள் எத்தனைபேரா யினும் காலங்கடந்து கடந்து மரிப்பார்கள்; அல்லது அவன் மனைவி ஹீன அங்கமுடையவ ளாகவாவது இரண்டாந்த(ா)ரமாக வாவது வாழ்க்கை நடத்துபவளாவாள்.

35. தன் உச்சத்தில் குரு ராகுவுடன் கூடி யிருந்தால் தார நாசமே யுண்டாகும். மேலு மிவர்களுடன் வேறு பாபரும் கூடி யிருந்தால் சண்டாள மனதுண்டாகும். ஸ்திரீ சங்கமத்தினால்

அல்லது அபவாதத்தினுல் எப்போதாவது ஒரு சமயம் சகல சொத்துக்களும் அழிந்துவிடும்.

36. பாபக் கிரகங்களாகிய சூரியனும் ராகுவும் ஏழாமிடத்திலிருந்தாலுமிப் பலனே யுண்டாகும். சில கிரந்தங்களில் 3 தாரமுண்டாகும் என்று முளது.

37. ஜென்ம லக்கினத்திற்கு 7-ல் சந்திர சூரிய ரிருப்பின் புத்திர மித்திர ரில்லாத தாரமுடையவனுவன்.

38. 7-ல் சூரியனும் செவ்வாயுமிருந்தால் வெளி தேச வாசமும்,

39. 7-ல் சூரியனும் புதனும் கூடி யிருந்தால் காரியத் தடையும், செய்பவள் மனைவியாவள்.

40. மேற்படி ஏழா மிடத்தில் சூரியனுஞ் சனியு மிருந்தால் பிதுரு துவேஷமும், புருஷ ஜாதகத்தில் ஸ்திரீ நாசமும், ஸ்திரீ ஜாதகத்தில் புருஷ நாசமும் அல்லது சதிபதிகளில் மனக் கசப்பும், ஒற்றுமையுடன் வாழாமையும், ரோகிகளாகியும் ஒருவருக்கொருவர் துரோகிகளாகியும், சதா அலைச்சலும் ராஜ சேவை செய்பவர்களும் ஆவார்கள்.

41. சுக்கிரனுப் சூரியனும் கூடி 7-ல் இருந்தால் தார துவேஷமும் தரித்திரமும் ஸ்திரீ துவேஷமும் தானே யுண்டாகும்.

42. 7-ல் சூரியனும் குருவும் கூடி யிருந்தால் மணி பூஷணுதிக ளுண்டாகும்.

43. 7-ல் செவ்வாயும் சந்திரனும் கூடி யிருந்தால் அற்பத் தனமும், புத சந்திரரிருந்தால் சூரத் தன்மையும், குரு சந்திர ரிருந்தால் அரசனுதலும் நல்ல விசேஷ அறிவும் யோகமுமுடைய தாரம் வாய்ப்பாள்.

44. 7-ல் சுக்கிர சந்திரர் கூடில் அதிக புத்திரர் தனம் அதிக ஸ்திரீ பிரஜை இவைகளும், சனி சந்திரரிருந்தால் புத்திரனில்லாமையும், புருஷ ஜாதகருக்கு ஸ்திரீ யில்லாத்தன்மையும் கிராம புராதிகளும் உண்டாகும்

45. 7-ல் குரு செவ்வா யிருந்தால் அரசனுக வல்லது வித்துவானுகவும் குஜ புதரிருந்தால் சஸ்திரம் அஸ்திரம் சேனை இவற்ருல் குறைவுள்ளவனும், குஜ சுக்கிரரிருந்தால் ஸ்திரீயால் தனமும் வெகு பலமும் போக சேஷ்டைகளும் உடையவனுவன்.

46. சனி குஜர் சப்தமத்திலிருந்தால் தனமின்மை தோஷம் அசுசி இவை யுடையவளும்.

47. 7-ல் குரு செவ்வாயிருந்தால் வெகு சத்துருக்க ளுண்டாயினும் குலாதிபதி (யாயும்) ஆகும் யோகமுடையவளும் மனைவியாவாள்.

48. 7-ல் செவ்வாயும் புதனு மிருந்தால் ஊமையான ஸ்திரீயுடன் கூடி யிருப்பான்.

49. குரு சுக்கிரர் சப்தமத்திலிருந்தால் எப்போதும் ஸ்திரீ பிரபுவாகவும் ஸ்திரீரத்னம் வெகு புகழ், தனம் இவைகளுடன் கூடியும், 7-ல் குரு சனி கூடில் ஸ்திரீ துவேஷத்தாலேயே ஸர்வ சொத்துக்களின் நஷ்டமும்.

50. 7-ல் சனி சுக்கிரர் கூடி யிருந்தால் ஸ்திரீக்கு மரணத்தையும் விசனத்தையும் ஸ்திரீ துவேஷத்தாலேயே சகல சொத்துக்களும் நஷ்டமும் அவமானமும், அல்லது நிதான வாழ்க்கையும் அடைவார்.

51. ஜென்ம லக்கினத்திற்கு 7-ல் பாபரிருந்தால் தார நாசமும், அல்லது அங்கஹீனமுள்ள தாரமும், மேற்படி பாவரே தன் உச்ச சொட்சேத்திரங்களிருந்தால் தாரத்தை இழந்திருத்தலும்,

52. 7-மாதி 7-லேயே யிருந்தால் சகோதர வாத்சல்லியமும்.

53. 7-ல் சுபரிருந்து சுபரும் பார்த்தால் ஸ்திரீயால் தனலாபமும் அடைவர்.

54. 7-மாதிபதி சந்திரன், புதன், சுக்கிரன், குரு இவர்களுடைய வர்க்கத்தில் இருந்தாலும், பார்த்தாலும் இவர்களுள் ஒருவராவது அல்லது இவர்கள் 1, 7, 9 லாவது மேற்படி அம்சங்களிலாவத இருந்தால் அந்த அம்சத்திற்குரிய ஜாதி ஸ்திரீயால் (தனம் வரும்) சேர்க்கை யுண்டாகும்.

55. 7-மாதி 1, 4, 7, 10-ல் எங்காவது இருந்து சுபருடன் கூடி யிருந்தாலும் 7-மாதி சுபரால் பார்க்கப்பட்டாலும் 2 தார மேற்படும், ஜாதகன் நீண்ட வயதடைவான்; அன்றி.

56. 7-ல் இவர்கள் அஸ்தங்கிரக நவாம்சங்களி லிருந்தாலும் 2 தார முண்டாகும்.

57. 7-க் குடையவர் உச்சம், வக்கிரம் முதலிய வெகு குணங்க ளடைந்திருந்து, பாபதிருஷ்டியும் பெருவிடில் வெகுதார முண்டாகும்.

58. லக்கினதிபதி 7-லும் 7-மாதி லக்கினத்திலும், இருந்தால் மதனகோபால யோக முண்டாகும். இவ்விருவரில் ஒருவர் புத னுடன் கூடி யிருந்தாலும் 7-மாதியுடன் கூடி 7-மிடத்தில் சுக்கிர னுச்சத்திலிருந்தாலும்,

59. ஷை சுக்கிரன் 7-மாதியால் பார்க்கப்பட்டாலும் நூறு ஸ்திரீகளுடன் ரமிப்பர். வேறு சிலர் முந்நூறு ஸ்திரீகளுடன் ரமிப்பரென்று சொல்லுகின்றனர். ஷை ஸ்திரீகள் சுக்கிரனிருக் கும் நவாம்சத்திற்குச் சமானமான நிறம், ரூபம் குணமிவைகளை யுடையவர்களா யிருப்பார்கள்; அல்லது ஒன்பதுக்குடையவர் ஏழுக்குடையவர் இவர்களுக்குடைய குணத்துடனுவது ஷ்திரீக ளிருப்பார்கள். இவர்களின் பலத்தைப்போல் ஷை ஸ்திரீகளின் லக்ஷணமு முண்டாகும்.

60. 7-மாதி நீச்சவர்க்கத்தில் இருந்தால் ஜாதகருக்கு விவாக மும் நீச்ச வர்க்கத்திலேயே நேரிடும். 7-க் குடையவர் சுக்கிர னிவர்களுடைய திக்கில் அல்லது சுக்கிர னிருக்கும் ராசிக்கு ஏழுக் குடையவருடைய திக்கில் அல்லது இவர்களால் பார்க்கப்பட்ட ராசிக்குடைய திக்கில் விவாகம் நடக்கும்.

61. சந்திரன் 12-லிருந்து 6-ல் சூரியனிருந்தால் ஜாதகருக் குத் தாழ்ந்த ஜாதியில் விவாகம் நடக்கும். யோகமும் குறை வாகும்.

62. 5 அல்லது 9, 7-ஆம் இடங்களில் சூரிய சுக்கிரர் கூடி யிருந்தால் அந்த ஜாதகர்களுடைய மனைவி ஒரு அங்கக் குறை வுடையவளாவாள்.

63. ஸ்திரீ புருஷக் கிரகங்கள், சப்தமத்தில் அல்லது சனி செவ்வா யிவர்களிருந்தாலும் ஒரு சுபரால் எவராலாவது பார்க்கப் பட்டால் வயோதிக வயதில் சர்வபூபதி யாவர்.

64. ஜென்மலக்கினம் கன்னியாகி லக்கினத்தில் சூரியனும் சப்தமத்தில் சனியு மிருந்தாலும் சுக்கிரன் சுபரால் பார்க்கப்பட் டிருந்தாலும் ஜாதகனுக்குப் பின்னடி மனைவி மரிப்பாள்.

65. 4, 8-ஆம் இடங்களில் சுக்கிரனிருந்து ஷை சுக்கிரன் சூரியன் செவ்வாய் சனி இவர்கள் மூவர்களுக்கு நடுவிலிருந்தால் நெருப்பினாலும், இவர்களில் இருவருக்கு நடுவிலிருந்தால் கிணற்றில் வீழ்வதாலும் தாரத்திற்கு மரணம் நேரிடும். இவை நேருவதற்கு சுக்கிரன் இந்த பாபர் மத்தியிலேயே இருக்கவேண்டும், ஒரே ராசியில் முன் பின்னாக இருக்கப்பட்ட சூரியனுக்கும் சனிக்கும் மத்தியில், அல்லது சூரியனுக்கும் செவ்வாய்க்கும் மத்தியில் அல்லது சனி செவ்வா யிவர்களுக்கு மத்தியில் இருந்தாலும் அல்லது ஒரே ராசியில் ஒரே நக்ஷத்திரத்தில் முன் பாதத்திலும் பின் பாதத்திலும் ஷை பாபர்களிருந்து ஷை பாபர்கள் மத்தியில் மேற்படி நக்ஷத்திர மத்தியில் பாபருக்கிடையில் சுக்கிரன் இருந்தாலும் தார நாசம் மேற் சொல்லியபடி நேரும். மேற்படி பாவர்கள் சுபருடன் கூடி யல்லது சுபரால் மேற்படி பாபர்கள் பார்க்கப்பட்டிருந்தால் சந்ததி யில்லாமற் போய்விடும்; தாரநாச முண்டாகாது.

66. சுக்கிரன், செவ்வாய் சனி இவர்களுடன் கூடி 2-ஆம் இடத்திலிருந்தாலும், 7-மாதி இப்படி யிருந்தாலும் ஜாதகன் மனைவி விபசாரம் செய்வாள்.

67, 5, 7-க்குடையவர், சனி, சத்துருநாதன் அதாவது 6-மாதி யிவர்களுடன் கூடி யிருந்தாலும் பார்க்கப்பட்டாலும் ஜாதகன் மனைவி விபசாரியே யாவாள். ஜாதகனும் பரஸ்திரீ கமனமுடைவ னுவான்.

68. தேய்பிறைச் சந்திரன் 7-ல், பாபருடன் கூடி யிருந்தால் கெட்ட நடத்தை யுண்டாகும்.

69. சுக்கிரன் மேற்படி சந்திரனுடன் கூடி யிருந்தாலும் மூடத்திலிருந்தாலும் தாரம் ஜலத்தில் மரண மடையும்.

70. 7-ஆம் இடத்தில் பாபக்கிரகங்கள் அப்பிரகாச கிரகங்களுடன்கூடி யிருந்தால் அசுபமான தாரமும்,

71. 7-ல் சூரியன் இருந்தால் மலடியும் க்ஷீண சந்திரனிருந்தால் விபசாரியும், செவ்வாயிருந்தால் மரணமும், சனி யிருந்தாலும் ராகு விருந்தாலும் அபகீர்த்தியுடையவளான மனைவியும்; ஜாதகன் பிறர் மனைவியைப் போகித்தலும் நிஷேகமின்றியே புத்திரலாபமும் அதாவது ருது சாந்திக்குமுன்பே புத்திரனைப்பெறும் மனைவியும்,

72. 7-ல் ராமனிருந்தால் விவாகமே யில்லாமலும் பரிவேஷ னிருந்தால் துச்சரித்ர கெட்ட ஒழுக்கமுடைய மனைவியும் உப கேது விருந்தால் கெட்ட ஒழுக்கந்தரும் பான வகைகளை விரும் பிக் குடிப்பவளும், கெட்ட குரோத முடையவளும், துஷ்டையும், காலன், விதிபாதனிவர்களிருந்தால் அடிக்கடி கர்ப்ப நஷ்ட முடை யவளும், துச்சரியுடன் இருப்பவளும் பூர்ண சந்திரனிருந்தால் ஸ்திரீ பிரஜைகளைப் பிரசவிப்பவளும், புதனிருந்தால் நல்ல புத்திர ரும், குரு விருந்தால் சற்குணமும், நற்புத்திரிகளும், சுக்கிரனிருந் தால் சகல சௌபாக்கியங்களும், புத்திரிகளு முண்டாகும் தாரம் வாய்க்கும்.

விவாகமாகும் காலங்களும்,

தாரமரணம் புனர்விவாக மிவை நேரிடும் காலங்களும்

73. ஏழாமிடத்தி லிருப்பவருடைய, அல்லது ஏழாமிடத் தைப் பார்ப்பவருடைய, அல்லது ஏழாமிடத்திற் குடையவ ருடைய, தெசை வரும்போதும், இவர்களில் ஒருவருடைய தெசை நடக்கும்போது இவர்களுடன் கூடி யிருக்கப்பட்டவர்களுடைய, அல்லது இவர்களால் பார்க்கப்பட்டவருடைய தெசை புக்தி வரும்போதும்,

74. ஏழாமிடத்திற் குடையவன், சுக்கிரன் ஜன்ம லக்கினாதி பதி இவர்க ளிருக்கப்பட்ட நவாம்ச திரிகோணராசிகளில் கோட் சாரத்தில் மேற்படி லக்கினாதிபதி குரு சுக்கிரன் சந்திரனிவர்கள் கூடும்போதும் அல்லது மேற்படி திரிகோண ராசிகளில் ஸப்தமாதி பதியுடன் இவர்கள் கூடும் போதும்.

75. 7 மாதிபதி யிருக்கப்பட்ட நவாம்சத்திலும் சுக்கிரன் சந்திரனிவர்களில் பல முடையவர்களுடைய சப்தமாதி யிருக்கப் பட்ட ராசிநாதர்களுடையவும் தெசையில் 7-மாதியுடன்கூடி யிருக்கபபட்ட கிரகத்தின் நவாம்சராசியின் 22-வது திரேஷ்காண திரிகோணங்களில் குரு கோட்சாரத்தில் வரும்போதும் விவாகம் நடக்கும்.

76. சுக்கிரனுடனும், குடும்பாதிபதி, களத்திரஸ்தானாதிபதி இவர்களுடனும் கூடி யிருக்கப்பட்ட சுபர்களெத்தனை பேர்களோ அத்தனை களத்திர மிருக்கும்.

77. சுய க்ஷேத்திரத்தில், குடும்பாதிபதி, களத்திரஸ்தானாதி திப இவர்களிருந்தால் கடைசி வரையில் ஏகதாரமே நிலையாகும். ஏக என்பது ஒன்றே ஒன்று.

78. சுக்கிரன் சரராசியி லிருந்தாலும் குரு 7-ல் இருந்தாலும் லக்கினாதிபதி பலிஷ்டனுகி யிருந்தால் சற்களத்திரமும்.

79. ஒன்பதாமாதிபதி 7 மாதிபதி யிவர்கள் நீச்சராசியில் சர நவாம்சையில் பாபராசியில் வெகு பாபருடன் கூடி யிருந் தாலும், அலிக்கிரகம் 7-ல் இருந்தாலும் உதயநவாம்சத்தி லிருந் தாலும் இஷ்டமானதாரம் வாய்க்கும், வேறு ஒரு கிரந்தப்படி 2 தாரம் என்றும் வேறு சில கிரந்தப்படி 8 தாரம் வாய்க்கும் என் றும் ஏற்படுகின்றது.

80. இரட்டை ஹ்ருஸ்வ சுரூப ராசிகளில் சுக்கிரனிருந்து சுக்கிரனிருக்கும் ராசியாதிபதி தன் உச்சத்திலிருந்து 7 மாதியும் பலமுடையவனு யிருந்தால் வெகுதாரங்க ளேற்படும்.

81. 7 மாதி கேந்திரத்திலிருந்து சுபரால் பார்க்கப்பட்டா லும் கோபுராம்சத்தில் ஒன்பதா மிடத்திலிருந்தாலும சத்களத்திர மேற்படும்.

82. 7 மாதி சுபர் ராசியிலிருந்து சுக்கிரன் தன் உச்ச சொட்சேத்திரங்களி லிருந்தால் 5 அல்லது ஒன்பது வயதில் விவாகமும்.

83. 7 மிடத்தில் சூரியனிருந்து 7 மாதி சுக்கிரனுடன் கூடி யிருந்தால் 7 அல்லது 11-வது வயதில் விவாகமும்;

84. 2 மிடத்தில் சுக்கிரனிருந்து 7 மாதி 11-ல் இருந்தால் 10 அல்லது 16 வயதில் விவாகமும், *

85. லக்கின கேந்திரத்தில் சுக்கிரனிருந்து 7-க்குடையவன் சனியின் வீட்டிலிருந்தால் 11 வயதில் விவாகமும்,

86. 4, 7, 10 ஆகிய இவ்விடங்களில் சுக்கிரனிருந்து மேற் படி சுக்கிரனுக்கேழில் சந்திரனிருந்தால் 12 அல்லது 19 வயதில் விவாகமும்.

87. சந்திரனுக் கேழில் சுக்கிரனிருந்து சுக்கிரனுக்கேழில் சனி யிருந்தால் 18 வயதில் விவாகமும்.

88. 2 மாதி 9-ல் இருந்து 7 மாதி 2-ல் இருந்தால் 13 வயது அடைந்ததும் விவாகமும்.

---

* 84-வது அயிட்டம் கும்பலக்கினத்திற்கு மட்டும் நேராது.

ஷ்ருஸ்வ ராசிகள் எவை என்பதை நமது ஜாதக சாகரம் இரண்டாம் பாகத்தில் பார்க்கவும். (அச்சில்)

89. 2 ஆம் இடத்தில் சுக்கிரனும் 12 மாதி செவ்வாயுடனும் இருந்தால் 20 வயதில் அல்லது 22 வயதில் விவாகமும்.

90. லக்கினத்தின் 7-வது நவாம்ச முதயமாகி 7 மாதி 12ல் இருந்தால் 23 அல்லது 26 வயதில் விவாகமும்.

91. மேற்படி 8-வது அம்சத்தில் 7 மாதியிருந்து லக்கினுதிபதி சுக்கிரனுடன் கூடி யிருந்தால் 23 அல்லது 25 வயதில் விவாகமும்,

92. 5-ல் சுக்கிரனிருந்து (ராகு 4-ல் இருந்தால் 31 அல்லது 34 வயதில் விவாகமும்) 8-ல் ராகு இருந்தாலும் இதே வயதில் விவாகமும்.

93. * 3 மிடத்தில் சுக்கிரனிருந்து 9-ல் 7 மாதி இருந்தால் 27 அல்லது முப்பது வயதில் விவாகமும்.

94. 7 மாதி நீச்சராசியிலிருந்து சுக்கிரன் 8, 6 இவ் விடங்களில் இருந்து மூடத்திலிருந்தாலும் 8-ல் சுக்கிரன் சத்துரு ஸ்தானத்தில் மூடத்திலிருந்தாலும் 18 அல்லது 33 வருஷத்தில் தாரநாசமும்.

95. 7 மாதி 8-ல் இருந்து 12 மாதி 7-ல் இருந்தால் 19 வருஷத்தில் தாரநாசமும்.

96. ராகு 2 ஆம் இடத்திலிருந்து 7-ல் செவ்வாயிருந்து, பாபருடனும் கூடி யிருந்தால் விவாகமான 3 வருஷத்தில் அக்னி, பாம்பு கடித்தல் இவற்ருல் தார மரணமும்.

97. 2 ஆம் இடத்தில் ராகுவும் 7-ல் செவ்வாயும் இருந்து பாபருடன் சுக்கிரன் கூடி யிருந்தால் விவாகமான 3 நாளில் தாரத்திற்கு மரணமும்.

98. செவ்வாயுடன் கேது கூடி 5 ஆம் இடத்திலிருந்து 11ல் குரு ராகுவுடன் கூடி யிருந்தால் விவாகமான 7-ம் நாளில பாம்பு கடித்துத்தாரத்திற்கு மரணமும்,

99. 8-ல் சுக்கிரனிருந்து 8 மாதி சனியின் வீட்டி லிருந்தால் 12 அலலது 19-ம் வருஷம் தாரநாசமும், (இந்த 99-வது அயிட்டம் விருச்சிக மகர கும்பங்களுக்கு நேராது.)

---

* 93-வது ஐடம் தனுசு. கும்பம் மீன மிவைகளுக்குப் பொருந்தாது.

100. லக்கினாதிபதி நீச்சராசியிலிருந்து 2 மாதி 8-ல் இருந்தால், 13 வருஷத்தில் தாரநாசமும்,

101. சுக்கிரனுக் கேழில் சந்திரனிருந்தாலும் சந்திரனுக் கேழில் புதனிருந்தாலும் 8 மாதி 5-ல் இருந்தாலும், முதல் தாரம் 10-வருஷத்திலும் மறுபடி 22-ல் 2-ந் தாரமும் 33-ல் 3-ந் தாரமும் விவாகம் நடக்கும்.

102. 2 மாதி நீச்சராசியிலிருந்து மூடத்திலிருந்தாலும், சத்துருராசியி லிருந்தாலும், நீச்சராசியிலேயே நீச்ச நவாம்சையிலிருந்தாலும், நீச்ச ஷட் வர்க்கத்திலிருந்தாலும் குடும்பச்சேதமுண்டாகும்.

103. 7 மாதி யிருக்கப்பட்ட நவாம்ச நாதனாவது 7 மாதியுடன் கூடி யிருக்கும் கிரகநவாம்ச நாதனாவது, சுபருடன் கூடியல்லது பலமுடையவனாக பாராவதாம்சாதி அம்சங்களில் புதனுடன் கூடி யிருந்தாலும் ஜாதகன் 100 ஸ்திரீகளுடன் கூடியவனவன்.

104. 2 மாதி யிருக்கும் ராசிநாதன் ஐராவதாம்சம், கோபுராம்சம் இத்யாதி அம்சங்களில் இருந்தாலும் சுபர்கேந்திர மத்தியில் குருவின் அம்சத்தில் இருந்தாலும் 200 ஸ்திரீகள் மனைவியாவார்கள்.

105. சுக்கிரன் 7 மாதிபதியாகி சுயக்ஷேத்ரமூலத் திரிகோணத்தி லிருந்தாலும், 5, 9, 8, 11 ஆகிய ஸ்தானங்களி லிருந்தாலும் நல்ல குணமுள்ள தாரம் வாய்ப்பாள்.

106. 7 மாதி சுக்கிரன் சொட்சேத்திர சுய நவாம்சத்தில் அல்லது கேந்திரத்தில் இருந்தால் சத்களத்ர முண்டாகும். மேற்படி சுக்கிரன் சரநவாம்சையில் சுபருடன் கூடினாலும் சுபாம்சத்தி லிருந்தாலும் 2 தார மேற்படும்.

107. கடகத்தில் சுக்கிரனிருந்து 7-ம் சந்திரன் இருந்தாலும் கடகத்திலேயே சந்திர சுக்கிரர் கூடியிருந்தாலும் சத்களத்ரம் வாய்க்கும் என்று சிலரும் 2 தாரம் வாய்க்குமென்று வேறு சிலரும் சொல்லுகின்றனர்.

108. 7-ஆம் இடத்தில் சுக்கிரனிருந்து சூரியன் புதனிவர்களுடன் கூடி யிருந்தாலும், மூடத்தில் அல்லது பாபவர்க்கத்திலிருந்தாலும் பரஸ்திரீ சேர்க்கை யுண்டாகும்.

109. 7-ஆம் இடத்தில் சுக்கிரனிருந்து நீச மூடத்திலுமிருந்து பாபருடன் கூடி யிருந்தாலும் பாபரால் பார்க்கப்பட்டாலும் நீச்ச ஸ்திரீ சேர்க்கை யுண்டாகும்.

110. 6-க் குடையவன் சுக்கிரனுடன் கூடி இருவரும் மூடத்தில் கேந்திரத்திலிருந்தாலும் அல்லது சனியுடன் கூடி யிருந் தாலும் மத்திய ஸ்திரீசேர்க்கை யுண்டாகும்.

111. சனியின் அம்சத்தில் சுக்கிரனும் சுக்கிரன் அம்சத்தில் சனியும் இருந்தாலும் செவ்வாயினம்சத்தி லிருந்தாலும் பக சும்பனம் செய்வர்.

112. 7-ஆம் இடத்தில் சுக்கிரனிருந்து சுபக்கிரகத்தினல் பார்க்கப்பட்டாலும் பாபாம்சத்தில் பாபர்மத்தியில் இருந்தால் மூட ஸ்திரீ சேர்க்கை ஏற்படும்.

113. 2 மாதிபதி, சுக்கிரன், ராகு சனி இவர்களுடன் கூடி யிருந்தாலும் அல்லது மூடராசியி லிருந்தாலும் பக சும்பனம் செய்வர்.

114. 2 மாதி 7 மாதி இவர்களின் சேர்க்கையுள்ள கேந் திரத்தில் சூரியன் புதனிவர்களிருந்து குருவால் பார்க்கப்படாமலு மிருந்தால் வர்ணஹீனம் அதாவது ஜாதிக்குறைவு, வழிகுறைவு புருஷஹீனம் இத்யாதிகளால் போக முடையவர்களாவார்கள்.

115. லக்கினத்திற்கேழில் பாபரிருந்தால் தாரத்தினல் விசார முண்டாகும். மேற்படி 7 மாதியே பலமுடையவனகிப் பாப ருடன் கூடி எங்கிருந்தாலும் 2 தாரம் ஏற்படும். அதுவுமில்லே யேல் தாரத்துக்குக் கிரகசங்கை பீடை யேற்படும், அப்படி யில்லாவிடில் கர்ப்பகாலத்தில் பீடை யேற்படும், அல்லது தாரவர்க் கத்தில் அரிஷ்டங்கள் சம்பவிக்கும், அல்லது மறுதாரத்தினிடம் போக முண்டாகும். அல்லது பரஸ்திரீ சங்கமமுண்டாகும். அல் லது கர்ப்பகோளத்தில் கிருமி பீடை யுண்டாகும். அல்லது காலங்கடந்து புத்திர உற்பத்தி யுண்டாகும். முதலில் பெண் பிரஜை பிறக்கும் அல்லது தாரநாச முண்டாகும். அல்லது சகோ தர வர்கத்தில் அரிஷ்ட முண்டாகும். அல்லது தாரத்தினிடம் வாக்கு குரூரத்தனம் காரணமாக துவேஷமுண்டாகும். அல்லது மனேவி மலடியாவள். அல்லது சிசுக்களேப்பெற் றிழப்பாள்,

அல்லது கர்ப்பங்களழிந்து விடும், அல்லது நோயுறுவாள். அதுவு மில்லையேல் சோரம் போவாள், அல்லது தரித்திரமாவது, யோக மாவது நேரிடும்.

116. சிம்மராசியில் ஜன்ம காலத்தில் உத்திரம் 1-வது பாதத் தில் சந்திரனிருக்கப் பிறந்தால் 3-வது தெசையின் முடிவின்போது விவாகம் தனுசு லக்ன ஜாதகனுக்கு நடக்கும். மேற்படி தனுசு லக்கினத்திற்கே,

117. 7 மாதி 12-ல் இருந்து சுக்கிரனுடன் சூரியன் கூடி யிருந்தால் 2 தாரம் ஏற்படும்.

118. 7 மாதி நீச்சத்தில் உச்சாம்சத்தில் ஆயில்யம் 2-ல் இருந்து சுக்கிரனும் நீச்சத்தில் உத்திரம் நாலாவது பாதத்தில் உச் சாம்சத்தில் இருந்தால் பாக்கிய வமிசத்தில் விவாகம் நடக்கும்.

119. மிதுன ராசியில் புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திர னிருந்து ஜனித்தால் 10 அல்லது 12 வயதில் விவாகம் நடக்கும். பாக்கியசாலியான மனைவியாவாள்.—ரிஷப லக்கினம்.

120. மேற்படி மிதுனராசியிலேயே புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு ஜன்மலக்கினமாகின் இரண்டாந் திசை சுயபுக்தியில் விவாகம் நடக்கும்.

121. மகரராசியில் உத்திராடம் 3-வது பாதத்தில் சந்திர னிருந்து பிறந்தால் 3-ந் தெசையில் 10 அல்லது 12 வயதில் உற வினரில் விவாகம் நடக்கும். புருஷ ஜாதகமானால் 2 தாரம் ஏற்படு மென்பது சில ரிஷிகளின் மதம்.—மிதுன லக்கினம்.

122. விருச்சிக ராசியில் கேட்டை 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமானால் 2-வது தெசை சுயபுக்தியில் விவாகம் நேரிடும். இதற்கே 9-ல் குருவும் செவ்வாயும், 11-ல் சுக்கிரனும் கேதுவும் கூடில் மறுதாரமும் ஏற்படும், கிலேசமு முண்டாகும். மேலும் மேற்படி சுக்கிரனுக் கேழிலும் பாபரிருந்தால் தாரத்தினால் வெகு கிலேசமும் தாரத்தின் சுகமின்றியும் இதற்கே 7 மாதி பாபருடன் கூடினால் வழி வழியாக தாரலாபமும், தாரமூலம் விசாரமும், அனேகந் தாரங்கள் நாசமும் 5 அல்லது 7 தாரங் கள் வரை விவாகமும் முன் ஜன்மத்தில் தன்னை நெருங்கிய ஸ்திரீயைக் கொன்ற தோஷம் காரணமாக ஐந்து அல்லது ஆறு

தாரம் வரை நாசமும் நேரிடும். ஏழாந்தாரம் (சாந்தி செய்த பின்பு) நிலைக்கும்—மிதுன லக்கினம்.

133. துலா ராசியில் சுவாதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து ஜன்மலக்னம் சிம்மலக்கினமாகி ஜனனமானல் இரண்டாவது தெசையில் குருதெசை சுக்கிரபுத்தி வந்தால் விவாகம் நடக்கும்.

124. மேஷ ராசியில் அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து அல்லது மேஷத்தில் யுக்மாம்சத்தில் சந்திரனிருந்து மகரம் ஜன்ம லக்கினமானல் சுக்கிரன் ரோகிணி 2-வது பாதத்திலிருந்தால் ரூபசாலியான மனைவி வாய்ப்பாள். இதற்கே சனி 7-ல் இருந்தால் 2 தாரம் ஏற்படும். மேற்படி சனியை சுபர் பார்த்தால் 2-ந்தாரம் நேரிடாது. ஆனல் தாரத்திற்கு ரோக பயமுண்டாகும். இதுவே தனுர் லக்கினமானல் 2 தாரம் ஏற்படும். மேஷ, மகர, கடக துலாலக்கினங்களுக்கு நேரிடாது ஏகதாரமாகவே நேரிடும்.

125. கும்பராசியில் சதயம் 3.வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் அதுவே ராசியானல் பதினன்கு பதினைந்து வயதில் விவாகம் நடக்கும்.

126. மகர ராசியில் ஜென்மகாலத்தில் திருஓணம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னியா லக்கினத்தில் ஜனனமாகின் பதினன்காவது வயதில் விவாகம் நேரிடும். முன் ஜென்ம பாபத்தின் காரணமாக இவள் கணவனுடன் ருதுசாந்தி காலத்தில் விரோத மடைவாள். இதற்கு குரு சூரியர் கூடி 11-லும் சனி 6-லும் சுக்கிரன் 12-லும் இருக்கவேண்டும். இப்படியிருந்தாலும் இத்துடன் 3-ல் ராகு இருந்தாலும் 30 வயதுக்குமேல் 2-வது விவாகம் நடக்கும். 2-வது விவாகத்திற்கு 2 அல்லது 3 தடவை பிரயத்தனம் செய்தபின்பு நடக்கும்.

127. துலா ராசியில் விசாக நக்ஷத்திரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மேஷமாக ஜனித்தால் 2-வது தெசை சுக்ர புத்தியில் பந்து வர்க்கத்தில் விவாகம் நடக்கும்.

128. கடக ராசியில் பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு லக்கினமாக ஜனித்தால் 7-மாதியாகிய புதன் நீச்சத்திலிருந்து சுக்கிரன் சூரியனிவர்களுடனும் கூடினல் மறுதாரமும் வாய்க்கும். அதாவது 2-தார மேற்படும். முதல் தாரம் 24-வது வயதில் பிரச

வத்தில் மரிக்கும். கேது தெசை சுக்கிர புத்தியில் பிறகு மறுதாரம் வாய்க்கும்.

129. தனுசு ராசியில் மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமானுல் 2-வது தெசையில் 12 அல்லது 14-வது வயதில் விவாகம் நடக்கும்.

130. ரிஷப ராசியில் ரோகிணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மீனம் லக்கினமாகி சுக்கிரன் நீச்சமடைந்து இருக்க 7-மாதியான புதன் சூரியனுடன் கூடி 5-ல் இருந்தால் பாக்கிய வமிசத்தில் 12 அல்லது 14-வது வயதில் உறவினரில் விவாகம் நடக்குமென்று மனு சொல்லுகிறுர். புருஷ ஜாதகத்தில் மேற்படி சுக்கிரனுடன் செவ்வாய் கூடினுல் வீட்டில் வைப்பு ஏற்பட்டு மனைவிக்குக் கஷ்டமுண்டாகி அதனுல் விசார மேற்படும். மனைவி மூர்க்க குணமுடையவளாவாள்.

131. கன்னியா ராசியில் ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னியா லக்கினத்தில் ஜனனமடைந்து குரு துலாத்திலும் சுக்கிரன் 11-லு மிருந்தால் தான் பிறந்த ஊருக்கு மேற்கில் அல்லது வடக்கில் (தன்) இருபது வயதில் பதிபக்தியுள்ள மனைவி வாய்ப்பாள்.

132. கன்னியா ராசியிலேயே சித்திரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சிம்ம லக்கினமாக ஜனித்து சுக்கிரனுடன் கூடி 5-ல் இருக்கும் ராகு தெசை நடந்தால் மேற்படி தெசையில் மேற்படி சுக்கிர புத்தியில் விவாகம் நடக்கும். இதற்கே லக்கினத்தில் குருவு மிருந்தால் 2 அல்லது 3 விவாகம் ஏற்படும். 7-மாதி திசையில் புத புக்தியில் மனைவி மரித்தபின் சுக்கிர புக்தியிலாவது பிறகு ராகு புக்தியிலாவது சந்தேகமின்றி விவாகம் 2-வதாக நடக்கும். இந்த 2-வது விவாகம் எருக்கஞ் செடிக்காகும். 3.வது தாரத்தை நேராக மணப்பான்.

133. விருச்சிக ராசியில் கேட்டை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மீன லக்கினத்தில் பிறந்து 2-ல் 7-மாதியும் சூரியனுமிருந்து சுக்கிரன் ராகுவோடு கூடி 4-ல் இருந்தாலும் சந்திரன் நீச்சத்திலிருந்தாலும் இரு தாரமேற்படுவர். 19-ல் அல்லது 20-ல் முதல் விவாகமும் 3-ந் தெசை முடிவில் புத புக்தியில் தார நாசமும் பிறகு மறு விவாகமும் நடக்கும்.

134. சிம்ம ராசியில் பூரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சிம்ம லக்கினமாக ஜனித்து சனி கடகத்திலும் சுக்கிரன் கேது வுடன் கூடி துலாத்திலு மிருந்தால் இரண்டு விவாக மேற்படும்.

135. மேஷ ராசியில் அசுவனி 3-வது பாதத்தில் சந்திர னிருந்து சந்திரனுடன் நீச சனி கூடினுலும் லக்கினம் மகரமாக ஜனித்தவர்களுக்கும் இரு விவாக மேற்படும்.

136. மீனத்தில் சந்திரனிருந்து செவ்வாய் 8-மாதியாகி அங்கு சந்திரனுடன் கூடில் 25-ம் வயதில் விவாகம். 3-வது தெசை யில் நடக்கும்.

137. கன்னியா ராசியில் உத்திர நக்ஷத்திரம் 3-வது பாதத் தில் சந்திரனிருக்கப் பிறந்து லக்கினம் சர துலாமாகி சனி 8-லும் சுக்கிரன் 2-லும் செவ்வாய் 4-லும் இருந்தால் இரு விவாகம் ஏற்படும்.

138. மேஷ ராசியில் அசுவனி 2-வது பாதத்தில் சந்திர னிருந்து லக்கினம் ரிஷபமாக ஜனித்தால் 8-ல் சனி 2-ல் சூரியன் இப்படியிருந்து செவ்வாய் நீசமடைந்திருந்தால் 35-வது வயதில் அல்லது 37-ல் தாரநாசமும் பிறகு மறு விவாகமும் நடக்கும்.

139. மகர ராசியில் சந்திரனிருந்து விருச்சிக ராசியில் ஜனன மடைந்தால் 14 அல்லது 15 வயதில் பந்து வர்க்கத்தில் விவாகம் நடக்கும்.

140. ரிஷப ராசியில் கிருத்திகை 3-வது பாதத்தில் சந்திர னிருந்து சிம்ம லக்னமாக ஜனித்தவர்களுக்கு 7-ல் கேது விருந்து செவ்வாயும் களத்திரகாரக சுக்கிரனும் 6-ல் இருந்தால் 2-விவாகம் நேரும். 4-ந்தெசை சுயபுக்தியிலாவது குரு புக்தியிலாவது தார நாச மேற்படும். பிறகு சனி புக்தியில் விவாகம் 2-வது நடக்கும்.

141. துலா ராசியில், சுவாதி நக்ஷத்திரத்தின் 1-வது பாதத் தில் சந்திரனிருந்து சிம்மலக்னமாக ஜனித்து 12-ல் குஜன் 7-ல் சனி யிப்படியிருந்து ராகுவோடு சுக்கிரன்கூடி 4-ல் இருந்து சனியின் பார்வையை சுக்கிரனடைந்தால் 3-தாரம் ஒன்றன்பின் ஞென்ருக மரித்துவிடும்; பிறகு 4-ந்தாரத்தினிடம் சுகம் உண்டா கும். முதல்தாரம் 25-வது வயதில் பிரசவத்திலும், 2-ந்தாரம் ஒரு பெண் பிறந்தபின்பு துர் மரணமாக 33-லும் மரித்த பின், உடனே

அதே வருஷத்திலேயே 3-ந்தரம் விவாகமாக உடனேயே இவள் மரித்துப் போனபின், 36-ல் 4-ந்தார விவாக முண்டாகும்.

142. ரிஷப ராசியில், ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னியாலக்கினமாக ஜனித்து குரு நீச்சராசியில் லக்னாதிபதி சுக்கிரன் இவருடன் கூடி யிருந்து சனியுடன் கூடிய சந்திரனையும் மேற்படி குருவையும் செவ்வாய் பார்த்தால் 10 அல்லது 12 வயதில் பாக்கியவம்சத்தில் ஜன்ம கிராமத்தில் வெகு சிறிய குழந்தைப்பருவமான பெண்ணை மணப்பான். இரு தாரயோக முடையவன், 30-வது வயதில் முதல் தாரம் மரித்தபின் வெகு சீக்கிரமே மறுவிவாகம் நேரும்.

143, சிம்ம ராசியில், பூரம் 4-ம் பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாக ஜனித்தால் 3-ந்தெசையில் அல்லது 4-ந்தெசையில் உறவினரில் விவாகம் நடக்கும்.

144. கடக ராசியில் ஆயில்யம் 2-வது பாதத்தில் சந்திரனும் கும்ப லக்னமுமாக ஜனித்தாலும்,

145. தனுசு ராசியில் பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்னமாக ஜனித்தாலும் மூன்றுவது திசையில் தார நாசமும் மறுவிவாகம் உடனேயும் நடக்கும் இதற்கு சனி ராகு 4-லும் 7-ல் ரவி, குஜ, புதகுருவும் இருந்தால் இப் பலனுண்டாகும்; இல்லையேல் ஏகதாரமே யாகும்.

146. மேஷ ராசியில் பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்னம் கும்பமாக ஜனித்தால் சூரியனும் சுக்கிரனும் 10-ல் இருந்தால் 17 அல்லது 18 வயதில் அல்லது 20 வயதில் விவாகம் நடக்கும். இரு தாரயோகம்.

147. மீன ராசியில் உத்திரட்டாதி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்னம் மகரமாகி சனி சுக்கிரர் கூடி 5-ல் இருந்து 7-ஆம் இடம் சனியால் பார்க்கப்பட்டால் 2-ந்தாரம் நேரிடும்.

148. துலாராசியில் சுவாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷ லக்னத்தில் ஜனித்து லக்கினாதிபதி 5-ல் இருந்து சுக்கிரன் 7-ல் இருந்தால் 12 அல்லது 14 வயதில் விவாகம்.

149. தனுசு ராசியில் உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்ப லக்னமாக ஜனித்து சுக்கிரன் சித்திரை 2-வது பாதத்திலும் 7-மாதி நீச்சத்திலும் இருந்தால் தாயற்ற பெண்ணை 20 அல்லது 25-ம் வயதில் மணப்பான்.

150. ரிஷப ராசியில் ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷ லக்னமாக ஜனித்தால் 3-வது தெசையில் விவாகம் நடக்கும்.

151. சிம்ம ராசியில் மகம் 1-வது பாதத்தில் சந்திரனும் துலாம் லக்கினமுமாக ஜனித்து சுக்கிரன் 10-லும் 12-ல் குருகுஜரும் இருப்பின் 9-10 இந்த வயதுகளிலாவது 12 வது வயதிலாவது தன்னூரிலேயே பாக்கிய வமிசத்தில் விவாகம் நடக்கும்.

152. மிதுன ராசியில் திருவாதிரை 3-வது பாகத்தில் சந்திரனிருந்து அதுவே ஜன்ம லக்கினமுமானல் 10-ல் சுக்கிரனிருந்தால் ஸ்திரீ லோலனுவன் : வெகுகாமி.

153. சிம்ம ராசியில் பூரம் 4-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் லக்னம் கும்பமுமானல் சூரியன் புதன் சுக்கிரன் குஜனிவர்கள் கூடி 3-ல் இருந்தால் இரு தாரம் நேரிடும்; ஒரே தாரமாயின் பரஸ்திரீகமனி யாவன். 27 அல்லது 30-ல் தார சுகமடைவான்.

154. கும்ப ராசியில் சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மகரமானல் சுக்கிரன் 5-லும் குரு 11-லு மிருந்தாலும் 8-ல் ராகு இருந்தாலும் 20-லாவது 25-லாவது அல்லது 27-லாவது ரூபவதியான மனைவி வாய்ப்பாள்.

155. மகர ராசியில் அவிட்டம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சிம்ம லக்கினமாக ஜனித்து சுக்கிரன் நீச்சத்திலும் சனி 10-ல் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டு மிருந்தால் 20 அல்லது 22 வயதில் விவாகம் நடக்கும்.

156. மேஷ ராசியில் பரணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு லக்கினமானல் 3-வது தெசையில் குரு புக்தியில் உறவினரில் விவாகம் நடக்கும், இருதார யோக முண்டாகும்.

157. சந்திரன் விருச்சிகத்தில் இருந்து ரிஷப லக்கினத்தில் பிறந்தால் 3-வது தெசையில் சுயபுக்தியில் விவாகமடைவான். இவனுக்கு 2 தார மேற்படும். 3-தாரமென்பது சிலர் மதம்.

158. தனுசு ராசியில் மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-ல் பாபருமிருந்து சுக்கிரசூரியர் கூடினால் 2 தாரம் ஏற்படும். முதல் தாரம் சுக்கிரதெசையில் பிரசவத்தில் மரிக்கும். பிறகு மறுவிவாகம் நடக்கும்.

159. துலா ராசியில் சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்னமாகப் பிறந்தால் குருதெசையில் விவாகம் நடக்கும்.

160. தனுசு ராசியில் மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து துலா லக்னமாக ஜனித்தால் லக்கினத்தில் புதனும் 3-ல் சுக்கிரனுமாகின் சுக்கிரதெசை புதபுக்தியில் உறவினரில் ரூபவதியான பெண் மணமாகும்.

161. சுக்கிரனுடன் சனி கூடி துலாத்திலிருக்க ராகு கூடிய லக்கினம் மேஷமாகினும் 2-தாரம் வாய்க்கும். இத்துடன் 5-ல் குஜனிருந்தால் மனைவிக்கு கிரக சங்கையினால் ஏழு கர்ப்பம் வரையிலும் நஷ்ட முண்டாகும்: சில கிரந்தப்படி 5-கர்ப்ப நஷ்டமென்று ஏற்படுகிறது.

162. 7-ல் குரு சனி புத சுக்கிரரிருந்து அல்லது சனி கூடாமல் பார்த்து மேஷ லக்கினத்தில் பிறந்தால் 3-தாரம் ஏற்படும்.

163. லக்கினாதிபதியாகிய சுக்கிரன் 3-ல் ராகுவுடன் கூடில் ஏகதாரமே நிலையாகும். இப்படியே ராகு சுக்கிரர் கூடி 9-ல் இருந்தால் விவாகத்திற்கு முன்னாடியும் பிந்தியும் ஒரு அன்னிய ஸ்திரீயுடன் வாழ்க்கை யுண்டாகும்—ரிஷப லக்கினம்.

164. 7 மிடத்தில் 9-க்குடையவனிருந்து 7-க்குடையவர் குருவின் ராசிகளான தனுசு மீன மிவைகளி லொன்றிலிருந்து 10-ல் பாபரிருந்தால் தாரம் அங்கவீன முடையதாகும், ஒரே தாரம். இது தனுசு கும்பமிவைகளுக்கு நேரிடாது.

165. ராகு சனி யல்லது, ராகுவும் சூரியனும் 7-ல் இருந்தால் 3 விவாகம் நடக்கும். இவர்களைக் குரு பார்த்தால் மட்டும் தார சுக முண்டாகும். இல்லையேல் 3 தாரமு மிருந்தாலும் தார சுக முண்டாகாது.

166. லக்கினம் சந்திரனிவற்றிற்கு 7, 9-ஆம் இடங்களில் பாபரிருந்தால் 3 தார மேற்படும். 7 மாரூடத்திற்கு மிப்படியே யுண்டாகும். தாரநாசமு முண்டாகும்.

167. 7, 2 ஆகிய ஸ்தானங்களில் பாபர்களின் இருப்பும் பார்வையும் ஏற்பட்டு 2, 7 மாதிகள் பலவீனர்களாகவும் ஆனல் கட்டாயம் மறுதாரம் ஏற்படும்.

168. விருச்சிக ராசியில் அனுஷம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 1-வது பாதத்தில் ரிஷப ராசியில் செவ்வாய் ராகுவுடன் கூடி யிருந்தால் சிம்ம லக்கினத்தில் பிறந்தவனுக்கு 3-வது தெசையில் தார நாசமும் மறுவிவாகமும் நடக்கும். சில கிரந்தகர்த்தர்கள் 4-ந்தெசையில் 2-ந்தார விவாகமென்று சொல்லுகிறார்கள்.

169. தனுசு ராசியில் மூலம் 4-வது பாதத்தில் குரு சனியுடன் கூட விருந்து சிம்மலக்கினத்தில் பிறந்தால் 2 தார மேற்படும்.

170. மீன ராசியில் உத்திரட்டாதி 1, பூரட்டாதி 4, இந்த நக்ஷத்திர பாதங்களில் ஒன்றில் சந்திரனிருந்து அவிட்டம் 1-ல் மகர ராசியில் செவ்வாயும் மேஷ ராசியில் அசுவனி 1-லாவது பரணி 4-லாவது சுக்கிரனு மிருந்தால் விருச்சிக லக்கினத்தில் அனுஷம் 2-வது பாதத்தில் பிறந்தால் ரிஷப சனி தெசையின் கடைசியில் விவாக மடைவர்.

171. 7-மாதிபதி பாபாம்சத்திலிருந்து, அதாவது சுக்கிரன் 7 மாதிபதியாகி அசுவனி 1-வது பாதத்திலிருந்து 7-ல் சனி கேது கூடினலும் 2-மாதி 4-ல் இருந்து அஷ்டமாதிபதியுடன் கூடினலும் இரு தார மேற்படும். 2-ந்தாரம் ஏற்படாதென்பது கர்க்கருடைய மதம். ஆனல் பரஸ்திரீ கமனி யாவன் என்று மனு சொல்லுகிறார். இங்கு மனு சொல்லுகிறார் என்பதைப்போல் அநேக இடங்களில் சிலர் என்றும் சில கிரந்தம் என்பதும் இது எழுதப் பட்ட மூலக்கிரந்த கர்த்தாவாலேயே குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

172. துலா ராசியில் சித்திரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி செவ்வா யிவர்களுடன் கூடினல் 3-வது தெசை முதலில் சுயபுக்தியில் தகப்பனற்ற பெண்ணை (தன் தகப்பனின்

சகோதரியின் புத்திரியை) மணப்பான். வெகு ஸ்திரீகளுக்கு நாயகனுவான்.

173. 2-லாவது 7-லாவது தனுசிலாவது, கன்னியிலாவது குரு இருந்து சனியுடன் கூடியல்லது சனியால் பார்க்கப்பட்டால் 3-தாரமேற்படும். அதாவது தனுசில் பிறந்து குரு நீச்சமடைந்து சனியால் பார்க்கப்பட்டாலும், குரு துலாத்திலிருந்து கன்னியில் பிறந்து சனியால் குரு பார்க்கப்பட்டாலும், 2-தாரம் நாச மடையும். மேற்படி குருவுடன் சனி கூடி யிருந்தாலு மிப்பலனே யுண்டாகும்.

174. மகர லக்கினத்தில் பிறந்து லக்கினத்தில் ரவி குஜரும் 7-ல் குருவும், 10-ல் சனியும் சுக்கிரன் மீனத்திலு மிருந்தாலு மிப்படியே. சித்தப்பனுக்கு மிருதாரம் ஏற்படும்.

175. தனுசு ராசியில் மூலம் 2-வது பாதத்தில் சுக்ரனிருந்து மிதுனத்தில் பிறந்து குரு 10-லு மிருந்தால் சத் களத்ரம் வாய்க்கும்.

176. துலா ராசியில் சித்திரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் மிதுன லக்கினத்திற் கேழிலும், கும்பத்தில், 9-ல் ராகுவு மிருந்தால் 3 தாரமேற்படும் அந்தியகாலத்தில் தாரத்தினுல் சோக முண்டாகும்.

177. மீன ராசியில் ரேவதி 4 பாதம் ஜன்ம சந்திரனிருந்து மீனமே லக்கினமாக ஜனித்தால் உத்திரம் 2, 3-வது பாதங்களில் சுக்கிரனும் குருவு மிருந்தால் ஜாரஸ்திரீ சேர்க்கை யுண்டாகும். அல்லது மனைவி சோரம் போவாள். மேற்படி 7 ஆமிடத்தில் கன்னியில் ஹஸ்தம் 1-வது பாதத்தில் சுக்கிரனிருந்து ராகுவுடன் கூடினுலும் ராகுவால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் தாரவமிசமே தோஷ முள்ளதாகும். ஜாதகன் மனைவியின் சகோதரிகூடச் சோரம் போவாள். மேற்படி லக்கினத்திற்கே 5-ல் செவ்வாயும் 6-ல் சனியும் இருந்தால் சூதிகா கிரகதோஷத்தால் தார நாச மேற்படும், பாக்கிய வமிசத்தில் விவாகம்.

178. விருச்சிக ராசியில் கேட்டை நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து லக்கினம் மேஷமாகி 12-ல் சனி ராகு இருவரும் கூடியிருந்தால் தார சுக முண்டாகாது. மேற்படி சந்திரதிசை வரும் போது குரு புத்தியில் தாரநாச முண்டாகி கேமத்துரும பலனு மேற்படும். மேலும்,

179. மேற்படி கேட்டை நக்ஷத்திரத்திலேயே சந்திரனிருந்து பூசம் 4-வது பாதத்தில் சுக்கிரனிருந்தால் வேசிஸ்திரீ சேர்க்கை யுண்டாகும். இரு தாரமு மேற்படும். 32 அல்லது 38 அல்லது 42-ல் அல்லது 44-ல் தாரத்திற்கு மரணம் சம்பவிக்கும்.

180. கும்ப ராசியில் சதய நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து துலா லக்கினமாக ஜனித்து கடக ராசியில் சுக்கிரன் பூச நக்ஷத்திரத்தின் 4-வது பாதத்தில் கேதுவுடன் கூடி யிருந்தாலும் இதற்கே லக்கினத்திற் கிரண்டில் சனி குலக்ன ஷஷ்டியம்சத்தில் இருந்தாலும் சகோதரன் மனைவி சோரம் போவாள்.

181. பொதுவாக 2-ல் சனி 4-ல் சுக்கிரன் 8-ல் செவ்வாயிப்படி யிருந்தாலும் மேற்படி சனி சுக்கிரரிருவரும் இரு பாபரால் பார்க்கப்பட்டால் சனிக்குத்தெசை வரும்போது குலக்ன ஷஷ்டியம்சத்திலுள்ள மேற்படி சனிக்குச் சத்துருக்கிரகத்தின் புக்தியில் செவ்வாயின் 7-மாதி பத்திய தோஷத்தினால் சகோதரனுக்கும் தனக்கும் தாரம் தோஷ முண்டாகும். இதுவே துலா லக்கினமானால் ஜாதகனுக்கு இருமனைவியரேற்பட்டு இருவரும் ஆயுளுடனிருப்பர்.

182. லக்கினத்திற் கேழில் ராசியில் அல்லது நவாமிசத்தில் சனி யிருந்து செவ்வாய் ராகு இவர்களால் மேற்படி சனி பார்க்கப்பட்டால் ஜாதகன் மனைவி ரோகவதி யாவாள். அல்லது துர்சொப்பன பீடை யடைவாள். இரதபிரதி பந்தங்களும் ஏற்படும்.

183. லக்கினத்திற் காறில் 2 பாபரிருந்தால் 2 தாரமென்று சிலரும், 3 தாரம் என்று சிலரும் சொல்லுகின்றனர். இத்துடன் 12-ல் சனி யிருந்தாலும் இப்பலனே ஏற்படும்.

184. மிதுன ராசியில் சுக்கிரன் திருவாதிரை 4-வது பாதத்திலிருந்து மேற்படி சுக்கிரனுக்கிரண்டில் சனி லக்கினத்திற்கு 12-ல் ஆயில்யம் 3-ல் கடக ராசியிலிருந்து ராகுவால் மேற்படி சனி பார்க்கப்படின் தாரம் துன்மார்க்கச் செய்கையுடையவ ளாவாள்.

185. சனி செவ்வா யிவர்களிருவரும் கூடி மேஷத்தில் 9-ல் இருந்தால் 2-தாரம் ஏற்படும். குருவாலிவர்கள் பார்க்கப்பட்டாலும் தாரத்திற்குப் பீடை யுண்டாகும். இதற்கே சந்திரன் ஸ்திரராசி அம்சங்களிலிருந்து ராகுவால் பார்க்கப்பட்டிருந்தாலும்

ராகுவுடன் கூடி யிருந்தாலும், அல்லது சந்திரன் இரு பாபர்கள் அதாவது சனி செவ்வா யிவர்களால் பார்க்கப்பட்டாலும் தாசி விட்டிற்குச் செல்லத் தன் வீட்டலேயே தனத்தைத் திருடுவான். வேசி லோலன். இவனுக்கு விவாகமும் தரித்திரன் வீட்டில் நடக்கும்.

186. மேஷ ராசியில் கிருத்திகை நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சுக்கிரன் இருந்து கடக லக்கினமாகப் பிறந்து மிதுன ராசியில் சனி புனர்பூசம் 1-வது பாதத்திலிருக்க, மிருகசீரிஷம் 2-வது பாதத்தில் உள்ள செவ்வாயுடன் குரு கூடிஞல் தூர்த்தை யான மனைவி வாய்ப்பாள். அல்லது மேற்படி சுக்கிரன் மேஷ ராசியில் பரணி 2-வது பாதத்திலாவது அசுவனியின் 3-வது பாதத்திலாவது இருந்தால் தாரத்திற்கு அபவாதம் மட்டும் உண்டாகும், தாரவமிசம் நாசமடையும் ஆனல் ஒரே தாரம்தான் ஏற்படும்.

187. மகர விருச்சிக லக்கின ஜாதகங்களுக்குப் பூரட்டாதி 1-வது பாதத்தில் கும்பராசியில் குரு இருந்தால் இரு தாரம் நேரிடும். அன்றி மேற்படி ஜாதகங்களுக்குப் பரணி 2-ல் சந்திரனும் மிதுனத்தில் சுக்கிரன் கேதுவுடனும் கூடி யிருந்தால் எப்போதும் மைதுனமே சிந்தனையாகும்.

188. சனி சுக்கிரனுடன் கூடி 5-ல் மீனத்தில் இருந்து 10-ல் உள்ள செவ்வாயால் சுக்கிரன் பார்க்கப்பட்டால் ஜாதகன் வேசிகளை யணைவான். இவனுடைய மூத்தவன் மனைவி சன்னியாசியுடன் சம்போகம் செய்வாள்.

189. சூரியன் 7 மாதியாகி ரிஷபத்தில் 2 கிரகங்களுடன் கூடிவிருந்தால் இருதார மேற்படும்.

190. மேற்படி சூரியனே ரிஷபராசியில் ரோகிணி 4-வது பாதத்திலும் மீனராசியில் சந்திரன் உத்திரட்டாதி 4-வது பாதத்திலுமிருந்து சனியுடன் கூடி யிருந்தாலும் சனியால் சந்திரன் பார்க்கப்பட்டாலும் 16 அல்லது 18 வயதில் விவாகம் இரண்டாவது தெசையில் மேஷம் முதலான மூன்று மாதங்களில் ஒன்றில் தப்பாமல் நடக்கும், 36-வது வயதில் முதல் தாரம் மரித்து விடுவாள் உடனேயே மறு விவாகமுமாகும்.

191. மீனராசியில் உத்திரட்டாதியில் சந்திரனிருந்து கும்ப லக்கினமாகப் பிறந்து சனி சுக்கிரர் கடகத்திலும் கேதுவுடன்

சூரியன் கூடிச்சிம்மத்திலு மிருந்தால் 14-வயதிலாவது பிறகு மூன்ருவது தெசையில் 25 வயதிலாவது விவாகம் நடக்கும்.

192. சந்திரன் தனுசு ராசியில் இருந்து சதயம் 2-ல் கும்பத்தில் சனியும் ரேவதி 3-ல் மீனத்தில் சுக்கிரனுமிருந்து தனுசு லக்கினத்தில் பிறந்தால் விவாகத் தடை ஏற்படும். இதற்கே புதன் மிருகசீரிஷம் 1-வது பாதத்தில் ரிஷபத்தில் இருந்தால் இரண்டாவது தெசையில் 3-வது பாகத்தில் விவாகமானது தன்னூரிலேயே அல்லது வடக்கில் நடக்கும். இருதாரயோகம். பரஸ்திரீகமனமுமுண்டாகும்.

193. ரிஷபலக்கின ஜாதகனுக்கு 9-ல் சனி செவ்வாயிருந்தாலும் சுக்கிரன் 7-லாவது 11-லாவ திருந்தாலும் மறுதாரம் நேரும்.

194. மேஷராசியில் கிருத்திகை முதலாவது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்கினத்தில் பிறந்தவனுக்குச் சனி சூரியன் கேது கூடி 4-ல் இருந்தால் ஜாதகன் மனைவி ரோகவதியாவள். அல்லது தூர்த்தத் தன்மை யுடையவளாவாள். கலகக்காரி, ஆயினும் மரணமடைந்தாலும் பதிவிரதையே. இவனுக் கிருதார மென்பது சிலர் மதம்.

195. மீனராசியில் ரேவதி 3-ல் சந்திரனிருந்து கேதுவுடன் கூடி யிருந்து 2-ல் சனியும் 9-ல் ராகுவு மிருந்தால் மூலம் 1-ல் இருக்கும் சுக்கிரனுடைய தெசை நடந்தால் மேற்படி தெசையில் தாரநாசமுண்டாகி உடனேயே மறு விவாகம் நடக்கும்.—மகர லக்கினம்.

196. 5, 6, 7 மாதிகள் கூடி 7-ல் இருந்து லக்கினத்தில் குருவுள்ள மீனலக்கின ஜாதகருக்கு அதிபாலிய விவாகம். இருதார யோகம், சிலர் மதம் 3 தார மென்பது. இத்துடன் கன்னியா ராசியில், சந்திரன் உத்திரம் 2-வது பாதத்தில் இருந்து சனி 5-ல் கடகத்தில் இருந்தாலும் மேற்படி பலனே யுண்டாகும்.

167. கடகராசியில் ஆயில்யம் 4-வது பாதத்தில் சந்திரனும் உத்திரட்டாதி 2-வது பாதத்தில் மீன ராசியில் சுக்கிரனுமிருந்து மேற்படி சுக்கிரன் ராகுவுடன் கூடினுலும் பார்க்கப் பட்டாலும் 2 தாரம் ஏற்படும், தாரவம்சம் களங்க முள்ளதாகும். இவே மீன லக்கினமானல் குடும்பமே விபசார தோஷ முள்ளதாகும். ஜாத

கன் தாரம் மட்டும் பதிவிரதையாகும். இந்தப்படி குடும்பதோஷ மேற்படுவதற்கு 2-ல் 6 மாதி, 11 மாதி, 7 மாதி யிவர்கள் மூவரு மிருக்க வேண்டும்.

198. விருச்சிக ராசியில் கேட்டை நக்ஷத்திரத்தில் சந்திர னிருந்து புனர்பூசம் 1-வது பாதத்தில் செவ்வாயும் சிம்மத்தில் சனி சுக்கிர னு மிருந்தாலும், சந்திரனுடன் ராகுகூடி யிருந்து குரு 7-லிருந்தாலும் இருதாரம். 30 வயதில் முதல் தாரம் மரிக்கும். மேலும் தன் ஜன்மதேசத்தில் கிழக்கில் நகரத்தில் விவாகம் நடக்கும்.

199. தனுர் லக்கின ஜாதகனுக்குச் சனி 12-ல் ஷஷ்டி யம்சத்தில் ஒன்றான தாவாக்னி யம்சத்திலிருந்தால் இரு தாரம் ஏற்படும்.

200. கடக ராசியில் ஆயில்யம் 4-வது பாத மல்லது புனர் பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவனுக்கு நாலாவது திசை சுயபுத்தியில் தாரம் நாசமடைவாள். இருதாரயோகன். உடனே சீக்கிரம் விவாகம் நடக்கும். தகப்பனின் சகோதரியின் புத்திரியை மணப்பான். இது கும்ப லக்கினமானல் ஆயில்யம் 4-வது பாதத்தில் பிறந்தவனுக்குச் சூரிய தெசை முதலிலும், புனர் பூசம் 4-வது பாதத்தில் பிறந்தவனுக்கு 4-வது தெசை சுயபுக்தியி லும் தாரநாச முண்டாகி, மறுவிவாகம் நடக்கும்.

201. சனி 7 மாதியாகி 2-ல் ஸ்திர ராசியில் இருந்தால் சுக்கி ரன் தன் உச்ச சொட் சேத்திரங்களில் இருந்தாலும் ஏக தாரமே யாகும். மேற்படி சுக்கிரன் சரராசியில் இருந்தால் பல ஸ்திரீ சம் போக மேற்படும். ஆயினும் தாரம் மட்டும் பாக்கியமுள்ள சற் களத்திரமாக வாய்க்கும்.

202. மகர ராசியில் திருவோணம் 3-வது பாதத்தில் சந்திர னிருந்து லக்கினத்தில் செவ்வாயும், குரு 3-லும் இருக்கும் ஜாதகன் நன் மனைவியும், பலதார போகமும், வெகுபாக்கியமும் அடைவதுடன் 5, அல்லது 7, தாரம் விவாகமும் செய்து கொண்டு வாழ்வான். முதலில் 2-வது தெசையில் விவாகமடைவான். சார்வ பௌம யோக ஜாதகம்.

203. ரிஷப ராசியில் சந்திரன் ரோகிணி 2-வது பாதத்தில் இருந்து மேஷத்தில் அசுவனி 1-ல் சனியும் அங்கு சுக்கிரன்

நீச்சாம்சம் விட்டு மிருந்து, கிருத்திகை 1.வது பாதத்தில் புதனு மிருந்தால் வைசியஜாதி சூத்திர ஜாதிகளில் ஸ்திரீ சேர்க்கையும், இவர்களைக் குரு, துலாத்திலிருந்து பார்த்தால் அவர்கள் குண சாலியான ஸ்திரீகளுமாகச் சேர்க்கை யுண்டாகும். இருதார யோகம். மூத்ததாரம் துர்மரணமாக கிணற்றில் விழ்ந்தாவது விஷத்தை யுண்டாவது மரிப்பாள். இது மிதுன லக்கின மானல் அனேக ஸ்திரீ சேர்க்கை நேரும்.

204. ரிஷப ராசியில் சந்திரன் ரோகிணி 2-வது பாதத்தில் இருந்து ராகு 4-ல் இருந்தால் துருஷ்க்க ஜாதி ஸ்திரீயைச் சேர்வான். வேறு சிலர் மேற்படி எண்ண மிருக்கும் என்கின்றனர்.

205. 9-ல் ராகுவும், ஒன்பதாமாதி 7-ல் உச்சமு மடைந்து இருக்க, சுக்கிரன் கேதுவுடன் கூடினுலும் கேதுவால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் மூன்று தார முண்டாயினும் அன்னிய ஸ்திரீகளிடம் ரமிப்பான். தன் மனைவியின் சகோதரி ஒரு விதவை துஷ்ட நடவடிக்கையுள்ளவ ளாவாள். இத்துடன் செவ்வாய் சிம்ம ராசியில் மகம் 1-வது பாதத்தில் இருந்தால் எவனுவது ஒரு சகோதரன் மூன்று தார முடையவனுவன். கன்னி விருச்சிக மிவற்றிற்கு மட்டும் நேரும்.

206. தனுசு ராசியில் மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசே லக்கினமாகப் பிறந்தால் பலவந்தப்புணர்ச்சி செய்வார்கள்.

207. மேஷ ராசியில் பரணி 4-வது பாதம் சந்திர னிருக்கும் ஜன்ம நக்ஷத்திரமாகி 2.மாதி லக்கினத்திலும் 10-ல் செவ்வாயும் 2-ல் சனியு மிருந்தால் 3-வது திசை சுக்கிர புத்தியில் விவாகம் ஆகி 4-வது தெசை முடிவில் தாரநாச மேற்பட்டு 5-வது திசையிலல்லது 4-வது தெசை முடிவிலேயே 2-வது விவாகமும் நடக்கும்:—மேஷ லக்கினம்.

208. தனுசு ராசியில் உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமாகப் பிறந்து லக்னத்தில் குருவும் 2-ல் சுக்கிரனு மிருந்தால் 2-வது தெசையில் சந்திரதெசை சூரிய புக்தியில் 15-வயதில் விவாகம் நடக்கும்.

209. தனுசு ராசியில் உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் ரிஷபமாகி 7-ல் ராகுவும் 12-ல் குஜ சுக்கிரரு மிருந்தால் 2-தார மேற்படும், 2-வது திசையில் ராகு வல்லது

சுக்கிர புத்தியிலாவது அல்லது அதற்கு முன்பே சனி புத்தியிலாவது விவாகம் நடக்கும். மூன்றாந்தெசையில் தார நாச முண்டாகும்; உடனே மறுமணம் நடக்கும்.

210. கன்னியா ராசியில் சித்திரை நக்ஷத்திர 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் ரிஷபமாகிப் பிறந்தால் சனியும் புதனும் கூடி 4-லும் செவ்வாய் 12-லு மிருந்தால் இரு தார மேற்படும்; ஒரே தாரமென்பது சிலர் மதம். 17, 18 வயதில் விவாகம் ராகுதெசை சுக்கிர புத்தியில் நடக்கும்.

211. மூலம் 1-வது பாதத்தில் தனுசு ராசியில் சந்திரனிருந்து 10-ல் சுக்கிரன் 7-ல் குரு, லக்கினத்தில் செவ்வாய் இப்படி யிருக்கும் ஜாதகர் சுக்கிரதிசை சந்திர புத்தியில் அம்மான் பெண்ணை மணப்பார். அவள் கடுத்த பேச்சுடையவளாவள்.

212. மேஷ ராசியில் பரணி நக்ஷத்திரம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷமே லக்கினமாகிப் பிறந்து சனி 7-லும் 10-ல் செவ்வாயும் 7 மாதி உச்சத்திலு மிருந்தால் 3-தார மேற்படும்.

213. துலா ராசியில் சுவாதி 1-ல் சந்திரனிருந்து சுக்கிரன் அவருடன் கூடினல் ஜன்ம திசையிலேயே 14 அல்லது 15-வது வயதில் விவாக முண்டாகும். சிலர் மதம் 2-வது திசையில் 22 வயதில் என்பது.

214. மிதுன ராசியில் புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 4-லும் குரு 11-லு மிருந்தால் ஜன்மதிசையின் முடிவிலாவது 2-வது திசையிலாவது விவாகம் நடக்கும்.

215. கும்ப ராசியில் சதயம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு லக்கினத்திலும் சுக்கிரனுச்சத்திலு மிருந்தால் 2-வது திசையில் சூரியபுக்தியில் விவாகம் நடக்கும். சிலர் மதம் சந்திர புக்தியின் முதலில் என்பது; மேற்படி சுக்கிரனுடன் சூரியன் கூடினல் தாரம் ரோகத்தை யடையும்.—மேஷ லக்கினம்.

216. தனுசுராசியில் பூராடம்2-வதுபாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 6-லும் செவ்வாய் 9-லும் இருந்தால் மேற்படி ஜன்ம திசையின் கடைசியிலாவது 2-வது திசை முதலிலாவது விவாகம் நடக்கும் 2-தார மென்பது சிலர் மதம்.—மேஷ லக்கினம்.

217. கும்ப ராசியில் சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-ல் சப்தமாதிபதி கேதுவுடனிருந்து 7-ல் பாபரிருந்தாலும் பார்த்தாலும் 2-வது தெசையில் விவாகம் நடக்கும். இரு தார

மேற்படும். இதற்கே சுக்கிரன் லக்கினத்திலிருந்தால் அதிக பாலி யத்திலேயே விவாகம் நடக்கும்.

218. தனுசு ராசியில் மூலம் 2-வது பாதத்தில் சந்திர னிருந்து குருவுடன் சுக்கிரன் லக்கினத்தில் இருந்தால் சுக்கிரதிசை யில் குரு புக்தியிலாவது சனி புத்தியிலாவது விவாகம் நடக்கும். ரூப லக்ஷணமுடைவள் மனைவியாவள்.

219. தனுசு ராசியில் ஜன்மகாலத்தில் மூலம். 1-வது பாதத் தில் சந்திர னிருந்து லக்கினத்தில் சனியும் கேதுவும் இருந்து குரு 5-லும் சுக்ரன் 4-லு மிருந்தால் இருதாரம் ஏற்படும். 2-வது தெசை சனி புக்தியி லல்லது அதற்கு முன்பே குரு புக்தியில் விவாக மடைந்து மேற்படி தெசை முடிவில் தார நாச முண்டாகி 3-வது தெசையில் 2-வது விவாகம் நடக்கும்.—மிதுனலக்கினம்.

220. கும்ப ராசியில் ஜன்ம காலத்தில் அவிட்டம் 3-வது பாதத்தில் சந்திர னிருந்து கடக லக்கினமாக ஜனித்து லக்கினத் திற்கு 7-ல் செவ்வாயும் குருவு மிருந்து 5-ல் சுக்ரனும் 4-ல் சனியு மிருந்தால் 2 தாரம் ஏற்படும் வேறு சிலர் தாரத்தை விட்டு விலகிப் பரஸ்திரீ கமனியாவானென்று சொல்கின்றனர். மனைவி கடுத்த சொல்லுடையவளாக ஆவாள். ரூபசாலியுமாவாள். வயது 12 அல்லது 14-ல் 2, 3 தடவைகளில் தடைப்பட்டுப் பின்பு விவா கம் நடக்கும்.

221. மேஷ ராசியில் ஜனனகாலத்தில் அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 3-ல் குருவும் சுக்கிரன் 10-லு மிருந்தால் ரூபவதியான கிரகஸ்தன் வீட்டுப் பெண்ணை சுக்கிரதிசை சனி புக் தியில் மணப்பான்.—கடக லக்கினம்.

222. பூராட நக்ஷத்திரத்தில் தனுசு ராசியில் சந்திர னிருந்து சனி உச்சத்திலும் 5 மாதி நீச்சத்திலு மிருந்தால் பரஸ்திரீ கமனி யாவன். பலவங்கப் புணர்ச்சி செய்பவன். 2 தார முடையவன்.

223. மகரராசியில் ஜன்ம காலத்தில் உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் சனியும், சித்திரை 3-வது பாதத்தில் சுக்கிரனு மிருந்தால் 18-வது வயதில் தன் ஜன்ம கிராமத் திலேயே விவாகம் நடக்கும்.—கடக லக்கினம்.

224. விருச்சிக ராசியில் ஜன்ம காலத்தில் கேட்டை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி மீனத்திலும் 2-ல் கேதுவு மிருந்தால் மேற்படி கேது தெசையில் கடைசியில் 22-வது வயதில் தன் ஜன்ம பூமிக்கு மேற்கில் அல்லது வாயு திக்கில் மணமடைவார்.

225. கடக ராசியில் ஜன்ம காலத்தில் பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 8-லும் சுக்கிரன் 3-லு மிருந்தாலும் புதன் 4-ல் இருந்தால் மேற்படி புத தெசையில் சுய புக்தியிலல்லது பிறகு மேற்படி தெசை சுக்ர புக்தியில் 20 வயதிலாவது விவாகம் நடக்கும்.

226. விருச்சிக ராசியில் ஜன்ம காலத்தில் அனுஷ நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து 6-ல் சனியும் 8-ல் சுக்கிரனு மிருந்தால் ஏக தாரமே யுடையவனுவான். பரஸ்திரீ கமனியாவன். 2-வது திசை சுக்ர புக்தியில் மேற்கில் தாரலாப மேற்படும்.

227. ஜன்ம காலத்தில் சிம்ம ராசியில் மகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் குரு சுக்கிரரிருந்து சனி மேற்படி சந்திரனுக் கேழிலிருந்தால் 3-ந் தெசையில் நிதான விவாகம். தாய் வர்க்கப் பெண் மனைவியாவள். மேற்படி குரு தெசையில் பாதியில் தார நாசம் நேரிடும்.

228. ஜன்ம காலத்தில் ரிஷபராசியில் கிருத்திகை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 9-லும் சுக்கிரன் 2-லு மிருந்தால் 3 தாரம் நேரிடும். 16 அல்லது 17 வயதில் முதல் விவாகம் நடக்கும்.

229. உத்திராடம் 2-வது பாதத்தில் மகர ராசியில் சந்திரனிருந்து 2-ல் சனியும் 10-ல் குருவும், சுக்கிரன் சித்திரை 4-வது பாதம் அல்லது விசாகம் 1-வது பாதத்திலும் இருந்தால் 2 தாரமுண்டாகும். மூன்றுவது திசையில் சூரிய புக்தியி லல்லது சந்திர புக்தியில் விவாகம் நடக்கும். முதல் மனைவி பிரசவத்தில் முன் ஜென்ம ஸ்திரீ சாபத்தினல் மரிப்பாள். பிறகு மறு விவாகம் நடக்கும்.

230. தனுசு ராசியில் பூராட நட்சத்திரத்தின் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 7 மாதி 1-லும் சுக்கிரன் 5-லு மிருந்

* இது முதல் 237-வரை சிம்ம லக்கின பலன்கள்.

தால் 3-வது தெசையில் சுக்கிர புத்தியில் விவாகம் நடக்கும். 2 தாரம் மரித்துவிடும். 3-தார யோக ஜாதகம்.

231. ரிஷப ராசியில் கிருத்திகை 3-வது பாதத்தில் சந்திர னிருந்து ரவி சுக்கிரர் 12-லும் சனி 3-லு மிருந்து ராகு 10-ல் இருந் தால் ராகு தெசை குரு புக்தியல்லது சனி புக்தியில் 23 அல்லது 25 வயதில் விவாகம் நடக்கும்.

232. கிருத்திகை நக்ஷத்திர 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-ல் ரவியும் 4-ல் செவ்வாயும் 3-ல் குருவும் 12-ல் சனியு மிருந்தா லும் 7-மாதியும் சூரியனும் குரு செவ்வாய் இவர்களுடன் கூடினு லும் 1, 7-மாதிகள் குரு குஜனிவர்களால் பார்க்கப்பட்டாலும் 2 தார மேற்படும். முதல் தாரம் ரோகபீடையும் அற்பாயுளு மடை யும். 2-ந்தாரம் சுக முள்ளதாகும். 20 அல்லது 21-வது வயதில் ஜன்ம பூமிக்குக் கிழக்கிலாவது தென்கிழக்கிலாவது முதல் தார விவாகமும், 26-ல் 2-வது விவாகமும் நடக்கும்.

233. அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-மாதி 12-ல் இருந்து 7-ல் சூரியனிருந்தால் களத்திரத்தினுல் கஷ்டமுண்டாகும். இரு தார மேற்படும். 2-வது திசையில் குரு புக்தியில் விவாக மென்று சிலரும் சனி புக்தியில் நடக்குமென்று சிலரும் சொல்லு கிருர்கள். அம்மான் பெண்ணை முதல் தாரமாக மணப்பான் சந்திர தெசையில் செவ்வாயி லல்லது ராகு புக்தியில் மறு விவாகம் நடைபெறும்.

234. சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 3-ல் செவ்வா யும் 7-ல் சனியு மிருந்தால் விவாகம் காலத்திலில்லாமல் தடைப் பட்டு சனி தெசை சுய புக்தியில் யத்தனமின்றி நடக்கும்.

235. அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 4-லும் சனி 5-லு மிருந்தால் வெகு பாலியத்தில் 10 வயதில் விவாகம் நடக்கும்.

236. ரேவதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-மாதி 3லும் 1-மாதி 8-லும் 10-ல் கேதுவு மிருந்தால் 14 அல்லது 16-வது வய தில் விவாகம் நடக்கும். 2-தார மேற்படும்.

237. அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 5-லும் ரவிபுதர் 4-லும் இருந்தால் 20 அலலது 24 வயதில் 2-வது தெசை சுக்கிர புக்தியில் விவாகம் நடக்கும்.

கன்னியா லக்கின பலன்

238. ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்ரன் சித்திரை 2-வது பாதத்திலும் குரு 4-லும் சனி 9-லு மிருந்தால் 2-வது தெசை சனி புக்தியில் அல்லது சுக்ரபுக்தியில் பாக்கியவமிசத்தில் விவாகம் நடக்கும். ஏகதாரமே நிலையாகும். பரஸ்திரீகமனியாவர்.

239. அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 2, 7 மாதிகள் 11-ல் 1-மாதிபதியுடன் கூடி யிருந்தால் 21-வது வயதில் தன் னூரிலேயே விவாகம் நடக்கும். இதற்கே, 8 மாதியுடன் கேது கூடி 5-ல் இருந்தால் விவாகமான 7-ம் நாளில் தார மரணம் நேரும், உடனே மறு விவாகம் நடக்கும், 2-வது தெசை சுக்கிர புக்தியில் முதல் விவாகமும், பிறகு சந்திர புக்தியில் 2-வது தெசையிலேயே மறு விவாகமும் நடக்கும்.

240. ரேவதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்ரன் 7-லும் 7 மாதி 8-லும் சனி 10 மிடத்திலு மிருந்தால், 3-வது தெசை சுய புக்தியில் விவாக மடைந்து 25-ல் தார நாசமும் பிறகு 2-வது விவாகமும் 39-ல் 2-வது தார நாசமும் 41-வது வயதில் 3-வது விவாகமும் நடக்கும்.

241. ரேவதி 4 பாதத்தில் சந்திரனிருந்து சுக்ரன் லக்னாதிபதியுடன் லக்னத்திலும் குரு 7-லு மிருந்தால் பாக்கிய வமிசத்தில் தெற்கில் ;சுக்ர தெசை சுய புக்தியில் விவாகம் நடக்கும. சிலர் சூரிய புக்தியில் நடக்கு மென்கின்றனர்.

242. ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 7 மாதி 9-லும் குஜ சுக்ரர் லக்னத்திலு மிருந்தால் ஜாதகர் வெகு காமியாவர் 2-வது தெசையில் விவாகம் நடக்கும்.

243. கும்பராசியில் சந்திரனும், திருஓணம் 4-வது பாதத்தில் குருவுமிருந்து சுக்ரன் 2-லு மிருந்தாலும் லக்னத்தில் புதனும் 8-ல் செவ்வாயு மிருந்தாலும் 2-வது தெசை புதபுக்தியில் விவாகம் வெகு பாக்கியமுள்ள வீட்டில் நடக்கும். விவாகமான பின்பு விசேஷ சுகமுண்டாகும்.

244. உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்ரன் சிம்மத்திலும் புதன் 12-லும் இருந்தால் 2-வது தெசையில் சுயபுக்தியில் விவாகம் ஜன்ம பூமிக்குக் கிழக்கில் நடக்கும். லக்கினம் துலாம்.

245. புனர்பூச நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் மிதுன ராசியில் சந்திரனிருந்து, சனி சுக்ரர் 7-லிருந்தால் ஜன்ம பூமிக்குக் கிழக்கில் அல்லது தென் கிழக்கில் 17 அல்லது 18-ம் வயதில் விவாகம் நடக்கும். மேற்படி லக்கினமே.

விருச்சிக லக்கின பலன்

246. மகராசியில் சந்திரனிருந்து 7 மாதி 11-லும் ரேவதி 4-வது பாதத்தில் சனியு மிருந்தால் மூன்ருவது தெசை குரு புக்தியிலாவது சனி புக்தியிலாவது விவாகம் நடக்கும். பரஸ்திரீ கமனியென்று சிலரும் 2 தாரமு முண்டென்று வேறு சிலரும் சொல்லுகிருர்கள்.

247. உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்ரன் 10-லும் லக்னுதிபதி 11-லு மிருந்து ராகு 4-ல் இருந்தால் 3-வது தெசை ராகு புக்தியில் விவாகம் நடக்கும்.

248. அசுவனி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு 10-லும் சுக்ரன் 4-லு மிருந்து சனி மகரத்திலிருந்தால் சுக்ர தெசை குரு புக்தியல்லது சனி புக்தியில் ஜன்மபூமிக்கு மேற்கிலாவது வாயு திக்கிலாவது விவாகம் நடக்கும்.

249. கிருத்திகை 4-வது பாதத்தில் சந்திரன் 9 மாதியாகி 7-ல் உச்சத்தில் மீன நவாம்சத்திலிருந்து ரோகிணி 2-ல் சுக்ரனிருந்தால் 3-வது தெசை குரு புக்தியில் விவாகம் நடக்கும். போகஸ்திரீ சுகமடைவான். 1-தாரமே நிலையாகும்.

250. உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 7 மாதியும் லக்னுதிபதியும் தசமத்திலிருந்து சனி கும்பத்திலிருந்தால் மேற்படி சனி தெசை குஜபுக்தியில் 13 அல்லது 14 வயதில் விவாகம் நடக்கும்.

251. அசுவனி நக்ஷத்திரத்தின் முதற்பாதத்தில் 45 விநாடியில் சந்திரனிருந்து லக்னுதிபதி 7-லும் சுக்ரன் 4-லு மிருந்து 2-ல் சனி யிருந்து மேற்படி சனியால் சுக்ரன் பார்க்கப்பட்டால் மேற்படி சுக்கிரதெசை குரு புக்தியிலல்லது சனி புக்தியில் விவாகம்

நடக்கும் 7-ல் செவ்வா யிருப்பதால் மனைவி கடுத்த சொல்லுடைய வளாவள்.

252. மகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து, சூரியனும்கூடி மேற்படி சந்திரனுடனிருந்து சுக்கிரன் 11-லும் செவ்வாய் 9-லு மிருந்தாலும் 3 மிடத்தில் கேதுவு மிருந்தால் இருதார மேற்படும். இரண்டாவது தெசையில் சனி புக்தியில் முதல் விவாகமும் சந்திர தெசை மத்தியில் தார நாசமும் உடனே மறு விவாகமும் நடக்கும்.

253. பூரட்டாதி நக்ஷத்திரத்தில் கும்பராசியில் சந்திரனி ருந்து லக்கினதிபதி 7-லும், 2-ல் சனி சுக்கிரரும் இருந்தால் 2-வது தெசையில் சுயபுக்தியிலல்லது புதபுக்தியில் விவாகம் நடக்கும். வேறு சிலர் சுக்கிர புக்தியில் நடக்கு மென்று சொல்கின்றனர், நானு ஜாதிகளின் ஸ்திரீகளையும் போகிப்பான்; தன் தாரத்திடம் துவேஷ முண்டாகும்.

254. சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு புத சுக்ரர் 2-லிருந்தால குரு தெசை புத புத்தியிலாவது சுக்கிர புக்தி யிலாவது விவாகம் நடக்கும்.

255. உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கி ரன் 11-ல் இருந்தாலும் 7-ல் ராகு இருந்து லக்னதிபதி 2-ல் இருந்து 12-ல் சனி இருந்தாலும் 2 தார மேற்படும். 42-வது வய தில் தார நாசமும் பிறகு மறுவிவாகமும் நேரிடும். 19 அல்லது 20-வது வயதில் முதல் விவாகம் நடக்கும்.

256. ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 10-ஆம் இடத்தில்'இருந்தால் 12 அல்லது 14 அல்லது 15-வது வய தில் விவாகம் நடக்குமென்று சிலரும் 16 அல்லது 17, 18-ல் சுய கிராமத்திலேயே விவாகம் நடக்குமென்று சிலரும் சொல்லுகிறார் கள். இதற்கே ஏக தாரமென்று சுக்கிர நாடியிலும் இதர கிரந்தத் தில் 2 தாரமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

தனுர் லக்கின பலன்

257. மேஷராசியில் சந்திரனிருந்து சுக்கிர புத னிவர்களுடன் கூடி யிருந்தால் 17 வயதில் விவாகம் ஜன்ம தேசத்திலேயே நடக் கும், மேற்படி 7 மாதியே சனி குஜனிவர்களுடன் கூடி

பிருந்தாலும் சனி குஜனிவர்களால் பார்க்கப்பட்டாலும் நாளு ஜாதி ஸ்திரீகளேயும் சேருவர். ஜாரத்துவமும் சோரத்துவமும் சூரத்துவமும் கூட இருக்கும்.

258. அசுவனி நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-மாதி 5-லும் 7-ல் கேதுவும் இருந்து சுக்கிரன் உச்சத்திலிருந்தால் ஷை சுக்கிர தெசையில் சப்த மாதிபதியுடன் கூடிய குஜபுக்தியில் விவாகம் நடக்கும். இதற்கு முந்தியே சந்திரபுக்தியிலேயே விவாகம் நடக்கும் என்பது சிலர் மதம்.

259. ரிஷப ராசியில் சந்திரனிருந்து லக்கிநாதிபதி 7-லும் சுக்கிரன் 12-லும் 7-மாதி 1-லு மிருந்தால் 12-வயதிலேயே விவாகம் நடக்கும்.

260. பூசம் 2-ம் பாதத்தில் சந்திரனிருந்து 7-மாதி சூரியனுடன் கூடி 7-லும், 1 மாதியுடன் சுக்கிரன் கூடி 5-லும் இருந்தாலும் 9-ல் சனி ராகு இருந்தாலும் 2-தாரம் நேரிடும். 7-மாதி தெசையிலேயே 2-தாரமும் விவாகமாகும். சுக்கிரதெசை கேது புக்தியில் முதல் தாரத்திற்கு நாச முண்டாகும்.

261. துலா ராசியில் விசாகம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மகர ராசியில் 2-ஆம் இடத்தில் ரவியும் உத்திராடம் 2-வது பாதத்தில் சுக்கிரனும், ரேவதி 4-ல் குருவும் சனி 12-லு மிருந்தாலும், மேற்சொல்லியபடி ஷை துலாராசியில் சந்திரனிருந்து 7-மாதி குஜனுடன் கூடி கும்பத்திலிருந்து சுக்கிரன் முன் சொன்னபடி யிருந்தாலும் 9-வயதிலல்லது 10-வது வயதிலேயே விவாகம் நடக்கும். இருதார மேற்படும் புருஷ ஜாதக விஷயத்தில் முன்போல் விவாகமும் ஷை புததிசை சுயபுக்தியில் ஷை தார நாசமும் உடனேயே மறுவிவாகமும் நடக்கும்.

262. சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சூரிய சுக்கிரர் 1-லும் 5, 7 மாதிகள் 2-லு மிருந்து சனி 4-ல் இருந்தால் பரஸ்த்ரீகமனி யாவர். 2-வது தெசை புத புக்தியில் விவாகம் நடக்கும்.

263. உத்திரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு குஜ புதனிவர்கள் 7-ல் இருந்தால் ஷை புத தெசை குஜபுக்தியில் விவாகம் நடக்கும்.

264. மகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 11-லும் புதன் 10-லு மிருந்தாலும் குரு 2-ஆம் இடத்திலிருந்தால்

மேற்படி சுக்கிரதெசையில் குரு புக்திக்கு முன்பே விவாகம் நடக்கும்.

265. மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-க் குடையவர் 9-லும் சுக்கிரன் 11-லும் குரு 5-லு மிருந்தால் மேற்படி சுக்கிரதெசை குரு புக்தியிலாவது சனி புக்தியிலாவது விவாகம் நடக்கும்.

மகர லக்கின பலன்

266. மேஷ ராசியில் சந்திரனிருந்து லக்கினதிபதி 5-லும் சுக்கிரன் 11-லு மிருந்தால் 14 அல்லது 15-வது வயதில் விவாகம் நடக்கும்.

267. தனுசு ராசியில் உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனும் உத்திராடம் 2-வது பாதத்தில் மகரத்தில் சனியும் ரிஷபத்தில் சுக்கிரனு மிருந்து லக்தினத்தில் செவ்வா யிருந்தால் மேற்படி செவ்வாய் தெசை ராகு புக்தியில் 16 வயதிலாவது 17 வயதிலாவது 20 வயதிலாவது இதன் மத்தியிலாவது விவாகம் நடக்கும்.

268. மிதுன ராசிலில் திருவாதிரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரனும் புதனும் லக்கினத்திலிருந்து குரு குடும்ப ஸ்தானமான 2-ஆம் இடத்திலிருந்தால் மேற்படி குருதெசை புத புக்தியில் அல்லது சுக்கிரபுக்தியில் பந்து வர்க்கத்தில் விவாகம் நடக்கும்.

269. மகர ராசியில் திருஓணம் 2 வது பாதத்தில் சந்திரனிருந்து சித்திரை 3-வது பாதத்தில் சுக்கிரனும் லக்கினதிபதி உச்சத்திலு மிருந்தால் மேஷத்திலுள்ள ராகுதெசை சுயபுக்தியில் விவாகம் நடக்கும். 15 அல்லது 16 வயதில் அம்மான் பெண்ணை மணப்பார்.

270. கடக ராசியில் பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 11-லும் சனி 10-லு மிருந்தால் மேற்படி சனி தெசையில் சந்திரபுக்தியிலேயே 9-அல்லது 10-வது வயதிலேயே விவாகம் நடக்கும்.

271. மிதுன ராசியில் திருவாதிரை 2-வது பாதத்திம் சந்திரனிருந்து சுக்கிரன் மிதுனத்திலும் லக்கினதிபதி 9-லும் செவ்வாய் மீனத்திலு மிருந்தால் மேற்படி சனி தெசை சுயபுக்தியில் ஜன்மபூமிக்குக் கிழக்கில் அல்லது தென்கிழக்கில் யோகசாலி

யான மனைவியை 28-வது வயதில் மணம் முடிப்பான். இருதார யோகமென்பது சிலர் மதம்.

272. ரிஷப ராசியில் ரோகிணி நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரனும் லக்கினாதிபதியும் லக்கினத்திலிருந்து 7-ல் கேது விருந்தால் இரு தாரமுண்டாகும். மேற்படி லக்கினத்தில் சூரியனிருந்து சுக்கிரன் ராகு இவர்களுடன் கூடினாலும் இரு தாரமேற்படும். 2-வது தெசையில் முடிவில் விவாகமென்று சுக்கிரநாடியிலும் மூன்றாவது தெசை சுயபுக்தியில் விவாகம் நடக்குமென்று இதர கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஷை 3-வது தெசை சுக்கிரபுத்தியில் முதல் தார நாசமும் 2-வது விவாகம் உடனேயும் நடக்கும்.

கும்ப லக்கின பலன்

273. விருச்சிக ராசியில் கேட்டை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து கடகத்தில் சுக்கிரன் 6-லும் லக்கினாதிபதி 8-லு மிருந்து சூரியன் 7-லு மிருந்து ஷை சுக்கிரனுடன் கேது கூடி இருந்தால் மேற்படி கேது தெசையில் கடைசியில் அல்லது 11-வது வயதில் ஜன்ம பூமிக்குக் கிழக்கில் விவாகம் நடக்கும்.

274. ரிஷப ராசியில் ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சூரியன் சிம்மத்தில் அஷ்டமாதிபதியுடனிருந்து கடகத்தில் சுக்கிரன் 6-லும், சனி 12-லு மிருந்தால் 19-வது வயதில் விவாகம் நடக்கும். 18-வயதிலேயே நடக்கும் என்பது சிலர் மதம். ஜாதகன் மூன்று தாரயோகமுடையவன். கன்னியிலுள்ள குரு தெசை சனி புக்தியில் தார நாசமும் உடனேயே மறு விவாகமும் நடக்கும். மிருகசீரிஷம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்தாலும் இதே பலன்தான் நடக்கும்.

275. தனுசு ராசியில் மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 7 மாதிபதி 12-லும் சுக்கிரன் 2-ல் ராகுவுடனுமிருந்து சனி 11-லு மிருந்தால் 10 அல்லது 12-வது வயதில் விவாகம் நடக்கும் 14-வது வயதிலென்பது சிலர் மதம். வேறு சிலக் கிரந்தங்களில் 16-வயதி லென்பதாகவும் புருஷ ஜாதகத்தில் மனைவி ரோக முடையவளாவாள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

276. மிதுன ராசியில் திருவாதிரை நக்ஷத்திரத்தின் மூன்ருவது பாதத்தில் சந்திரனிருந்து (மேற்படி மூன்ருவது பாதத்தில் ஆறு நாழிகை செல்லாகியுள்ள ஜாதகருக்கும்) லக்னுதிபதி 11-லும் ஏழாமாதியாகிய சூரியன் புதனுடன் கூடி 3-லு மிருந்தால் 16 அல்லது 17 வயதில் விவாகம் நடக்கும் இருதாரயோகம். ஜன்ம காலத்தில் ராகுதெசையில் 7-வருஷம் நிலுவை என்று ஒரு கிரந்தத்திலும் அதிகமாக ஆறுமாதம்கூட இருப்பதாக வேறு ஒரு அபிப்ராயமும் உள்ளது.

277. மகர ராசியில் உத்திராட நக்ஷத்திரத்தின் 4-வது பாதத்தில் சந்திரனிளிந்து லக்கினுதிபதி 3-லும் 7-மாதி 2-லும் சுக்கிரன் 4-லு மிருந்தால் 3-வது தெசை முடிவில் விவாகம். இத்துடன்.

278. ஏழாமிடத்தில் ராகுவு மிருந்தால் பரஸ்திரீகமனம் நேரிடும். தன் மனைவியிடம் நிதான ஆசை யுடையவனுவன். அதாவது எப்போதாவது (ஒரு சமயம்) ஏற்பட்டுவிடும். சிலர் மறம் தன் மனைவியிடம் அன்பு குறைவென்பதாகவே உள்ளது-

279. சிம்ம ராசியில் பூரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கின சப்தமாதிகள் 5-ல் இருந்து சுக்கிரன் சுயக்ஷேத்திரத்தில் இருந்தால் வயது 10 அல்லது 12-ல் அல்லது 14-வது வயதில் விவாகம் நடக்கும் புருஷ ஜாதக விஷயத்தில் இருதார மேற்படும். விவாகத்தின் பிறகு மாமனுர்வர்க்கம் நாசமடையும்.

280. மிதுன ராசியில் திருஆதிரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினுதிபதி 5-ல் மிதுனத்திலும் சூரியன் சிம்மத்திலு மிருந்தால் 25 அல்லது 26 வயதில் சனி தெசை சுயபுக்தியின் கடைசியில் தன் ஜன்ம கிராமத்திலேயே விவாகத்தை யடைவர்.

281. மேற்படி மிதுன ராசியில் சந்திரன் மிருகசீரிஷ நக்ஷத்திர 3-வது பாதத்தில் இருந்து சூரியன் 6-லும் சுக்கிரன் நீச்சத்தில் 8-லு மிருந்து லக்கினுதிபதி தசமத்திலிருந்தால் 10 அல்லது 12 வயதில் விவாகம் நடக்கும். புருஷ ஜாதக விஷயத்தில் 3-வது தெசை சுக்கிரபுத்தியில் தாரநாச முண்டாகும். உடனேயே மறு விவாகம் நடக்கும்.

282. மேற்படி மிதுன ராசியிலேயே திருவாதிரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 7-மாதி உச்சத்திலிருந்து சனி 11-ல்

இருந்தாலும் சுக்கிரன் சூரியனுடன் கூடி இருந்து உச்ச செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் இரண்டாவது தெசையில் புத புக்தியில் விவாக முண்டாகி முதல் மனைவி ரோகி யாவாள். மூன்ருவது தெசை சுயபுக்தியில், பிறகு 2-வது விவாகம் நடக்கும்.

283. கும்ப ராசியில் பூரட்டாதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சூரியன் 7.மாதியாகி மேஷத்திலும் சனி துலாத்திலுமிருந்து சுக்கிரனு முச்சத்திலிருந்தால் 2-வது தெசையில் பந்துவர்க்கத்தில் 10 அல்லது 11-வது வயதில் விவாகம் நடக்கும்.

284. கன்னியா ராசியில் ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி சூர்யர் தனுசிலும் சுக்கிரன் மகரத்திலு மிருந்தால் 2-வது தெசை முடிவிலாவது 3-வது தெசை ஆரம்பத்தில் சுய புக்தியிலாவது விவாகம் நடக்கும்.

285. கன்னியா ராசியில் சித்திரை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி சுக்கிரன் மேஷத்திலும் சூரியன் புதனுடன் லக்னத்திலு மிருந்தால் இரண்டாவது தெசை புத புக்தியில் விவாகம் நடக்கும்.

286. கடகராயில் புனர்பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சூரியன் ரிஷபத்திலும் சுக்கிரன் மிதுனத்திலும் சனி கும்பத்திலு மிருந்தால் 2-வது தெசை சந்திர புக்தியில் விவாகம் நடக்கும்.

287. சிம்ம ராசியில் மகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி கடகத்திலும், சூரியன் 11-லும், சுக்கிரன் ராகுவுடன் கூடி 10-லு மிருந்தால் 3 தாரமேற்படும். 2-வது தெசையில் குரு வல்லது ராகு புக்தியில் முதல் விவாகமும் ஷ்டி தெசை முடிவில் தாரநாசமும் உடனே மறுவிவாகமும் சூரிய தெசை முடிவில் 2-ந்தாரநாசமும் 3-வது விவாகம் உடனேயும் நடக்கும்.

288. மேஷ ராசியில் அசுவனி 4-வது பாதத்தில் சந்திரனிருக்து சனி 11-லும் சுக்கிரன் மிதுனத்திலும் 7 மாதியாகிய சூரியன் 4-மிடத்திலு மிருந்தால் 2-வது தெசையில் ஷ்டி சனி புக்தியில் யத்தனமின்றி விவாகம் நடக்கும்.

மீன லக்கின பலன்

289. மீன ராசிவில் உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து புத சுக்கிரர் 9-ல் சனிபுடன் கூடியும், இருந்தாலும் லக்கினதிபதி 9-லும் ராகு 2லு மிருந்தாலும் இரு தார முண்டாகும். மூன்ருந்திசை ராகு புக்தியில் முதல்தார நாசமும், இரண்டாவது விவாகமும் நேரிடும்.

220. மீன ராசியில் பூரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிர புதர் கன்னியிலும் குரு மேஷத்திலு மிருந்தால் 9 அல்லது 10-வது வயதில் விவாகம் நடக்கும்.

291. தனுசு ராசியில் மூலம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து புதன் தனுசிலும் சுக்கிரன் மகரத்திலும் குரு மீனத்திலு மிருந்தால் 2-வது தெசையின் முடிவிலல்லது மூன்ருவது திசை முதலில் விவாகம் நடக்கும். புருஷ ஜாதகத்தில் ஷை புதனுடன் சனி கூடினல் ஷை காலத்தில் முதல் விவாகமும் பிறகு மறு விவாகமும் நடக்கும். இதற்கே தாரம் ரோகமுடைய தென்றும் ஏக தாரமே யுண்டாகு மென்றும் சுக்கிர நாடியில் சொல்லப்பட்டிருக்கிறது.

292. கடக ராசியில் சந்திரனிருந்து குரு ரேவதி 4-லும் புதன் தனுசிலும் சுக்கிரன் விருச்சத்திலு மிருந்தால் 2-வது தெசை சுய புக்தியில் விவாக முண்டாகும்; வேறு சிலர் கேது புக்தியில் நடக்கு மென்கின்றனர். மேற்படி புதன் சூரியனுடன் கூடி யிருந்தால் புருஷ ஜாதகத்தில் மேற்படி காலத்தில் முதல் விவாகமும் ராகு புக்தியில் தார நாசமும் முதல் மனைவி வழியிலேயே 2-வது விவாகமும் பிறகு நடக்கும்.

293. கும்ப ராசியில் அவிட்டம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு மேஷத்திலும் சுக்கிரன் மகரத்திலும் புதன் விருச்சிகத்திலும் இருந்தால் 2-வது தெசை சுக்கிர புக்தியில் ஜன்ம தேசத்திலேயே விவாகம் நடக்கும். ஸ்திரீயானவள் ரோக முடையவளாவாள்.

294. சிம்ம ராசியில் மகம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு மீனத்திலும் புதன் தனுசிலும் சனி சுக்கிரர் விருச்சிகத்திலு மிருந்தால் 13 வயதில் விவாகம் நடக்கும்.

295. மகர ராசியில் உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திர னிருந்து குரு தசமத்தில் தனுசிலும் 7-மாதி சந்திரனுடனும் கூடி சுக்கிரனும் மகரத்திலேயே யிருந்தாலும் துலா ராசியில் செவ்வா யும், சனி மேஷத்திலு மிருந்தாலும் பல தடவைகளில் விவாகத்திற் குத் தடங்கல் உண்டாகிப் பிறகு நடக்கும்.

296. மீன ராசியில் உத்திரட்டாதி 3-வது பாதத்தில் சந்திர னிருந்து குரு மிதுனத்திலும் புதன் கடகத்திலு மிருந்தாலும் சுக் கிர குஜர் சிம்மத்திலிருந்து கும்பத்தில் சனி யிருந்தாலும் 2-வது தெசை குரு புக்தியிலாவது, சனி புக்தியிலாவது விவாக முண்டா கும். இத்துடன் மீன லக்னம் முடிவு.

297. மீன ராசியில் உத்திரட்டாதியில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் மிதுனமாகி சுக்கிரன் குரு புதனிவர்கள் 4.லு மிருந் தால் 12 அல்லது 14 வயதில் விவாகம் நடக்கும்.

298. ரிஷப லக்கின ஜாதகனுக்குச் சந்திரன் 7-ல் இருந்தால் 3 தாரம் வாய்க்கும். மேற்படி சந்திரனுடன் சனி குஜர் கூடினும் தாரம் 3 ஆகும். இதற்கே சுக்கிரனுடனும் ஸப்தமாதிபதியுட னும் பாபர் கூடாமலிருந்தால் ஏக தாரமேயாகும்.

299. ஸப்தமாதிபதி பாபருடன் கூடியிருக்க 2. 7-ஆம் இடங்களிலும் பாபரிருந்தால் மறுதாரம் வாய்க்கும்.

300. சுக்கிரன் 11-லிருந்தாலும் நீச்சத்திலிருந்தாலும் மறு தாரம் வாய்க்கும்.

301. ஸப்தமாதிபதி 12-லாவது 6-லாவ திருந்தாலும் 2-ந்தாரம் வாய்க்கும்.

302. 4, 2, 12, 8, 7, 1 இந்த ஸ்தானங்களில் சுக்கிரன் குஜ னிவர்கள். பலஹீனர்களாக இருப்பினும் 2-ந் தாரம் வாய்க்கும்.

303. மேற்படி 4, 2, 12, 8, 7, 1 இந்த ஸ்தானங்களில் செவ்வா யிருந்து 3, 1, 12, 11, 7, 6 இந்த ஸ்தானங்களில் குருவும் இருந்தால் அதாவது செவ்வாய் லக்கினத்திலிருந்தால் 12-ல் குருவும் 2-ல் செவ்வா யிருந்தால் 1-ல் குருவும் 12-ல் செவ்வா யிருந்தால் 11-ல் குருவும் 8-ல் செவ்வா யிருந்தால் 7-ல் குருவும் 7-ல் செவ்வா யிருந்தால் 6-ல் குருவும் 4-ல் செவ்வா யிருந்தால் 3-ல் குருவும்

இப்படி யிருந்தால் விவாக யுக்த காலங் கடந்தே விவாகம் நேரி டும். *வெகுகாலங் கடந்து நடக்குமென்பது சிலர் மதம்.

304. ராகுவுக்கு 12-ல் அல்லது 7-ல் சனி யிருந்தால் 2-ந் தாரம் வாய்க்கும்.

305. 7-ல் சனி சுக்கிரர் கூடியே யிருந்தால் ஏக தாரமே யாகும்.

306. 7-மாதி 2-ல் அல்லது 6-ல் இருந்தால் மனைவி தோஷ முள்ளவளாவள்.

307. 7-மாதி 4-ல் இருந்தால் தாய் தோஷ முள்ளவ ளாவாள்.

308. 7-க்குடையவன் லக்கினத்தி லிருந்தாலும்,

309. 9-க் குடையவன் லக்கினத்தி லிருந்தாலும்,

310. 11-க் குடையவன் லக்கினத்தி லிருந்தாலும்,

311. 1-க் குடையவன் 1-லாவது 7-லாவது 10-லாவ திருந்தாலும்,

312. 1-மாதி 9-ல் அல்லது 11-ல் இருந்தாலும்.

313. 10-ல் கேது இருந்தாலும், 8-ல் சனி இருந்தாலும். 2-மாதி 2-ல் இருந்தாலும்.

314. 8-மாதி 2-ல் அல்லது 1,7 இவ்விடங்களி லிருந்தாலும் மறுதார முண்டாகும்.

315. ரிஷப லக்கின ஜாதகனுக்கு லக்கினாதிபதியும் 7-மாதி யும் கூடினால் 2-தார மேற்படும்.

316. மேஷ லக்கினத்தில் ஜனித்து சுக்கிரன் செவ்வா யிவர் கள் ஆயில்யம் 4-ல் இருந்தால் தன்னூரிலேயே விவாகம் நடக் கும். இதற்கே அவிட்டம் 4-ல் சனி யிருந்தால் விவாகத் தடை யேற்படும். மேல்படி சுக்கிரன் 12-ல் இருந்தால் 3 தார மேற் படும்.

317. மேஷத்திற்கே சுக்கிரன் 7-லேயே இருந்தால் 2 தார முண்டாகும் ஏக தாரமென்பது சிலர் மதம்.

---

* பொதுவாகவே குருவுக்கு 2, மிடத்தில் செவ்வாய் இருந்தால் விவாக மானது விவாக யுக்த காலங் கடந்தே நடக்கும், இரண்டாவது விவாகம் காலங் கடந்து நடக்கு மென்பது சிலர் மதம்.

318. 7-ல் உள்ள மேற்படி சுக்கிரனுடன் ராகு கூடினுல் 3 தார மேற்படும். ஏகதாரமாகவே யிருந்தால் தாரத்திற்குக் கிரகசங்கையால் பீடை யேற்படும்.

319. சுக்கிரன் கேதுவுடன் கூடியிருந்தால் தாரம் துர்மரண மாகும். மேல்படி சுக்கிரன் புதனுடன் கூடியிருந்தால் தாரம் ரோகத்தினுல் மரிக்கும். செவ்வாயுடனும் சூரியனுடனும் கூடி யிருந்தால் 3 தார மேற்படும்.

320. மேஷ லக்கின ஜாதகனுக்கு முதல் தாரஸ்தானுதிபதி, நீச்ச மடைந்த 2-ந்தார ஸ்தானுதிபதியுடன் கூடியிருந்தால் 2 தாரம் ஏற்படும். சந்திரனும் கூடி இவர்களுடனிருந்தால் 2 தாரமும் உயிருடனிருக்கும். சிலர் மதம் 1-தாரமென்பது.

321. குரு சனி செவ்வாயிவர்கள் 8-ல் இருந்து 4-ல் உள்ள சுக்கிரன் மேல்படி குருவால் பார்க்கப்பட்டால் மேஷ லக் கின ஜாதகனுக்கு 2-வது தாரத்தினுல் பாக்கியம் வரும்.

322. ரிஷப லக்கின ஜாதகனுக்கு எட்டில் செவ்வாய் 7-ல் குரு 6-ல் சனி இப்படி யிருந்தால் மறு தாரம் நேரிடாது. தாரம் ரோக மடையும். இதற்கே சுக்கிரன் 4-ல் இருந்தால் தாரம் கிரகசங்கை பீடை யுடையதாகும்.

323. குரு லக்கினத்திலும் செவ்வாய் 11-லு மிருந்து சனி. சுக்கிரனுல் பார்க்கப்பட்டாலும் சுக்கிரனுடன் கூடினுலும் 3 தாரம் நேரும்.

324. சனி செவ்வா யிவர்கள் சந்திரனுடன் ஏழாமிடத்தி லிருந்தால் ரிஷப லக்கின ஜாதகன் இரு தார மடைவான்.

325. குரு குஜன் இவர்கள் கூடினுல் ரிஷப லக்கின ஜாதக னிருதார மடைவான். மேற்படி குரு குஜ னிவர்கள் 12-லிருந்து சூரியன் புத னிவர்களால் காணப்படினும் தாரம் 2 ஆகும். வேறு சில கிரந்தப்படி தாரம் நோயுற்றிருப்பாள் என்றும் ஏக தார மென்று தெரிகிறது.

326. 7, 9 மாதிகள் கூடி 7-ல் இருந்தால் தாரத்தினுல் பாக் கியம் வரும்.

327. சிம்ம லக்கின ஜாதகருக்கு சுக்கிர சனி 11-லும் லக் கினத்தில் குரு புதனும் இருந்தாலும் 9-மாதி நீச்சத்தி லிருந்தா லும் ஜாதகன் தார மூலம் அபவாத மடைவான் மூன்று தாரயோக ஜாதக மாகும்.

328. கன்னியா லக்கின ஜாதகனுக்கு 7-ல் சனி யிருந்தால் 2 தாரம், கர்ப்பத்துடன் தோஷ மடையும்.

329. இதற்கு செவ்வாய் 7-ல் இருந்தாலும்,

330. ஏழாமதிபனான குரு பதினொன்றில் இருந்தாலும் 3 தாரம் ஏற்படும்.

331. 2 மிடத்துக்குடையவன் 6, 8, 12-ல் இருந்து 2-ல் குருவு மிருந்தால் 2 தாரம் வாய்க்கும்.

332. 7-க்குடையவன் 9-ல் இருந்து 2-மாதி 12-ல் இருந்தால் 4 தார மேற்படும்.

333. 7-ல் பல கிரக மிருந்து அங்காரகன் பார்த்து சுக்கிரன் பலஹீனனானால் 3 தார மேற்படும்.

334. 7-க்குடையவன் கேந்திரத்தில் அதாவது ஜன்ம லக்கினம் அல்லது 4 மிடம், அல்லது 7 மிடம் அல்லது 10 மிடம் இந்த ஸ்தானங்களில் ஒன்றில் இருந்து 2 மாதி 8-ல் இருந்தால் 3 தார மேற்படும்.

335. 7 மாதி 5-ல் இருந்து 2 மாதி 12-ல் இருந்து ராகுவுடன் கூடினால் மனைவி யிருந்தும் ஸௌராஷ்டிரப் பெண்ணை மணப்பார்.

336 கும்ப லக்கினத்தில் ஜனித்தவனுக்கு குரு உச்சத்திலிருந்து 7-க்குடையவனும் வலுத்தால் மறுவிவாகமுண்டாகும்.

337. 7-ல் சனியிருந்து 2 மாதி 12-ல் இருந்தால் சீக்கிரம் மண மாகாது.

338. 7-ல் சந்திர புதனிருந்தால் தார நாசமல்லது தாரம் அபவாத முள்ளதாகும்.

339. 7-ல் குருவும் சந்திரனு மிருப்பின் 2 தாரம் ஏற்படும். மனைவி வம்சமும் நாசம் அடையும்.

340. 7-ல் சுக்கிரனிருந்தால் 3 தாரம். மேல்படி சுக்கிரனைச் சுபர் பார்த்தால் ஏகதாரம். பாபிகள் பார்த்தால் தாரம் அந்திய காலத்தில் இராது.

341. சிம்ம லக்கின ஜாதகனுக்கு சனி சந்திரர் 7 லிருந்தாலும் சுக்கிரனுடன் சூரியனும் கூடினாலும் 2-ந் தாரம் நேரும்.

342. மகர லக்கின ஜாதகனுக்கு குரு 7-ல் இருந்தால் 2-ந் தாரம் நேரும்.

343. லக்கினத்தில் சூரியனும் 11-ல் குருவும் 6-ல் சனியு மிருந்தால் மிதுன லக்கின ஜாதகனுக்கு 36 வயதில் விவாகம் நடக்கும். 7-ல் சனியும் 7-மாதி 11-லும் இருந்து சுக்கிரன் 4-லிருந்தால் 3 தாரம் நடக்கும். இதில் ஒன்று இரண்டு 2-ம் ஒரே சகோதரி களும் 3-வது முன் தாரத்தின் சித்தப்பன் மகளுமாகும்.

344. 2-ல் சனி 4-ல் சுக்கிரன் தார மிரண்டாகும்.

345. 7-மாதிக்கு ராகு பார்வையிருந்தால் மனைவி துஷ்டையா யிருப்பாள்.

346. 9-ல் சனி செவ்வாய் கூடியிருந்து இவர்களைக் குரு பார்த்தால் மிதுனம் சிம்ம மிந்த லக்கின ஜாதகன் 2-தார மடைவான். அன்றி தாசி வீட்டுக்காகச் சொந்தத் தன் வீட்டிலேயே தனத்தைத் திருடுவான்.

347. 7-ல் 9-மாதி உச்சமடைந்து இருந்து 9-ல் ராகு விருந்தால் சகோதரன் மனைவி துஷ்டையாவாள். கன்னி விருச்சிக மிவற்றிற்குப் பொருந்தும்.

348. 7-மாதி 7-ல் குரு கேது இவர்களுடன் கூடின கும்ப க்கின ஜாதகனுக்கு தாரம் 2 ஆகும். இதற்கே சந்திர சனி கூடி னத்திலிருந்தால் 16 அல்லது 18 வயதில் விவாகம் நடக்கும்.

349. மகர லக்கின ஜாதகனுக்கு சனி அவிட்டம் 3-ல் செவ்வா யுடன் கூடி யிருந்தால் 2 தாரம் ஏற்படும்.

350. 2-ல் சனி 9-ல் ராகு இப்படி இருந்தால் 2 தாரம்.

1. 5, 6, 7-மாதிகள் 7-ல் இருந்தால் 3 தார மேற்படும். இ குரு பார்த்தால் தார சுக முண்டாகும்.

352. 8-மாதி லக்கினத்தில் ராகுவல்லது கேதுவுடன் கூடி யிருந்து குருவால் பார்க்கப் படாமலிருந்தால் தார நாச முண்டாகும்.

353. 7-ல் குரு 9-ல் செவ்வாய் இப்படி யிருந்தாலும்,

354. சனி புத சுக்கிரர் 11-லிருந்தாலும் துலா லக்கினத்திற் பிறந்தவருக்கு இரு தாரம் வாய்க்கும்.

355. 7-மாதி கேது கூடி யிருந்து 7-ஆம் இடம் செவ்வா யால் பார்க்கப்பட்டால் தார வமிசம் நாசமுறும்.

356. கன்னியா லக்கின ஜாதகனுக்கு சுக்கிர குஜன் கூடில் விவாகத்தில் விக்கினம் நேரும்.

357. 7-ல் செவ்வா யிருந்தாலும் விக்கினமே நேரிடும். 8-ல் செவ்வா யிருந்தால் வெகு சம்போகியாவர். ஸ்திரீ ஜாதகமானுல் சம்போகத் தடை யடைவாள் !

358. சிம்ம லக்கின ஜாதகனுக்குச் சனி சுக்கிரர் 11-லிருந்து களத்திர ஸ்தானமான 7-ஆம் இடத்தை புதன் குரு செவ்வா யிவர்கள் பார்த்தால் 2 தாரங்களை அபவாதங்களை முன்னிட்டு விலக்கம் செய்து மூன்ருந்தாரத்தை மணப்பான்.

359. லக்கினுதிபதி 9-ல் செவ்வாயுடன் கூடி யிருந்தாலும் 7-மாதி 6-ல் ராகுவுடன் கூடி யிருந்தாலும் 7-ல் சனி யிருந்து குடும்பாதியுடன் கூடி மேற்படி லக்கினுதிபதியைப் பார்த்தாலும் விதவையை மணப்பார். சிலர் குலஹீன ஸ்திரீயை மணப்பாரென்று சொல்லுகின்றனர். ஸ்திரீ ஜாதகத்தில் இவ்வாறு இருந்தால் இப்படிப்பட்ட வாழ்க்கையல்லது சம்போகம் நெரிடு மென்றும், இவை நேரிடையாக வல்லது திருட்டுத்[illegible]மாகவாவது நடக்கு மென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

360. லக்கினத்திற்கு 2-ல் சூரியனிருந்தாலும் பார்த்தா[illegible] வேசி ஸ்திரீ சேர்க்கை யுண்டாகும்.

361. லக்கினத்தில் சனி யிருந்தாலும் பார்த்தாலும் 7-ஆம் இடம் சனி வீடாகி வந்தாலும் வயதான (தோற்றமுடைய) மெல்லிய சுந்தரமான மிருதுவான கெட்ட ஸ்திரீ (சேர்க்[illegible] படும்) யை மணப்பார்கள்.

362. 5-ல் 7-மாதியுடன் ராகு கூடி யிருந்தாலும்[illegible]

363. 7-ல் ராகு இருந்தாலும் விவாகத்தடை யுண்டாகும்,

364. சுக்கிரன் பாபரோடு கூடினுலும் விவாகத் தடை யுண்டாகும். குரு பார்த்தால் இவைகளுக்குப் பரிகாரமாகி உடனேயே விவாகம் நடக்கும்.

365. 7-மாதி 3-ல் இருந்தால் உச்சனுகி யிருந்தாலும்,

366. 9-மாதி 2-ல் ராகுவுடன் கூடி யிருந்தாலும் இரு தாரம் ஏற்[illegible]படும்.

367. 3-மாதி 7-ல் இருந்தால் சதா போகி: அதின்றி பல போகி: பல ஸ்திரீ போகி.

368. சுக்கிரன் 6-ல் சனியுடன் கூடினுல் மேஷ லக்கின ஜாதகனுக் கிருதாரம் ஏற்படும்.

369. துலா லக்கின ஜாதகருக்கு செவ்வாய் லக்கினத்தில் கேதுவுடன் கூடி யிருந்தால் விவாகத் தடை யுண்டாகும்.

370. கும்பத்தில் ராகு சந்திரன் (பூரட்டாதி 1-வது பாதத்தில்) கூடி யிருந்தால் (மகர லக்கின) ஜாதகனுக்கு ரூபமுள்ள ஒரே தாரம் வாய்க்கும்.

371. கன்னியா லக்கின ஜாதகருக்கு மீனத்தைச் சனி பார்த்துக் குருவும் சிம்மத்தில் இருந்தால் 2-தார மேற்படும். அல்லது 8-ல் குரு சனி கூடினுலும் 10-ல் ரவி சுக்கிரர் கூடினுலும் 2-தாரம் ஏற்படும்.

372. விருச்சிக லக்கின ஜாதகருக்கு ராகு சுக்கிரர் 11-லும் மேற்படி சுக்கிரன் ஹஸ்தம் 3-வது பாதத்திலும் இருந்து 7-ல் குரு சந்திரரிருந்து 7-ஐ சனி பார்த்தால் விவாகமின்றி மேற்படி ஜாதகர்கள் பிரம்மசாரியா யிருப்பார்கள்.

373. சிம்ம ல[illegible]ன ஜாதகருக்கு 7-ல் குரு சனி கூடி யிருந்தால் ஏக தாரமே.

374. மகர லக்கின ஜாதகருக்கு 1-ல் சுக்கிரன், சூரியன் ராகு குஜன் இவர்களுடன் கூடினுலும் சந்திரன் மீனத்தில் இருந்தால் வெகு ரூப லக்ஷணமுடைய தாரம் வாய்த்தாலும் தன்[illegible]டய இன வர்க்கத்திலேயே மேற்படி ஜாதகர்கள் விவாக 35 கன்னியா ஸ்திரீகளைச் சேர்வார்கள். வெகு ஸ்திரீ போகி, [illegible]வர்களை [illegible]பியுமாவார்கள்.

375. 6-ஆம் இடத்தில் செவ்வாயும் 7-ல் ராகுவும் 8-ல் சனியும் இருந்தால் இந்த ஜாதகனுடைய மனைவி பிழைத்திராள்.

376. 7-ல் ராகு இருந்து இரு பாபர்களால் மேற்படி ராகு பார்க்கப்பட்டால் பத்தினி சேர்க்கை யோக மிருந்தும் சீக்கிரமாகவே தாரங்களுக்கு மரணம் நேரும். *

---

* சில கிரந்தங்களில் சுக்கிர நாடியில் புத்திரன் மனைவி இவர்களுக்குப் பாம்பைப் பார்த்தாலே மரண முண்டாகு மென்று கூறப்பட் டிருக்கிறது.

377. 8-ல் சனி, ராகு, சூரியவனிவர்களும் லக்கினாதிபதியும் கூடி யிருந்து. 6-ல் செவ்வாயும். குடும்ப ஸ்தானத்தில் குரு கேது வுடன் கூடியும் இருந்தால் தாரம் ரோகத்தை யடைந்து துர்ப்பல மாகி பலவித பீடைகளை யடையும்:-கன்னியா லக்கினம்.

378. கன்னியா லக்கின ஜாதகனுக்கு குரு 12-ல் இருந்து 7-மிடத்தைச் சனி பார்த்து சுக்கிரன் 4, 7, 10-ல் அல்லது லக் கினத்தில் இருந்தாலும் தாரம் 2 ஆகும்.

379. கடக லக்கின ஜாதகனுக்கு 6-ல் சனியும் லக்கினத்தில் குருவு மிருந்தால் இரண்டு தாரமும் சகல சம்பத்துடனு மிருப் பார்கள்.

380. சிம்ம லக்கின ஜாதகனுக்கு சனி 2-லிருந்து அல்லது இரண்டைப் பார்த்து இருக்க, செவ்வாய் ராகு ஐந்திலிருந்தாலும் குரு 8-ல் இருந்தாலும் இரு தார மேற்படும். இத்துடன் சுக்கிர னும் 8 ல் இருந்தால் இப்பலன் தவறாது.

381. 8-மாதிபதியுடன் சுக்கிரன் கூடில் விவாகத் தடை யுண்டாகிப் பிறகு அதே ஸ்தானத்தில் விவாகம் நேரும்:—கன் னியா லக்கினம்.

382. 7-ல் சனி குஜர் பார்த்தாலும் விவாகத் தடை ஏற் படும்—கன்னியா லக்கினம்.

383. மகர லக்கின ஜாதகருக்கு சந்திரன் 9-லும் சனி 12-லும் இருந்து சுக்கிரன் 7-லு மிருந்தால் 3 மனைவிய ரேற் படுவர். இத்துடன் 6-ல் செவ்வாயு மிருந்தால் வயிற்றிலேயே சிசு மரித்துத் தாரமும் மரிக்கும். இப்படி 2 தாரம் மரிக்கும். பிறகு மூன்றாவதாக இளைய சகோதரன் மாதா இவர்களின் பலவந்தங் காரணமாக அம்மான் பெண்ணை மணப்பார்.

384. கடக லக்கினத்தில் ஜனித்தவருக்கு 10-ல் சனியும் 4-ல் புத சுக்கிரருமிருப்பின் 21-ல் முதல் விவாகமும் 31-ல் 2-வது விவாகமும் நடக்கும்.

385. கடக லக்கின ஜாதகனுக்கு 7-ல் சனி சந்திரரிருந்து 4-ல் குரு சுக்கிரரிருந்தால் 4, 5-இடங்களில் விவாகம் யத்தனப் பட்டுத் தடைப்பட்டுப் பிறகு சனி 2-வது பரிவர்த்தியில் மகரத்தில் வரும்போது நடக்கும்.

386. கும்ப லக்கின ஜாதகருக்குச் சூரியன் 10-லும் சுக்கிரன் (சித்திரை 3-ல்) 9-லு மிருந்தால் விவாகமான பின் மாமியார் வீட்டில் வாசம் ஏற்படும். அந்த ஆஸ்தியையும் அடைவன்.

387. நீச்ச ஸ்தானாதிபதி நீச்ச நவாம்சையி லிருந்தால் பிள்ளையின் விவாக காலத்தில் 2 புத்திரர் காணமல்போய் விவாகம் தடைப்பட்டு பிறகு 2, 3 மாதத்தின் பிறகு நடக்கும்.

388. கன்னியா லக்கின ஜாதகனுக்கு ஆயில்யம் 3-ல் குருவும் செவ்வாயு மிருந்து கிருத்திகை 4-ல் சுக்கிரனும் மகம் 1-ல் சனியும் உத்திரட்டாதி 4-ல் ராகுவு மிருந்தால் பாலியத்தில் விவாக மில்லை. மனைவியால் சுகமில்லை. 30 வயதிற்கு மேல் விவாக மாகிச் சுக பாக்கியாதிக ளுண்டாகும். சிலர் மதம் 2-தாரம் என்பது, சுக்கிர நாடியில் ஒரே தாரமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

389. சூரியன் 7-மாதிபதியாகி ரேவதி 4-ல் புதனுடன் கூடி இருந்து ரோகிணி 1-ல் சுக்கிரனும் உத்திரட்டாதி 3-ல் ராகுவும் சனியி மிருந்தால் 20 அல்லது 21 வயதில் விவாகம் ரூப லக்ஷண தாரம் வாய்க்கும். ஆனல் மேற்படி தாரத்திற்கு ஒவ்வொரு கர்ப்பத்திலும் கர்ப்பந்தரித்த நாள் முதல் பிரஸவ காலம் வரையும் பீடை யுண்டாகித் தேக ஜாட்டிய முண்டாகிப் பிரஸவமான பின் குணமேற்படும். இதற்குத் துர்க்காதேவி ஆலயத்தில் ருத்திராபிஷேகமும் பிராம்மண போஜனமும் செய்வித்து மேலும் தான தர்மாதிகளும் செய்தால் சம்பூரணமாகக் குண முண்டாகும். சாந்திக்கு முன் ஒரு சமயம் நிலைத்தாலும் ஸ்திரீ சந்ததி நிலைக்கும். ஒரே தாரமே நிலையாகும். சாந்திக்குப் பிறகு ஆண் சந்ததி நிலைக்கும் என்றுமுளது.

390. 7-மாதியாகிய : சனியே ரோக ஸ்தானாதிபதியாகிச் சூரியனுடைய ராசியில் சிம்மத்தில் இருந்து ராகுவுடனும் கூடியிருந்து சூரியன் புதனுடன் கூடி யிருந்தால் விவாகமான பின்பு பித்தரோகம் ஏற்பட்டு பிறகு சோகை யுண்டாகிச் சதிபதிகளில் ஒருவரை யொருவர் விபசார தோஷ முள்ளவரென்று சந்தேகித்து அதுமுதல் மனஸ்தாப முண்டாகிப் பிறகு சந்தேக நிவர்த்தியான பின் சுகமுண்டாகும்.

391. 2. 7-மிடங்களில் பாபரிருந்து இந்த ஸ்தானாதிபதிகளும் பாபருடன் கூடி யிருந்தால் சன்னியாசத்தினல் மனைவி

பிடம் விரோத முண்டாகும். அல்லது மனைவி மரித்து விடுவாள். பிறகு விவாகமில்லை.

392. சூரியன் அசாத்திய பாபியா யிருந்தாலும் சிம்ம ராசியி லிருந்தால் முன்சொன்ன பலனுண்டாகாமல் தார சுகமு முண்டாகும்.

393. மேஷம் முதலிய பாப ராசிகளில் அல்லது சூரியன் 2, 7-ஆம் இடமான சுய க்ஷேத்திரத்திலேயே அசாத்திய பாப ருடன் கூடியிருந்தால் முன் சொன்னபடி தார நாசத்துடன் சன்னியாச யோகமும் நேரும். சுபர் திருஷ்டி யல்லது சேர்க்கை யிருந்தாலும் இப்பலனே யுண்டாகும்.

394. இப்படியே நீச்ச ராசியில் பாபருடன் கூடி யிருந் தாலும் நீச்சக் கிரகத்துடன் பாபராசியி லிப்படி யிருந்தாலும் தாரநாச முண்டாகும். இவர்களே நீச்சத்தில் உச்சாம்ச (உச்சக் கிரக)த்துடன் கூடி யிருந்தால் வெகு ரூப லக்ஷணமுடைய வெகு தாரம் ஏற்படும்.

395. இப்படியே மிதுனம் மேஷம் இரட்டை ராசி இவை களி லிருந்தாலும் வெகு ரூப லக்ஷணமுள்ள வெகு தாரமே யுண்டாம்.

396. இந்த ராசிகள் 2, 7-ஆம் இடமல்லது ஆரூட ஸ்தானங் களாக ஆனுல் அங்கு சுய க்ஷேத்திரத்திவ் அந்தந்த ஸ்தானுதிபதி யிருந்தால் தாரம் முன்னிறந்து விடும்.

397. ரிஷபத்திலாவது துலாத்திலாவது சுக்கிரனும் குருவும் கூடி யிருந்தாலும் அல்லது அன்னிய ராசியில் கூடி யிருந்தாலும் தாரம் முன்னிறந்து விடும்.

398. தார ஸ்தானுதிபதியும் அல்லது 2, 7-ஆம் இடத் ததிபதி யும் சுக்கிரனும் உச்சத்தில் இருந்தால் உத்தம வம்சத்தில் தாரம் வாய்க்கும். இவர்களே நீச்ச வர்க்கத்திலிருந்தால் நீச்ச வழியில் தாரம் வாய்க்கும். இந்த உச்ச உச்சாம்ச கிரகங்களை சுபர் கூடினும் பார்க்கினும் வெகு ரூப சுந்தரியான பெண் மனைவியாவள்.

399. மேற்படி 2, 7-ஆம் இடங்களில் சனி ராகு கூடி யிருந் தால் தாரம் எதிர் வழக்காடும் ஸ்திரீயாகும். அல்லது தாரத்தை

இழந்து விடுவர். அல்லது மனைவியைப் புருஷனும், புருஷனை மனைவியாவது ஒருவரை யொருவர் வில(க்)கி விடுவார். மேற்படி ஸ்தானதிபதிகளுடன் சனி ராகு கூடினும் சிலர் இப் பலனையே சொல்கின்றனர்.

400. மேற்படி ஸ்தானங்களில் சுக்கிரனும் கேதுவும் கூடியிருந்தால் சதாகாலமும் மனைவிக்கு ரத்தப் பிரவாகமான ரோகமுண்டாகும். ரக்தசிராவ நோய் என்பதும் பெயராகும்.

401. மேற்படி ஸ்தானங்களில் செவ்வாயும் கேதுவும் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி அஸ்திஸ்ராவ நோயால் வருந்துவாள்.

402. மேற்படி ஸ்தானங்களில் ராகு, சனி, சூரியனிவர்கள் கூடி யிருப்பின் ஜாதகன் மனைவி அஸ்தி ஜுரத்தினல் இரவும் பகலும் தபிப்பவளாவள்.

403. மேற்படி ஸ்தானங்களில் புதனும் கேதுவும் கூடியிருந்தால் ஜாதகன் மனைவி ஸ்தூல அங்க முடையவளாவாள்.

404. மேற்படி ஸ்தானங்கள் புதனுடைய அல்லது செவ்வாயினுடைய க்ஷேத்திரமானல் அங்கு சனியும் செவ்வாயும் கூடினல் பித்த பிராணரோக, கிராணிரோக, ரணரோகாதிகளுண்டாகி மனைவி பீடை யடைவாள்.

405. செவ்வாயும் சனியும் புதனும் மேற்படி ஸ்தானங்களிலிருந்தால் அதாவது புத செவ்வா யிவர்களுடைய தல்லாத மேற்படி வேறிடத்தில் இருந்தால் மனைவி, காது கண் இவற்றில் ரோகத்தை யடைவாள்.

406. செவ்வாய், ராகு, புதன், குரு இவர்கள் கூடி 2, 7-ஆம் இடங்களில் புதன் குஜ னிவர்களுடைய தல்லாத வேறு க்ஷேத்திரங்களில் இருந்தால் மனைவி பல்வலி யுடையவளாவாள்.

407. மேற்படி ஸ்தானங்கள் கன்னியா ராசியாகினும் வேறு ராசிகளானலும் சனி ராகு இவர்கள் கூடி யிருந்தால் ஜாதகன் மனைவி நொண்டியாக வல்லது முடமாவாள்.

408. 7-மாதிபதி லக்கினத்திற்கு எட்டில் இருந்தால் தாரம் ரோகமடையும். காமியாவாள், அல்லது கோபியாவாள். அற்பசுகி.

409. 7-மாதி 9-ல் அல்லது 2-ல் இருந்தால் சதா ஸ்திரீக ளிடமே மனம் செல்லும்.

410. 7-மாதி 10, 4 இவ்விடங்களில் இருந்தால் சம்சயிக் கத் தக்கினவள் மனைவியாவாள், அல்லது மனைவியிடம் சந்தேகம் பிறக்கும். மனைவி தருமவதி, சத்தியவதி, தந்தரோகவதியு மாவாள்.

411. 7-மாதி 11-ல் அல்லது 3-ல் இருந்தால் சந்ததி இறந்து பிறக்கும். பிரயத்தினத்தினல் சந்ததி யுண்டாம். எப்போதாவது சந்ததி நிலையாகும். அதாவது பாலியத்திலாவது அந்தியத்திலாவது நிலைக்கும் என்பதாம்.

412. 7-மாதி 12-ல் இருந்தால் தரித்திரை யல்லது கிருபணத் தன்மையுள்ளவள் மனைவியாவாள். மனைவி ரூபவதியாவாள். ஜாதகன் தனஹீனனவன். மானி. எவ்வளவு சம்பத்திருப்பினும் சர்வ குணங்களிருப்பினும் சதா மனச் சஞ்சல முண்டாகும்.

413. ஏழாமிடத்துக் குடையவன் ஐந்தாமிடத்தில் இருந் தால் எப்போதும் சந்தோஷ முண்டாகும்.

ஸப்தமபாவம் முற்றும்.

ஜீவன பாவம்

அல்லது

தொழில் நிர்ணயம்.

ஜாதகர்களுக்குப் பொதுவாக ஜீவன ஸ்தானமானது பத்தாமிட மென்று சில கிரந்தத்திலும் 3-வது ஸ்தானம் என சில கிரந்தத்திலும் போஜன ஸ்தானம் 2-ஆம் இடமுமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. தொழில் மூலம் தனந்தேடி உண்ணல், பிரதி (ஒரு ஜீவராசியில் பிறந்த) மனிதர்களுக்கும் பொருந்தும். அப் படிப்பட்ட தொழிலைச் செய்து வரும்போது தகப்பன், தாய் சகோதரன், தாரம், வேலையாள், சத்துரு இவர்களிட மிருந்தும் இன்னம் பலவாருகவும் தனம் தேடுவதையும் அதன் காலத்தையும் உபதேசிக்கப் படுகிறது.

ஜாதகன் பிறந்த காலத்தில் ஜன்ம லக்கினத்திற்குப் பத்தா மிடத்திலுள்ள கிரகங்களைக் கொண்டும் பத்தாமிடத் ததிபதியிருக் கும் கிரகத்தைக் கொண்டும் தொழிலை நிர்ணயஞ் செய்யவேண்டும் ஜன்ம லக்கினத்திற்குப் பத்தாமிடத்தில் கிரக மில்லாவிடில் சந்திர னுக்குப் பத்தா மிடத்திலுள்ள கிரகங்களால் அறியவும், அல்லது சூரியனுக்குப் பத்தா மிடத்திலிருக்கும் கிரகத்தாலு மறியலாம்.

ஜாதகனுடைய ஜென்ம காலங்களிலேற்பட்ட ஜன்ம லக்கின சந்திர லக்கினங்களுக்குப் பத்தாமிடத்தில் ஒரு கிரகமுமில்லாவிடி னும், மேற்படி பத்தாமிடத்தை ஒரு கிரகமும் பாராதிருப்பினும் (பிறந்த) ஜாதகர்கள் தரித்திரத்தினல் பூமியில் அங்கு மிங்கு மலைந்து திரிபவர்களாவார்கள்,

மேற்படி பத்தாமிடத்தில் சூரியனிருந்தால் புத்தி, தைரியம், பராக்கிரமம், கீர்த்தி, புத்திரன், ஸ்திரீ சஞ்சலம் இத்தியாதிகளுண் டாகும்.

சந்திரன் 10-ஆம் இடத்திலிருந்தால், செய்யப்படுகிற தொழி லாலேயே தனத்தை யடைவார்கள். காம சம்பந்தமான செய் கைகள் விவேகம், இத்தியாதிகள் மூலம் தனமுண்டாகும். செய் யப்படுகிற தொழில் என்பது குலத்தொழிலைக் குறிக்கும்.

லக்கினாதிபதி 11-ல் இருந்து 11-மாதி 1-ல் இருந்தால் 33-வது வயது வந்ததும் 1000 தனம் சம்பாதனை யுண்டாகும்.

2-மாதி 11-லும் 11-மாதி 2-லுமாகி யிருந்தால் விவாகமான பின்பு வெகு பாக்கிய முண்டாகும்.

3-மாதி 11-லும், 11-மாதி 3-லுமாகியிருந்தால் சகோதரனால் தனலாப முண்டாகும்.

4, 7, 10, 1, 5' 9-இந்த ஸ்தானங்களிங் |சுபருடன்கூடி 1, 2, 11, ஆகிய இந்த பாவாதிக ளிருந்தால் 40 வயது முதல் 1500 தனம் சம்பாதனை யுண்டாகும்.

11-மாதிபதி 2-லிருந்து 2-மாதிபதி 1, 4, 7, 10-இந்த விடங்களி லிருந்தாலும், இந்த இடங்களில் குருவுடன் இருந்தாலும் 36ம் வயது வந்தபின்பு 2000 தன சம்பாதனை யுண்டாகும்.

11-ல் குருவும் 9-ல் சுக்கிரனும் 2-ல் சந்திரனு மிருந்தால் ஆறுபிரத்துக்கு அதிபதியாவன்.

9-ஆம் இடத்தில் அதாவது பதினொன்றுக்குப் பதினொன்றில் குருவுடன் சந்திர சுக்கிரரும் கூடி யிருந்தால் தனம், ரத்தினம், ஆபரண மிவைகளுடைய எஜமானுவன். ஸ்ரீமானுமாவான்.

12-ல் பாபரிருந்து 12-மாதியுடனும் பாபர் கூடி யிருந்தால் சுதேசத்தைத் தவிர்த்துத்தேசாந்திரத்திலும் சம்பாதனை யுண்டாகும்.

12-ல் சுபரிருந்து 12-மாதியுடன் சுபர் கூடினாலும் பார்த்தாலும் சுதேசத்திலேயே சஞ்சரித்தலால் தனம் தேடலுண்டாகும்.

12-ல் சனி முதலியவர்கள் செவ்வாயுடன் கூடி சுப திருஷடியு மடைந்தால் பாப மூலமாக தனார்ஜன முண்டாகும்.

10-லும் பாபரிருந்து 11-லும் பாபரிருந்தால் சுய ஜனங்களைக் கெடுத்தும், அவர்களைக் கெடுத்துத் தூஷித்தும் அவர்களால் தானும் தூஷிக்கப்பட்டும் துச்சரிதையுடன் ஜீவனம் செய்வர்.

10-மாதி 8-லிருந்து ராகுவுடன் கூடி யிருந்தால் மகா மூர்க்கத் தன்மையால் ஜனத்துவேஷ மடைந்து கெட்ட காரியங்களையே செய்து ஜீவனம் நடத்துவார்கள்.

10-மாதி 7-லிருந்து சனி செவ்வா யிவர்களுடனும் கூடியிருந்தாலும் 7-மாதி பாபருடன் கூடி இருந்தாலும் உண்பதும் மைதுனமுமே நினைவாகும்.

7-மாதி உச்சத்தை யடைந்து குருவுடன் கூடி யிருந்து 9.மாதி 10-ல் இருந்தால் வெகுமான ஐசுவரியாதிக ளுண்டாகும். சுக ஜீவனம் உண்டாகும் இது கும்பலக்கினத்திற்கு மட்டும் நேரிடாது.

11-மாதி 10-லும், 10-மாதி 1-லும் இருந்தாலும், இருவரும் கூடி 10, 11-மாதிகள் அல்லது 1, 10-மாதிகள் அல்லது 1, 11-மாதிகள் 4, 7. 10 இந்த ஸ்தானங்களி லிருந்தாலும் சுக ஜீவனம் உண்டாகும்.

10-மாதிபதி சரநவாம்சையி லிருந்தால் சஞ்சாரத்தினுலும் ஸ்திர நவாம்சையி லிருந்தால் ஓரிடம் நிலையாகவும் உபயாம்சத்தி லிருந்தால் வெளிதேசம். தன் தேசம் இவற்றி லிரண்டிலும் தன சம்பாதனை ஏற்படும்.

ஒன்பதா மாதிபதி. குரு, புதன், சந்திரன், சுக்கிர னிவர்கள் கூடி யிருந்தாலும், ஒன்பதா மாதிபதியும் குரு, சந்திர சுக்கிரரும் கூடி யிருந்தாலும், இவர்களுடன் நான்காமாதிபதியும் கூடியிருந்தால், விசேஷ பாக்கிய முண்டாகி ஜீவன முண்டாகும். இவர்களைச் சூரியன் கூடி யிருந்தால் வித்தையாலும், ராஜ்ஜிய சேவகத்தாலும், ராஜ்ஜிய பாரத்தினுலும், மருந்தினுலும். ரத்ன பரீக்ஷையாலும், குதிரை விற்பதாலும் தன ரத்ன பாக்கியங்களுண்டாகும். இவர்களைச் சந்திரன் பார்த்தால் ராஜ சன்மானத்தினல் பாக்கியமும், இவர்களைச் சனி பார்த்தால், தாஸீ தாஸ ஜனங்களாலும், சூத்திராாலும், மற்றைய கிரகங்கள் அதாவது ராகு கேதுக்கள் கூடினுலும் பார்த்தாலும் கண்ணுக்கு மறைவான இடத்தில் (நீச்சத்) தொழிலாலும் தனம் வரும்.

சாமர யோகத்தில் பிறந்தால் 12 வருஷம் துடர்ந்து யோகமாகவே நடக்கும்.

ஜாதகன் பிறந்த ஜன்ம நக்ஷத்திராதிபதி உச்சத்திலிருந்து 6, 7, 8 முதலிய ஸ்தானங்களில் சூரியன் புதனிவர்களும், குரு சுக்கிர னிவர்களும் வரிசையாக இருந்தால், ராஜ்ய லக்ஷ்மீ யோகம் உண்டாகும். இந்த ஜாதகருக்கு வயது 25 அல்லது 30 முதல் பதினறு வருஷம் தொடர்ந்து ராஜயோகம் நடக்கும்.

ஜாதகன் பிறந்தபோது மூன்று கிரகங்கள் * உச்சத்தில் இருந்தால் ஜாதகன் யோக ஜீவன முடையவனுவன். இரண்டு கிரகங்களுச்சத்தி லிருந்தாலும், மேற்படி பலனே யுண்டாகும். சுக்கிரன் உச்சத்தில் கேதுவுடன் கூடியிருந்தாலு மிப்பலனே.

மேற்படி கிரகங்கள் உச்ச ராசியில் நீச்ச பாவத்தில் இருந்தாலும், நான்கு கிரகங்கள் சுய க்ஷேத்திரங்களில் இருந்தாலும், துக்க ஜீவனமும் ஜீவனத்திற்கே கிலேசமும் அடைந்து துராத்துமாவாகவு மாவன். மேற்படி கிரகங்கள் நீச்ச ராசியிலேயே நீச்சாம்சத்தி லிருந்தால் பின்னும் வெகு கிலேச முண்டாகும்.

ஷை கிரகங்கள் நீச்ச ராசியில் உச்சநவாம்சையி லிருந்தாலும், சுய க்ஷேத்திரத்தில் பலமாக இருந்தாலும், நீச்சாம்சையி லில்லாம லிருந்தால் சுக ஜீவனமும் நல்ல யோகமுமுண்டாகும்.

ஸ்திர லக்கினங்கள் நான்கிலும் ஜனித்த ஜாதகர்களுக்கு லக்கினத்திற் கிரண்டில் பாபரிருந்தால் யோக பங்க மேற்பட்டுவிடும். இத்துடன் கொஞ்சம் அங்கவிகாரமு முண்டாகும்.

சந்திரனுக்கு எட்டு பன்னிரண்டா மிடங்களில் பாபரிருந்தாலும் மேற்படி பலனே யுண்டாகும். யோக பங்கம் முதலானவைகளும் நேரிட்டுவிடும்.

ராசியில் எல்லாக் கிரகங்களும் உச்ச ராசிகளிலிருந்து நவாம்சையில் மேற்படி கிரகங்கள் நீச்ச நவாம்சத்தி லிருந்தால் பெரிய அரச வமிசத்தில் பிறந்து சமுத்திரங்களுக் கெல்லாம் அதிபதியா யிருந்தாலும் முக்கிய திகம்பரனுகி பிக்ஷாசன முண்பான்.

குருவானவர் ஜாதகன் ஜனன காலத்தில் லக்கினத்திற்கு ஆறிலாவது, பத்திலாவதிருந்து நவாம்சத்தில் சுப நவாம்சத்திலிருந்தால் தரும சீலனுக ஜீவிப்பான். பாப புத்தி யில்லாதவனுவன். சுபாம்சம் என்பது நவாம்சத்தில் கடைசி நவாம்சமுமாகும். மேற்படி குருவே கன்னியில் மேஷ நவாம்சத்திலும், தனுசு ராசியில் கடக நவாம்சத்திலும், நீச்ச ராசியில் சிம்ம நவாம்சத்திலும், மீன ராசியில் துலா நவாம்சத்திலும் இருந்தால் வித்யா சௌக்கியமின்றித் துக்க முடையவனுவன். கஷ்ட ஜீவனம்.

---

* இந்தத்திரிக்கிரக உச்ச பலன் கலியுகத்தில் நடப்பது சாத்தியமில்லை என்று கர்க்க மகரிஷி சொல்லி யிருக்கிருர். மேலும் அந்த ஜாதகர்கள் நற்பலனை யடையாமல் கிரகச் சித்ரங்களினுல் தாபத்தையே யுடையவராவார்கள்.

குரு அஷ்டமாம்சத்தில் லக்கினத்திற் கிரண்டா மிடத்திலு சந்திரன் நீச்சநவாம்சத்திலு மிருந்தால் பிறந்த பதினறு வருஷ வரை ஒரு யோகமாக எண்ணப் படுகிறது. மேற்படி குருவே ஷ்டி அஷ்டமாம்சத்தை விட்டு விலகி லக்னத்திற் கிரண்டாமிடத் திருந்தால் வித்தை, விநயம், மதுரமான பேச்சு, தர்மத்தை ரக்ஷி தல் இவைகளுடன் சுகமடைவான். மேற்படி குருவே இரண்டா மிடத்தில் சுபருடைய அம்சத்தில் இருந்தால் வித்தை புத்தி யிவற்றை யடைந்து ராஜத்துவாராவாக பிரசித்தியாகி ஜீவிப்பான்.

பொதுவாகவே குரு 1, 4, 7, 10, 5, 9 ஆகிய ஸ்தானங்களில் ஜன்ம காலத்தில் இருந்தால் விசேஷ பாக்கிய முண்டாகும்.

எந்த ஜாதகனுக்கும் பிறக்கும்போது சந்திர லக்கினத்திற் குப் பத்தில் சற்கிரக மிருந்தால் அந்த ஜாதகர் சந்திர சூரியருள்ள வரை கீர்த்தியும், ஆயுள்வரை அழியாத சம்பத்து மடைவா னென்று சிலர்கள் சொல்லுகிறார்கள். வேறு சிலர் பாபக்கிரக மிருப்பினும் மேற்படி பத்தாமிடத்தில் இதே பலனைச் சொல்லு கின்றனர்.

ஒரு ராசியில் அல்லது லக்கினதிபதியுடன் சூரியன் புதனு டன் கூடினலும் அல்லது லக்கினதிபதி புதனுகி அவருடன் சூரி யன் கூடியிருந்து குரு தன் உச்சத்திலிருந்தாலும், ஷ்டி சூரியன் புதன் லக்கினதிபதி இவர்கள் உச்சத்தில் இருந்து குரு ஐந்தா மிடத்தி லிருந்தாலும் 2 ஆம் இடத்திலிருர்தாலும் ஜாதகன் பண் டித யோக மடைவான். மேற்படி யோகப் பலனுக அரசர்களின் சம்மதியினல் சாஸ்திரங்களைப் பார்த்து அறிந்து (பிராம்மணர்) வித்து வான்களின் சமாஜத்தில் வித்துவானுகித் தர்மசீலனுகவும் துதிக்கப் பட்டும், ஞானவானுகவும் ரகசியவானுகவும் ஆவான். ராஜ சபையில் ஜீவனம். 42 வயது முதல் யோகம் ஆரம்பமாகும்.

ஜாதகத்தில் பாபக்கிரகங்கள் நீச்சத்திலிருந்து சுபர்கள் 1, 4, 7, 10, 5, 9 இந்த ஸ்தானங்களி லிருந்தாலும், இவர்கள் 9, 10 ஆம் இடங்களி லிருந்தாலும், ஒன்பதா மிடத்திலேயே அல்லது பத்தா மிடத்திலேயே யிருந்தாலும், அந்த ஜாதகன் மகா பலம், கியாதி, பிரதாபம் மேன்மையான நிலமை, தீர்க்காயுள், சுகம் இவைகளுடன் மற்றைய அரசர்கள் வணங்கும் அரச னவன்.

சந்திரனிருக்கும் வனுவினுல் 4-வித யோகங்கள் சொல்லு ரார்கள். அவை; உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் ன நான்கு விதங்களாகும். ஷ சந்திரன் கேந்திரத்தில் உத்த ம்சத்தி லிருந்தால் சிரேஷ்டமான ஜீவனமும், மத்திமாம் சத்தி ருந்தால் ராஜ சேவையால் ஜீவனமும், ரஜோகுணமும் பாப ண்ணியங்களுடனும் கல்வி யறிவுடனும், அதமாம்சத்தி லிருந் தால் சதா ரோகமும், அதர்மப் பிரியமும் காமமும் அனாச்சாரமும், அதமாதமாம்சத்தி லிருந்தால் துக்க ஜீவனமும் துக்கமும் குத்ஸித சம்பந்தமும், உக்கிர கோபமும், கலஹப் பிரியமும், வியர்த்த ஜீவித மும், சதா பாபச் செய்கையும் துஷ்ட ஜனப் பிரியமும் நற்பலன் நிஷ்பலனும் பலனுகும்,

நீச்ச பங்க ராஜயோகத்தில் பிறந்தவர்கள் 33 அல்லது 35 வயது முதல் ராஜயோகமடைந்து விசேஷ பாக்கியாதி சுக மனு பவிப்பார்கள். இதைத் தெசையின் பேதங்களினு லறியவும். மேற்படி நீச்ச பங்க தெசை குரு தெசையாயின் 46 வயது முதல் மாதம் 10-ஆயிரம் சம்பாதனே யுண்டாகும்.

சுக்கிரன் ஜென்ம லக்கினத்திற்கு 2-லாவது 5-லாவது இருந்து அந்த ஸ்தானுதிபதி பலவானுக எங்கிருந்தாலும் ராஜா பிமானியாகி ஜீவிப்பார்கள்.

சந்திரன் விக்ஞானும்சத்தில் இருந்தால் விக்ஞான ஆராய்ச் சியால் ஜீவனமும், ஜடிலாம்சத்தில் இருந்தால் ஜடாதாரியாகி ஜீவனமும், பாரகாம்சத்தி லிருந்தால் மூட்டை சுமத்தலால் ஜீவன மும், பிரேஷ்யம்சத்தி லிருந்தால் பிறரை அடுத்தல்லது பிறரை எதிர்பார்த்து அவர்கள் தயவால் ஜீவனமும், சரஸ்வதி யம்சத்தி லிருந்தால் நல்ல கல்வி கற்றுக் கவிதையில் பிரசண்ட கவியாகி ஜீவனமும்.

சுக்கிரன் எட்டாமிடத்தி லிருந்தால் ஸ்திரீ தனத்தினுல் அல் லது ஸ்திரீகளே யண்டி (தனமும்) அதனுல் ஜீவனமும் நேரிடும்.

9-க் குடையவன் 6-மாதியுடன் கூடி 5 அல்லது 10 ஆம் இடத்திலிருந்தால் வெகு பாக்கியம் தேடி ஜீவனம்.

9-க் குடையவன் 10-ல் 3-மாதியுடன் கூடி யிருந்து சனியால் பார்க்கப்பட் டிருந்தால் சுதேசத்திலேயே பாக்கியந் தேடு வான்.

9, 10, 5 இந்த ஸ்தானங்களுக் குடையவர்கள் கூடி யிருந் தாலும் 9, 10, 5-மாதிகள் கூடி லக்கினத்தி லிருந்தாலும், இவர் கள் சந்திரனுல் பார்க்கப்பட் டிருந்தால் பசுக்களின் விருத்தியால் தன முண்டாகும்.

10-மாதியாகிய ராஜ்யாதிபதி ஏழிலிருந்து லக்கினுதிபதியுட னும் கூடியிருந்தால் தடாகவனம், நந்தவன மிவைகளை விருத்தி செய்து தனமடைவார்.

5, 9-மாதிகள் அல்லது 9, 10-மாதிகள் கூடினுல் சுயதேசத் திலேயே பூமி தேடுவான்.

10-மாதி ஒன்பதா மாதிபதியுடன் கூடி ஐந்தாமிடத்தில் இருந்து சந்திரன் இவர்களைப் பார்த்தால் சுய புத்தியால் (சர்வமு மறிந்து) தனம் தேடுவார்கள்.

10-மாதிபதி நீச்சனுடன் கூடி யிருந்தாலும் 10 மாதிபதி நீச்சனுகி யிருந்து ராகுவால் அவர் பார்க்கப்பட்டாலும் ஜாதகர் கள் புத்தியற்ற நீச்ச செய்கைகளால் தனம் தேடுவார்கள்.

10-மாதிபதி 5-ல் இருந்து 3, 9-மாதிகளுடன் கூடி யிருந்தால் தெற்கில் விக்ஞானத்தினுல் தனம் தேடுவான். வேறு சிலர் பாலி யத்திலேயே மேற்படி வழியால் தேடுவானென்று சொல்லுகின் றனர். மேலும் இவர்களைக் குரு பார்த்தால் யாகம் செய்வா னென்றும்,

5-மாதி 5-ல் 10-மாதியுடன் கூடியிருந்தாலும் சுக்கிரனுல் பார்க்கப்பட்டால் யானை கட்டி வாழ்வான், சமுத்திரத்தில் வசிப் பானென்றும் சிலர் சொல்லுகின்றனர். வடக்கில் தனம் சேர்ப் பான். இது கும்பம், மேஷம், ரிஷபமிவற்றிற்கு நேராது.

10, 11-மாதிகள் 5-ல் இருந்தால் கிழக்கில் விக்ஞானத்தி னுல் தனம் தேடுவான்.

11-மாதிபதி 5-மாதியுடன் கூடி 3 ஆம் இடத்தில் இருந்தால் விக்ஞானத்தினுல் தெற்கில் தனம் தேடுவான்.

11-மாதி 3-ல் பார்சுவ ஸ்தானுதிபதியுடன் கூடி யிருந்தால் மேற்கில் விக்ஞானத்தினுல் தனந் தேடுவான்.

2-மாதிபதி குரு இவர்கள் 1, 4, 7, 10, 5, 9 ஆகிய ஸ்தா னங்களில் கூடி யிருந்தாலும், 2, 3 ஆம் இடங்களில் கூடி யிருந்தா லும், சகல கலைகளும் கற்று ஜீவிப்பான். இங்கு சூரியன் இவர்

களுடன் கூடி யிருந்தால் வேதாந்தம், மருந்து, ரத்தின பரீக்ஷை மர சாமான்கள், சகல மணி வித்ருமாதிகள் இவற்ருலும் இதி ஹாஸ புராணுதிகளாலும், குஜன் கூடி யிருந்தால் தர்க்க சாஸ்தி ரத்தினுலும், கபடம், திருட்டுத் தொழில் இவற்ருலும், புதன் கூடி யிருந்தால், யக்கியம் செய்தல், ஜோதிஷ மறிந்து சொல்லல், மந்திர சாஸ்திரம், சிற்ப வித்தை இவைகளாலும், குரு கூடி யிருந்தால் சப்தாதி சாஸ்திரம், மந்திரோபதேசம், தர்ம சாஸ்திர மிவற்றின் விதி கர்த்தாவாகவும், சுக்கிரன் கூடி யிருந்தால் காவிய நாடக, அலங்காராதி வித்தைகளாலும், சனி கூடி யிருந்தால் மூடனுகி, வயது முதிர்ந்திருக்கப்பட்ட ஸ்திரீ, உயிர் சம்பந்தம், இன்ஷியூர் இவற்ருலும், அஸத்தியத்தினுலும், அபரகர்மங்கள் அதாவது, க்ஷயம், சுபமல்லாத அசுப காரியங்கள், அதாவது பிரேத சம்பந்த சகல காரியங்களும், பிரேத (சடங்குகளும்) புரோகிதமும், பிராம்மணுர்த்த முண்ணல் ஆம சிரார்த்தம் வாங் கல் இவற்றினுலும் சூதாட்டம் பிச்சை யெடுத்தல் பஞ்சு, கருப்பு தானியவகை பயிர் செய்தல், கெட்ட வஸ்து வியா பாரம், மண் பாத்திரம், இரும்பு, எள்ளு, கல்லுடைத்தல், சுமை யெடுத்தல் கடின வேலை செய்தல், தண்டித்தல் செய்தல், தண் டனை யடைதல், தாழ்ந்தோரை ஏமாற்றல், பாவத் தொழில் செய்தல், கட்டை உடைத்தல் பன்றி, மான் தோல், சவுரிமயிர், தார், கல் சம்பந்த வியாபாரம், சேவகத் தொழில், வெட்கங் கெட்ட தன்மை, வாயடித்தல், நீலம், சன்னியாசம், கிராமாதி காரம், நகராதிகாரம், அஞ்சனம், செக்காடுதல், எண்ணெய், புண்ணுக்கு, பொய் பேசல், கிரிமினல் சம்பந்தம், எரு, குப்பை கூளம் சேர்த்தல், கோள் சொல்லுதல், திருடல், மது வியாபாரம், சாத்தான், ஐயனுர், சாமி ஆடல், டம்பம் இவைகளின் மூலம் தனமும், மேற்படி சனியுடன் பாபர் கூடில் அகியாய வழி யினும், சுபர் கூடில் நியாய வழியிலும் சம்பாதித்து ஜீவன முண்டாகும்.

2-மாதியும் 11-மாதியும் சந்திரனும் கூடி மேற்படி ஸ்தானங் களில் இருந்தால் இலை, புஷ்பம், தளிர், சந்திரகாந்த நீலம், வஸ் திரம், சுகந்தம், அரிசி வியாபாரம், சங்கு, பாலாடை, தித்திப்பு சம்பந்தம், தயிர், நெய், பசு, சரீரப் பயிற்சி, வெங்கலம், வெள்ளி ரூபாய், முத்து, சுகபோஜனம், ரூபம், தாய், தாய் வர்க்கம், தேவி

பூஜை செய்தல், ரஸவஸ்து, சாப்பாட்டுக்கடை, சில்லரை வியாபாரம், நூல், வெண்பட்டு, குதிரை, பாரிச வாயு வயித்தியம் பயிர், சீதளம், வட்டிக்கடை, பழ வியாபாரம், ஜல பதார்த்தம், காய் கறிகள் இவைகளாலும் தாதுக்களை பஸ்மம் செய்தலாலும்,

செவ்வாயும் 2, 10, 11-மாதிகளும் மேற்கூறியபடி ஷேஷ்தானங்களில் இருந்தால், தானிருக்கும் அல்லது ஜனித்த கிராமத்திற்கு அதிபதியாதல், பூமி, க்ஷேத்திரம், பிறருடைமையை அபகரித்தல், சால்வைகள் ஆட்டா லுற்பத்தி, ரோகம், அயோக்கியத் தொழில், காசம், மந்திரம், சுப்ரமணியர், வீரியம், சாகஸம், வித்துவேஷம், அக்னி யந்திர மோட்டல், சமையல் செய்தல், தாயாதி வகை குரூர குணம், உற்சாகம், ஏமாற்றல். போலீஸ், கபடம், கிருஸ்ணுயில், தீப்பெட்டி, பவழம், கர்ப்பூரம், ஹிம்சித்தல், செங்கல் (ஓடு) (சுண்ணும்பு) சுடுதல், ராணுவம், தட்டான் வேலை, கலாய் பூசல், நெருப்புத் தொழில் பலவும், துவரை, சடுதி மரணம், பிளவை, கட்டிடவேலை, பதட்டம், செங்கல் வீடு, கூட்டிக் கொடுத்தல், சபல புத்தி, சகோதரன், ஷேடி வர்க்கம், அறுத்தல், சத்துரு, பாபச் செய்கை, பிடிவாதம், துணிவு இவற்ருலும் டிப்டி கலெக்டர், கஜானுதிகாரியாதல், பென்ஷன் சர்வீஸ், தபாலாபீஸ், ஆயுதந்தரித்தல் இவற்ருலும், தாதுர்வாதம் இவற்ருலும் புதனும் மேற்படியார்களும் கூடி அதாவது 2, 10, 11-மாதிகளும் குருவும் கூடி யிருந்தால் கலை நிபுணத்துவம், பாண்டித்தியம், வாக்கு சாதுரியம், உபாசனை, யாகம் செய்தல், விவகார ஸ்தலம், சிற்பம், பந்துக்கள், மாமன், யுவராஜன் போதனைசெய்தல் ஹாஸியம், துத்துநாகம், விஷ்ணு தேவதை, குழந்தைகள், முக்குணம், சிஷியனுதல், யதி, பாஷண்டி, கணக்கெழுதல், பத்திரிகை சம்பந்தம், வியாபாரம், வேர்கள், நாட்டியம், நன்னரி, ஜோதிடம், சித்திரமெழுதல், மத சம்பந்தம், என்ஜினீயர், ஸ்டாம்பு விற்றல், முத்திரைக் கடிதம், தூது செல்லல், வெந்தயம், வேசித் தொழில், இளமை, தாதன், பஞ்சாயத்துப் பேசல், நாடகம், நாட்டியம், பக்ஷி பிடித்தல், குல்மரோகம், கிராணி ரோகம், நல்வாக்கு, நல்ல யுக்தி, மருமகன் இத்தியாதிகளாலும்,

மேற்கூறியபடி குருவுடன் கூடி யிருந்தால் மூத்த சகோதரன், குருத்துவம், புத்திரன், புத்தி, ஞானம், மந்திரித்துவம்,

சுத்தம், புராண இதிகாசாதிகளாலும், பாங்கு அல்லது கஜானு இந்த இடங்களிலும் சரீர புஷ்டிதரக் கூடியவைகளாலும், யானை, ஸ்தூல சம்பந்தம், ரக்ஷித்தல், சாஸ்திர விதி விதித்தல், புரோகிதம், கிரந்த கர்த்தாவாதல், பாதிரி, ஆண்டி பரதேசி, பிரசங்கம் செய்தல், ஆலோசனை, அஷ்டமகா சித்துக்கள் செய்தல், தேன், கடலை, சீரகம், உபதேசம் செய்தல், சிஷ்யர்களால் ஜீவனம் இத்தியாதிகளாலும்,

சுக்கிரன் மேற்கூறியபடி யிருந்தால் ரூப ஸ்திரீ, ரூப ஸ்திரீ சம்போகம், மந்திரியாதல், வாசனை திரவியம், மனைவி வர்க்கம் கவிதை, சரஸம், பூஷண(ம்) வியாபாரம், 'குடி வஸ்துக்கள் ஆடை, பருத்தி, கல்கள், ஹோட்டல் வைத்தல், பாய் நெய்தல், பட்டப்பெயர், அழகு செய்தல், கப்பல் வியாபாரம், காமம், புளி, ஈயம், மொச்சை, குதிரை, மாடிவீடு, அரண்மனை, ஜலப்பிர யாண மிவற்றாலும் விலையுயர்ந்த வஸ்திரங்களாலும், பசுமாடு மேய்த்தல் இத்தியாதிகளாலும்,

சூரியனுகில் தந்தம், தோல், நகம், கிருஷ்ணாசனம், புலித் தோல் சூரிய நமஸ்காரம் பிதுர்வர்க்கம், பிதா, உலர்ந்த புல், பூஜை செய்தல், தரகு சொர்ணம், சிரசு சம்பந்த நோய், ராஜ சேவை, தேவஸ்தானம் ஹோமம், அரசாங்கம், வைத்தியம் செய்தல், தாமிரம், நெல், கோதுமை, பரத நாட்டியம், உத்தி யோகம், கண்ணோய் சம்பந்தம், சாமரம், கொம்பு, ஸி. ஐ. டி° இத்யாதிகளாலும் அந்தத்தெசை காலங்களில் அந்தந்தப் புக்தி நாதர்கள் அனுகூல காலங்களில் கர்மானுகுணமாகச் செய்து வரும் தொழில் மூலமும் அந்தக் கிரகத்திற்குரிய காரகர் காரக தொழிலிவற்றாலும் கிரகத்தின் அவஸ்தா வலுவுக் கேற்பப் பலனை யடைவார்கள்.

ஜன்ம லக்கினத்திற்கு 2-ஆம் இடத்துக் குடையவர் பரமோச்ச பாகத்தில் குருவுடன் கூடியிருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் 2-மாதிபதி பரமோச்ச பாகத்திலிருந்து சுபருடன் கூடிய குருவால் பார்க்கப்பட்டாலும் 2-மாதிபதி ஐராவதாம்சத்தில் சுபர் மத்தியில் கேந்திரங்களில் இருந்தாலும் ஆயிரம் பேரை ரக்ஷிப்பான்.

2-மாதி கோபுராம்சத்திலிருந்து 2-ஆம் இடத்திற்குச் சுபர் பார்வையுண்டாகி யிருந்து பூர்ண சந்திரன் 9-மிடத்தில் இருந்தால் பிரசண்ட தனவானுவா னென்றும் வெகு பிரதாபத்துடன் ஆயிரலக்ஷம் தனம் தேடுவானென்றும் சொல்லுகிறுர்கள்.

2-மாதி குருவின் ராசியிலிருந்து உத்தமாம்சத்தை யடைந்திருந்து சுபர் மத்தியிலு மிருந்தால் லக்ஷத்திற்குமேல் தனந் தேடுவான்.

ஜென்ம லக்கினத்திற்குப் 10-ல் சூரியனிருந்தால் 18 வயது முதல் தினம் தினம் தன விருத்தியுண்டு. ஆயுள்வரை கவலையு முண்டு.

மேற்படி 10-ல் புதன் இருந்தால் வியாபாரத்தினுலும், குரு விருந்தால் சுய அறிவால் விசேஷ தனமும், 10-ல் ராகு இருந்தால் பல தொழில்கள், ஜோதிஷம், வேதாந்தம் இவற்ருல் தனமும், கேது விருந்தாலும் மேற்படி வழியேயாகி தனமும் வரும்.

குரு செவ்வாய் சூரியனிவர்கள் மேஷத்தி லிருந்தால் வெகு செல்வமாய் வாழ்வான்.—மேஷ லக்கினம்.

புதன் சனி ராகு இவர்களுடன் கூடிய மேஷ லக்கினத்தில் ஜனித்தாலும், சூரியனும் சனியும் கூடி கடகத்திலிருந்து கடகமே லக்கினமானுலும், உற்ருர் உறவினர் ஒருவருமின்றி உலகெல்லாம் இரந்துண்பான்.

சனியுஞ் சந்திரனுங் கூடிச் சிம்மத்திலிருக்க அந்தச் சிம்மமே ஜன்ம லக்கினமானுலும், சனியுஞ் சந்திரனுங் கூடிச் சிம்மத்தி லிருக்கக் கன்னியாராசியில் செவ்வாயும் சூரியனுமிருந்து கன்னியே லக்கினமாக ஜனித்தாலும் பிச்சை யெடுத்தே ஜீவனம்.

கடக லக்கினத்தில் குரு புதன் ராகு மூவரும் கூடி யிருந்து பிறந்து, கன்னியில் (3-ல்) சுக்கிரனும் இருந்தால் திருடித் தின்பதால் ஜீவனம்.

இந்தக் கிரகத்துடன் இதற்கு 4-ல் சூரியன் சந்திரன் செவ்வாய் ஆகிய மூவரும் கூடி யிருந்து சனி தனுசில் இருந்தாலும் இவர்களுக் காறிலிருந்தாலும் கூட்டுக் கொள்ளை யடிப்பதன் மூலம் ஜீவனம்.

லக்கினத்தில் சனியும் சந்திரனும் கூடில் விலங்கு பூண்டு அலைந்து திரிவதுடன் 60 வயதுவரை ஜீவித்திருப்பான்.

சனியுஞ் சூரியனும் கூடிய கடகம் லக்கினமாகி ஜனித்தாலும், குருவும் சூரியனும் கூடிய துலாம் லக்கினமாகி ஜனித்தாலும், சுக்கிரன் புதன் ராகு மூவரும் கூடி லக்கினத்தி லல்லது எட்டி லிருந்தாலும் ஆயுள் இருக்கும் வரை பிச்சை யெடுத்தே ஜீவனம் நடக்கும்.

10-ல் பல பாபர் கூடினுல் செய் தொழிலைத் தடை செய்வ தால் ஜீவனம். பாபர்கள் பார்த்தாலு மிப்படியே. யார் எந்த வேலை செய்தாலும் அவற்றிற் கெல்லாம் தடை செய்வதே பிர தான தொழிலாகும்.

10-ல் புத சந்திரசிருந்து இவருடன் சுக்கிரனும் ராகுவும் கூடி யிருந்தாலும், சண்டாள யோகத்தின் பலனைகச் சுய காரிய வாதி யாவார்.

10-ல் செவ்வாய் புதன் குரு சுக்கிரன் சனி இவர்கள் கூடி யிருந்தால் அரசன் அல்லது மந்திரி அல்லது பெரிய குரு இப் படிப்பட்ட ஒரு வழியாகி ஜீவனம்.

10-மாதி நீச்சத்தி லிருந்தால் செய்யுங் காரியங்க ளெல்லாம் தடைப்படும்.

புதன் 10-மாதியாகி 10-ல் உச்சத்தி லிருந்தாலும் 9-ல் 10-மாதியுடன் கூடி யிருந்தாலும் 10-மாதி உச்சத்திலிருந்து புதனுடன் கூடி சுபரால் பார்க்கப்பட்டாலும் யாக சித்திசெய்து வைத்து ஜீவனம். இவர்கள் ராகு கேதுக்களால் சேரப்படாம லிருத்தல் வேண்டும்.

10-மாதியுடன் 4-கிரகங்கள் கூடி யிருந்தாலும் 4-கிரகங்கள் 10-லிருந்தாலும் சன்னியாச யோகமுண்டாகி ஜீவனம்.

11-மாதிபதி சந்திரன், குரு, புத, சுக்கிரரால் பார்க்கப் பட் டாலும், கூடி யிருந்தாலும் ஆயுள் வரையில் ஐசுவரியத்தை யுடை யவனுகவே வாழ்வார். மேற்படி சுக்கிரன் நீச்ச அஸதங்கதாதி களை அடைந்திருந்தாலும் சத்துரு நீச்ச ஸ்தானங்களில் அஸ்தம னாதிகளை மேற்படி கிரகங்களடைந்திருந்தாலும் மேற்படி பலன் கள் ஒன்றுமின்றி நித்திய தரித்திரமுண்டாகும்.

11-மாதிபதி சூரியனுகிச் சந்திரனுடன் கூடினுலும் சந்திரனுல் சூரியன் பார்க்கப்பட்டாலும் ராஜனுக்கு உபதேசம் செய்வதால் ஜீவன முண்டாகும்.

11-மாதி செவ்வாயானாலும் அரசனாலேயே ஜீவனம். புதனாகில் கணித வித்தையால் தனம் வரும். மற்றவைகள் முன்சொல்லிய காரகங்களின் படியே,

11-மாதிபதி தன் உச்ச மித்திர க்ஷேத்திரங்களில் இருந்தால் அந்த வழியினாலும் லக்கினாதிபதியாலும் தனம் வரும்.

11-மாதி யுக்ம ராசியிலிருந்து சத்துரு ஸ்தானத்தைப் பார்த்தாலும் 6-மாதி 8-ல் இருந்தாலும் சத்துருக்களின் பணத்தை அபகரித்து ஜீவனம் நடக்கும்.

11-மாதிபதி சத்துரு வர்க்கத்தில் எங்கிருந்தாலும் சத்துருவின் பணத்தை அபகரித்தே ஜீவனம்.

1-மாதி 11-ல் இருந்து அந்த ஸ்தானம் தன் உச்ச க்ஷேத்திரமாகி பாபருடைய பார்வை அவருக் கில்லாதிருந்தால் ஆயுள்வரை மகா சுகஜீவனம். இது ரிஷப கடக லக்கினங்களுக்கு மட்டும் தான் பொருந்தும். 11-ல் அல்லது 12-ல் சுக்கிர னிருந்தாலும் மேற்படி ஜீவனமே.

11-மாதி 9-ல் இருந்தாலும் சுபருடன் கூடி யிருந்தாவது சுபரால் பார்க்கப்பட்டாவ திருந்தால் தன் தகப்பனை விட மிஞ்சிய தனம் சேரும்.

5-மாதி 11-ல் இருந்தாலும் மேற்படி ஸ்தானம் தன் மித்திர க்ஷேத்திரமாக ஆகின் புத்திர களத்திராதிகளால் பாக்கிய முண்டாகும்.

11-ம் பாவத்தில் இருக்கும் ஒரு பாவாதிபதி எந்தப்பாவாதிபதியானாலும் அந்த (வழியினால்) பலன் நிச்சயமா யுண்டாகும்.

3-மாதி 11-ல் பலத்துட னிருந்தாலும் பார்த்தாலும் சகோதரனால் பலனுண்டாகும். இதேபோல மற்றவையும்.

லக்கினத்திற்கு 4-ல் பாபரிருந்து குரு 4, 7, 1, 10 ஆகிய ஸ்தானங்களி லல்லது 5, 9-ஆம் இடங்களில் ஒன்றில் எவ்விடத்திலிருந்தாலும் உபய வம்சத்திற்கும் ஆனந்தத்தையும் கீர்த்தியையும் உண்டாக்கி வெகு காலந் தீர்க்காயுளுட னிருப்பார்.

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் மூவரும் 10-ல் மேஷத்திலிருந்தால் 30 வயது முதல் ராஜாங்க உத்தியோக பிரசித்தி ஏற்படும்.

சனியும் குருவும் லக்கினத்திலிருந்து 9, 10, 11-க் குடையவர்கள் 5-லிருந்து சந்திரன் கடகத்திலிருந்தால் சிம்ம லக்கின ஜாத

கர் 31 வயதிலாவது அதற்கு முன்பே முப்பது முதலாவது மடாதிபதியாகி ஜீவனம் செய்வர்.

சூரியன் புதன் செவ்வா யிவர்கள் மூவரும் ரிஷபத்திலிருந்து தனுர் லக்கினமாகி ஜனித்தால் செவ்வாய் திசையில் ராஜயோகம் நடக்கும்.

கடக லக்கின ஜாதகனுக்கு செவ்வாய் லக்கினத்திலும் சனி மிதுனத்திலும் சந்திரன் கன்னியிலு மிருந்தால் 27 வயது முதல் யோக ஜீவனம்.

செவ்வாய் 4-லிருந்தால் 34 வயது முதல் ஜீவனம் ஏற்படும்.

10-ல் ராகு இருந்தால் 20 வயது முதல் தனந் தேடுவார்.

3-ல் செவ்வாய் 5-ல் சந்திர னிருந்தால் பாலிய தரித்திரம். 30-வயது முதல் ஜீவனம்.

ராகு 4-ல் இருந்தால் மீன லக்கின ஜாதகனுக்கு 35 வயது முதல் யோகம். ஷை ராகுவே புனர்பூசம் 2-வது பாதத்தில் இருந்தால் ராகு தெசை வெகு யோக தெசையாகும்.

8, 10-மாதிகள் கூடினால் அற்பத்தனமாக ஜீவனம் செய்வர்.

10-மாதியை சனி கூடினாலும் பார்த்தாலும்,

10-மாதி சனி வீட்டிலிருந்தாலும் பிறரிடம் சேவை செய்து ஜீவனம்.

சுக்கிர சந்திரர் 11-ல் இருந்து ரிஷப லக்கினம் ஜனனமானால் 25 முதல் ஜீவனம் ஏற்படும்.

கடக லக்கினம் லக்கினமாகி 10-ல் சந்திர சூரியருடன் சுக்கிரனும் கூடி யிருந்தால் 36 வயது முதல் யோகம். ஷை சூரிய சுக்கிரர் 11-ல் இருந்தால் பாட்டு மூலம் ஜீவனம்.

சுக்கிரன் புதன் சூரியன் சனி இவர்கள் துலாத்தி லிருந்தால் பாட்டு நாட்டிய மிவற்றால் தனுசு லக்கின ஜாதகனுக்கு ஜீவனம்.

சூரியன் 7-ல் (இருந்தால் 20 வயது முதல் ஜீவனம். மேற்படி சூரியன்) சிம்மத்தி லிருந்தால் இது ரொம்ப விசேஷமாகும்.

சனி சுக்கிரர் 11-ல் இருந்தால் கடக லக்கின ஜாதகனுக்கு மத்திய வயதில் தனம் சேரும். இதுவே மகரத்திற்கும் பொருந்தும்.

தனுசில் சூரிய புத சுக்கிரர் கூடியிருக்கும் சிம்ம லக்கின ஜாதகனுக்கு 27 வயது முதல் ஜீவன மேற்படும்.

1-லாவது, 9-லாவது, 10-லாவது சுக்கிர னிருந்தாலும், 1-மாதி யாவது 9-மாதியாவது சுக்கிரனுவது 5-ல் இருந்தாலும் யோகவா னுவான்.

லக்கினத்தில் நீச்ச மடைந்திருக்கும் 10-மாதியுடன் சூரியன் கூடின் வெளி தேசத்தில் தனம் சேரும். இதுவே மேஷத்தில் நேரிட்டால் பலன் கொஞ்சம் குறையும்.

10-ல் நீச்சக் கிரகத்துடன் ரவி கூடில் (சனியுடன் கூடினுல்) தண்டிக்கும் அதிகாரமும்.

செவ்வாயுடன் கூடினுல் என்ஜினீயரிங்கிலும் அல்லதுபோலீஸ் அல்லது போஸ்டல் அல்லது ராணுவத்தில் அதிகாரமும், குருவுடன் கூடினுல் பாங்கு கஜானு முதலிய ஸ்தானங்களில் அதிகாரமும், இவர்கள் சொட்சேத்திர கிரகங்களால் சனி, குஜன் இவர்கள் மூலம் தலைமை அதிகாரமு மடைவார். சிலர் மதம் சனி வீட்டினுல் அடிமைத்தன மென்பதிலும் தலைமை யேற்படும். இவர்களுடன் அஷ்டமாதிபதி கூடில் மத்தியில் பிரபுவிடம் உத்தியோகத்தில் இதி லும், எதிலும் பங்க மேற்படும்.

கடக லக்கின ஜாதகனுக்கு சந்திரன் 3-ல் இருந்தால் வியா பார ஜீவனம்.

1-ல் நீச்சக் கிரகத்துடன் 2-மாதி கூடின் வெளி தேசவஸ்து வால் பாக்கியம். வெளி தேசத்திலும் பாக்கிய மேற்படும்.—கடக லக்கினம்.

2-ல் புதன் சூரியன் செவ்வாய் கூடில், கடக லக்கினமானுல் சதா திரவிய லாபமே யுண்டாகும். இவர்கள் 4-லிருந்தாலும் வியாபார ஜீவனம்.

10-ல் ரவி, சுக்கிரன், குஜ னிவர்கள் சிம்மத்தி லிருந்தாலும் 4-ல் உள்ள சனி இவர்களைப் பார்த்தாலும் வியாபார ஜீவனமே.

10-ல் சனி சூரியன் கேது இவர்களிருந்தாலும்,

10-ல் கேது இருந்தாலும்,

5-மாதி 1-ல் இருந்து 10-மாதியால் பார்க்கப்பட்டாலும்,

2-மாதி 5-ல் இருந்து 10 மாதியால் பார்க்கப்பட்டாலும்,

1-மாதி 6-லாவது 12-லாவ திருந்தாலும்,

8-ல் சனி யிருந்தாலும் ஜோதிடம், மந்திர மிவற்றுல் ஜீவனம். சனி 8-ல் இருந்து இவர்களைப் பார்த்தால் அற்ப ஜீவனம். தனத் தடை யுண்டாகும்.

5-மாதி 5-ல் 4-மாதியுடன் கூடி யிருந்தால் பூமியால் ஜீவனம்.

லக்கினத்தில் 5-கிரக மிருந்தால் ஒன்றரை லக்ஷம் ஆஸ்தி யுண்டாகும்.

10-ல் 5-க்கிரகம் கூடினுலும், 9-மாதி ராகுவுடன் கூடினு(ல்)லும் புரோகித ஜீவனம்.

2-ஆம் இடத்தில் 4-க்கிரகத்திற்கு இருப்பு ஏற்பட்டால் ஒன்றரை லக்ஷம் ஆஸ்தி ஏற்படும்.

1-ல் 4-கிரகம் கூடில் ராஜாங்க பிரசித்தி யுண்டாகும்.

11-மிடத்தில் 4 கிரக மிருந்தால் 28 வயது முதல் யோகம்; சிலர் மதம் 35 வயது முதலென்பது.

7-ல் 4 கிரகமும் 8-ல் சுக்கிரனும் 9-ல் ரவியு மிருப்பின் 20, 25 30 இந்த வயதுகளில் படிப்படியாய்ப் பிரசித்தி ஏற்படும்.

10-ல் கேது இருந்தால் கடின தண்டனை ஆக்கினை செய்வதால் ஜீவனம்,

9, 10, 11-மாதிகள் 2-ல் இருந்தால் பிதுரு சொத்தால் ஜீவனம்

10-மாதி புதனுடன் கூடினுல் வியாபார ஜீவனம்.

சனி 10-ல் இருந்து உச்சசந்திரனுல் காணப்படில் பயிர் பசு விருத்தியால் ஜீவனம்.

உத்திர நக்ஷத்திரத்தில் பிறந்து கும்பத்தில் சூரியன் ஷஷ்டியம்ச குபேராம்சத்தி லிருந்தால் 3 லக்ஷத்திற் கதிகாரியாவன்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திர னிருந்தாலும் இதேயோகம் உண்டாகும். இது 35 வயதுமுத லேற்படும்.

பஞ்சமாதி உச்சத்திலும் சுக்ஷேத்திரத்தி லிருந்து சனியுடனிருந்தாலும் 21 வயது முதல் 16 வருஷம் துடர்ந்து யோகமேற்படும்.

ஸர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினத்தில் உள்ள பரல்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்ட வயது முதல் சுகமுண்டாகும். தன சம்பாதனை ஏற்படும். சில கிரந்தம் 9-ஆம் இடப் பரல்களின் சங்கியையால் சொல்லுகின்றது.

1-ல் சந்திரன் குருவுடன் கூடினுல் மீன லக்கின ஜாதகனுக்கு 18-வயது முதல் யோகம் தரும்.

மகர லக்கின ஜாதகனுக்கு ராகு ஹஸ்தம் 2-லிருந்தால் 20 வயது முதல் யோகம்; 24 வயது முதல் பெரும் யோக மேற்படும். 8 வருஷம் வரை வலுக்கும்.

9. 10-மாதிபதிகள் நின்ற ராசி நாதனுவது ஷை ஸ்தானதிபதி களின் ஆரூடாதிபதிகளாவது லக்கினதிபதியுடன் கூடி யிருந்தால் நல்ல யோக முண்டாகும்.

மேஷத்தில் சனி யிருந்தால் 30 வயது முதல் ஜீவனம். பாலிய வயதில் தரித்திரம். ஷை சனி பரணி 1-வது பாதத்தில் இருந்தால் மூர்ச்சை வாயு பீடையுண்டாகும். இதை யோசித்து இங்கு காரகர், பாவ மிவைகளினு வறியவும்.

மேஷத்தில் இருக்கும் சனி அசுவனி 1-வது பாதத்திலாவது பரணி 4-வது பாதத்திலாவ திருந்தால் மீன லக்கின ஜாதகன் 20-வயதின் பிறகே தனம் சம்பாதிப்பான். ஷை சனியுடன் புதன் கூடி யிருந்தால் தார மூலம் பாக்கியமுண்டாகிச் சுக ஜீவன முண் டாகும். தார மூலம் என்பது தாரத்தின் அதிர்ஷ்டவசம் என்ப தாகும்.

மீன லக்கின ஜாதகனுக்கு சந்திரன் கடகத்திலும் குரு விருச்சிகத்திலு மிருந்தால் 5-வது தெசையின்போது 2-அல்லது 3-வருஷம் ராஜாங்கத்தில் பிரபல உத்தியோக முண்டாகும்.

ஷை லக்கின ஜாதகனுக்கே கன்னியில் சந்திரனும் துலாத்தில் பாக்யாதிபதியான செவ்வாயும் தனுசில் குருவு மிருந்தால் 27 வயது முதல் யோக முண்டாகும்,

சந்திரனுக்கு 7, 8, 9, 10 ஆகிய ஸ்தானங்களில் சனி தவிர எல்லா கிரகங்களு மிருக்கும்போது ஏற்படும் அதியோகத்தில் சனி மட்டும்,

சந்திரனுக்கு 5-ல் நின்றால் 30-வயது முதல் யோக மேற்படும் சில சமயம் யோகம் பங்கமும் ஆகும்.

கடக லக்கின ஜாதகனுக்கு 11-ல் செவ்வா யிருந்தால் 28 வயது முதல் யோக மேற்படும். வேறு சில கிரந்தங்களில் 35 வயது முதல் யோக மென்றுளது.

விருச்சிக லக்கின ஜாதகனுக்கு சந்திரகுஜர் கூடி மேஷத்தில் இருந்தால் சொர்ண பரீக்ஷையில் தனஞ் சேரும். இத்துடன் சூர்யபுதர் 4-ல் இருந்தால் மேற்படி வியாபாரமும் நேரிடும்.. உத்தி யோக ஜீவனமுமுண்டு,

10-ல் சுக்கிரன் 11-ல் செவ்வாய் 12-ல் சனி இப்படி யிருந்தால் கடக லக்கின ஜாதகன் வெகு வியாபாரம் செய்து ஜீவிப்பான்.

துலா லக்கின ஜாதகனுக்கு 5-ஆம் இடத்தில் சனி சூரியர் கூடி யிருந்தால் 36 அல்லது 37 வயதில் 100 அல்லது 150-சம்பாதனை யேற்படும்.

10 மாதி உச்சனுகி உச்சகுருவால் பார்க்கப்பட்டால் உத்தியோக ஜீவனம். சிம்ம, கும்ப, கடக, மகர லக்கினங்களுக்கு மட்டும் நேரும்.

10 மாதியும் கேதுவும் கூடி 2-ல் இருந்தால் சித்த புருஷ சேர்க்கையால் ஜீவனம்.

10 மாதி 8-ல் இருந்து ராகுவுடனும் கூடி யிருந்தால் நீச்ச வழியில் ஜீவனம்.

10 மாதி 12-லும் 9-ல் சந்திரனும் இருந்து 9 மாதியால் பார்க்கப்பட்டால் 28-வயதுக்குமேல் 29-லாவது 30-லாவது ராஜாங்கத்தில் உத்தியோக மேற்று ஜீவனம் நடக்கும்.

2, 9-க் குடையவர் கூடிப்பஞ்சமத்தில் இருந்தால் (மறுஜன்மத்தில் யோக மேற்படும்.) இச்சென்மத்தில் மத்திமயோகமாகும். சிலக் கிரந்தத்தில் லக்கினத்தில 5-க்குடையவ ரிருந்தாலும் இதே பலன்தான் சொல்லப்பட்டிருக்கின்றது.

4, 9, 10-க்குடையவர் கூடி பஞ்சமத்தில் இருந்தால் தேவாலய விசாரணையினுல் ஜீவனம்.

லக்கினுதிபதி உச்சமடைந்து லக்கினத்திற்கு மூன்ருவது அம்ச மடைந்தால் 35-வயது முதல் தன சம்பாதனை யேற்படும்.

மேற்படி கிரக வரிசை நிர்ணயம் பிரதி லக்கினத்திற்கும், மேஷலக்ன ஜாதகனுக்கு திருஓணம் 3-ல் குஜனும், ரிஷப லக்ன ஜாதகனுக்கு பூரட்டாதி 4-ல் சுக்ரனும், மிதுன லக்ன ஜாதகனுக்கு சித்திரை 1-ல் புதனும், கடகலக்ன ஜாதகனுக்கு மிருக சீரிஷம் 2-ல் சந்திரனும், சிம்மலக்ன ஜாதகனுக்கு ஸூரியன் பரணி 3-ம் பாதத்திலும், துலாலக்ன ஜாதகனுக்கு ரேவதி 1-ல் சுக்ரனும், விருச்சிக லக்ன ஜாதகனுக்கு உத்திரம் 2-ல் குஜனும், தனுர் லக்ன ஜாதக

னுக்கு ஆயில்யம் 3-ல் குருவும், மகர லக்ன ஜாதகனுக்கு சனி சுவாதி 4-லும் கும்பலக்ன ஜாதகனுக்கு சனி விசாகம் 1-லும் இருந்தால் யோக ஜாதகராவார். கன்னி, மீனம் இவைகளுக்கு உச்சத்தில் திருதீயாம்சமே நேராதென்பது.

சந்திரனுக்கு 4-ல் குரு 7-ல் சனி யிருந்தாலும் 9, 10, 12-க் குடையவர்கள் கூடி 10-ல் இருந்தாலும் 32-வயது முதல் 30-வருஷம் துடர்ந்து யோகமே நடக்கும்.

4, 11-க் குடையவர் கூடி யிருந்து 2-மாதியரல் பார்க்கப் பட்டால் 30-வயது முதல் 20-வருஷம் துடர்ந்து ராஜயோக முண் டாகும். இது கடகம் சிம்மம் ரிஷபம் இவைகளுக்கு நேராது.

லக்கினம் துலாமாகிப் பிறந்தால் செவ்வாய் 9-லும் சுக்கிரன் 11-லும் புதன் 12-லு மிருந்தால் சனி சந்திரர் கூடினுல் 16-வயது முதல் துடர்ந்து 40-வருஷம் அதாவது 56-வயது வரை யோகம் நடக்கும்.

சூரியன் சனி புதன் மூவரும் கூடி மீனத்திலிருந்தால் கும்ப லக்கினஜாதகன் 21-வயது முதல் யோகமடைவான்.

1, மாதிக்கு 2-ல் குரு வல்லது சுபரிருந்து 3-ல் பாபராவது ராகுவாவது இருந்தால் ராஜாங்க ஜீவனம். ராஜமுத்திரையும் தரிப் பார்.

5-ல் சுக்கிரனிருந்தால் 35- அல்லது 37-முதல் யோக ஜீவனம்.

லக்கினுதிபதி 5-ல் ராகுவுடன் கூடினுல் 37-வயதில் யத்தன மின்றி ராஜாங்க அதிகார மேற்படும்.

2 மாதிபதி லக்கினத்தில் 10-மாதியுடன் கூடினுல் 25-வயது முதல் வெளிதேசத்தில் தன சம்பாதனே யுண்டாகும்.

11-க் குடையவன் 7-ல் 7-மாதியுடன் கூடி யிருந்தால் தார வம்சமூலம் சுகம்.

லக்கினத்தில் குரு சந்திரரிருந்து 5-ல் செவ்வா யிருந்தால் 25-வயது முதல் ராஜாங்க மூலம் தேவக்ஷேத்திர விசாரணே செய்து ஜீவனம் ; ராஜாதிகாரி யாவர். மந்திரித்துவ மேற்படும்.

9, 10, 5, 6-க் குடையவர்கள் கூடி 6-ல் ராகுவுடனும் கூடில் இவர்களில் எவர் தெசைவரினும் ராஜயோகமே நேரிடும். இது மேஷ லக்கினம்.

துலா லக்கினத்தில் ஜனித்தவர்களுக்கு 4-மாதி 9-லும் 9-மாதி 4-லு மிருந்தால் பிறந்த 30-வருஷ முதல் 20-வருஷம் துடர்ந்து யோக மேற்படும்.

9, மாதியும் 11-மாதியும் கூடின் எதிலும் தனலாப முண்டாகி ஜீவனம்.

2 மாதி 6-ல் இருந்தாலும் 9-மாதி 6-ல் இருந்தாலும் சத்துரு வல்லது கடனுல் பொருளை யிழப்பார்கள். இவர்கள் தெசை வருங் காலத்தில் இது நேரிடும்-

9 மாதிபதி 9-ல் 11, 2 இந்த ஸ்தானுதிபதிகளுடன் கூடி யிருந் தால் குருவின் திரவியத்தை யடைந்து ஜீவிப்பான்.

1 மாதி 10-ல் இருந்தால் பிரபு வசியத்தினுல் பிரபு மூலம் ஜீவனம்.

2 மாதி 10-ல் இருந்தால் பண்டிதனுகி ஜீவனம்.

3 மாதி 10-ல் இருந்தால் தாரத்தின் வமிச மூலம் பாக்கிய ஜீவனம்.

4 மாதி 10-ல் இருந்தால் ரசாயனமூலம் ஜீவனம்.

5 மாதி 10-ல் இருந்தால் கிரந்தகர்த்தாவாகி ஜீவனம்.

6 மாதி 10-ல் இருந்தால் சுயகாரியமே கண்ணுகி ஜீவனம்.

7 மாதி 10-ல் இருந்தால் பல்ரோக வயித்திய ஜீவனம்.

8 மாதி 10-ல் இருந்தால் வாயடித்தலால் ஜீவனம்.

9 மாதி 10-ல் இருந்தால் பிரபல உத்யோக ஜீவனம்.

10 மாதி 10-ல் இருந்தால் உபதேசம் செய்வதால் ஜீவனம்.

11 மாதி 10-ல் இருந்தால் சதுரனுகி எவ்வழியாலும் ஜீவிப் பான்.

12 மாதி 10-ல் இருந்தால் முத்துமணிப் பிரவளாதிகளால் ஜீவனம்.

9-லாவது 5-லாவது 8-லாவது ராகு இருந்து.

9 மாதியும் 8 லிருந்தாலும்,

9-ஆம் இடத்தில் சனி சந்திரரிருந்து லக்கினாதிபதி நீச்ச மடைந்திருந்தாலும் தரித்திர ஜீவனம்.

2, 11 மாதிகள் 6 லிருந்தாலும் 2, 11 மிடங்களில் பாபரிருந்தாலும் தரித்திர ஜீவனம்.

2, 11 மாதிகள் 2-லாவது 11 லாவ திருந்தாலும் இவர்களுடன் பாபர் கூடி யிருந்தாலும்,

2 மாதி 2-லும் 11 மாதி 11-லும் இருந்து பாபருடன் கூடினாலும் இவர்களே 2 மாதி 11-லும் 11 மாதி 2-லு மிருந்து பாபருடன் கூடினாலும் தரித்திர ஜீவனம்.

லக்கினம் முதலான நான்கு கேந்திரங்களிலும் சுபரிருந்தால் 2 லக்ஷத்திற் கதிகம் சம்பாதிப்பான்.

ரிஷப சந்திரனும் தனுசு குருவுமுள்ள சகட யோகமானால் 38 வயது முதல் துடர்ந்து 24 வருஷம் யோகமாக இருக்கும்.

சிம்ம ராசியில் சந்திரனும் மகரராசியில் குருவும் இருந்தால் 5-வது தெசை முதலாக விசேஷ யோகம் உண்டாகும். 5-வது தெசை குருதெசையானால் பிரபலம்.

தனுசு குரு மகரச்சந்திரனிந்த சகடயோகமானால் 5-வது தெசையாக வரும் குரு தெசையில் லக்கினாதி தெசையாக குரு தெசை ஏற்படின் 25 வயது முதல் ராஜயோகம்.

கடக குரு கும்ப சந்திரனிந்த சகடயோகமானால் 32 வயது முதல் யோக மாரம்பித்து 36 முதல் நீச்ச ராஜ்யத்தில் 16 வருஷம் வரை துடர்ந்து யோகந் தரும்.

1 மாதி 1-ல் இருந்தால் சுயார்ஜித ஜீவனம்.

1 மாதி 2-ல் இருந்தால் பிரசங்க மூலம் சுயார்ஜிதம் செய்து ஜீவனம் நடக்கும்.

1 மாதி 3-ல் இருந்தால் தன் வாக்கு வன்மையால் ஜீவனம். மாமனாராலும் சகோதரனாலும் ஜீவனம்.

1 மாதி 4-ல் இருந்தால் சகோதரனாலும் வேலையாள் மூலமும் ஜீவனம். சத்துரு சொத்தாலும் ஜீவனம்.

1 மாதி 5-ல் இருந்தாலும் 2 மாதி 5-ல் இருந்தாலும் வித்தை, புத்தி, பூமி, வாகனம், பந்து, தாய்வழி இவற்றினாலும் தனம் வந்து ஜீவனம்.

1 மாதி 6-ல் இருந்தாலும் 2 மாதி 6-ல் இருந்தாலும் புத்தி ஞானம், தேவஸ்தானம், ஜோதிஷம், புத்திரன் இவர்களாலும் மூத்தவன் மனைவியாலும் ஜீவனம்.

1 மாதி 7-ல் இருந்தால் சத்துருவாலும், அம்மானாலும் ஸ்திரீ மூலத்தாலும் பிரபுவாலும் ஜீவனம்.

1 மாதி 8-ல் இருந்தால் வாயடித்தும், தாரத்தாலும் வியாபாரத்தாலும் குடும்பஸ்திரீயாலும் தனம் வரும்.

1 மாதி 9-ல் இருந்தால் ஸ்திரீயை(களை)ப் போகிப்பதாலும் 2-ந் தாரத்தினாலும் பிரபுமூலமும் தனம் வந்து ஜீவனம்.

1 மாதி 10-ல் இருந்தால் உத்தியோகம், வியாபாரம், குரு, நியாயஸ்தலம், (நியாயாதிபதியாதல்) பிரபு இளைய சகோதரன் மனைவி, உபதேசம் செய்தல், அம்மான் மனைவி, பிதுரார்ஜிதம், இவ்வழியால் ஜீவனம்.

1 மாதி 11-ல் இருந்தால் உத்தியோகம், வியாபாரம், ஜோதிஷம், நியாயவாதம் புரிதல், சத்துருவை ஜயித்தல், சகோதரியின் கணவன் பாக்கியம், பிதுரு சகோதரமூலம் இவ்வழியால் ஜீவனம்.

1 மாதி 12-ல் இருந்தால் ஜோதிஷம், சிற்றப்பன் தனம் ஸ்திரீ தனம், விதேச யாத்திரை, இவ்வழியால் ஜீவனம்.

2 மாதி 8-ல் இருந்தால் குடும்ப திரவியம் நாசமாகும் வழியில் ஜீவனம்.

2-ல் சுபர் பாபர் இருவர்களு மிருந்தால் வரவும் செலவும் சமமாய்விடும்.

12 மாதி 2-ல் இருந்தாலும் மேற்படி பலனே யுண்டாகும்.

2 மாதியும் 11 மாதியும் 2-ல் அல்லது 11-ல் இருந்தால் சதா லாபமே யுண்டாம். இவர்கள் 5-ல் இருந்தால் மனைவியால் தனஞ் சேரும்.

8-ல் அல்லது 2-ல் ராகு இருந்தால் ஈனவழியில் மானக் கேடான வழியில் ஜீவனம்.

2-ல் செவ்வா யிருந்தால் பயிர்த் தொழில், பால், நெய், தயிர் உண்ணும் வஸ்து (பயிரிடல்) இவற்றால் தனம் சேரும்.

தேய்பிறைச் சந்திரன் 2-ல் இருந்தால துரோக புத்தியால் ஜீவனம்.

மேற்படி சந்திரனுடன் சனி ராகு சூரியன் கூடினு மிதே பலன்-நம்பிக்கை துரோகம் செய்தே ஜீவனம் நடக்கும்.

10-ஆம் இடத்தில் தூமன் இருந்தால் தனதான்னிய சம்பத்துக்களுண்டாகி ஜீவனம்.

10-ஆம் இடத்தில் விதீபாதனிருந்தால் வெகு வெகு மேதையாலும் பரிவேஷனிருந்தால் மறைந்து வசித்தலாலும் ஸர்வ சாஸ்திர பாரங்கதனுகியும், இந்திர தனுசிருந்தால் ஜகம்புகழ் ஜீவனமும்,

குளிகன் 10-ல் இருந்தால் ஜனத் தலைவனுதல், தர்மத்தையடைதலிவற்ருலும்,

பிராணபதனிருந்தால் தேவாராதனை செய்து ஜீவனமும்,

10-மாதிபதியின் அம்சத்தில் ராகு இருந்தால் தனுசு அதாவது வில் தரித்தலாலும், விஷ வைத்தியம், இரும்பு யந்திரம், திருடர் சேர்க்கை இவற்ருலும், கேது இருந்தால் விவகாரம் யானை, பிறர் திரவியம் இவற்ருலும்,

மேற்படி 10-மாதிபதியின் அம்சத்தில் சூரியன் ராகு இவ்விருவரும் கூடியிருந்தால் எல்லா விதங்களாலும், விஷ வைத்தியத்தினுல் நிச்சயமாய் விஷத்தினுலேற்படும் ஆபத்தை நாசம் செய்வதாலும் செவ்வாயா லிவர்கள் பார்க்கப்பட்டு இதரர்களால் பார்க்கப்படாம லிருந்தால் தன் வீட்டையும் பிறர் வீட்டையும் வெளியூரிலும் வீடுகளைக் கொளுத்துவதாலும் பாபராசியில் இருந்து குரு பார்த்தால் சமீப வீடுகளைக் கொளுத்துவதாலும், அங்கு குளிகனிருந்து பூர்ண சந்திரனுல் பார்க்கப்பட்டால் திருடர்களாலபகரிக்கப்பட்ட தனத்தாலும் அல்லது தானே திருடுவதாலும் ஜீவனம் செய்வர்.

ஜன்ம லக்கினத்திலாவது 2-ஆம் இடத்திலாவது 4-ஆம் இடத்திலாவது 2-பாபர்கள் இருந்தால் தாந்திரிகத் தன்மையால் ஜீவனமும், மேற்படி ஸ்தானங்களை சுபர்களும் பாபர்களும் பார்த்தால் கலைகளைப் போதிப்பதாலும்,

மேற்படி அம்சத்தில் சந்திர சுக்கிரரை சுபர் பார்த்தால் ரசவாதத்தினுலும் தாதுக்களைப் பஸ்மம் செய்வதாலும்,

சுக்கிர புதர்களுடன் சந்திரன் கூடியிருந்தாலும் சுக்கிர புதரிருந்து சந்திரனுல் பார்க்கப்பட்டாலும் நல்ல வைத்தியனுகி

சகல ரோகங்களையும் அமிர்தஹஸ்தனுகக் குணம் செய்யும் கைராசி யுடையவராகியும், ஜீவனம் நடக்கும். சந்திரன் இவ்வாறிருந்து சுக்கிர புதரால் பார்க்கப்பட்டாலும் மேற்படி ஜீவனமே நடக்கும்.

மேற்படி அம்சத்தில் அதாவது 10-மாதிபதியின் அம்சத்தில் 2-ஆம் இடத்தில் அல்லது 3-ஆம் இடத்தில் தனிப்பட்ட சனி மட்டு மிருந்தால் சவுரி மயிர் அல்லது மான் மயிர் சவுரி மூலமும் தனுர் வித்தை யறிந்தும், கேது இருந்தால் கத்தி (செய்வதாலும்) கையாள்வதாலும் குலத்தில் பிரசித்தியாயும் கடிகார யந்திரம் செய்வதாலும் அவற்றைத் தன்னிஷ்டப்படி செய்தும் சோதித் தும் மேற்படி ஸ்தானத்தில் புதனிருந்தால் பரம ஹம்ஸ ஜகத் குரு ஆகியும் ராகு இருந்தால் இரும்பு யந்திரங்களைச் செய்வதாலும் அவற்றைக் கையாள்வதாலும் அச்சாபீஸ் ஆலை முதலியன வைத்து நடத்தலாலும் செவ்வா யிருந்தால் குந்தம் என்னும் ஓர் வகை ஆயுதத்தையும் ஈட்டி சூலமிவற்றைச் செய்வதாலும் இவற்றைத் தரித்தலாலும் ராணுவ சேவையாலும் ஜீவனம்.

லக்கினத்திலல்லது ஐந்தில், அல்லது 9-ல் சந்திரன் குரு இவர்கள் இருந்தால் உண்மையான கிரந்த கர்த்தாவாகியும், சகல வித்தைகளைக் கற்றும்,

மேற்படி ஸ்தானங்களில் சுக்கிரனிருந்தால் சொற்ப கிரந்தங் களையும் காவியங்களையும் பிராகிருதமான கிரந்தங்களைச் சீர்திருத் துவதாலும், புதனுகில், சில அல்லது, ஒரு கிரந்தத்தைச் செய்வதா லும் மீமாம்சனுகியும், தனியான குருவானுல் எல்லா கிரந்தங்களை யும் செய்தும் வாக்கியக் குறைவினுலேயே சபையை நடுக்கலுறச் செய்தும், வியாகரண வேதாந்த தர்க்க சாஸ்திரங்களைச் செய் வதாலும்,

மேற்படி ஸ்தானத்தில் சனி யிருந்தால் சபைக் கோழை யாகவும்,

மேற்படி ராசியைப்போல் 1, 5, 9 இந்த அம்சங்களில் எங் காவது செவ்வா யிருந்தால் நியாய சாஸ்திரத்தினுலும் அழகுள்ள தெளிவான கண்டித சொற்களாலும், சந்திரனிவ்வா றிருந்தால் அறிவுமூலமும் சாங்கிய சாஸ்திரத்தில் நிபுணத்துவத்தினுலும், கேதுவிருந்தால் பிரபந்தத்தினுலும், புதனிருந்தால் ஜோதிஷம் கணிதமிவற்ருலும் குருவிருந்தால் சம்பிரதாய சாத்திரத்தினுலும் தனம் வந்து ஜீவனம் நடக்கும்.

லக்கினத்திற்கு 3, 9, 8, ஆகிய ஸ்தானங்களில் கேது இருந்து பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் வாய்ச் சாலக்கினுல் ஜீவனமும்.

முன் சொன்ன அம்சத்தில் 2, 8-ஆம் இடங்களில் அல்லது இவற்றினுடை ஸ்தானங்களில் பாபக்கிரகங்கள் இவற்றிலிருந் தால் ஜீவனம் கஷ்டமூலமும், தரித்திரமும், ஏற்படும்; கிரகங்களே மேற்படி ஸ்தானங்களில் இல்லாவிடினும் தரித்திரமே யுண் டாகும்.

1-மாதி 7-ல் இருந்தால் தரித்திரமல்லது வெளிதேச வாச ஜீவனமும்,

2-மாதி 6-ல் இருந்தால் சத்துருவின் தனமூலம் ஜீவன மும்,

2-மாதி 7-ல் இருந்தால் வைத்திய ஜீவனமும்,

3-மாதி 9, 12-ல் எங்காவது இருந்தால் ஸ்திரீயின் தனத்தி னுல் பாக்கிய ஜீவனமும் பிறரைச் சேவித்தலால் ஜீவனமும்,

4-மாதி 5-ல் சுயார்ஜிதமும் வித்தையாலும் ஜீவனமும், பயிரில் பூமியால் ஜீவனமும்,

5-மாதி 1-ல் இருந்தால் எப்போதாவது ஒரு சமயம் தனங் கிடைத்து ஜீவனமும்,

6-மாதி 9-ல் இருந்தால் கல் கட்டை இவற்ருல் ஜீவனமும் 6-மாதி 8-ல் இருந்தால் தாயாதி சத்ரு இவர்கள் சொத்தால் ஜீவனமும்,

7-மாதி 4-ல் இருந்தால் வஸ்திர மூலம் ஜீவனமும்,

8-மாதி 9-ல் இருந்தால் பிறர் சொத்தால் ஜீவனமும்,

9-மாதி 1—7-ல் இருந்தால் எது செய்தாலும் (திரவிய லாப மும்) ஜீவனமும்,

10-மாதி 11-ல் இருந்தால் வியாபாரத்தினுல் தனமும்,

10-மாதி லக்கினத்தில் இருந்தால் பின் வயதில் தனம் வந்து சுகஜீவனமும்,

11-மாதி 6-ல் இருந்தால் பிறரை அடுத்து ஜீவனம் செய் தும்,

12-மாதி 3—4 ஆகிய ஸ்தானங்களி லிருந்தால் தன் வயிற்றை வளர்ப்பதுடனும் நிற்பர்.

கடகத்தில் சந்திரனிருந்து கடகமே லக்கினமுமாக பிறந்தால் ஆச்சரியகரமாகச் சித்திரமெழுதி அதனுல் ஜீவனம் செய்வார்.

ஜன்ம நக்ஷத்திரம் அதாவது சந்திரனிருக்கிற நக்ஷத்திர உத்திரம் 1-வது பாதத்தில் சிம்ம ராசியில் பிறந்தால் கன்னியா ராகு தெசையில் விசேஷ பாக்கியமுண்டாகி ஜீவனம் பிரபலமாகும். பயிர்த்தொழில் பலம், குருதெசையும் மேன்மையாகும்.

ஜன்ம நக்ஷத்திரம் ரேவதி 3-வது பாதம் மீனம் ஜன்மராசியும் ஜன்ம லக்கினம் கடகமும் ஆகி ஜனித்தால் 3-வது தெசையில் அதாவது சுக்கிரதெசையில் (சிறிய தகப்பன் மூலமாக பிரபு சினேகமடைந்து) சுயார்ஜிதம் சம்பாதித்து ஜீவனம் உண்டாகும்.

ஹஸ்தம் 1-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமும் ரிஷபம் ஜன்ம லக்கினமுமானுல் 20 வயது முதல் அற்ப சுகமும் 25 முதல் அதிக சுகமும் சுய ஜனங்களால் 30—35-ல் பிரசித்தியும் 3, 4, 5-வது தெசைகளில் பிரபல வியாபார சுகமும், வெளி தேசத்திலிருந்து தனவரவு முண்டாகும். இதற்குக் குரு மேஷ சிம்ம தனுசிலிருந்தால் ராஜ யோகமாக யோகம் நேரிடும்.

புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்தால் தனுசு ஜன்ம லக்கினமாக ஜனித்தால் 2 தெசையில் பிதுரார்ஜித தனத்தில் ஸ்திரீ மூலமாகச் சூத்திரராலும், நாஞவிதமாகவும், விரயமும் உதரரோக உபத்திரவமும் ஏற்பட்டு அன்னதானத்தினுல் நன்கு குணமுண்டாகி வயது 38—40-ல் நிவாரணையாகும். மூன்ருந்திசை சூரிய புக்தி முதல் கடன் கஷ்டமும், வெகு கஷ்டமும், நாலாந்திசை முதல் சுகமும் ஏற்படும். அன்னதானம் 1000பேருக்குச் செய்ய வேண்டும். 10-வருஷம் அல்லது 12-வருஷம் ரோக பீதி யுண்டாகும்.

உத்திராடம், 3-வது பாத மகரராசியில் சந்திரனிருந்து மீன லக்கினமாக ஜனித்து 2, 6, 9, மாதிகள் ஓரிடத்தில் கூடி யிருந்தால் ஜாதகன் முன் சத்துருக்களை ஜெயித்து அவர்களுடைய சொத்துக்களையு மடைந்து, பட்டு வியாபாரத்தினுல் விசேஷ

தனம் சேர்ப்பான். 4-ந் தெசையில் விசேஷ யோகமும், 5-ந் தெசையிலும் யோகமும் 6-ந் தெசை பின்னும் யோக முடையவனுவன்.

கேட்டை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமாகி ஜனித்தவர்களுக்குச் சுக்கிரன் கேதுவுடன்கூடின் மிலேச்ச சினேகம், விப்பிர சினேக மிவற்ருல் 16, 20, 25, 30, 35, 40 இந்த வயதுகளில் வியாபார விருத்தியும் சந்திர சூரியருடைய திசைகளில் பிரபலமும், குஜ தெசையில் பிரபல பாக்கியமும் உண்டாகும்.

சுவாதி நக்ஷத்திரத்தின் மூன்ருவது பாதம் சந்திரனிருக்கும் ஜன்ம நக்ஷத்திரமாக ஜனித்து 10-மாதி சுக்கிரனுகி சனி வீட்டில் இருந்தால் மேற்படி ஜாதகர்கள் உத்தியோக பிரபலத்தினுல் வெகு கிராமாதிகார மடைவார்கள். (சிம்ம லக்கினம்.)

அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனிருக்கும்போது மகர லக்கினமாக ஜனித்தால் சூரியதெசை பிற்பாதி முதல் தேசாந்திரத்தில் உத்தியோகத்தினுல் தனசம்பாதனை யேற்படும். (மகர லக்கினம்.)

சதயம் 3-வது பாதச் சந்திரனிருக்கும்போது கும்பம் லக்கினமாக ஜனித்து ஒன்பதா மாதியாகிய சுக்கிரன் லக்கினத்தி லிருந்தால் நியாய வழியில் வியாபாரத்தினுல் சந்திர லக்கினுதிபதி தெசையில் பிரபல மடைவார்கள்; வெளி தேச சஞ்சாரத்தினுல் பிரபலமாகத் தன சம்பாதனை யடைவார்கள்.

விசாகம் 4-வது பாதத்தில் சந்திரனிருக்கும் போது துலா லக்கினமாக ஜனித்தால் புததிசையில் விசேஷ வியாபாரத்தினுல் தனலாபமும் 4, 5-வது தெசைகளில் பிரபல யோகமும் ஏற்படும்.

திருஓணம் 2-வது பாதத்தில் சந்திரனிருக்கும்போது ஜனனம் கன்னியிலானுல் மூன்ருவது திசை முதல் யோகமும் பயிரில் பல மதிகமும் ஏற்படும்.

துலாராசியில் சந்திரன் விசாகம் 3-வது பாதத்திலிருந்து விசாகம் ஜன்ம நக்ஷத்திரமாக ஜனித்துச் சூரியனுக்குப் பத்தில் (லக்கினத்தில்) சனி நீச்ச மடைந்திருந்தால் வஸ்திர வியாபாரத்தினுலும், நானு மார்க்கங்களாலும், புததெசை வரையில்

பிரபல யோகமாகவும் கேது தெசையில் மிச்ரயோகமாகவும், நடந்து சுக்ர தெசையில் ப்ரபல யோகமாக நடக்கும்.

பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு லக்கினத்தில் ஜனனமானுல் 3-வது தெசையில் பிரபல வியாபாரம் செய்து தனம் சம்பாதிப்பார். இதற்குச் சூரியன் சுக்கிரன் 4-ல் இருந்தால் அந்தத்தெசை பிற்பாதியும் சூரியதெசை பிரபலமுமாக ரத்ன வியாபாரம் செய்து (ஜீவனம்) தனம் தேடுவார்.

மூலம் 1.வது பாதத்தில் சந்திரனிருந்து மிதுன லக்கினமாக ஜனித்தால் 2-வது தெசையில் சுகக் குறைவும் 3-வது தெசையில் பூமியால் பலனும் பயிர் மூலம் சந்திர (4-ந்) தெசையில் நல்ல யோகமும் 5-வது தெசை சமயோகமும் மீனத்தில் இருக்கும் ராகு தெசையில் பிரபல யோகமும் ஏற்படும்.

ரோகிணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மீனம் லக்கினமாக ஜனித்து குருலக்கினத்திலும் செவ்வாய் 7-லுமிருந்தால் பூமி மூலமாக விசேஷ லாப மடைவான். கடைசி வயதில் புகழுண்டாகும்.

ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினமும் கன்னியானுல் 2-வது திசையில் விதேச கமனம் அல்லது கிராமாந்திர வாச மேற்படும். அம்மானுல் மூன்றுந் திசை நான்காந் திசைகள் வியாபாரத்தால் நிருதிதிக்கில் உத்தரோத்தரமான பிரபலமு முண்டாகும் என்று வேறு கிரந்தத்திலுள்ளது.

சித்திரை 2-வது பாதத்தில் சந்திரனிருக்க கன்னியே லக்கினமாக ஜனித்தால் முதலில் 3 தெசைகள் அற்பசுகமும் ஆனுல் பிரசித்தியும் 3-ந் தெசை முடிவு முதல் கிராம வாசமும் 4-ந் தெசையில் வியாபார பிரபுவால் ஜீர்ணோத்தாரணுதிகளினுல் ஜீவனமும் 5-ந் தெசையில் வெகு பிரபலமும் உண்டாகும்.

ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷ லக்கினமாக ஜனித்தால் சனி ரவி கூடி 8-ல் இருந்தாலும் வஸ்திர வியாபாரத்தினுல் பிரபலமாக (ஜீவனம்) ஏற்படும். வியாபாரத்தில் வெகு சாதுரியன்; பிரபல பாக்கியவானுவான்.

கேட்டை 4-வது பாதத்தில் சந்திரன் இருந்து மீனம் லக்கினமாக ஜனித்து 10 மிடத்தில் செவ்வாய் கேதுவுடன் கூடி சுக்கிரனுல் பார்க்கப்பட்டும் குரு சனி வீட்டிலு மிருந்தால்

35 வயதிற்குப் பிறகு க்ஷேத்திரப் பிரபலமும் பாக்கியமும் 52 வயதுக்குப் பிறகு 10 ஷ வரை யோகமு முண்டாகும்.

ஜென்ம நக்ஷத்திரம் பூரம் 3-வது பாதமாகி அதில் சந்திரனிருந்து சிம்ம லக்கினமாக ஜனித்தால் 16 வயதில் பிரசித்தியும் 20-ல் சாமர்த்தியமும் 30-க்கு மேலும் 40-ன் மேலும் நாஞவித வியாபாரங்க (பலவித வியாபாரங்க)ளில் சகல வழியாக சுகமாக யோகமும், விருத்தியுமேற்படும்.

அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகர லக்கினத்தில் ஜனனமானல் சந்திர தெசையில் பயிரினல் விசேஷ சௌக்கிய முண்டாகும். இதற்கே சனி மேஷத்திலிருந்து குருவாலும் செவ்வாயாலும் பார்க்கப்பட்டால் மாமனர் மூலம் தாரவர்க்கத்தில் பாக்கிய மேற்படும்.

மீன ராசியில் சந்திரனிருந்து கன்னியா லக்கினமாக ஜனித்தால் ஜாதகருக்கு வியாபாரத்தினல் விசேஷ பொருள் சேர்ந்து சுக ஜீவனம் ஏற்படும்.

ரேவதி நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து துலா லக்கினமாக ஜனித்தால் ஜாதகர் கல்வியறிவு நாடக ஞான மிவற்ருலும், உத்தியோகத்தாலும், வியாபாரத்தாலும் ஜீவிப்பார்.

உத்திரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்கினமாக ஜனித்தால் 5-ல் ராகு இருந்தாலும், லக்கினத்தில் குரு இருந்தாலும் மேற்படி தெசைகளில் பிரபல வியாபார வழியில் தனம் வந்து ஜீவனம்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் ரிஷபமாக ஜனித்தால் 25-வயது முதல் உத்தியோக ஆரம்பமும் அற்ப சுகமும் அல்லது 35-வயது முதல் உத்தியோக ஆரம்பமுமாகி 40—42-ல் பிரபல உத்தியோகமாகி 50-க்கு மேல் பின்னும் பிரபலமாகவும் ஜீவனம் நடக்கும்.

மகரராசியில் சந்திரனிருந்து லக்கினம் விருச்சிகமாக ஜனனமாயின் மூன்ருந் திசை முதல் பிரபல வியாபாரத்தினல் சுகமும் தனமுமடைந்து பிரபல ஜீவனம்.

கிருத்திகை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்மமாகி ஜனித்தால் சுக்கிர செவ்வாய் கூடி மகரத்திருந்தால் பூமியால் விசேஷ பாக்கியமும் லக்கின ராகுதெசை வரும்

போது தார வர்க்கத்தினுல் பூமிலாபமும், பிரபல பயிர்த்தொழில் பிரசித்தி லாபமும் நேரிடும்.

சுவாதி நக்ஷத்திரம் முதலாவது பாதத்தில் சந்திரனிருந்து சிம்ம லக்கினமாக ஜனித்தால் சூரியன் செவ்வா யிருவரும் நீச்ச ராசிகளி லிருந்தால் ஜன்ம தேசத்தை விட்டு வெளி தேசத்தில் ஜீவனம் ஏற்படும். வியாபார மூலம் ஜீவனம்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னியா லக்கினத்தில் பிறந்து குரு நீச்சமுற்று நீச்ச பங்க ராஜயோகமு மேற்படின் சங்கீதம் நாட்டிய மிவைகளை(க்கற்று,) சிக்ஷித்து விசேஷ சன்மானுதிகளால் ஜீவனம், மேற்படி குருவுடன் புதசுக்கிரர் கூடினுமிப்படியே. மேலும் மாமனுர் மூலமும் விசேஷ சுகபோகாதிகளுமுண்டாகும்.

பூரம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்ப லக்கினமாக ஜனித்தால் குரு ராகு இருவரும் 11-ல் கூடினுலும், 9-ஆம் இட சனியாலிவர்கள் பார்க்கப்பட்டாலும், சூத்திரப் பிரபுவால் மேற்படி தெசை பிரபல யோகத்தைத் தரும். குருதெசை மத்திமமாகும். மற்ற தெசைகள் பிரபலமாகும்.

ஆயில்யம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்ப லக்கின மாகப் பிறந்தாலும்,

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்கினமாகப் பிறந்தாலும் சந்திர தெசையில் பிரபலமும் (கடகத்திற்கு) 4, 5, 6-வது தெசையில் பூமி அரசாங்க மிவற்ருல் சுகமும் பிரபலமும் ஏற்படும். இங்கு கடகத்திற்குக் குரு தெசை யோக மென்பதைக் காட்டுவதாகிறது.

* முக்கிய குறிப்பு :—குருதெசை 6-வதாக வருவது அவயோகமென்று சிலர் கொள்கையாயினும், கடக லக்கின விஷயத்தில் அவயோகமாகா தென்று காட்டப்படுகிறது. ஆயில்யத்தில் ஜனித்தவர்களுக்குக் குருதெசை 6-வது தெசையாக நேரிடவும் முடியாது.

பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து ஜன்ம லக்கினம் கும்பமானுல் 8-வருஷம் சூத்திரப் பிரபுவிடம் எழுத்து மூல ஜீவனமும், 32-வயது முதல் ஏழு அல்லது 8-வருஷம் கஷ்டமும், விரயமதிகமும், 40-க்குப் பிறகு உத்தியோக மூலம் சுகமும் ஜீவனமு மேற்படும்.

உத்திரட்டாதி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மகரம் லக்கினமாக ஜனித்தால் சுக்கிர சூரியர் கூடின் அரசாங்க ஜீவனம்,

இவர்களுடன் கேது கூடினாலும் 10 ஆம் இடத்தில் ராகு இருந்தாலும் பிறர் கர்மத்தைச் செய்து அதனாலும் தாய் வர்க்கத்தினாலும் தனமடைவான்.

சுவாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷம் லக்கினமாகி ஜனித்து சனி 2 ஆம் இடத்திலிருந்தால் எப்போதும் அலைச்சலும் ஜன்ம பூமியை விட்டு வெளித்தேச வாசமும், மேற்படி சனி தெசையில் கிராமம் கிராமமாகச் சஞ்சாரம் செய்தலும் மேற்படி தெசையின் மூன்றுவது பாகத்தில் பிரபல உத்தியோக சித்தியும் 4-ந் தெசையில் வெகு பிரபலமும், வெகு கிராமாதிகாரமும் தடாகாதி தர்ம சித்திகளும் ஏற்படும்.

அசுவனி யாதியாக 21-ஆவது நக்ஷத்திரமான உத்திராட நக்ஷத்திரம் 3-வது பாதத்தின் ஆரம்பத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாக ஜனித்தால், செவ்வாய் ராகு இருவரும் 10-ல் இருந்தால் புரோகிதம், பிராம்மணார்த்தம் இத்யாதிகளாலும் சூத்திரராலும் தனசம்பாதனை (ஜீவனம்) ஏற்படும். மேற்படி ராகு குரு சனி தெசைகளில் குருதெசை பிரபலமும் சனி தெசையில் வெகு பாக்கியமும் கூட ஏற்படும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்பமே லக்கினமாக ஜனித்து குருவால் பத்தாமாதிபதி பார்க்கப்பட்டால்; புரோகிதம், பிராம்மணார்த்தம், ஆமசிரார்த்தம் இவற்றால் வெகுசமர்த்தனாகத் திரவியம் சம்பாதிப்பான்.

சந்திரன் மகம் முதலாவது பாதத்திலிருக்க லக்கினம் துலாமாக ஜனித்தால் 4, 9, (10) 11-க்குடையவர்கள் மேற்படி சந்திரனுடன் கூடியிருந்தால் சமர்த்த விவசாயத்தினால் தன மடைவான். பின் வயதில் அரசாங்கத்தில் விவசாய உத்தியோக மடைவான். வெகு பிரசித்தி யடைவான். உபாயத்தினாலும் தந்திரமாகவும் ஜீவிப்பான்.

திருஆதிரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினமும் மிதுனமேயானால் லக்கினாதிபதியான புதனுக்கிரண்டில் ராகு இருந்தால் உத்தியோகத்தில் வல்லவனாவன்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மகரமாக ஜனனமானவ் 10 மாதி 5-ல் இருந்தால் புரோகித ஜீவனம். அன்றி

---

* ஸப்தமாதி சந்திர: தனஸ்தானேஸ்திதிர்யதி. கேவலேந்து:ச தனகோ நஷ்டத்திரவியம் லபேத்புந: என்கிறபடி இந்த மகர லக்னஜாதகருக்கு மட்டும் சந்திரன்.

10 ஆம் இடத்தை ரவி புதன் குஜ சனி இவர்கள் பார்த்தாலும் புரோகித ஜீவனமே நடக்கும்.

அவிட்டம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சிம்ம லக்கின மாக ஜனித்தால் சூரியன் ராகுவுடன் கூடி 12-ல் இருந்தால் ஜன வசிய முடையவனுகித் துராலோசனையால் தன முண்டாகும். கிரய விக்கிரயங்களில் வெகு சமர்த்தனுவன்.

பரணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு ஜன்ம லக்கின மானுல் 9, 10 மாதிகள் ராகுவுடன் கூடி 8-ல் இருந்தால் பட்டு வியாபாரத்தினுல் சமர்த்த ஜீவனம்.

சந்திரன் விருச்சிகத்திலிருக்கப் பிறந்து ரிஷப லக்கினத்தி லும் பிறந்தால் 3-ந் தெசை முதல் பிரபல உத்தியோக ஜீவனம். இதற்கே 5-ல் கேதுவும் சுக்கிரனு மிருந்தால் மாமனுர் மூலம் பிரபல முண்டாகி 10,000-த்திற்கு மேல் தன சம்பாதனை யுண் டாகும்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குருவுடன் ராகு கூடி யிருந்தால் புரோகிதம், யாகம் செய்வித்தல், தர்மசாஸ்திர மிவற்றுலும், விப்பிரர்களுக்குச் சாஸ்திர விதிகர்த்தாவாகியும் ஜீவனம்.

பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் ரிஷபமாகிப் பிறப்பின் சேர்க்கவும் கலைக்கவும் சாமர்த்திய முண்டாகி ஜீவனம்.

சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கடக மாக ஜனித்து ராகு குஜனிவர்கள் சிம்மத்தில் இருந்தால் உயர்ந்த நூல் வியாபாரத்தினுலும் வெளித்தேச தேசாந்திர வியாபாரியின் சினேகத்தாலும் தன சம்பாதனையால் ஜீவனம்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் துலாமாக ஜனித்து 2-ல் சனி ரவி யிருந்தால் பிறரைப்பயமுறுத்தி யல்லது வஞ்சித்து திரவியம் சம்பாதிப்பான். அப்படியே விரயமும் செய்வான். வியாபாரத்தினுலும் பற்பல வழியாலும் பொருள் தேடி அநியாய வழியில் செலவிடுவான்.

2-மாதி 1, 4, 7, 10 இந்த ஸ்தானங்களில் எங்காவது இருந்து 1, 4, 7, 10 மாதிகளில் 2 மாதி நின்ற ராசி நாதன் சந்திரனுடன் கூடியிருந்தால் எப்போதும் கலவரமும் அலைச்சலும் உண்டாகி

சஞ்சாரத்தினல் தனந்தேடி ஜீவனம் நடக்கும். மேற்படி 2-மாதி சத்துரு ராசியிலிருந்தாலும் நீச்சாாசியில் நீச்ச நவாம்சத்திலிருந் தாலும், நீச்ச ஷட்வர்க்கங்களிலிருந்தாலும் தரித்திர ஜீவனம்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாகி 2-ல் ரவி புதரிருந்து குஜனல் பார்க்கப்பட்டாலும் மேற்படி சந்திரனுக்கேழில் குரு இருந்து மேஷ சனியால் மேற் படி குரு பார்க்கப்பட்டாலும் கஜானதிகாரியாகி ஜீவனம். வியா பாரத்தினலும் ஜீவனம்.

8 மாதி 5-ல் இருந்தால் புத்திரராலும், 12-ல் இருந்தால் பேய் பிடித்தும் தன விரயமாகும்.

8 மாதி 2-ல் இருந்தால் பூர்வ ஆஸ்தி விரயமாகும்.

8 மாதியே 4-ல் இருந்தால் வீடு, வாகனம், பூமி முதலியன பாழுமாகும்.

7-மாதி 12-ல் இருந்தால் தாரத்திற்கு ரோகத்தினல் பொரு ளழியும்.

மூலம் 4-வது பாதத்தில் குரு தனுசில் இருந்து சனியுடன் கூடியிருந்தால் லக்ஷிமி ஷஷ்டியம்சத்தில் பிறந்தால் சிம்ம லக்ன ஜாதகர் 16 வருஷம் துடர்ந்து யோகமடைவார். ராஜயோக முண்டாகும்.

லக்கினதிபதியும் குருவும் 6-க்குடையவனைப் பார்த்தால் அம்மா(னல்) ன் சொத்து வரும்.

உத்திரட்டாதி 1, ரேவதி 3, பூரட்டாதி 4 ஆகிய நக்ஷத்திர பாதங்களில் சந்திானிருந்து அவிட்டம் 1-வது பாதத்தில் செவ்வா யிருந்தால் 21 வயதிற்குப் பிறகு சகோதரியின் கணவன் காரண மாக விருச்சிக லக்கின ஜாதகன் தனமடைவான். பாலிய வய தில் தரித்திரமுண்டாகும்.

லக்கினதிபதி செவ்வாயாகி அவிட்டம் 1-வது பாதத்தில் இருந்தால் 35-வயதிற்குமேல் பாக்கியமேற்படும். 30 வரையில் வியாகூலம்.

அஷ்டமாதிபதியும் 10-மாதிபதியும் கூடினல் யோகமற்ப மாகிவிடும். நடுவில் நடுவில் யோகபங்க மேற்படும் அல்லது மேற்படி யோகபங்க மேற்படுமென்கிற வியாகூலம் ஏற்படும்.

உத்திரம் 1-வது பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் 27-வயது முதல் பாக்கியமடைவான்.

உச்சக் கிரகத்துடன் 7-ல் சனி ராகு கூடில் அயோக்கிய வழியால் ஜீவனம், பிறரை ஹிம்சித்தல் வஞ்சித்தல் பிராம்மணரைத் திட்டல் இவற்றால் ஜீவனம். குலத்தைக் கெடுத்தலும், கற்பழித்தலும், ஈனத்தொழிலும் அகிருத்தியங்களும் நிறைந்திருக்கும் ஜாதகன் ஆவான், இவர்களைக் குரு பார்த்தால் வேறு மாறான பலனேற்படும்.

சந்திரனுக்குப் பத்தில் சூரிய னிருந்தாலும் செவ்வா யிருந்தாலும் சகலமும் சித்தமாக இருந்துகொண்டு சாகசத்தினாலும், பாபபுத்தியாலும், மேற்படி ஸ்தானத்தில் புதன் இருந்தால் வித்தையாலும், குரு இருந்தால் ராஜ துல்லியமாகவும், சுக்கிரனிருந்தால் போகத்தினாலும், சனி யிருந்தால் சோக மூலமும், ஜீவனம்.

வக்கினத்திற்கு 4-ல் புதனல்லது சுபரிருந்து ஜனித்தாலும் லக்கினத்தில் சுபரிருந்து குரு பார்த்தாலும் சுகஜீவனம். மேற்படி கிரகம் பலவீனமாகியிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் கண்டுங் காணாமலும் பொருள் வந்து ஜீவனம்.

லக்கினத்தில் பாபக்கிரக மிருந்தால் ஆசையும் துர்ப்பலமும் லக்கினத்திலுள்ள பாபர் 8 மாதியால் பார்க்கப்பட்டால் தரித்திரமும், வியாதியும், 7 மாதியால் பார்க்கப்பட்டால் சுகமும் 6 மாதியால் பார்க்கப்பட்டால் கேவல தரித்திரமும் உண்டாகும்.

சித்திரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி செவ்வா யிவர்களுடன் கூடியிருந்தால் 3-வது தெசையில் சுய புக்தியில் தகப்பனற்ற பெண்ணை மணந்து அவளால் 26-வயது முதல் சுகமும் சகல போகமுமடைந்து அவளால் சம்பத்து முண்டாகி யோக ஜீவனமேற்படும். (மிதுன லக்கினம்.)

ரேவதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு கன்னியி லிருந்தால் 22-வயது முதல் தன சம்பாதனை யேற்படும். இதற்கே 4-வில் அல்லது 7-ல் ராகு இருந்தால் 35-வயது முதல் சகல பாக்கியமும் சித்திக்கும். (மீன லக்கினம்.)

2, 9-மாதிகள் 4-ல் இருந்தால் மேஷ லக்கின ஜாதகருக்கு மாதம் 300 தனம் சம்பாதனை யேற்படும். வியாபார ஜீவனம். நகரவாசம். அன்றி,

பூரட்டாதி 4-ல் சனி இருந்தாலும் உத்திரட்டாதி 3-ல் உள்ள ராகுவுடன் கூடி யிருந்தாலும் கன்னியா விக்கிரயத்தினு லாவது, சகோதரியாலாவது, தாயாதியாலாவது மாதம் 300 அல்லது 400 அல்லது 500 அல்லது 600 வீதம் தனமும் தினம் 10-க்கு மேலும் 100-க்கு அதிகமும் வியாபாரம் செய்து ஜீவனம்.

துலா லக்கினமும் மகர சந்திரனுமாகி 11-ல் குரு சனி சுக்கிரர் கூடியிருந்தால் 28-வயதில் லக்ஷிமி கடாக்ஷமும் 29-வயதில் குரு தெசை சுய புத்தியில் கிலேசமும் ஏற்படும். இந்தக் கிலேசம் மேற்படி தெசை 3-ல் ஒரு பாகம் ஆனபின்பு தீரும்.

ஜன்ம லக்கினத்திற்குப் பத்தாமாதிபதி ஷஷ்டி யம்சத்தின் கோராம்சத்திலிருநதால் எப்போதும் கோரத் தொழிலால் ஜீவனமுண்டாம்.

சனி 2-லாவது 4-லாவது 10-லாவது யமஷஷ்டி யம்சத்தி லிருந்து, துலா லக்கினத்தில் பிறந்தால் விவாகமானபின் வெகு பாக்கியமடைந்து ஜீவனம், பாக்கிய வமிச மனைவியின் பொரு ளால் ஜீவனம்.

கேட்டை 2-வது பாதத்தில் சனியிருந்து மேற்படி சனி தெசை 3-வது தெசையாக வந்தால் 2-மாதியால் பார்க்கப்பட்டு மிருந் தால் ஒன்றரைக் கோடி தனம் தேடுவான். சில கிரந்தத்தில் 50 லக்ஷம் என்று சொல்லுகின்றனர்.

2-ல் சந்திரனிருந்து அஷ்டமாதிபதியான கன்னியிலுள்ள புதனுல் பார்க்கப்பட்டால் வாய்ச்சாலத் தன்மையினுல் கலஹாதி கள் செய்வித்து ஜீவனம். அஷ்டமாதி 10-ல் அல்லது 2-ல் இருந் தாலும் இப்படியே வாயடியடித்து ஜீவனம், நயவஞ்சகன்.

கேதாரதாமினி யோகாதிக ளுண்டானுல் 16 வயதிலும் 30 வயதிலும் பாக்கிய மேற்படும். அக்காலங்களில் ஆயுளுக்கு யோகாரிஷ்டம் சம்பவிக்கும்.

செவ்வாயின் அம்சத்தில் சந்திரனுடன் ராகு 9-ஆம் இடத்தில் கூடி யிருந்தால் தர்மாதர்ம விசாரணையால் திரவிய சம்பாதனை யடைவான். சில சமயத்தில் அநியாய வழியினுல் சம்பாதித்து அநியாய வழியினுலேயே செலவழித்து வயோதிக வயதில் தரித்திரதிசை யடைவான். பந்துஜன துவேஷ முண்டாகும். கஷ்ட ஜீவனமாகும்.

குரு கேதுவுடன் கூடினுல் பாஷாண்டத்தனம் செய்வதால் ஜீவனம்.

சுவாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு கேதுவுடன் கூடி மேஷத்தில் இருந்தால் 1, 2-வது திசைகள் சுபம் ஆகும்.

லக்கினத்திற்காவது சந்திரனுக்காவது ஒன்பதில் ராகு இருந்தால் 30-வயதிற்குப் பிறகு 10-வருஷம் வரையில் மனஸ்தாபாதிகளால் நஷ்டமுண்டாகும், எங்கெங்கு என்னென்ன வியாபாராதிகளுண்டோ அவை யெல்லாம் நாசமுறும்.

ரேவதி 4-ல் சனியும் மிருகசீரிஷம் 2-ல் சுக்கிரனு மிருந்து மகர லக்கினத்தில் பிறந்தால் 23-வயது முதல் பாக்கியவிருத்தி ஏற்படும். ஜன்மம் முதல் ஆயுசு வரை பாக்கிய முண்டாகும்.

9-ல் அல்லது 2-ல் ராகு இருந்தால் (விருச்சிக லக்கின) ஜாதகனுடைய சகோதரனுக்கு ஈனத்தொழிலால் ஜீவனம்.

சுக்கிரன் தன் உச்சத்தில் ஒன்பதில் இருந்து 10-ல் செவ்வாயிருந்தாலும்,

சுக்கிரன் உச்சத்தில் இருக்க 10-ல் 1-மாதியான செவ்வாயிருந்தாலும் குருவால் பார்க்கப்பட்டால் நல்ல குலதீபமான புத்திரனுவன்.

1-ல் அல்லது 10-ல் அல்லது 7-ல் செவ்வா யிருந்தாலும் லக்ஷ்மீயானவள் இவனைவிட்டு விலகாள்.

விருச்சிக லக்கின ஜாதகனுக்குச் சூரியன் பரணி 3-வது பாதத்தில் இருந்தால் 100-ராஜயோக மிருப்பினும் அவயோகமே நடக்கும். நீச்ச சனியுடனும் கூடி யிருந்தால் கிலேச ஜீவனமாகும்.

பூரம் 4.வது பாதத்தில் சந்திரனிருந்து ஜனித்த ஜாதகனுக்கு 9-மாதி 10-மாதிபிவர்கள் 11-ல் இருந்தால் கடக லக்கினமானுல் ஜன்மம் முதல் கடைசி வரை பாக்கியமுள்ளவனுவான். இதற்கே சுக்கிரன் கிருத்திகை 1-வது பாதத்திலும் கன்னியில் ராகுவும் இருந்தால் 35-வயதுக்குமேல் ராகு தெசையின் பிற்பாதி முதல் ராஜயோகம் உண்டாகும்.

லக்கினத்தில் கேதுவும் லக்கினுதி சந்திரனுடன் கூடியுமிருந்தால் கும்பலக்கின ஜாதகருக்கு வயது 20 முதல் 37 வயது

வரை விசேஷ பாக்கிய முண்டாகும். முப்பத்தேழுக்குப் பிறகு கிலேச முண்டாகும். 4-ந்தெசை பாதிக்கு மேலிருந்து தனம் சேரும்.

6, 8, 12-க் குடையவர்கள் 6, 8, 12 இந்த ஸ்தானங்களி லேயே இருந்தாலும் 6, 8, 12-க் குடையவர்கள் ஸ்தான பரி வர்த்தனையாகி யிருந்தாலும் இவர்களே இவர்களை ஒருவரை ஒரு வர் அன்னியோன்னியமாகப் பார்த்துக்கொண்டாலும் இம் மூவரும் கூடி 6-லாவது 8-லாவது 12-லாவது ஓரிடத்தில் சேர்ந் திருந்தாலும் ஜாதகன் பெரிய ராஜாதிராஜர்கள் மதிக்கும் யோக முடையவனவன், ஆயினும் சகல லக்ஷ்மீ கடாக்ஷமுள்ளவனாயினும் கூட ஒரு சமயம் எப்போதாவது கொஞ்சம் கஷ்ட கிலேச மனு பவிக்க நேரிடும். சிலர் தார மிரண்டு உண்டாகுமென்று சொல் கின்றனர்.

சந்திரன் மீனத்தில் உத்திரட்டாதி நக்ஷத்திரத்திலிருந்து குரு 10-லும் இருந்தால் கும்பலக்கின ஜாதகன் 20 வயதுக்கு மேல் மத்தியில் 5 வருஷம் விசேஷ பாக்கிய மடைவான். அதற்கு முன் னுடியே 16-வது வயது முதல் சுமாராகப் பிரசித்தியும் 19 முதல் புத்திப் பெருக்கும் ஏற்படும்.

சந்திரன் தனுசு ராசியில் குருவுடன் கூடியிருந்து அதுவே லக்கினமாகிச் சிம்மத்தில் செவ்வாயிருந்து மேற்படி குருவால் பார்க்கப்பட்டால் 35 வயதிற்குப் பிறகு பாக்கியமும் ராஜசன்மா னுதிகளு முண்டாகும்.

ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தவன் 2-வது பாதத்தில் ஜனன மானல் பாபபுத்தியும், அதர்மமும், எதையும் உண்பவனும், சாகச மும், குரூர கிருத்தியமும், செய்நன்றி மறவாதவனுகவும், தன் மித்திரஜன ரக்ஷகனுகவும், நியாய சம்பாதனை செய்பவனும், தன முள்ளவனும் ஆவான். மேற்படி ஆயில்யத்திலேயே 4-வது பாதத்தின் மத்தியில் பிறந்தவன் நீச்ச சேவை செய்பவன்; வெகு வியாபாரம் செய்வான்; அநியாய சம்பாத்திய முடையவன்; வைசியத் தொழிலும் செய்வான். சில சமயங்களில் நியாய வழி யிலும் சம்பாதிப்பான்.

லக்கினம் துலாமாகி பூசம் 3-வது பாதத்தில் சுக்கிரன் 10-ல், க்ஷிதீச ஷஷ்டி யம்சத்திலிருந்தால் ராஜசம வாழ் வுண்டாகும்.

8

சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவன் சுயகாரியவாதி. தெளிவும், நல்லறிவும், விசேஷ (கு)யுக்தியும், பெருந்தன்மையும் தீர்க்காலோசனையான பேச்சும், நல்ல சன்மானுதிகளால் ஜீவனமும். சித்திரை நக்ஷத்திரத்தின் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி செவ்வா யிவர்களுடனும் கூடி யிருந்து லக்கினமும் துலாமாகின் மத்திய வயதில் வெகு பாக்கியமும் அடைந்து ஹவ்விய கவ்வியாதிகளும் செய்து சுகியாவன்.

ரேவதி 3-ல் சந்திரனும் லக்கினத்தில் (மகரத்தில்) புத சுக்கிரரும் இருந்தால் சுக்கிர திசையில் 20-வயது முதலாகப் பாக்கியமுண்டாகும். இவர்களே 8-மாதியான சூரியனுடனும் கூடியிருந்தால் மத்தியில் யோகபங்க முண்டாகும். 24-வயதுக்கு மேல் 6 வருஷம் யோகம் உண்டாகும். ஒரு சமயம் 8 வருஷமும் யோகம் நடக்கும்; பிறகு கிலேச முண்டாகும். இதற்கே லக்கினத்திற் கிரண்டில் பூரட்டாதி 2-ல் செவ்வாயும் அவிட்டம் 3-ல் சனியும் 9-ல் ராகுவு மிருந்தால் வெளி தேசத்தில் பாக்கியமும் வயோதிக கிலேசமு முண்டாகும். மேற்படி ரரகு ஹஸ்தம் 2-வது பாதத்தில் இருந்தால் 20 வயதிற்குப் பிறகும் 40-க்கும் பிறகும் 5-ந் தெசையில் ராஜ சன்மான முண்டாகும். மத்தியில் 32-ல் தாயாதி விரோத முண்டாகிப் பிறகு முன்சொன்ன 40-வயது முதல் அது யோகமாக மாறிவிடும்.

குருரக்ஷஷ்டி யம்சத்தில் லக்கினத்திற் கிரண்டில் சனியுஞ் சூரியனும் கூடி மேஷத்தில் இருந்தாலும் இத்துடன் மிதுனத்தில் செவ்வாயு மிருந்தாலும் ஜனங்களை வெகு பேச்சால் வஞ்சித்து ஜீவனம் செய்வர். அதன் பலன் மத்திய வயதில் சோகமுண்டாகும். மேற்படி சனி பரணி 1-வது பாதத்திலும் சந்திரன் ஆயில்யம் 4-வது பாதத்திலும் இருந்தால் சந்திரதெசையில் யோகமும் சூரியதெசையில் ராஜ துவாராவாக அவமானுதிகளும் ஏற்படும். 40 வயதிற்குப் பிறகு பாக்கியாதிக ளுண்டாகும். தார வம்சத்தில் பாக்கியம் வரும்.

உத்திர நக்ஷத்திரத்தில் 2-வது பாதத்தில் சந்திரன் லக்கினுதிபதியாகி லக்கினத்திற்கு 3-ல் இருந்தாலும் ஆயில்யம் 1-வது பாதத்தில் செவ்வாய் நீச்சனுயிருந்து சுக்கிரன் 11-ல் இருந்தாலும் 27-வயது வரை கஷ்ட ஜீவனம்; பிறகு ராஜசபை முதலிய ஸ்தானங்களிலும் ஹாஸ்ய கதா காலக்ஷேபாதிகளால் ஜீவனம்.

8 வருஷம் வரை ராஜயோக பலன் நடக்கும். ராஜ முத்திரை யதிகாரம் உண்டு.

கேட்டை நக்ஷத்திரத்தின் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மேற்படி சந்திரனுடன் ராகுவும் கூடி இருந்தால் ஜன்ம லக்கினம் துலாமாகின் நீச்ச சேவை செய்து ஜீவனம், இதில் தாயாதி கலகத்தினல் தொழிலில் நாசமும் (அடிக்கடி கலகமும்) விலக்கும் நேரிடும், சிலர் கொள்கை வைசியத் தொழிலிலும் வேறு சிலர் வெகு வியாபாரத்தினல் வெளி தேச சஞ்சாரத்தினல் தனமென்றும் சொல்லுகின்றனர். கடனாளி யாவன். மேற்படி ராகு அனுஷம் 4-வது பாதத்திலிருந்தால் நடு வயதில் யோக மனுபவித்துக்கடைசி வயதில் கடனாளியாவான்; அப்போது பிறர் சொத்தை அபகரித்து ஜீவனம் செய்வான்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மீனமாகி ஜனித்து, 2-ல் செவ்வாயும் 10-ல் குருவும் இருந்தால் 24 வயது முதல் பாக்கிய முண்டாகும்; சிலர் 27 வயது முதல் உண்டாகு மென்கின்றனர். ஆயுள் வரை பாக்கிய முண்டாகும்.

5-ல் சனி (மேஷத்தி லிருந்தாலும்) அசுவனி 2-ல் வர்க்கோத்தமத்தில் இருந்தாலும் 30 வருஷம் முதலாக ஆயுள்வரை பாக்கிய முண்டாகும். வியாபாரத்தினல் மாதம் 200 தனம் சம்பாதனை யுண்டாகும். மேற்படி சனி எங்கிருந்தாலும் 5-ல் வர்க்கோத்தமம் அடைந்தால் இதே பலனுண்டாகும். இந்த ஜாதகர் பிறருக்கு ஜாமீன் கொடுத்தல் கூடாது.

சுவாதி 1-வது பாதத்தில் சூரியனும் மூலத்தின் முதற்பாதக் கடைசி சந்தியில் சந்திரனு மிருந்தால் தனுர்லக்கின ஜாதகருக்கு 46 வயதிற்குப் பிறகு அல்லது 50 வயதிற்குப் பிறகு கிலேச முண்டாகும். ஆருவது திசை முதல் மேற்படி கலஹாதிகளுண்டாகி 53 வயது முதல் சுக முண்டாகுமென்பது சிலர் மதம். ஆதியில் 30-வயது முதல் யோகமுண்டு.

ஆயில்யம் 4-வது பாதத்தில் அல்லது புனர்பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்ப லக்கினத்தில் பிறந்து 9-ல் சூரியனிருந்து சூரியதெசை வந்தாலும், சூரியதெசை மத்தியிலிருந்து அல்லது 3-வது தெசை மத்தியிலிருந்து அல்லது 21 வயது முதலும் 30-க்கு மேலும் விசேஷ பாக்கிய முண்டாகி

ஜீவனம் தன் தகப்பனின் சகோதரியின் கணவன் மூலமாகப் பிர பல மடைவான் என்று சிலரும்; வேறு சிலர் தன் தகப்பனின் சகோதரியின் புத்திரியை ஜாதகன் மணந்து அவள் யோக பல னுகப் பாக்கியத்தை அடைவானென்றும் சொல்லுகிறுர்கள்.

உத்திரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரம் 3-வது பாதத்தில் புதனும் ஹஸ்தம் 2-வது பாதத்தில் சனியுமிருந் தால் எக்குலத்து ஜாதகர் ஆனுலும் வைசியத் தொழில் மூலம் ஜீவனம் செய்வர். 30 வயது முதல் கொஞ்சம் யோகமு முண்டா கும். 4-ந்தெசை கடைசியில் கஷ்ட முண்டாகும். 40 வயதுக்கு மேல் கஷ்ட முண்டாகும். 50 வயது முதல் திரும்பவும் மரண காலம் வரை யோகம் ஏற்படும்.

திருவோணம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 3-வது பாதத்தில் குருவும் லக்கினத்தில் 7 மாதியும் இருந்தால் துலா லக்கின ஜாதகன் ஜகத்குரு ஆவதுடன்; ராஜதுவாராவாக சர்வாதி காரமும் வகித்து (16 வயது முதல் பிரபலமாக வாழ்ந்து) 56 வய தில் கொஞ்சம் கஷ்டமும் அடைந்து பிறகு பிரபலமாக வாழ் வான்.

சந்திரன் ரோகிணி 2-வது பாதத்திலிருந்து செவ்வாய் அசு வனி யல்லது பூரம் அல்லது உத்திராடம் இந்த நக்ஷத்திரங்கள் மூன்றின் ஒன்றின் முதலாவது பாதத்தில் இருந்தால் வெகு தனுதி காரியாவன். இதுவே மிதுன லக்கினமாகி அசுவனி 1-ல் சனி யிருந்து கிருத்திகை 1-ல் புதனும் மேற்படி சனியுடன் சுக்கிரனும் கூடி யிருந்தால் ஜன்மம் முதல் ஆயுள் வரை பாக்கியமுண்டு. 25 வயது முதல் எண்ணி லடங்கா பாக்கிய (மடைவான்) அதிகாரியா வன்.

சந்திரன் ரிஷப ராசியிலிருந்து லக்கினம் விருச்சிகம் ஆகி 9-ல் ராகுவும், மகம் 1-ல் செவ்வாயு மிருந்து குரு சனி கூடி தனு சில் இருந்தால் ஜாதகனுக்கும் தன் அம்மானுக்கும் விதவைகளின் பிள்ளைகளை ரக்ஷிக்கும் ஆசிரமத்தில் ஜீவனம் நடக்கும்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரம் 4-ல் சுக்கிர னிருந்து 4, 9, 10, 5-க் குடையவர்கள் கூடி 11-ல் இருந்தால் (தனுசு லக்கின ஜாதகர்) அநாயாசமாக வீடு வாசல் வாகனம் முதலியன உடையவ ராவர். இதற்கு முந்தி வெளிதேசத்தில்

வெகு வீடுகளில் வாசம் செய்வர். 40 வயதிற்குப் பிறகு மேற்படி பலன்கள் அநாயாசமாகச் சகல தனபாக்யாதிகளும் வலியச் சேரும். செவ்வாய் விசாகம் 3-லும் மூலம் 1-ல் சந்திரனும் இருக்க மேற்படி சந்திர திசையில் மொத்த வருஷமும் யோகம் நடக்கும். செவ்வாய் திசை 3 வருஷம் யோகம், அதன் பிறகு சகல கலஹமும் நாசமும் உண்டாகும். ராகுதிசை வெகு பிர பலம். அல்லது ரிஷபத்தில் ரோகிணி 2-ல் செவ்வா யிருந்தால் அந்தத்தெசை மத்தியில் கஷடம் தரும்.

எந்த லக்கினமானாலும் 2, 9, 10, 11 ஆகிய ஸ்தானங்கள் 4-லும் பலமுள்ள கிரகங்களிருந்தால் குபேரசமசம்பத்துடையவனுவன்.

சித்திரை 3-வது பாதத்தில் சந்திரனும் சுவாதி 2-வது பாதத்தில் செவ்வாயு மிருந்தால் திருடரால் தன நாசம் உண்டாகும். ஜீவனமு மவ்வழியே.

பூரட்டாதி 4 உத்திரட்டாதி 3 ரேவதி 3 இந்த நக்ஷத்திர பாதங்களில் ஒன்றில் சந்திரன் இருந்தால் சனி திசையில் அற்ப யோகம், பாலியத்தில பீடை பின் வயதில சுகம். இந்த ரேவதி 3-வது பாதத்திற்குச் சனிதெசை நேருவது கஷ்டம்; ஒரு சமயம் நேர்ந்தால் அவ் வயதில் சுகம் நேரும்.

மிருகசீரிஷம் 4-ல் சந்திரனுடன் புதன் கூடி யிருந்தால் விசேஷ யோகத்தை துலா லக்கின ஜாதக னடைவான்.

9 மாதி 11 மாதியுடன் கூடி 9, 11-ல் எங்கு இருந்தாலும் அல்லது 10-ல் இருந்தாலும் தனஞ் சேரும், 10 மாதி 9-ல் இருந்தால் அசுபக் கிரகமாயின் பிரயாசையாலும் சுபக்கிரகமாயின் பிரயாசையின்றியும் பொருள் தேடி ஜீவனம். 10 மாதியான மேற்படி கிரகம் பலஹீனமானல் பிறரைச் சேவித்து அற்ப திரவிய மடைவான். இதை ஜாதியினுலும் ஆண் பெண் கிரகத்தாலும் ராசிகளாலும் காரகங்களாலும் அறியவும்.

9 மாதி 6-ல் இருந்தால் அம்மா(ன்)னுல் பொருள் வரும். இதர கிரந்தங்களில் சத்துரு வல்லது கடனுல் பொருள் பாழாகும். 9 மாதி குருவானுலு மிப்படியே. லக்கினுதிபதிக்கு மிப் படியே நேரும் என்றுமுளது.

5-மாதி 9-ல் இருந்தால் புத்திரியை விவாகம் செய்துகொடுத்து மருமகன் பொருளால் ஜீவனம்.

பரணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷமே லக்கின மாக ஜனித்து 2-ல் சனியும் 10-ல் செவ்வாயும் 4-ல் குருவுமிருந் தால் வியாபாரத்தினுல் ஜீவனம்.

சர லக்கினங்களில் பிறந்து லக்கினத்தில் சந்திர சுக்கி ரிருந்து மேற்படி சுக்கிரன் கடைசி நவாம்சத்தில் இருந்து சனி யுடன் கூடினுலும் சனியால் சுக்கிரன் பார்க்கப்பட்டாலும் மத்திய வயதில் தன சம்பாதனே யுண்டாகும், மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இந் நான்கும் சர லக்கினங்களாகும்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமாகப் பிறந்து 1, 3, 10-மாதிகள் லக்கினத்தில் இருந்தால் உத்தியோக ஜீவனம். இவர்களே சனி நீச்சத்திலிருந்து பார்த்தா லும் பிரபல உத்தியோகம், வெகு கிராமாதிகார மிவற்ருல் ஜீவ னம். கஜானுதிகாரியுமாவர்.

சித்திரை நக்ஷத்திர முதலாவது பாதத்தில் சந்திரனிருந்து ரிஷப லக்கினமாகிப் பிறந்து 4-ஆம் இடத்தில் சனியும் புதனும் கூடியிருந்து மேற்படி சந்திரனுக்கேழில் குரு விருந்தால் சனி திசை முதல் யோகமேற்படும். ராஜாங்கத்தில் பிரபலமடைவான். சிலர் மதம் தரித்திர ஜாதகமென்பதாம்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 1, 3 மாதிகள் 10-லும் குரு 7-லு மிருந்தால் ராஜாங்க உத்தியோக ஜீவனம். மிதுன லக்கினம்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-லுள்ள குரு கேதுவுடன் கூடியிருந்து 1, 11-மாதிகள் லக்கினத்திலிருந்தால் 25 வயது முதல் ராஜாங்கத்தில் எழுத்து மூலம் ஜீவனம் நடக்கும்.

பரணி நக்ஷத்திரம் முதலாவது பாதத்தில் சந்திரனிருந்து மேஷ லக்கினமாகப் பிறந்து செவ்வாய் தசமத்திலும் சனி சப்த மத்திலு மிருந்தால் வெகு யோக ஜாதகன்; ராஜயோகமுடையவன். சந்திர திசை பிரபல ராஜயோகம் தரும். 10 லக்ஷத்துக்கதிக சம்பாதனே யுண்டாகும்.

சந்திரன் துலா ராசியிலிருக்கப் பிறந்து சனி 12-லும் குரு 6-லும் இருந்தால் 4-வது தெசை முதல் பூமியாலும் நானுவிதங்களா லும் பிரபல யோகமுண்டாகும். 5-வது தெசையில் விசேஷ சுக முண்டாகும். (மேஷ லக்கினம்)

புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-மாதி 11-லும் 1-மாதி 9-லுமிருந்து சனி 2-லுமிருந்தால் ஜாதகன் சனி திசை சூரிய புத்தியில் உத்தியோகமடைந்து கப்பல் வியாபாரப்பிரபுவால் விசேஷ தனமடைவான். தினந் தினம் விருத்தி யுடையவனுவன். (மேஷ லக்கினம்.)

சதயம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 3-லும் குரு லக்கினத்திலும் லக்கினுதிபன் 9-லுமிருந்தால் மேற்படி சனி திசை பிற்பாதி முதலாக விசேஷ யோகமடைந்து மாதம் 5000 தனம் சம்பாதனை யேற்படும். (ஷை லக்கினமே.)

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி குரு இவர்கள் 6 லும் ராகு 11-லுமிருந்தால் 3-வது திசை பிற்பாதி முதலாக வியாபாரத்தில் 10000 பொன் தேடுவார். (மேஷ லக்கினம்.)

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் செவ்வாயும் 2-ல் சுக்கிரனும் 11-ல் சனியுமிருந்தால் ராஜாங்கத்தில் பிரபல உத்தியோக ஜீவனம். வெளி தேசத்தில் பிரபலமாகும். (இது ரிஷப லக்கினம்.)

மிதுன லக்கின பலன்

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு உச்சத்திலிருந்து சனி 10-லிருந்தால் ஜாதகனுக்கு குரு தெசை முதல் பிரபல யோகமுண்டாகும்.மேற்படி தெசையில் $1\frac{1}{2}$ லக்ஷம் சம்பாதனை யேற்படும். சிலர் மதம் 50-ஆயிரம் வரை வியாபாரத்தினுல் சம்பாதிப்பானெனச் சொல்லப்படுகிறது.

பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 1, 2, 10 மாதிகள் கூடி 2-லிருந்தால் தினம் 400 அல்லது 500 அல்லது 1000 வரை வியாபாரம் செய்து ஜீவனம். $1\frac{1}{2}$-லக்ஷம் ஆஸ்தி சேர்ப்பார்.

மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 3, 4, 5, 10 மாதிகள் கூடி லக்கினத்திலிருந்தால் ஜாதகனுக்கு 3-வது தெசை முழுதும் (பிரபல) உத்தியோக சுகமூலம் ஜீவனம். 4, 5 வது தெசைகளில் கஷ்டம். இத்துடன் ராகு 6-ல் இருந்தால் அந்த தெசையில் உத்யோகம் நீச்ச ராஜ்ஜியத்தில் கிடைக்கும். பின் வயதில் பிரபல யோகம்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 3, 4, 5 மாதிகள் 4-லும் 10-மாதி 5-லுமிருந்தால் 2-வது தெசையிலிருந்து சகோதரியின் கணவன் மூலமாக உத்தியோக மடைவான்.

கடக லக்கின ஜீவன பலன்

அவிட்டம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10 மாதிகள் கூடி மகரத்திலிருந்தால் மூன்று நான்காவது திசைகளில் ஜல மார்க்க வஸ்து வியாபாரத்தில் விசேஷ தனமடைவான்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 4-மாதியுடன் கூடியிருந்தால் 36-வயது முதல் யோகமுண்டாகி 40-ல் வாகனாதி பாக்கிய முண்டாகும். இதற்கே 7-ல் சனியிருந்தால் பாலியத்தில் தரித்திர முண்டாகும்.

பூராட நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் ரவியும் செவ்வாயும் 4-ல் சனியுமிருந்தால் ஜாதகர் வெளி தேசத்தில் தீபாந்திரத்தில் மிலேச்சர் மூலம் 25-வயது முதல் தனமடைவார்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து,2-ல் ரவி குஜ புதரும் 1-ல் சனியுமிருந்தால் எப்போதும் லாபமடைந்தபடியே யிருப்பான். இத்துடன் சுக்கிரன் சித்திரை 3-ம் பாதத்தில் இருந்தால் புரோகித மூலமும் தேவி சக்தியாலும் விசேஷமாகச் சம்பாதிப்பான்.

கேட்டை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு செவ்வாய் 10-லும் சுக்கிர சூரியன் 11-லுமிருந்தால் சந்திர திசை முதல் யோகமும் செவ்வாய் திசையில் 1000-த்திற்கு அதிக சம்பாத்தியமும் நேரிடும். 3-வது தெசை முதல் சுகமுண்டானாலும் 4-வது தெசையில் கஷ்டங்களுண்டாகும்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் குருவும் 2, 10 மாதிகள் 5-லும் இருந்தால் யுக்திபாய்ப் பிரசங்கம் செய்தல் தேவ க்ஷேத்திராதிகாரம், வெகு கிராமாதிகாரம், இவைகளை யடைவான். மேற்படி 10-மாதியுடன் கேது கூடி யிருந்தால் அந்தத் தெசையில் வெகு பாக்கிய யோகம் உண்டாகும்.

அனுஷ நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து 11-மாதி 8-ல் இருந்தால் தீபாந்திர வஸ்துக்களைக் கிரய விக்கிரயங்கள் செய்வதன் மூலம் தனம் சம்பாதிப்பர்.

மகம் 3-வது பாதத்தில் ஜன்ம காலத்தில் சந்திரனிருந்து செவ்வாய் 3-லும் குரு சுக்கிரர் லக்கினத்திலுமிருந்தால் 16, அல்லது 25 இந்த வயது முதல் சொர்ண வியாபார மூலம் ஜீவனம். உத்தியோகமும் பொக்கிஷ சாலையில் நேரிடும்.

சிம்ம லக்கின ஜீவனம்

கிருத்திகை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 9-மாதி உச்சத்திலும் சனி 9-லும் குரு 12-லு மிருந்தால் 30 வயது முதல் தனலாபமுண்டாகும், வியாபார ஜீவனம்.

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-மாதி 4-லும் 1, 11 மாதிகள் 5-லும் இருந்தால் நீச்ச ராஜ்ஜியத்தில் உத்தியோக ஜீவனம்.

உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, 10-மாதி 3-லும் ராகு 12-லும் இருந்து குரு 10-லுமிருந்தால் ஜாதகர் 4-வது தெசை முதல் பிரபலமாக நீச்ச அரசாங்கத்தில் பற்பல தேசங்களும் திரிந்து அலேயும் உத்தியோக மடைந்து பிரபலமாக 53 வயதில் வேறு அரசாங்கத்தில் விசேஷ சுகபோகாதிகளடைவர். பின் வயதில் பற்பல வியாபாரமும் செய்து 10,000 பொன் ஆஸ்தியடைவர்.

பூராட நக்ஷத்திரத்தின் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 6-ல் 5-மாதியும் லக்கினுதிபதி 4-லும் இருந்தால், 25 வயது முதலாக உத்தியோகமடைவர். 30, 35 முதல் பிரசித்தி யேற்படும்; 40-க்குப் பிறகு 10000 சம்பாதனே யேற்படும். 46 வயதின் பிறகு சில சமயம் யோக பங்கமுண்டாகி உடனே யோகமுண்டாகி விடும். இத்துடன் 9-மாதியாவது 1-மாதியாவது சுக்கிரனுவது 10-மாதியுடன் பெலத்து 5-ல் இருந்தாலும் நீச்சக் கிரகம் 6-ல் இருந்தாலும் நீச்ச பங்க தெசையில் பிரபல யோகமேற்படும்.

கிருத்திகை நக்ஷத்திர 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 1, 10-மாதிகள் 12-லும் 9-மாதி 4-லுமிருந்தால் ரிஷப ராகு தெசையில் பிரபல வியாபார யோகமுண்டாகி வெகு பொருள்களே நான வழிகளிலும் தேடுவர், ஆதியில் பாலிய வயதில் தரித்திரம், 20, 25 முதல் பிரபல யோகம்.

கிருத்திகை நக்ஷத்திர 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு துலாத்திலும் சுக்கிரன் 8-ல் உச்சத்திலுமிருந்தால் வியாபார விருத்தி யும் 5000 தனலாபமு முடையவராவர்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-மாதி 6-ல் 6, 9-மாதிகளுடனிருந்து 5-ல் ராகு விருந்தால் 2-வது திசை முதலாக ராஜாங்கத்தில் பயிர்த் தொழில் உத்தியோகத்தில் மாதம் 5000 சம் பாதனை யேற்படும். ஒவ்வொரு தெசையும் பிரபலமாகும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு உச்சத்திலும் சனி கும்பத்திலுமிருந்தால் குரு தெசையில் மந்திர சாஸ்திரங்கற்றுத் தெரிந்துகொள்ளலும் மத்தியில் மேற்படி குரு தெசையில் கஷ்டமும் ஆதியிலும் முடிவிலும் அற்ப சுகமும் சனி தெசை புத புத்தி முதல் பிரபலமும் வித்யா கோஷ்டியில் விசேஷ லாபமும் தைவயோகங் காரணமாகத் தார வமிசத்தினல் திடீரென்று தன லாபமும் உண்டாகும். புத தெசையும் பிரபலமாக நடக்கும்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 4-லும் செவ்வாய் உச்சத்தில் ராகு கேதுக்களில் ஒருவருடனும் கூடின் சூரிய தெசை முதலாக யோகம் நடக்கும். சங்கீதமும், ஆந்திர பாஷா கவித்துவமும் ராஜ சபையில் பிரசித்தி தரும்.

ரேவதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 1, 2, 10 மாதிகள் 8-லும் 9-மாதி 1-லுமிருந்தாலும் 10-ல் கேது இருந்தாலும் கடுந் தண்டனையிடும் உத்தியோக ஜீவனம்,

அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-மாதி 11-லும் சனி 6-லும் 1-மாதி 4-லுமிருந்தால் தன் மூத்த சகோதரியின் புத்திரனும் உறவினரில் பிரபுவானவராலும் வியாபாரத்தில பிரபல மடைந்து ஜீவனம்.

கன்னியா லக்கின ஜீவன பலன்

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பூரம் 1-வது பாதத்திலுள்ள ரவியுடன் தசமாதிபதி கூடினலும் 9-மாதி லக்கினத்திலிருந்தாலும் அதாவது சுக்கிரன் சித்திரை 2-வது பாதத்திலிருந்தால் விசேஷ தனலாப முண்டாகும், இதற்கே ராகு 11, 3, 6 இந்த ஸ்தானங்களில் எங்காவதிருந்து சுபரால பார்க்கப்பட்

டால் 50,000 தனம் நிதி மூலம் யாராவது ஒரு சித்த புருஷன் மூல மாக மேற்படி ராகு தெசையில் யத்தினமின்றி அநாயாசமாக அடைவர்.

அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10 மாதிகள் 11-லிருந்தால் வியாபாரத்தில் வெளிதேச வஸ்திரம், சொர்ணம், ரத்தின மிவற்றைக் கிரய விக்கிரயம் செய்து விசேஷ தனம் தேடி ஜீவனம்.

ரேவதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 9-மாதியுடனும் கூடி யிருந்து அவருடைய தெசையும் வந்தாலும் 10 மாதி 5-லும் 10-ல் சனியுமிருந்தாலும் நானுவித வெளிதேச வஸ்துவை விக்கிரயம் செய்வதாலும், விக்கிரயம் கொள்வதாலும், சொர்ணரத்ன பரீக்ஷை யாலும் விசேஷ திரவிய லாப மடைவார். மாதம் 1000த்திற் கதி கம் சம்பாதனை ஏற்படும்.

ரேவதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10 மாதிகள் லக் கினத்திலும் குரு 7-லு மிருந்தால் தார வமிசத்தில் யோகமுண்டா கும், மாமனுர் மூலம் 25, 30 வயது முதல் விசேஷ உத்தியோக பாக்கியமுண்டாகும், ஆயுள்வரை சுக ஜீவனம்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 8 மாதி லக்கினத் திலும் 10 மாதி 12-லு மிருந்து சூரியனுடன் 10 மாதி கூடி யிருந் தால் துராலோசனையாலும், குரு மேற்படி சந்திரனுடன் கூடியிருந் தால் குரு தெசையில் ராஜ மந்திரியாகி 5000 தனம் சம்பாதனை மாதமுமடைந்து க்ஷேத்திர கிராமாதிபதி யாவர்.

கும்பராகியில் சந்திரனும் திருவோணம் 4-வது பாதத்தில் குரு வும் இருந்தாலும், லக்கினத்தில் புதனும் 7-ல் குஜனும் 4-ல் சனியு மிருந்தாலும் 20-வயதிற்குமேல் ஒரு கிராமத்திற் கதிகாரியாகி ஜீவனம். மத்திய வயதில் வாகனுதி பாக்கியங்க ளுண்டாகும். மேற்படி குரு தெசையில் நீச்ச ராஜ்ஜியத்தில் 36 வயது முதல் வெகு கிராமங்களுக்கும், பிறகு சர்வாதிகாரத்திற்கும் அதிகார முண்டாகும்,

துலா லக்கின ஜீவன பலன்

உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 9 மாதியும் 11 மாதியும் கூடி மேற்படி சந்திரனுக் கேழில் இருந்தாலும் செவ் வாய் கடகத்திலிருந்தாலும் நீச்ச ராஜ்ஜியத்தில் முதலில் சில கிராமங்

களுக் கதிகாரமும் கொஞ்ச காலமான பின்பு வெகு கிராமங்களுக் கதிகாரமும் ராஜ முத்ராதிகாரமு மடைந்து ஜீவனம். இதற்கே சுக்கிரன் 11-ல் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் வெகு யோக மானது மேற்படி திசையில் நடக்கும். 10,000 ஆயிரம் பொன் தேடுவார்.

உத்திர நக்ஷத்திரத்தின் 4-வது பாதத்தில் கன்னியா ராசியில் சந்திரனிருந்து 1, 11-க்குடையவர்கள் 5-லும் ராகு கன்னியிலு மிருந்தால் மேற்படி தெசையில் பிரபல வியாபாரத்தில் ஜீவனம். விசேஷ தனமுண்டாகும். 3 லக்ஷம் தனம் சேர்க்கை செய்வர்.

புனர்பூசம் 1-வது பாதத்தில் மிதுன ராசியில் சந்திரனிருந்து 6-ல் செவ்வாயும் 7-ல் சனியுமிருந்தால் உத்தியோகத்தினாலும் பூமி யாலும் ஆயுள்வரை ராஜாங்கத்தில் ஜீவனம்.

விருச்சிக லக்கின ஜீவன பலன்

மகர ராசியில் சந்திரனிருந்து 10 மாதி 10-ல் கேதுவுடனும் 8 மாதியுடனுமிருந்தாலும் மேஷத்தில் குருவும் ரேவதி 4-ல் சனியும் இருந்தாலும் 20, 25 வயது முதல் நீச்சப் பிரபுவிடத்தில் பத்திரிகா வாசகனாகி யிருந்து பிறகு 30 வயது முதல் 16 வருஷம் யோகமாக ஜீவனம் நடக்கும்.

உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி, புத, குரு, குஜ னிவர்கள் 11-ல் இருந்தால் 3-வது தெசை முதல் ராஜாங்கத் தில் பிரபல உத்தியோக ஜீவனம்.

அசுவனி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து தசமாதிபதி 4-லும் குரு 10-லும் செவ்வாய் மேஷத்திலு மிருந்தாலும் மேற்படி சூரிய னுடன் சுக்கிரபுதர் கூடியிருந்தாலும் சொர்ண ரத்ன பரீக்ஷையா லும் கிரய விக்கிரயங்கள் செய்வதாலும் விசேஷ தனலாபமுண் டாகி சுக ஜீவனம் நடக்கும்.

கிருத்திகை நக்ஷத்திர 4-வது பாதத்தில் சந்திரனிருந்து தச மாதிமதி ராகுவுடன் மிதுனத்தி லிருந்தாலும் லக்கினாதிபதி 11 மாதிபதி சனி இவர்கள் 11-ல் இருந்தாலும் நீச்ச ராஜாங்கத்தில் உத்தியோக ஜீவனம். மேற்படி சூரியன் ராகுவுடன் கூடாம லிருந்தால் வியாபார ஜவனம். வேறு சிலர் உத்தியோகம் வியா பார மிரண்டு மூலமும் ஜீவனமென்று சொல்லுகின்றனர்.

உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 2-மாதிபதி உச்சத்தில் 11-மாதியுடன் கூடியிருந்தாலும், 1, 7, 10 மாதி கூடி 10-ல் இருந்து கும்ப சனியால் பார்க்கப்பட்டாலும் சொர்ண ரத்ன பரீக்ஷை கிரய விக்கிரய மிவற்ருல் விசேஷ பாக்கியலக்ஷ்மியை யடைவர்.

ஜன்ம நக்ஷத்திரம் அசுவனியாகி அதன் 1-வது பாதத்தில் 45 விநாடி செல்லாகி அதில் சந்திரனிருந்து லக்கினதிபதி 7-லும் தசமாதிபதி 5-லும் சுக்கிரன் ராகுவுடன் கூடி 4-லும் இருந்தால் விவாகமான பிறகு 2-வது தெசை பிற்பாதி முதலாக நானுவித வஸ்து வியாபாரத்தினல் மாதம் 3000 தனம் தேடுவதுடன் ஷை ராகுவை, 2-ல் உள்ள சனி பார்த்தால் ஷை ராகு தெசை பூராவும் பிரபல கீர்த்தியும் கப்பல் வியாபாரப் பிரபுவின் சினேகமூலம் ஷை தெசை மத்தியில் 5000 தனலாபமும் ஒவ்வொரு மாதம் சம்பாதனை யேற்படும். மேற்படி தெசை முடிவில் கப்பல் வியாபார பிரபுவாகவே ஆவார்.

மகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி சுக்கிரர் 11-லிருந்தாலும், குரு செவ்வாய் ராகு இவர்கள் 9-லிருந்தாலும் சந்திர சூரியர் 10-ல் இருந்தாலும், சொர்ண வியாபாரமும் வட்டிக்கு விட்டுப் பணத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்வதாலும், 20, 25, 30, 35 இந்த வயதுகளில் மேலும் மேலும் வஸ்திர வியாபார விருத்தியாலும் தனமுண்டாகிச் சுக ஜீவனம் செய்வர்.

பூரட்டாதி நக்ஷத்திரத்தில் கும்ப ராசியில் சந்திரனிருந்து 7-ல் குஜனும் 10-மாதி 4-ல் ராகுவுடனும் கூடியிருந்தால் ராஜாங்கத்தில் ஒற்றர் வேலையினல் அதாவது (ஸி. ஐ. டி.) ரகசியமறியும் உத்தியோகத்தில் பிறரை ஹிம்சை செய்தும் பயமுறுத்தியும், கடின தண்டனையிட்டும் இரகசியங்களை வெளியாக்கிச் சத்துரு காரியங்களைக் கெடுத்தும் ஜீவனம். பின் வயதில் இரகசிய உத்தியோகத்தில் தலைமை யேற்படும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் சூரியன் குரு புதனிவர்கள் தனுசிலிருந்தால் ரத்னவியாபாரத்தினல் விசேஷ தனம் சேரும். ராஜாங்கத்தில் பொக்கிஷாதிகாரியாவர். ரத்தின வியாபாரம் காரணமாக அஷ்டமாதிபதி தெசையில் தீபாந்திரம் செல்வார். இதற்கே கேது மேற்படி சந்திரனுடன் கூடி யிருந்

தால் அந்தத் தெசையிலும் விசேஷ (சுக) பாக்கியங்க ளுண்டாகும்.

உத்திரட்டாதி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-மாதி 11-லும் 10-ல் புதனு மிருந்தால் வியாபாரத்தினுல் ஜீவனம். 33-ல் வியாபாரத்தில் நஷ்டமுண்டாகிப் பின் 34, 37-ல் கடன் நிவாரணையாகி 47-வயது முதல் விசேஷ வியாபார சுகமுண்டாகும்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினுதிபதி 8-லும், சூரியன் 10-லும், சனி 4-லு மிருந்தாலும், லக்கினத்தில் குருவும் 12-ல் கேதுவுமிருந்தாலும் தேசந் தேசமாகச் சஞ்சரித்துப் பிரசங்கங்கள் செய்வதாலும் சிஷ்யர்களாலும், ராஜாங்கத்தினுலும் ஜீவனம். மேற்படி 5-வது தெசையில் எப்போதாவது ஒரு சமயம் சித்த புருஷன் மூலமாக 3000 பொன் நிதி லாப முண்டாகும்.

தனுசு லக்கின ஜீவன பலன்

மேஷ ராசியில் சந்திரனிருந்து 10, 11 மாதிகளுடனும் கூடியிருந்தாலும், 9-ல் செவ்வாயிருக்க 3-ல் சனி குரு கூடியிருந்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டாலும் நீச்சப் பிரபுவினிடம் தன் சகோதரியின் புத்திரன் மூலமாகச் சில கிராமங்களில் சஞ்சார உத்தியோகம் அடைந்து பிறகு தானே வெகு கிராமாதிகாரியாகவு மாவார்.

அசுவனி நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பஞ்சமாதிபதியான செவ்வாயும் மேற்படி சந்திரனுடன் கூடியிருந்தால் மங்கள யோகம் காரணமாக 27-வயதிற்குப் பிறகு யோக மேற்படும். அரசாங்கத்தில் உத்தியோகத்தில் சுகமும் முப்பது வயதிற்குமேல் வெகு கிராமாதிகாரமு மடைந்து 50-வது வயதில் 20-ஆயிரம் சம்பாதனே யேற்படும். மேற்படி சந்திரனுடன் தசமாதிபதியும் கூடின் விசேஷ யோகமேற்படும்.

ரிஷப ராசியில் சந்திரனிருந்து லக்னுதிபதி 7-லும் 9, 10 மாதிகள் லக்கினத்திலு மிருந்தால் 25-வயது முதல் உத்தியோகமும் 30-வயதிற்குப் பிறகு உத்தியோகப் பிரசித்தியும் ஏற்படும்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10-மாதிகள் 7-லும், 1, 11-மாதிகள் 5-லு மிருந்தால் முத்து வியாபாரத்தினுல் தேசா தேசங்கள் சென்று விசேஷ வியாபாரத்தினுலும் பிறகு ரத்னம் தானியம் வஸ்திரம் இவைகளாலும் நான விதங்களாலும் நித்தியம் 600 அகிலது 1000 மல்லது 400 வரை கிரய விக்ரயங்கள் செய்து ஜீவனம்.

துலா ராசியில் சந்திரன் விசாகம் 2-வது பாதத்திலிருந்து குரு ரேவதி 4-வது பாதத்திலும் தசமாதிபதி பஞ்சமாதிபதியுடன் 3-லும் இருந்தால் சாஸ்திர அலங்கார நாடக காவியாதிகளால் ராஜாங்கத்தில் பிரபல ஜீவனம்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 11 மாதிகள் லக்கினத்திலும் குரு 10-லு மிருந்தால் மீனத்தில் சனியிருந்து இவர்களைப் பார்த்தாலும், 2-ஆம் இடத்தில் தசமாதிபதியும் பஞ்சமாதியு மிருந்தாலும் எழுத்து உத்தியோகத்தில் ஜீவனம். 20 வயதிற்கு மேல் உத்தியோகமும் 25-ல் உத்தியோக ஹானியும் 26-ல் நீச்சப் பிரபுவால் உத்தியோகமும் 27-ல் பிரசித்தியும் 36-ல் உத்தியோக ஹானியும் 40-முதல் யோகமும் உண்டாகி ஆயுள்வரை ஜீவனம் சுகமாக நடக்கும்.

உத்திரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 1-ல் சனியும், 1, 9, 10 மாதிகள் 7-லும் இருந்தால் 20-வயது முதல் எழுதுவதில் ஒரு கிராமாதிகாரமும் 30-வயது முதல் பிரபல உத்தியோக பாக்கியமும் ஜீவனம் ஆகும்.

மகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-ல் 9, 10-க்குடையவர்கள் கூடினுலும், 11-ல் 2, 11-க்குடையவர்கள் கூடினுலும் 20-அல்லது 25-வயது முதல் சொர்ண வியாபாரத்தில் விசேஷ தனம் சம்பாதனை யேற்படும், 10,000 பொன் சேர்ப்பான்.

மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10-க்குடையவர்கள் 9-லும் குரு 5-லுமிருந்து 11-ல் சுக்கிரனிருந்தால் வெளிதேச வஸ்துவைக் கிரய விக்ரயம் செய்து ஜீவனம், வெகு பாக்கிய யோக முண்டாகும்.

மகர லக்கின ஜீவன பலன்

மேஷ ராசியில் சந்திரனிருந்து, 9, 10, 11 மாதிகள் 11-லும் சனி 5-லுமிருந்தால் தேசாந்தரத்தில் தனம் சேர்ப்பர்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனும் 2-வது பாதத்தில் சனியுமிருந்து 10-மாதி 5-லும் 11-மாதி லக்கினத்திலு மிருந்தால் ராஜாங்கத்தில் எழுத்து உத்தியோக ஜீவனம்.

திருவாதிரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 9, 10-க்குடையவர்கள் லக்கினத்தில் இருந்தால் இவர் தன் தாயாதிகளுள் பிரசித்தனுகிச் சத்ரு ஜிதனுகி சொர்ண ரத்ன வியாபாரத்தினுல் பாக்கிய யோகமுண்டாகி ஜீவனம் செய்வர். இதற்கே லக்கினுதிபதி 12-ல் இருந்தால் அவர் திசையில் பிற்பாதி முதல் யோகத்தினுல் வியாபாரமும், மேற்படி 9, 10 மாதிகள் தெசையில் விசேஷ சம்பாத்துமுண்டாகும்.

மகர ராசியில் திருவோணம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சித்திரை 3-வது பாதத்தில் சுக்கிரனும், சனி உச்சத்திலும் இருந்தால் பயிர்த்தொழிலும் கிராம காரிய விசாரணே உத்தியோகமும் அடைவான். மாதம் 200 சம்பாதனே ஏற்படும்.

கடகராசியில் பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினுதிபதி தசமத்தில் ரவி கேது இவர்களுடன் கூடினுலும் எதிர்கால ஸ்தானுதிபதியான சுக்ரன் லாபாதியுடன் கூடி 11-ல் இருந்தாலும் 4-ல் ராகு இருந்தால் ஜோதிடத்தினுலும், மந்திர சாஸ்திரத்தினுலும் க்ஷேத்திர பிரபுவாலும் ஜீவனம். பயிர்த்தொழிலில் விசேஷ லாபமும் யோகமும் ஏற்படும்.

மிதுன ராசியில் திருவாதிரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து தசமாதிபதியும் சந்திரனுடனிருந்து 9-ல் சனியும் 3.ல் செவ்வாயுமிருந்து மேற்படி தசமாதியை இவர்கள் பார்த்தால் ராஜ சேவையால் ஜீவனமுண்டாகும்.

ரிஷப ராசியில் ரோகிணி நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 1, 9, 10 மாதிகள் லக்கினத்திலேயே யிருந்து செவ்வாய் 5-லு மிருந்தால் சொர்ண மணி ரத்ன பரீக்ஷைகளே 21-வயது முதல் சுதந்திரமாக நடத்தி 3-வாகனுதி பாக்கியமடைந்து 50.ஆயிரம் தனம் சம்பாதிப்பான்.

கும்ப லக்கின ஜீவன பலன்

விருச்சிக ராசியில் கேட்டை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினுதிபதி 8-லும் குரு 9-லும் செவ்வாய் 5-ல் புதன் வீட்டிலு

மிருந்தால் சாஸ்திர புராண சுருதி ஸ்மிருதிகளை அறிந்து தத்துவங் களைப் போதிப்பதாலும் பற்பல பிரபுக்களாலும் ஜீவனம், மேற்படி செவ்வாய் தெசையில் விசேஷ பிரபலமுண்டாகும்-

ரிஷப ராசியில் ஜன்மகாலத்தில் ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினாதிபதி 12-லும், 10-மாதி 7-லுமிருந்து மேற்படி சனி உத்திராடம் 2-வது பாதத்திலு மிருந்தால் வெகு ஜனங்களால் கவுரவிக்கப்பட்டுச் சத்திர சாமர வைபவாதிகளுட னும் சதுரங்க பலமுடையவனாகவுமாகி ராஜயோக ஜீவனம். மேற்படி ராசியில் சந்திரன் மிருகசீரிஷம் 2-வது பாதத்தில் இருந் தாலும் மேற்படி யோகத்தையே சொல்லுகின்றனர்.

தனுசு ராசியில் மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 10-மாதியான செவ்வாய் 3-லிருந்து லக்கினாதிபதி 11-ல் மேற்படி சந்திரனுடன் கூடியுமிருந்து லக்கினத்தில் அஷ்டமாதிபதி யிருந் தால் பாபச் செய்கை மூலமும்,கடின தண்டனையாகத் தண்டிக்கும் உத்தியோக மூலமும், வியாபார மூலமும் ஜீவனம். ஆயுள்வரை அபகீர்த்தியு முண்டாகும்.

மிதுன ராசியில் திருவாதிரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மேற்படி 3-வது பாதத்தில் 6-நாழிகை செல்லுமாகி ஜன்மகால தெசையில் நிலுவை 7-வருஷமல்லது 7½-வருஷமிருந்து லக்கினாதி பதி 11-ல் இருந்து மேற்படி சந்திரனுடன் செவ்வாயிருந்து லக்கி னத்தில் குருவுமிருந்தால் கடின தண்டனை யிடுவதாலும் துணிச்ச லான கிருத்தியங்களாலும் வியாபாரத்தினாலும் 20,000-த்திற்கு மேல் சம்பாதனை யேற்படும்.

மகர ராசியில் உத்திராடத்தின் 4-வது பாதத்தில் சந்திர னிருந்து 1, 10-மாதிகள் 3-லும் குரு 10-லுமிருந்தால் நியாயவழி யில் நானா வழிகளிலும் நானா தேசத்திலும் எழுத்து உத்தியோகத் தில் சஞ்சார ஜீவனம்.

சிம்மராசியில் பூரம் 2.வது பாதத்தில் சந்திரனிருந்து சனி செவ்வா யிவர்கள் கூடி புதன் வீட்டில் இருந்தால் சூத்திரப் பிரபு விடம் எழுத்துமூல உத்தியோக ஜீவனம்.

மிதுன ராசியில் திருவாதிரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து புதனுடன் கூடிய செவ்வாய் 7-ல் சிம்மத்திலும் சனி 5-ல் மிதுனத்

திலு மிருந்தால் எழுத்துமூலமான உத்தியோக ஜீவனம் அரசாங் கத்தி லுண்டாகும்.

மேற்படி மிதுன ராசியிலேயே மிருகசீரிஷ நக்ஷத்திரத்தின் 3-வது பாதத்தில் சந்திரனிருந்தால் மூன்றுவது தெசையில் பிரபல உத்தியோக சித்தி ஏற்படும்.

மேற்படி மிதுன ராசியிலேயே திருவாதிரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து தசமாதிபதி உச்சத்திலும் லக்கினுதிபதி லாபத்திலு மிருந்தால் குருவாலிவர்கள் பார்க்கப்பட்டாலும் குருவுடன் கூடி யிருந்தாலும் உத்தியோக ஜீவனம்.

கும்ப ராசியில் பூரட்டாதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 9-லும் 10-மாதிபதியான செவ்வாய் சூரியனுடன் கூடி மேஷத்திலு மிருந்தால் அரசாங்கத்தில் 18-அல்லது 20-வயது முதல் உத்தியோகமும் நல்ல புகழுமடைந்து முதலில் சில அல்லது ஒரு கிராமாதிகாரமும் 30-க்கு மேல் பிரசித்தியும் 35, 40, 50 இந்த வயதுகளில் தினந்தினம் பிரசித்த விருத்தியும் பிரபலமுமடைவார்.

கன்னியா ராசியில் ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து தசமாதிபதி சுய க்ஷேத்திரத்திலும் சனி 11-லுமிருந்து குரு ராகு இவர்கள் லக்கினத்திலு மிருந்தால் வியாபார விருத்தியினுலும், கூடப்பூமி விசாரணையாலும் ஜீவனமுண்டாகும்.

கன்னியா ராசியிலேயே சித்திரை 1-வது பாதத்தில் சந்திர னிருந்து செவ்வாய் மீனத்திலும் குரு விருச்சிகத்திலு மிருந்து சனி மேஷத்தில் சுக்கிரனுடன் கூடியிருந்தால் புரோகித ஜீவனம். பூமியாலும் சுகம். இஷ்டமான காரியங்களைச் செய்தலாலும் சுகம் தரும்.

கடக ராசியில் சந்திரன் புனர்பூசம் 4-வது பாதத்தில் இருந்து சனி கும்பத்தில் லக்கினத்திலும், செவ்வாய் மேஷத்தில் புதனுடன் கூடியுமிருந்தால் சில காலம் எழுத்து உத்தியோக ஜீவனமும் பிறகு வியாபார ஜீவனமு முண்டாகும்.

சிம்ம ராசியில் மகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கி னுதிபதியான சனி 6-லும், செவ்வாய், புத, சுக்கிர, குரு, ராகு இவர்களுடன் கூடி 10-லும் இருந்தால், வேதம், மந்திரம், ஜோதிடம் இவைகளில் நல்ல புத்திமானுகிச் சுக ஜீவனம்.

பிரபுக்களிடமும் அரசர்களிடமும் மதிப்புண்டாகும். ராஜயோகமு முண்டாகும்.

மேஷ ராசியில் அசுவனி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கிஞதிபதி 11-லும் செவ்வாய் லக்கினத்திற்கு 2-ஆம் இடமான மீனத்திலும் இருந்தால் ராஜ வசியத்தினுல் உத்தியோக ஜீவனம், பிரபல உத்யோக ஜீவனமும் ஆகும்.

ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரன் கன்னியா ராசியிலிருந்து தசமாதிபதி துலாத்திலும் சனி 5-ல் மிதுனத்திலுமிருந்தால் வியாபாரத்தினுல் 50-ஆயிரம் தனமடைவான்.

மீன லக்கின ஜீவன பலன்

மீன ராசியில் உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 10 மாதி 7-லிருந்தால் வியாபாரத்தினுல் ஜீவனம்.

மீன ராசியில் பூரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கிஞதிபதியான குரு 2-லும் 9-மாதி 11-ல் சனியுடனிருந்தாலும், அல்லது புத சுக்கிரர் கன்னியி லிருந்தாலும், வியாபாரத்தினுலும், எழுதுவதினுலும், யுக்தியாய்ப் பிரசங்கங்கள் செய்வதாலும் ஜீவனம்.

தனுசு ராசியில் மூலம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு கும்பத்தில் ராகுவுடனிருந்து 10 மிடத்தில் சனி புதனிருந்தால் வியாபார ஜீவனம்.

கடக ராசியில் பூசநக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து குரு ரேவதி 4-வது பாதத்திலிருந்தாலும், தனுசில் சூரிய புதரிருந்தாலும் உத்தியோக ஜீவனம், 2-வதான தெசை புத தெசையாகி மேற்படி புத தெசை வந்தால் சில காலம் தேவாலய திரவியத்தினுல் ஜீவனம் ஏற்படும்.

கும்ப ராசியில் அவிட்டம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு மேஷத்திலும் சனி சுக்கிரர் மகரத்திலுமிருந்தால் கிருத்யா கிருத்தியங்களையறிந்து விவேகத்துடன் வியாபாரம் செய்து சர்வதா தனலாப முடையவனுகி சுக ஜீவனம் ஏற்படும்.

சிம்ம ராசியில் மகம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு மீனத்தில் லக்கினத்திலும், தசமத்தில் சூரியனும் இருந்தாலும், சனி 9-லும் செவ்வாய் 11-லுமிருந்தாலும் சோதிடத்தாலும் உத்தியோகத்தினுலும் ஜீவனம்.

மகர ராசியில் உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு தசமத்தில் தனுசிலும் இருந்தால் படிப்படியாகப் பிரபல உத்தி யோக சித்தி ஏற்படும்.

மீன ராசியில் உத்திரட்டாதியின் 3-வது பாதத்தில் சந்திர னிருந்து குரு மிதுனத்திலுமிருந்தால் 25-வயது முதல் உத்தியோக ஜீவனம்.

மீன ராசியில் உத்திரட்டாதியில் சந்திரனிருந்து குரு புத சுக்கிரர் கன்னியிலிருந்து ஜன்ம லக்கினம் மிதுனமானல் 10-ல் செவ்வாயும் இருந்தால் பிரசங்கம் செய்தல் பிரபல உத்தியோக மிவற்ருல் ஜீவனம்.

சூரியன் 2-ஆம் இடத்திலிருந்து (ராகு கேதுவுடனல்லது 2-ல்) சனியுடனுமிருந்தால் கஷ்டத்தால் ஜீவனம். 2-ஆம் இடத்தில் புத னிருந்து குரு 8, 6, 10 இவ்விடங்களில் எங்கிருந்து மேற்படி புதனைப் பார்த்தாலும் முன் தனமிருந்தால் அழித்துவிடுவான்.

நான்கு கேந்திரங்களிலும் 4 கிரகங்கள் சுய க்ஷேத்திர கேந்திரங்களில் இருந்தாலும் கேந்திரங்களில் 3-அல்லது நான்கு கிரகங்கள் உச்சங்களிருந்தாலும் ராஜ வமிசத்தில் பிறந்தவர்கள் ராஜ பதவி யடைவார்கள் அல்லாத மற்ற வமிசத்திற் ஜனித்தவர் கள் ராஜ சமதன மடைவார்கள். இந்தக் கிரக அமைப்புச் சர லக்கினங்களாகிய, மேஷம் கடகம், துலாம், மகர மிவைகளுக்கு மட்டும் தான் நேரும்.

நாலாமிடத்தில் சனியிருந்தால் மாயத்தினலும், சூதினலும், கபடத்தினலும், புதனிருந்தால் உபாயத்தினலும், குருமதியிருந்தால் சாஸ்திர ஆராய்ச்சியாலும், மேற்படி 4-ல் குரு ரவி இருந்தால் நீதி மார்க்கத்தினலும், குரு சனி கூடினலும் பார்த்தாலும் பஞ்சு, எள்ளு இவற்றின் மூலமும், குரு சுக்கிரர்கூடினல் ராஜ ஸ்திரீ யாலும், அரசனுக்கிஷ்டமான ஸ்திரீயாலும் தனமடைந்து ஜீவனம். மதி என்று சந்திரனுக்கும் ரவி என்று சூரியனுக்கும் பெயராகும்.

கிரகமாலிகா யோக மேற்பட்டால் 35-வயதிற்குப் பிறகு சம்பாத்தியமும் சம்பத்துமுண்டாகும். சுபம்.

ஜீவனபாவம் முற்றிற்று.

ஆயுர்த்தாயம்

அல்லது

அஷ்டமபாவம்

பாலாரிஷ்டம்

லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி லக்கினதிபதி இவர்கள் பாபர்களுடன் கூடியிருந்தாலும் அல்லது பார்க்கப்பட்டாலும், நீச்ச, மூட, அஸ்தங்கத தோஷமடைந்து பாப க்ஷேத்திரத்தில் ராகு கேதுக்களுடன் கூடியிருந்தாலும் இவர்களுக்குச் சுபர் திருஷ்டி யில்லாதிருந்தாலும் ஆயுள் குறையும் அல்லது ஆயுளில்லா மல் போய்விடும்.

ஜன்ம காலத்தில் லக்கினத்தில் குரூரக் கிரகமிருந்து லக்கினதிபதியும் குரூரருடன் கூடினலும் சந்திரன் பாபருடன் கூடி பாபக்ஷேத்திரத்தில் இருந்து சுபர்பார்வையை அடையாதிருந்தாலும், அஷ்டமாதிபதியும் பாபர் சம்பந்தமடைந்து சுப திருஷ்டியடையாதிருந்தாலும், லக்கினத்திற் கிருபுறமும், லக்கினத்திற் கேழாமிடத்திற் கிருபுறமும் பாபரிருந்தாலும் ராசி சந்திகளில் பிறந்தாலும் ஆயுள் குறைந்துவிடும், அல்லது சீக்கிர மரணமுண்டாகும்.

தேய்பிறைச் சந்திரன் எட்டிலும் ஏழில் செவ்வாயும் இருந்து, லக்கினதிபதி பலஹீனனகி இரண்டாம் அம்சத்திலிருந்து பூசம் பூராட மிவற்றில் பிறந்தாலும்,

தேய்பிறைச் சந்திரன் விருச்சிகத்திலிருக்க 7-ல் சனியிருந்து கடகம், மகரம், மீனம், இவைகளில் எதிலாவதொன்றில் ஜனனமாகி இருந்தாலும்,

க்ஷீணச் சந்திரன் ஆறில் அல்லது எட்டில் அல்லது பன்னிரண்டில் இருந்து திரிகோணங்களில் குரு ரவி கூடியிருந்தாலும் க்ஷீணசந்திரன் 1-4-7-10-ல் இருக்க சுபர் கூடாதிருந்தாலும் இதற்கே 8-ல் பாவரிருந்தாலும் 2-நாள் ஆயுளே உண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற் கெட்டில் சுபரிருந்து சூரியசந்திர ரிருவரும் ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 3-வது நக்ஷத்திரத்தில் இருந்து இவருடன் கேது கூடினல் பிறந்த 3 நாளிலும்,

ஜன்ம லக்கினத்திற்கு 3-ல் சூரியசந்திர ரிருந்து செவ்வாய் கடகாம்ச மடைந்தால் பிறந்த 4-நாளிலும் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 4-ல் சூரியனும் திரிகோணத்தில் பாவ ருடன் கூடி சந்திரனும் இருக்கில் ஐந்து நாள் ஆயுளும்,

ஜன்ம லக்கினம் எதுவானலும் லக்கினத்தில் செவ்வாய் சூரிய னிவர்களிருந்து இவர்களுக் கேழில் சந்திரனுமிருந்து மேற்படி லக்கினதிபதி மூடமானல் 6 நாள் ஆயுளும்,

ஜன்ம லக்கினத்திற்குக் கேந்திரங்களில் சூரியன், சனி செவ்வா யிவர்களிருந்தால் 10 நாள் அல்லது 10 மீ அல்லது 10 வருஷம் ஆயுளும் உண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 5-7-12 இவ்விடங்களில் சூரியன், சந்திரன், சனி இவர்கள் இருந்தால் பிறந்த ஜாதகன், தன் தகப் பன், தாய், இவர்களையும் நாசம்செய்து தானும் நாசமாவான்.

ஜன்ம லக்கினத்திற்கு 6-8-12-ல் சந்திரனிருந்து குரூரக் கிரகங் களால் பார்க்கப்பட்டும் இருந்தால் ஸத்தியோரிஷ்டம் நேரிடும். மேற்படி சந்திரன் சுபர்களால் பார்க்கப்பட்டிருந்தால் 8-வருஷம் வரை ஆயுளுட னிருப்பார்கள். வக்கிரமடைந்த சுபர்கள், குரூரர் களால் பார்க்கப்பட்டிருந்தாலும் இதற்கே லக்கினத்தில் ஒரு சுபருமில்லா திருந்தாலும் பிறந்த சிசு ஒரு மாதம்வரை உயிருட னிருக்கும்,

ஜன்ம லக்கினத்திற்கு ஐந்தில் சூரியன், சனி, சந்திரன், செவ் வாய் இவர்கள் இருந்தால் அந்த ஜாதகனுடைய தாயும் சகோதர ரும் சீக்கிரமே மரணமடைவர்.

ஜன்ம லக்கினத்தில் செவ்வா யிருந்து பாபரால் பார்க்கப் பட்டு இருந்தாலும் அப்போது அஷ்டமத்தில் பாபரிருந்தாலும் லக்கினத்திற் கிரண்டில் பாபரிருந்தாலும்,

ஜன்ம லக்கினத்தில் செவ்வா யிருந்து 7-ஆம் இடத்தில் சனி யிருந்தாலும் அல்லது ஜன்ம லக்கினத்தில் சனியும் சப்தமத்தில் செவ்வாயு மிருந்தாலும், 2, 8-ஆம் இடங்களில் பாபரிருந்தாலும்,

சந்திர சூரியருடைய ராசிகள் இவ்வாருகிச் சந்திர சூரிய ரின் கூட ராகு கூடியிருந்தாலும் சனி செவ்வா யிவர்களால் லக்

கினம் பார்க்கப்பட்டாலும் அப்போது பிறக்கும் சிசு ஒரு பக்ஷம் தான் உயிருடனிருக்கும்.

ஜன்ம லக்கினத்திற்குப் பத்தில் சனியும், ஆறில் சந்திரனும், செவ்வாய் 7-லும் இருந்தால் ஜனித்த சிசு தாயாருடன் கூட மரிக்கும்.

ஜன்ம லக்கினத்தில் சனியும், 8-ல் சந்திரனும் 3-ல் குருவு மிருந்தால் சிசு சீக்கிரமே மரித்துவிடும்.

ஜன்ம லக்கினத்திற்கு 9-ல் சூரியனும், 7-ல் சனியும், 11-ல் குரு சுக்கிரரும் இருந்து, சூரிய ஓரையிலும் ஜனித்தால் சிசு ஒரே மாதம் தான் உயிருடனிருக்கும்.

ஜன்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில் (எல்லா கிரகங்களும் இருந்தாலும்,) சூரியன் சுக்கிரன் சந்திரன் ராகு இவர்களிருந்தா லும், வெகுவாக, சிசு நாசத்தை யடையும், இவர்கள் பார்த்தாலு மிப்படியே யாகும்.

பாருடன் கூடிய சந்திரன் ஜன்ம லக்கினத்திலாவது, லக்கி னத்திற்கேழா மிடத்திலாவது, ஒன்பதாமிடத்திலாவ திருந்து சுபரால் மேற்படி சந்திரன் பார்க்கப்படாம லிருந்தால் சிசுவுக்கு மரண முண்டாகும்.

சந்தியா காலத்தில் அதாவது சூரியன் உதயமாகி பாதி மண் டலம் தெரிய ஆரம்பிப்பதற்கு முந்தி 3 நாழிகையும், அஸ்தமன காலத்தில் சூரியன் பாதி மறைய ஆரம்பிப்பதிலிருந்து 3-நாழிகை யும் ஆகிய சந்தியா காலத்தில் சந்திர ஓரையிலும், கண்டாந்தத்தி லும், பிறந்தால் மரணமுண்டாகும், மேலும் அப்போது சந்திரனும் பாபருடன் கூடி கேந்திரங்களி லிருந்தால் வெகுசீக்கிரமாகவே மரணமுண்டாகும்.

சக்கிர பூர்வ, அபரார்த்தங்களென்கிற ராசி சக்கிரங்களில் குரூரர்கள் இருந்தாலும்,

கடக விருச்சிகங்கள் லக்கினங்களாகி சுபர்கள் குரூரர் களுடன் கூட மேற்படி லக்கினத்தி லிருந்தாலும், மரணமே யுண் டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 6-12 ஆம் இடங்களில் பாபரிருந்தா லும் 8-ஆம் இடம், 2-ஆம் இடம் இவ்விடங்களி லிருந்தாலும் லக் கினம் இரண்டு பாபர்கள் மத்தியிலிருந்தாலும் பாலாரிஷ்டத்தினால் மரணமுண்டாகும்.

லக்கினம், சப்தமம், சந்திரன், இவைகள் பாபருடன் கூடி னும் சுபர்களால் பார்க்கப்படாதிருந்தாலும் சீக்கிரமாகவே மரணமுண்டாகும்.

க்ஷீணசந்திரன் ஜன்ம லக்கினத்திலும் பாபர்கள் கேந்திர (அஷ்டம்)ங்களிலு மிருந்தாலும் அந்த ஜாதகன் சீக்கிரமாகவே மரணத்தை யடைவான்.

சந்திரன் பாபர்களுடன் கூடி யல்லது பாபர் மத்தியிலிருந்து லக்கினத்தினின்றும் எட்டு, ஏழு பன்னிரண்டு இந்த ஸ்தானங் களில் இருந்தாலும் லக்கினத்திலேயே பாபருடன் பாபர் மத்தியி லிருந்தாலும் வெகு சீக்கிரமாகவே மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற் கிருபுறமும் பாபர்களிருந்து சந்திரனும் (மேற்படி) பாபர் மத்தியில் இருந்தாலும் ஏழு எட்டு இந்த ஸ்தா னங்கள் பாபருடன் கூடினும் பிறந்த பிள்ளை தாயுடன்கூட மரிக்கும்.

ஜன்ம லக்கினத்தினின்றும் (8, 9, 12 இந்த ஸ்தானங்களில்) செவ்வாய், சூரியன், சனி இவர்களிருந்து சுபர்களாலும் பார்க்கப் படாதிருந்தால், ஜாதகன் நிச்சயம் சீக்கிரமாக மரண மடைவான்.

குரூரக் கிரகங்கள் எந்தத் திரேக்காணத்தி லிருந்தாலும் எந்த லக்கினமானாலும் க்ஷீணசந்திரன் அந்த லக்கினத்திலிருந்தால் ஜீவித் திருப்பவனும்கூட சத்யோரிஷ்ட மடைவான்.

ஜன்ம லக்கினத்தி லிருந்து 3-6-9-12 ஆகிய ஸ்தானங்கள் ஆபோக்லீமங்க ளென்னப்படும் பெயருடையது. இவைகளில் எல்லாக் கிரகங்களுமிருந்து மேற்படி கிரகங்கள் பலமற்றவர்களா யிருந்தால் 2 மாத மல்லது 6 மாதம்தான் சிசு ஜீவித்திருக்கும்.

ஜன்ம லக்கினத்திற்கு 8 மாதி 12 மாதியுடன் கூடி 3 லேயே யிருந்து ராகுவின் பார்வையை யடைந்திருந்தால் ஜனித்த 7-வது மாதத்தில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 4-ல் 7-மாதிபதி பாபருடன் கூடி யிருந்தாலும் சுபருடன் கூடாமலிருந்தால் ஜனனமான 7-நாளி லேயே மரண முண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 7-மாதிபதி 12-ல் 9-மாதிபதியுடன் கூடியிருந்தாலும் ராஜ்ஜியாதிபதியால் பார்க்கப்பட்டால் பிறந்த ஒரே இரவில் மரண முண்டாகும்.

ஷஷ்டாஷ்டமங்களில் சுபர் இருந்து ஷை ஸ்தானங்களில் ஒன்று சூரியனுடைய ஸ்தானமாகி சந்திரனால் பார்க்கப்பட்டிருந்தால் மரணமே யுண்டாகும். இத்துடன் உதய லக்கினத்தில் கேது இருந்தால் பிறந்த இரண்டாவது மாதத்தில் உயிர் பிரியும்.

ஜன்ம லக்கினத்தில் சனி யிருந்து ஷை சனி பாபருடனும் கூடியிருந்தால் ஜனித்த பதினாறுவது வருஷத்தில் மரணம் நேரிடும். இவர்களைப் பாபர்களே பார்த்தால் ஒரே வருஷத்தில் மரண முண்டாகும்.

6-8-ஆம் இடங்களில் சந்திரனிருந்து பாபரால் பார்க்கப்பட்டால் சத்தியோ மரணமும் சுபர்களால் பார்க்கப்பட்டால் ஆயுள் எட்டுவருஷமும், சுபர் பாப ரிவ்விருவர்களாலும் பார்க்கப்பட்டால் ஆயுள் நான்கு வருஷமும் ஏற்படும்.

ஜன்ம லக்கினத்திற்கு மூன்றுமிடத்தில் சந்திர சூரியரிருந்து, அந்த ஸ்தானம் மீனமுமாகின் வியாதி யேற்பட்டுப் பிறந்த மூன்றும் நாளிலேயே மரணமுண்டாகும்.

சந்திரன் சூரியனுடன் கூடி 5-9-ஆம் இடங்களி லிருந்துவிடின் இருபது நாளுக்குமேல் சிசு ஜீவித்திராது.

சூரியன் பாப ஹோரையிலிருந்து குருவும் கேந்திரங்களில் இல்லாவிடில் லக்கினத்தில் மற்றவர்களில் எவரிருந்தாலும் பிறக்கும் சிசு மரணத்தை யடையும்.

வெகு கிரகங்கள் கூடி எட்டா மிடத்தின் சந்தியி லிருக்கும் போது எந்த ஜாதகன் பிறந்தாலும், ராசி சந்தியில் ஜனித்தவனுக்கு வெகு கிரகங்கள் எட்டா மிடத்திலிருந்தாலும், அந்த ஜாதகன் பிறந்து ஒரு மாதம் அல்லது ஒரு வாரம் வரைதான் ஜீவித்திருப்பான்.

செவ்வாய் சத்துரு ஓரையில் இருந்து அவருடைய கேந்திரத்தில் சுக்கிரனிருந்தால் மறுபடியும் ஷை ஓரையில் செவ்வாய் சந்திரனிவர்கள் வரும்போது ஷை ஜாதகர்கள் மரணத்தை யடைவார்கள்.

ஜன்ம லக்கின ஓராதிபதி எட்டா மிடத்திலிருந்து எல்லாப் பாபக் கிரகங்களாலும் பார்க்கப்பட்டால் ஜாதகன் ஜனித்த நான் காவது மாதத்தில் சந்தேகமின்றி மரிப்பான்.

ஜென்ம லக்கினுதிபதியும் ராகுவும் கூடியிருந்தாலும் லக்கினத் திற்கு ஆறு எட்டாமிடங்களில் சந்திரனிருந்தால் ஜாதகன் பிறந்து இருபது தினங்களே ஜீவித்திருப்பான்.

ஜென்ம லக்கினத்திற்கு நான்காமிடத்தில் ராகு இருந்து சந் திரன் கேந்திரத்திலிருந்தால் ஜாதகன் பிறந்து இருபது நாட்களே ஜீவித்திருப்பான்.

நக்ஷத்திர கண்டங்கள்

மூல நக்ஷத்திரத்தில் ஜாதகன் பிறந்தால் அரிஷ்டயோக மென்றும் எட்டு வருஷம் சென்ற பிறகுதான் தகப்பன் புத்திரனைக் காண வேண்டுமென்றும் அப்படிக்கின்றிக்கண்டால் தகப்பனுக்கு மரண முண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயி னும் இப்படிச் சொன்ன தூஷணம் பலமாய் விட்டபடியால் இது எற்கத் தக்கதல்லவென்றும் ஆதலால் சில வேறு மகரிஷிகள் ஷெ நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களுக்கும், வெவ்வேருகப்பாகம் செய்தும் வேறு பலனை ஒவ்வோர் பாதத்திற்கு முபதேசிக்கின்ற னர்.

அதாவது மூலநக்ஷத்திரத்தின் முதலாவது பாதத்தில் ஜனனம் நேர்ந்தால் தகப்பனுக்கும் இரண்டாவது பாதத்தில் ஜனனம் நேர்ந் தால் தாய்க்கும் மூன்ருவது பாதத்தில் பிறந்தால் தனத்திற்கும் நாசமுண்டாகும். நான்காவது பாதத்தில் ஜனனம் நேர்ந்தால் ஜாதகன் ராஜபூஜிதனுகவும் சுகியாகவும் ஆவான். மூலத்தின் மூன்று பாதங்களில் ஜனித்தவனுக்கு நோயுமுண்டாகும்.

ஜன்ம லக்கினம் தனுசும் பூராடநக்ஷத்திரமும் ஆகி ஜனித் தாலும்,

ஜன்மலக்கினம் கடகம் ஆகிப் பூசநக்ஷத்திரமும் கூடியபோது ஜனித்தாலும் தகப்பன் தாய் குழந்தை இவர்களுக்கு நாசமும் அல்லது அம்மானுக்கு நாசமும் நேரிடும். இவைகளில் அந்திய மும் ஆதியும் சுபமே செய்யும். இவைகளில் மேஷாம்சமும்

நேரிட்டால் தாய் புத்திா னிவர்களுக்குத் தப்பாமல் நாசமு முண்டுபண்ணும்.

உத்திரம் 1-வது பாதத்திலும், ஹஸ்தத்தின் 2-வது பாதத்தி லும், ஆயில்யத்தின் மூன்ரும் பாதத்திலும், பரணியின் நான்காம் பாதத்திலும் சிசு ஜனித்தால் தாய் தகப்ப னிவர்களுக்கு நாசமும், உத்திரத்திலும் பூசத்திலும் பிறந்தால் உத்திரத்திற்கு 2 மாதம் வரையில் தோஷமும், பூசநக்ஷத்திரத்திற்கு மூன்று மாதம்வரையில் தோஷமும், பூராடத்திற்கு எட்டு மாதமும் சித்திரைக்கு ஆறு மாதமும் ஆயில்யத்திற்கு ஒன்பது மாத தோஷமும் மூலத்திற்கு எட்டு வருஷமும் கேட்டை நக்ஷத்திரத்தில் குழந்தை ஜனித்தால் பதினைந்து நாள்களும் தோஷத்தினுல் தகப்பன் புத்திர தரிசனத் தைச் செய்யக்கூடாதென்றும் சொல்லப்பட்டுள்ளது.

மேலும் ஜேஷ்டா நக்ஷத்திர சாந்தியில், ராசிசந்தி யென்றும் சிசு கண்டமென்றும் கேட்டை நக்ஷத்திரத்தின் 1, 2 ,3, பாதம் வரையில் மூத்த புத்திரனுக ஜனித்தவன் விஷயத்தில் பிதுரு தோஷ மும் கேட்டை நக்ஷத்திரத்தின் நான்காவது பாதத்தின் கடைசி இரண்டு நாழிகையில் அபுக்தமூலம் என்று சொல்லப்பட்ட காலத் தில் ஜனித்தால் பிறந்த (ஜாதகனுடைய தகப்பன்) 10 தினங் களுக்குள் மரணமடைவானென்றும், மேற் சொன்ன மூன்று பாதங்களில் ஸ்திரீ சிசு ஜனித்தால் மூத்த சகோதர நாசத்தைச் செய்யுமென்றும், மேலும் ஷை மூன்று பாதங்களிலும் வைதிருதி, விதிபாதம், வியாகாதம், கண்ட தோஷம், சந்திராஷ்டமம், விஷ்கம் பம் இவைகளும் கூடிய போது ஜனித்தால் மேற்சொன்ன கார ணங்களால் ஷை காலங்கள் வரையில் குழந்தையின் தொனியைக் கூடத் தகப்பன் கேட்கக் கூடாதென்றும், சிசுவின் முகத்தைப் பார்க்கக் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறதுடன், மேலும் *சிசுவையே தியாஜ்யம் செய்ய வேண்டுமென்றும் ஜேஷ்டா நக்ஷத்திரத்தின் முதல் பாதத்தில் ஜனித்தால் முதலில் பிறந்தவருக் கும், இரண்டாம் பாதத்தில் உடன்பிறப்புக்கும் மூன்ரும் பாதத் தில் தனத்திற்கும், நான்காம் பாதத்தில் தனக்கேயும் நாசத்தை உண்டாக்கும், மேலும் கேட்டையின் கடைசிப்பாதத்தில் ஜனித்த

*சிசுவையே தியாச்சியம் செய்வது இயலாதாகையால் சிசுவைப் பார்க்கக் கூடாதென்றுதான் கொள்ளவேண்டும்; அதுதா னிதன் பொருள்.

சிசு ஸ்திரீயாயினும் தன் மூத்தவனைக் கொல்லும் என்றும், சகோதரியைக் கொல்லாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் கேட்டை நக்ஷத்திரத்தின் (மொத்த) ஆதியந்த நாழிகையை 10 பங்காகப்பிரித்துப் பலன் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் அடியில் கண்டபடி பலன்கள் நேரிடும். அவையாவன:— பங்கு 1-ஆவதில் ஜனன தாயின் தாயும், 2-வதில் மேற்படி ஜனன தாயினுடைய தகப்பனும், 3-ல் தாயின் சகோதரமும், ஜனித்த குழந்தையின் தாய் 4 லும், 5-ல் (சிலர் இந்த 5-வது பாகத்தில் பிறந்தவனுக்குப்புத்திரநாச மேற்படும் என்று சொல்லுகின்றனர்.) தானும், 6-ல் கோத்திர நாசமும், 7-ல் உபயகுலங்களும், 8-ல் மூத்த சகோதரனும், 9-ல் மாமனும், 10-ல் சகல நாசமும் நேரிடும். மேலும் சூரியனுடைய அம்சத்தில் தகப்பனுக்கும், சந்திரனுடைய அம்சத்தில் தாய்க்கும், செவ்வாயின் அம்சத்தில் சகோதரனுக்கும், புத னம்சத்தில் அம்மானுக்கும், சனியினம்சத்தில் விஷத்தினாலும் மரணம் நேரிடும், மேலும் சதுர்த்தசியும் தினமிருத்துவும் ஆனால் எப்போதும் ரோகமும் நேரிடும். அன்றி;

ஆயில்யம், ரேவதி, கேட்டை, மூலம், பூராடம், மகம் இவைகளில் இரண்டிரண்டு நாழிகைகள் கண்டாந்தமென்றும், ஆயில்யம், கேட்டை, ரேவதி இவற்றின் கடைசியிலும் அசுவனி' மகம், மூலம் இவற்றின் முதலிலும் இரண்டு இரண்டு நாழிகைகள் கண்டாந்தமென்றும், திதிகளில் பஞ்சமி, தசமி, பதினைந்தாவது திதி, இவைகளின் கடைசியில் 2-2 நாழிகைகளும் திதி கண்டாந்தமென்றும், ராசிகளில் மேஷம், தனுசு, கடகம், விருச்சிகம், மீனம், மகரம் இவைகளின் நவாம்சங்களின் அந்தியமத்திலும் ஆதியிலும் ராசி கண்டங்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் முறையே மாதா-பிதா-புத்திரன்-சகோதரன் இவர்களை நக்ஷத்திர கண்டமும், ராசிகண்டம் ஒரு குலத்தையும், திதி கண்டம் தகப்பனையும் கண்டம் செய்யும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு சிலர் மேற்படி கண்டாந்த தோஷங்களானது சர்வ நாசங்களையுமே செய்யும் என்று சொல்லியிருக்கின்றனர்.

மேலும் மூல நக்ஷத்திரத்தின் ஆதியந்த நாழிகையைப் பதினைந்தினால் வகுத்து ஒவ்வொரு பாகத்திற்கும் வரிசையாகப்

(பதினைந்துக்கும்) பலன் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் விபரம் கீழ் வருமாறு:—

1-வது (முதல்) பாகத்தில் ஜனித்தால் தகப்பனையும்,

2-வது (இரண்டாவது) பாகத்தில் தகப்பனின் சகோதரனையும்.

3-வது பாகத்தில் சகோதரியின் கணவனையும்,

4-வது பாகத்தில் பிதா மகனையும்,

5-வது பாகத்தில் தாயையும்,

6-வது பாகத்தில் தாயின் சகோதரியையும்,

7-வது பாகத்தில் அம்மானையும்,

8-வது பாகத்தில் சிற்றப்பனுடைய ஸ்திரீயையும்,

9-வது பாகத்தில் சமஸ்தத்தையும்,

10-வது பாகத்தில் பசுக்களையும்,

11-வது பாகத்தில் வேலைக்காரர்களையும்,

12-வது பாகத்தில் தனக்கே (நாசத்தை)யும்,

13-வது பாகத்தில் தனக்கு மூத்த பிறப்பையும்,

14-வது பாகத்தில் தன் சகோதரியையும்,

15-வது பாகத்தில் மாதா மகனையும் நாசத்தைச் செய்யுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே ஆயில்ய நக்ஷத்திரத்திற்கும், ஆயில்ய நக்ஷத்திரம் முதலாவது பாதத்தில் ஜனித்தால் குழந்தைக்கே நாசமுண்டாகுமென்றும், இரண்டாவது பாதத்தில் ஜனித்தால் தாய்க்குக் கண்டம் அல்லது நாசத்தை உண்டாக்குமென்றும், நான்காவது பாதத்தில் ஜனித்தால் பிதாவுக்கு கண்டமல்லது நாசமேற்படுமென்றும், சிலவற்றில் மூன்ருவது பாதத்தில் தகப்பனுக்கும் நான்காவது பாதத்தில் தாய்க்கும் நாசம் உண்டாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக நக்ஷத்திர கண்டங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னம் இவை தவிர வேறு இவற்றைப் பற்றி ஜுர கால நிர்ணயத்திலிருப்பதின்படி ரோகங்களினுல் ஏற்படக்கூடிய கண்டங்களும் வேறு சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே அரிஷ்டமானது எவ்விதத்திலும் எவ்விதமாகவேனும் எதிர்பார்த்தோ பாராமலோ நேரிடக்கூடுமாதலால் அவற்றை முதலிலேயே அறிந்து

கொள்வதே சிறந்த அறிவாளிகளுக்கு உபகாரமாயிருக்குமென்பது நாம் சொல்லாமலே விளங்கும் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

பாலாரிஷ்ட பங்கமும், பலதிறப்பட்ட ஆயுளும்

ஜன்ம லக்கினத்தில் எல்லாக் கிரகங்களுக்கும் மேலான குரு ஒருவரிருந்தால் சகல அரிஷ்டங்களும் விலகும்.

ஜன்ம லக்கினத்தில் புதனிருந்தால் ஆயிரம் தோஷமும் சுக்கிரனிருந்தால் பதினாயிரந் தோஷமும் விலகும்.

ஜன்ம லக்கினாதி ஒருவனே பலமுடையவனாகி கேந்திரத்தில் இருந்தால் சிவபெருமான் முப்புரங்களையு மெரித்தது போலச்சகல அரிஷ்டங்களும் விலகிவிடும்.

ஜன்ம லக்கினத்தில் சுபர் பார்வையிருந்து சுக்கில பக்ஷத்தில் இரவில் ஜனித்தவனுக்கும் கிருஷ்ண பக்ஷத்தில் இதற்கு நேர்மாறாகப் பகலில் ஜனித்தவனுக்கும் அரிஷ்டங்கள் விலகிவிடும்.

ஜன்ம லக்கினம் துலாமாகி 12-ல் சூரியனிருந்து ஜனித்தால் நூறு வருஷம் ஜீவிக்கும் யோகமுடையவனாக ஆவான்.

ஜன்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில் (குருவும் செவ்வாயும் கூடியிருந்தாலும்) செவ்வாயிருந்து குருவால் பார்க்கப்பட்டாலும் எல்லா அரிஷ்டங்களையும் போக்கித்தாய்க்கும் நன்மையைச் செய்வார்.

ஜன்ம லக்கினத்திற்கு 4 அல்லது 10-ல் பாபரிருந்து இவர்கள் சுபர்களின் மத்தியிலு மிருந்தாலும், சுபர்கள் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும் தகப்பனுக்குச் சுகமுண்டாகும்.

சுபர்களின் மத்தியில் உள்ள பாபர்களும், கேந்திர திரிகோணங்களிலுள்ள சுபரும் சத்தியோரிஷ்ட நாசத்தைச் செய்வார்கள்.

ஜன்ம லக்கினத்திற்குப் பதினொன்றில் 8-மாதியும் 10-மாதியும் கூடியிருந்து குருவும் சந்திரனும் லக்கினத்திலிருந்தால் 100-வருஷ ஆயுளுண்டாகும்.

லக்கினாதி யோகத்தில் பிறந்தவருக்குச் சந்திரன் பாபருடன் கூடினால் அற்பாயுளாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு ஆறு எட்டுக்குடையவர்கள் கூடி யிருந்து சனியுடன் கூடியிருந்தாலும் சனியால் பார்க்கப்பட்டா லும் அற்பாயுளேதான் உண்டாகும்.

சந்திராதி யோகத்தில் பிறந்தவருக்குச் சந்திரனுக் கேழில் சூரியனிருந்தால் மத்தியாயுளாகும்.

ரேவதி நக்ஷத்திர 2-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகிப் பிறந் தால் 7-ல் குருவிருந்தாலும் 41-ம் வயதில் அபமிருத்தாக (க்ஷய ரோகத்தினால்) மரணம் நேரிடும்.

மீனத்தில் நீச்சாம்சத்தில் சந்திரனும் தன் உச்சத்தில் கும் பாம்சத்தில் புதனுமிருந்தால் ஜாதகனுக்கு 6-வது திசையில் பெரிய ஆபத்துண்டாகும்.

ஜன்ம லக்கினாதிபதியும் குருவும் கூடில் ஆயுள் விருத்தியடை யும்.

ஜன்ம லக்கினஷ்டமாதிபதியும் சனியும் கூடினால் ஆயுள் விருத்தியுண்டாகும். அஷ்டமாதிபதியைச் சனி பார்த்தாலுமிப் படியே யாகும்.

ஜன்ம லக்கினத்திற் கெட்டில் சனி யிருந்தால் தீர்க்காயுளுண் டாகும்.

ஜன்ம லக்கினத்திற் கெட்டாமாதி லக்கினத்தில் இருந்தால் ஆயுள் குறைந்துவிடும்.

ஜன்ம லக்கினத்திற்கு நான்காமாதிபதியும் சந்திரனும் பிரபல மாயிருந்தாலும்,

க்ஷீணசந்திரன் 4-ல் இருந்து சனியால் பார்க்கப்பட்டாலும், தாம் அற்பாயு ளடைவாள்.

ஜன்ம லக்கினத்திற்கு ஒன்பதா மிடத்தில் சூரியனும் 9-மாதி யும் கூடினால் தகப்பன் அற்பாயுளாய் மரிப்பான். சூரியன் மட்டும் தனியா யிருந்தால் தகப்பனுக்கு ஆயுள் குறைவடையும், ஷை சூரி யன் 9-மாதியாகி 9-ல் இருந்தால் தகப்பனுக்காயுள் குறையாது.

ஜன்ம லக்கினத்திற்கு எட்டா மிடத்தில் சூரியனிருந்து சனி யுடன் கூடியிருந்தாலும் சனியால் சூரியன் பார்க்கப்பட்டா

னும், அல்லது ராகுவுடன் கூடியிருந்தாலும் பிறக்கும் ஜாதகர்கள் ஆயிரம் மாதம் ஜீவித்திருப்பார்கள்.

ஜன்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி பாபருடன் கூடி 12-மாதியுடனும் கூடியிருந்தால் முன் சொல்லியபடி ஆயிரம் மாதமே ஜீவிப்பர்.

ஜன்ம லக்கினத்திற்கு 8-மாதிபதி 11-மாதிபதியோடு கூடி லக்கினத்திற்கு 5-ல் இருந்தாலும் ராகுவால் பார்க்கப்பட்டால் 8-வது வயதில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு எட்டாமதிபதி லக்கினத்திலிருந்து ராகுவால் பார்க்கப்பட்டாலும் கேதுவுடன் கூடியே யிருந்தாலும் 5-வது வயதில் மரணம் நேரிடும்.

ஜன்ம லக்கினத்திற்கு 8-மாதிபதி 5-மாதியுடன் கூடி லக்கினத்தி லிருந்தாலும் 6-ல் இருந்தாலும் ஆறுக்குடையவனு லல்லது சத்துருக் கிரகத்தால் பார்க்கப்பட்டாலும் 8-ம் வயதில் மரணமேற்படும்.

ஜன்ம லக்கினத்திற்கு அஷ்டமாதி 12-மாதிபதியுடன் கேந்திரத்தில் இருந்தால் சரியாக 100-வயதும் ஜீவித்திருப்பான்.

ஜன்ம லக்கினத்திற்கு 8-மாதிபதி 11-ல் தன உச்சத்தில் வனுத்து இருந்தால் எண்பது வயது ஜீவித்திருப்பான். இது விருச்சிக லக்கினம் ஒன்றுக்கு மட்டும் நேரும்.

ஜன்ம லக்கினத்திற்கு 7-மாதிபதி 8-ல் 9-மாதியுடன் கூடியிருந்தால் 7-ம் வயதில் மரணமடைவான்.

ஜன்ம லக்கினத்திற்கு 9-மாதிபதி ராஜ்ஜிய ஸ்தானத்தில் இருந்து ராகுவால் பார்க்கப்பட்டால் 5-வது வயதில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 2-மாதிபதி கேந்திரத்தில் 12-மாதியுடன் கூடியிருந்து சனியால் பார்க்கப்பட்டால் 36 வயதில் மரண முண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 8-ல் 10-மாதியும் லக்கினுதிபதியும் கூடியிருந்து ராகுவால் பார்க்கப்பட்டிருந்தால் 30-வது வயதில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினதிபதி நீச்சத்திலிருந்து 12-மாதியுடனும் கூடியிருந்து 9-மாதியால் பார்க்கப்பட்டால் ஜெனித்த 20-வயதில் மரணமேற்படும்.

ஜன்ம லக்கினதிபதி ராஜ்ஜிய ஸ்தானத்தில் 9-மாதிபதியுடன் கூடி ராகுவால் பார்க்கப்பட்டால் ஜனித்த 10-வது வயதில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினதிபதி குரூரருடன் கூடியிருந்து சனியுடன் கூடினும் சனியால் பார்க்கப்பட்டாலும் ராகுவுடன் கூடினும் ஜனித்த ஒரே வருஷத்தில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினதிபதி பாபருடன் கூடி ராஜ்ஜியாதிபதியுடனும் கூடினல் ஜாதகன் ஜனித்த 6-வது வயதில் மரணமுண்டாகும். தப்பி இருந்தால் பல்லக் கேறுவான்.

ஜன்ம லக்கினதிபதி 5-ல் ராஜ்ஜியாதிபதியுடன் கூடியிருந்தால் 5-வது வயதில் மரணமுண்டாகும். தப்பினல் குதிரை வாகனமடைவான்.

ஜன்ம லக்கினம் ஸ்திரமாகி லக்கினதியும் சுக்கிரனும் வர்க்கோத்தமத்தி லிருந்தால் ஆயுள் பூர்ணமாக 73 உண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில் சந்திரனும் பத்தில் அல்லது ஒன்பதில் சூரியனும் லக்கினத்தில் அல்லது 5, 9-ஆம் இடங்களில் சனியுமிருந்தால் தகப்பனைச் சூரியனும் தாயைச் சந்திரனும் கொல்வார்கள்.

சூரியன் சந்திரன் செவ்வா யிவர்கள் லக்கினத்திற்கு 5-ல் இருந்தால் தாய் தகப்பன் சகோதரர் இவர்கள் நாசமுறுவர்.

லக்கினத்திற்கு 4-ல் ராகுவிருந்து பாபரால் ராகு பார்க்கப்பட்டால் பிறந்த பதினருவது வயதில் கண்டமல்லது மரணம் நேரிடும்.

குரு செவ்வாயின் ராசிகளில் இருந்து சந்திரன் பாபர்களால் பார்க்கப்பட்டுச் சுபரால் பார்க்கப்படாம லிருந்தால் பிறந்த 3-வது வருஷம் மரணம் நேரிடும், மேற்படி குரு சுக்கிரமடைந்து 4-8-6 இவ்விடங்களில் அல்லது ஷஷ்டாஷ்டம ஸ்தானங்களில் இருந்தாலும் செவ்வாயின் பார்வை யடைந்திருந்தாலும் பதினருவது வயதில் மரணமுண்டாகும்.

5-8 ஆம் இடங்களில் பாபரிருந்து வேறு பாவர்களுமிவர்களைப் பார்த்தால் ஜனித்த ஒரே வருஷத்தில் மரணமுண்டாகும்.

ஜன்ம லக்கினத்தினின்றும் 6-8-12 ஆம் இடங்களாகச் சந்திர சூரியருடைய ராசிகள் ஆகி, அங்கு சந்திரன் சுக்கிரன் சூரியனிவர்களிருந்து இவர்களைச் சுபர் பார்த்தால் ஆறு வருஷம் வரையில் ஜீவனிருக்கும்.

ஜன்ம லக்கினம் எந்த லக்கினமானாலும் 4-8 இவ்விடங்களில் சுபர்களிருந்து லக்கினாதிபதி சுபருடன் கூடியிருந்தாலும் லக்கினத்தைக் குரு பார்த்தாலும் பூர்ணாயுளானது உண்டாகும்.

அஷ்டமாதிபதி பாபியாயினும் அஷ்டமத்திலேயே யிருந்தால் ஆயுள் தீர்க்கமாகும்.

ஜென்மலக்கினம் எந்த லக்கினமானாலும் லக்கின நவாம்சாதிபதி கேந்திரத்திலிருந்து குரு சுக்கிரனிவர்களால் பார்க்கப்பட்டாலும் ஒன்பதாமாதிபதியும் சுபருடன் கூடி யிருந்தால் தீர்க்காயுளுண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்குப் பத்தாமாதிபதி எட்டாமிடத்திலிருந்து எட்டாமாதிபதி சுபர் மத்தியிலிருந்து பதினோராமாதிபதி தன் உச்சத்தில் இருந்தால் ஜாதகன் தீர்க்காயுளுடையவனாவான்.

நான்கு, ஏழு, பத்து முதலான கேந்திரங்களில் குரு இருந்தாலும் ஷை குருவுக்கு ஐந்தில் புதனிருந்து ஆறில் சூரியனிருந்தாலும் அறுபதுக்கு மேலும் அல்லது ஒரு சமயம் எழுபத்தெட்டு வயதும் அல்லது எண்பது அல்லது எண்பத்தோரு வயது வரையுமுண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி கேந்திரங்களிலிருந்து ஸ்திரராசிகளில் ஜனன மடைந்து சுபர்களும் எட்டாமிடத்தில் இல்லாதிருந்தால் ஜாதகனுக்கு நாற்பத்துமூன்று வயதே யுண்டாகும்.

கேந்திரங்களில் குரு இல்லாதிருந்து எட்டா மிடத்திற்குடையவன் பன்னிரண்டா மிடத்திலிருந்து க்ஷீண சந்திரன், பாபருடன் கூடி யிருந்தால் ஆறு வருஷத்திற்குப் பிறகு ஆயுள்

லிலேத்திருக்காது; அதாவது ஆறுவருஷம்தான் ஆயு ளுண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி கேந்திரத்திலிருந்து, லக்கினதிபதி பலமுடையவனு யில்லாவிடில் ஜாதகனுக்கு முப்பது வயதே யுண்டாகுமென்று சிலரும் முப்பத்திரண்டுவயதே பரமாயுளாகுமென்று வேறு சிலரும் சொல்லுகிருர்கள்.

ஜென்மலக்கினம் குரூராருடைய க்ஷேத்திரங்தளில் ஒன்ருகி லக்கினதிபதி சப்தமத்திலிருந்து சூரியனும் குருவும் பலஹீனர்களாயின் ஆறு வருஷமே ஜீவித்திருப்பான்.

ஜென்ம லக்கினம் எதுவாகினும் குரு செவ்வாயின் ராசியிலிருந்து ஷ ராசி ஷஷ்டாஷ்டம துவிதீய ஸ்தானங்களாக ஆனல் ஆறு வருஷம் வரையில் தான் ஜாதகனுக்குப் பரமாயுளுண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்கு ஏழில் ராகுவும் லக்கினத்தில் சந்திரனு மிருந்தால் பத்து வருஷமே ஆயுளுண்டாகும்.

ஜென்ம லக்கினத்திற்குப் பத்தில் அல்லது ஒன்பதா மிடத்தில் ஜன்ம காலத்தில் ராகு இருந்தால் பதினருவது வயதில் மரணமேற்படும்.

ஜென்ம லக்கினத்திற்குப் பன்னிரண்டில் சந்திரனிருந்து ஆருமிடத்தில் பாபக்கிரகங்கள் இருந்தால் ஜாதகன் அற்பாயுளேயுடையவனுவன்.

ஜென்ம லக்கினத்திற்குக் கேந்திரத்தில் (குருவும்) சுக்கிரனுமிருந்து லக்கினத்தில் புதனும் பன்னிரண்டாமிடத்தில் சூரியனுமிருந்தால் நூறு வருஷ ஆயு ளுண்டாகும்.

ஜென்ம வக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகனுக்கு 4-விதமான கண்டங்கள் ஏற்படும். அவையாவன; வைசூரி 1. ஜலரோகம் 2. நாற்கால்களுள்ளவைகள் மூலம் ஏற்படல் 3. பாலாரிஷ்டம் 4. இத்தியாதிக ளாகும்.

ஜென்ம லக்கினம் எதுவானலும் ராகு எட்டாமிடத்தில் இருந்தால் சர்ப்பகண்ட மடைவான். மனைவியின் சாப மடைவான். மத்திப வயதில் கண்ட முடையவன். கேது எட்டா

மிடத்தில் இருந்தால் அபமிருத்து கண்டங்கள் அடிக்கடி நேரும்.

எட்டாமிடத்தில் லக்கினதிபதி யிருந்தால் தேகம் துர்ப்பல முடையதாய் விடும்.

எட்டாமிடத்தில் பாபரிருந்தால் ஆயுள் குறையும். ரோக முண்டாகும். கண்பார்வைகூடப் பங்கமாகும். சுபரிருந்தால் வெகு ஆயு ளுண்டாகும்.

சாமரயோகத்தில் பிறந்தால் யோக மேற்பட்டு அது நடக்கும் வருஷம் முதல் பன்னிரண்டாவது வருஷ முடிவில் அபமிருத்து ஏற்படும். தப்பிப் பிழைத்தால் தீர்க்காயு ளாகும்.

ஜாதகன் ராஜ்யலக்ஷிமீ யோகத்தில் பிறந்தவனுகில் 41 அல்லது 46 வயதில் சண்டையில் அபமிருத்தாக மரணம் சம்பவிக்கும். தப்பிப் பிழைத்தால் அரோகதிடகாத்திரமாக 61 அல்லது 71 வரை ஜீவித்திருப்பான்.

ஜன்ம லக்னத்திற்கு எட்டா மிடத்தில் பாபர் கூடி யிருந்தால் சொற்ப ஆயுளும் கண் பார்வை குறைவும் உண்டாகும். 8-ல் சுபரிருந்தால் தீர்க்காயுள் திரவிய மிவை யுண்டாகும். உச்ச மித்திர ராசிகளில் 8-ல் கிரக மிருந்தால் தீர்க்காயு ளுண்டாகும்.

தூம னென்னப்பட்ட கிரகம் எட்டில் இருந்தால் பிரிய மின்மை கெட்டபேச்சு பிதுரு, குரு, தெய்வ மிவர்களிடம் நிஷ்டூரம், நற்பேச்சின்மை இவைக ளுண்டாகும். ஆயுளு முண்டாகாது.

விதீபாத னென்கிற கிரகம் 8-ஆம் இடத்தில் இருந்தால் ரத்த பீடையும் வெகு வியாபாராதிகளு முண்டாகும். வெகு மித்திரர் முதலியன ஏற்படுவர்.

எட்டில் பரிவேஷன் என்னப்பட்டவர் இருந்தால் திட சரீரம், திடவிரத மிவைகளும், புத்திரன், தர்மம், சத்திய மித்தியாதிகளுமுடைய ராவார்கள்.

இந்திரதனுசு 8-ல் இருந்தால் அங்கஹீன முண்டாகும். உபகேது இருந்தால் வீண் விதண்டாவாதமாகப் பிறர் பக்ஷம் பேசுபவராவர். மேலும் லஜ்ஜை கெட்டுப் பிறரை நிந்திப்பவராகவும் ஆவார்கள்.

எட்டில் குளிகனிருந்தால் துக்கம், பசி, குரூரம், கடுமையான ரோகம், தயையின்மை இத்யாதிக ளுண்டாகும்.

எட்டில் பிராணபத னிருந்தால் ராஜபீடை, துக்கம், ரோக பீடையால் கஷ்டப்படும் அங்கம் இத்தியாதிக ளுண்டாகும்.

மிதுனத்தில் மகர நவாம்சத்திலும், தனுசில் கடக நவாம்சத் திலும், மீனத்தில் துலா நவாம்சத்திலும், கன்னியில் மேஷ நவாம் சத்திலும் சூரியனிருந்தால் அற்பாயு ளுண்டாகும்.

ஜன்ம லக்கினத்திற்கு 4, 8-ஆம் இடங்களில் சுபரிருந்து ஜன்ம லக்கினாதிபதியும் சுபருடன் கூடியிருந்தாலும், குருவால் ஜன்ம லக்கினம் பார்க்கப்பட்டிருந்தாலும், பூர்ணாயு ளுண்டாகும்.

8-மாதிபதி 1, 4, 7, 10-ல் இருந்து ஸ்திரராசியில் பிறந்தவர் களுக்கு 8-ல் சுபரில்லாதிருந்தால் 43 வயதுக்குமேல் வயதுண் டாகாது.

மக நக்ஷத்திரத்தில் பிறந்தால் பொதுவாக 65 வயதும் ரேவதி நக்ஷத்திரத்தில் பிறந்தால் பொதுவாக 70-வயதும் உண் டாகும்.

சந்திரன் உத்திரம் 1-வது பாதத்திலிருக்கப் பிறந்தவன் எழு பத்தைந்து வய தடைவான்; 60, 61-ல் தேக பீடை யுண்டாகும். சனி திசை வந்து முடிவில் ரிஷபம் அல்லது கடகம் விருச்சிக மிந்த ராசிகளில் சூரியனிருக்கும்போது சனிக்கிழமையில் மரணம் நேரிடும்.

ரேவதி 3-வது பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவர்களுக்கு லக்கினம் கடகமாகின் 1-மாதி 9-லும் 9-மாதி 11-லும் சனி 12-லு மிருந்தால் 62-வய துண்டாகும். ஒரு சமயம் 77-வய துண்டாகு மென்று சிலர் மதம்.

ஹஸ்தம் முதலாவது பாதத்தில் சந்திரனிருக்கப் பிறந்து லக் கினம் ரிஷபமானால் 8-மாதி 10-லும் சனி உச்சத்திலு மிருந்தால் எழுபத்தைந்து வயதுண்டாகும். இவனுக்குப் புததெசை சுய புத்தியில் நிரியாண மேற்படும்.

புனர் பூசம் 1-வது பாதத்தில் ஜன்மகால சந்திரனிருந்து சுக் கிரன் 9-லும் குரு எட்டில் சனியுடன் தனுசிலும் கூடியிருந் தால் ரிஷப லக்கின ஜாதகருடைய வயது தீர்க்கமாகும், சுக்கிர

தெசையில் புத புக்தியில் மீன கடக விருச்சிக ராசிகளில் ஒன்றில் சூரிய னிருக்கும்போது வளர்பிறையில் நிரியாணம் நேரிடும்.

புனர்பூசம் 1-வது பாதத்தில் மிதுனத்தில் சந்திரனிருந்து தனுர் லக்கினமாக ஜனித்து 1-மாதி 11-லும் 8-மாதி 7-லும் சனிக்கு 7-ல் அதாவது லக்கினத்திற்கு 10-ல் சுக்கிரனு மிருந் தால் 61-வயதுண்டாகும். சிலர் மதப்படி 72 வயதுண்டாகி சுக்கிரதெசை சனி புக்தியில் நிரியாணம் நேரிடும் என்று முளது. வயது 61-ல் சுக்கிரதெசை சுயபுத்தியில் நிரியாணமென்று சுக்கிரா சாரியருடைய மதம்.

மீன லக்கினத்தில் ஜனித்து உத்திராடம் 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகப் பிறந்தால், 1, 8-மாதிகள் 10-லும் சனி 12-லு மிருந்தால் 70-க்கு அதிக வயதுண்டாகும். புததெசை சுயபுத்தி யில் மரண முண்டாகும்.

கேட்டை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மிதுன லக்கின மாக ஜனித்தால் 1-மாதி 10-லும் சனி 3-லு மிருந்தால் 72 வய துண்டாகும். இதற்கு லக்கினத்தைக் குரு பார்க்கவேண்டும். அப்போது குரு தெசை குரு புத்தி குஜனந்திரத்தில் பரலோக ப்ராப்தி யுண்டாகும்.

பூரம் முதலாவது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் விருச் சிகமானல் உச்சத்தில் லக்கினதிபதியும் 8-மாதி நீச்சத்திலும் குரு 11-லு மிருந்தால் 64-வயதுண்டாகும்.

சுவாதி 3-வது பாதத்தில் சந்திரனும் சிம்மலக்கினமுமாகி ஜனித்து 1-மாதி 6-ல் சனியுடன் கூடி 8-மாதி 4-ல் இருந்தால் 66-வய துண்டாகி சுக்ரதெசை சூரியபுக்தியில் கும்ப ராசியில் கடைசியில் சூரியனிருக்கும்போது அல்லது மீனத்தில் சூரியன் இருக்கும்போது நிரியாணம் நேரிடும். 70 வயதென்பது சிலர் மதம்.

அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகர லக்கினமாக ஜனித்து 1-மாதி 7-லும், சுக்கிரன் 5-லு மிருந்து 8-மாதி யுச்ச மடைந்தால் 68-வய துண்டாகும். 59-லாவது 60-லாவது தேக ஜாட்டிய முண்டாகும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து ராசி ஜன்மமாக ஜனித்து சுக்கிரன் லக்கினத்திலும் சனி 9-லும் 8-மாதி 12-ல்

குருவுடனு மிருந்தால் 70-வய துண்டாகும். 65-வயது என்பது சில ரிஷிகளின் மதம்.

விசாகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து துலா லக்கினமாக ஜனித்தால் 1, 8 மாதியான சுக்கிரன் குருவுடன் கூடி 3.ல் இருந்தால் 70-வயதுண்டாகலாம் என்றும் சந்திரதிசை செவ்வாய் புத்தியில் கால மாவானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

திருவோணம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னியா லக்கினம் ஜனனமாகின் 1-மாதி 11-லும் 8-மாதி 10-லும் சுக்கிரன் 12-லும் சனி 6-லு மிருந்தால் 72-வயது உண்டாகும். புததிசை சுக்கிரபுத்தியில் நிரியாண முண்டாகும்.

விசாகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷம் லக்கினமாகிக் குருவுடன் கூடி லக்கினாதிபதி 3-ல் இருந்தால் சனி நீச்சத்திலிருந்தாலும் 68-அல்லது 69-வயதுண்டாகும். சுக்கிரதெசை சுயபுத்தியில் கண்டம் நேரும். அக்காலம் சாந்தி செய்தால் 70-வயது வரை ஆயுளுண்டாகும்.

பூசம் 3.வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசு லக்கினமாகி சனி உச்சத்தில் 11-லும் 8-மாதி 8-லும் 1-மாதி 2-லுமிருந்தால் 67-வய துண்டாகும். 50, 55-ல் கண்ட முண்டாகிச் சந்திர தெசை கடைசியில் நிரியாணம் நேரிடும்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமாக ஜனித்து 1-மாதியாகிய புதன் 12-லிருக்க 8, 10 மாதிகள் கூடி 2-ல் இருந்தால் 66-வயதுண்டாகும். இத்துடன் ராகு 10-ல் இருந்தால் மேற்படி ராகு தெசை முடிவில் நிரியாணம் சம்பவிக்கும்.

ரோகிணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மீனமாக ஜனித்து குரு லக்கினத்திலும் 8-மாதி 7-லு மிருந்து 4-மாதி 5-லு மிருந்தால் 70-வயதுண்டாகி சனி தெசையின் கடைசியில் நிரியாணம் சம்பவிக்கும்.

ஹஸ்தம் 2-வது பாதத்தில் சந்திரனிருக்க கன்னியே லக்கினமாகி ஜனித்தால் 2-ல் குருவும் 1, 8-ம் அதிபதிகள் 12-லு மிருந்து மேற்படி செவ்வாய் மகம் 1-வது பாதத்திலு மிருந்தால் 70-அல்லது 71-வய துண்டாகும்.

சித்திரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்ம லக்கினமாகி 1-மாதி 6-லும் 8-மாதி 1-லும் இருந்தால் 75-வயது பரமாயுளாகி கேது தெசை சுக்கிரபுத்தியிலாவது அப்போது தப்பிடின் பிறகு சனி புத்தியிலாவது மரணம் நேரும்.

கேட்டை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மீனம் லக்கின மாகப் பிறந்து 1-மாதி 12-லும் 8-மாதி 4-லும் சனி 3-லு மிருந் தால் 70-வய துண்டாகி ராகுதெசை முடிவில் மரணஞ் சம் பவிக்கும்.

பூரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்ம மானல் 1-மாதி 5-லும் 8-மாதி 11-லும் சனி 12-லு மிருந்தால் 61-வய துண்டாகும். குருதெசையில் கிரியாணம் நேரிடும்.

அசுவனி நக்ஷத்திரத்தின் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மகரமாகிப் பிறந்து 1-மாதி நீச்சத்திலிருந்து 8-மாதி 6-லிருந்து இவர்கள் குருவால் பார்க்கப்பட்டால் 64-வயதுண் டாகிக் குரு தெசை சனி புத்தியில் மரணஞ் சம்பவிக்கும்.

சந்திரன் மீனராசியில் இருந்து லக்கினம் கன்னியாகப் பிறந்து 1-மாதி 12-லும் சனி 3-லும் 8-மாதி 7-லு மிருந்தால் வயது 69-அல்லது 70-உண்டாகும்.

ரேவதி நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து லக்கினம் துலாமாக ஜனித்து 1, 9-மாதிகள் 9-லும் சனி 3-லு மிருந்தால் 63-வய துண்டாகும்.

உத்திரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கடக மாகிப் பிறந்து 8-மாதி 8-லும் 1-ல் குருவும் இருந்தால் வயது 75-என்று சிலரும் 80-என்று சிலரும் சொல்லுகிறார்கள்.

ரிஷப ராசியில் சந்திரன் கிருத்திகை 4-வது பாதத்தி லிருந்து ஜன்மலக்கினமும் ரிஷபமேயானல் சுக்கிரன் லக்கினத்தி லும் குரு 10-லும் 8-ல் சனியு மிருந்தால் 70-அல்லது 71-வய துண் டாகும்.

மகர ராசியில் சந்திரனிருந்து லக்கினம் விருச்சிகமாகிப் பிறந்து 1-மாதி சந்திரனுக் கொன்பதிலும் 8-மாதியும் சுக்கிரனும் 4-லும், சனி ராசி நவாம்சங்க ளிரண்டிலும் ஒரே ஸ்தானத்திலிருந் தால் 70-க்கதிக வய துண்டாகும்.

கிருத்திகை 3-வது பாதம் ஜன்ம நக்ஷத்திரமாகப் பிறந்து லக்கினம் சிம்மமானுல் சூரியன் 5-லும் குரு 4-லும் சனி 8-லு மிருந்தால் 74-வயதுண்டாகும்.

சுவாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்ம மாகப் பிறந்தால் 1-மாதி 3-லும் 8-மாதி 1-லும் சனி குப் பத்திலு மிருந்தால் 64-வய துண்டாகிப் புததெசையின் முடிவில் மாணம் நேரிடும்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கன்னி லக்கின மாகிப் பிறந்து 1-மாதி 5-லும் 8-மாதி 2-லும் சனி 9-லு மிருந்தால் 72-வய துண்டாகும்.

பூரம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து, லக்கினம் கும்பமாக ஜனித்துச் சனி உச்சத்திலும் 8-மாதி லக்கினத்திலும் சுக்ர னிரண் டிலு மிருந்தால் 59-அல்லது 60-வயதுண்டாகி 60-வது வயதில் குருவின் தெசை கடைசியில் நிரியாணஞ் சம்பவிக்கும்.

ஆயில்பம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்ப மாகப் பிறந்து 8-மாதி 1-லும் 1-மாதி 3-லும் குரு 4-லுமாக இருப்பினும்,

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து கடகம் லக்கின மாகி ஜனித்து 1-மாதி 6-லும் 8-மாதி யாகிய சனி 4-லும் இருந் தாலும் வயது 66 உண்டாகும்.

பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமா னல் உத்திராடம் 2-ல் சனியும் அஷ்டமாதி 10-லும் இருந்தால் வயது 70-வது உண்டாகி குரு தெசை சூரிய புத்தியில் மரணஞ் சம்பவிக்கும். இத்துடன் மேற்படி குரு 5-ல் கேதுவுடனிருந்து சூரியன் 10-லும் இருந்தால் நிச்சயமான பலனே இதுவாகும் சந்தேகமேயில்லை.

உத்திரட்டாதி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மகரமாகிப் பிறந்து சனி ரிஷபத்திலும் 8-மாதி குருவுடன் கூடி 6-லும் இருந்தால் 74-வயதுண்டாகும்.

சுவாதி 4.வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மேஷ மாக ஜனித்தால், 8, மாதிபதி சிம்மத்திலும் சனி 2-லும் 2-மாதி 7-லு மிருந்தால் 75-வயதுண்டாகும். கேது தெசை

யின் கடைசியில் கண்டமுண்டாகிச் சுக்கிரதெசை சனி புத்தியில் கிரியாணம் நேரிடும்.

உத்திராடம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாகி ஜனித்து 1-மாதி 1-லும் 8-மாதி 10-லும் சுக்கிரன் அஷ்டமத்திலு மிருந்தால் 77-வயதுண்டாகும், புததிசை சூரிய புத்தியில் காலமாவான்.

ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மேஷம் லக்கினமானால் 1-மாதி 6-லும் சனி 8-லு மிருந்து குரு 7-ல் இருந்தால் 68-வயதுண்டாகும்.

மகம் 1-வது பாத ஜன்ம சந்திரனிருந்து லக்கினம் துலாமாக ஜனித்தால் 1-மாதி கடகத்திலும் குரு 12-லு மிருந்து சனி 11-ல் இருந்தால் 68-வயதுண்டாகிக் குரு தெசையில் சுய புத்தியில் கிரியாணஞ் சம்பவிக்கும்.

திரு ஆதிரை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மிதுனமாகப் பிறந்து 1.மாதி 11-ல் சூரியனுடனிருந்து சனி 8-லு மிருந்தாலும் சுக்கிரன் 10-லிருந்தால் சுக்கிரதிசையில் மரண முண்டாகும்.

பூரம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாகிப் பிறந்தால் 1-மாதி 9-லும் 8-மாதி 3-லும் குரு லக்கினத்திலு மிருந்தால் 68-வயதுண்டாகும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகரம் லக்கினமாகப் பிறந்தால் 1, 8-மாதிகள் கூடி 4-லும் குரு 11-லு மிருந்தால் 66-வயதுண்டாகும்.

அவிட்டம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்மமாகிப் பிறந்து சூரியன் 12-லும் குரு 6-லும் சனி 10-லு மிருந்தால் 75-வயதுண்டாகிப் புததிசை கடைசியில் தேகவியோகமுண்டாகும்.

பரணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசுலக்கினமாக ஜனித்து 1 மாதி 9-லும் சனி 2-லுமிருந்து 8-மாதி 5-லு மிருந்தால் 68 வயதுண்டாகும்.

விருச்சிக ராசியில் சந்திரனிருந்து ரிஷபம் லக்கினமானால் 1 மாதி 5-லும் சனி குரு 4-லு மிருந்தால் 66-வயதுண்டாகும்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்தால் 5-வது தெசை முடிவில் ஆபத்துச் சன்னியாசியாகி நிரியாணம் நேரும்.

பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் ரிஷபமாகின் 1 மாதி 11-லும் 8 மாதி 8-லும் இருந்தால் 59 அல்லது 60 வயதுண்டாகும்.

சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கடக லக்கினமாகிப் பிறந்து சனி 4-லும் குரு 11-லுமிருந்தால் 71-வயதுண்டாகும் புததிசையில் சனி புத்தியில் நிரியாணம் நேரும்.

மூலம் 1-வது பாதத்தில் 2-நாழிகை செல்லாகி அதில் சந்திரனிருந்து லக்கினம் துலாமானுல் குரு 5-லும் சுக்கிரன் 3-லுமிருந்தாலும் சனி 2-ல் இருந்தால் 68-வயதுண்டாகி ராகுதெசை குஜ புத்தியில் நிரியாண முண்டாகும்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கும்பமாயின் சனி 3-லும் 8 மாதி 2-லும் குரு 5-லு மிருந்தால் வயது 58 உண்டாகி சனி தெசை சுய புத்தியில் நிரியாணம் நேரிடும்.

பூரம் 1-வது பாதத்தில் குருவும், பூரம் 2-வது பாதத்தில் ராகுவும் இருந்து சிம்மலக்கினமாகப் பிறந்தால் ஆயுள் சொற்பமே. அஷ்டமாதிபதியே நீச்ச சத்ருவர்க்கங்களில் வேறெங்காகிலு மிருந்தால் பிறந்த நாள் முதல் ரோகமடைந்து ஆயுள்போய்க் கொண்டே யிருக்கும்.

பொது:—ராசி சந்திகளில் பிறப்பவருக்கும் ஆயுள் போய்க் கொண்டே யிருக்கும்.

விசாகம் 3-வது பாதத்தில் சனி யிருந்து மிதுன லக்கினமாகப் பிறந்து சந்திரன் சித்திரை நக்ஷத்திர 3-வது பாதத்திலிருக்கும் ஜாதகருக்குப் புததிசை புதபுத்தியில் சரத்ருதுவில் அல்லது வசந்த ருதுவில் தேய் பிறையில் வெள்ளிக்கிழமை யல்லது சனிக்கிழமையில் 57-வயதில் நிரியாணம் சம்பவிக்கும்.

கேதார தாமினீ யோகத்தினுல் அற்பாயுளே ஏற்படும்.

7 மாதி சனியுடன் கூடினுல் சகோதரி சகோதரன், புத்திரன், புத்திரி, பாரியை இவர்களுக்குத் துர் மரணமுண்டாகும். ஐந்தாமாதி தெசையும் கூட நடந்தால் இப்பலன்கள் தவருது.

சனி ரேவதி 4-லும் சுக்கிரன் 2-லு மிருந்து மகர லக்கினத்தில் பிறந்தால் 62-வயதிற்குப் பிறகு வைகாசிமீ த்தில் வளர் பிறையில் பாபர் வாரங்களில் விஷ அவஸ்தையில் சூரியனிருக்கும்போது விடியற்காலையில் நிரியாண முண்டாகும். இதின் மத்தியில் 47-வயதில் அபமிருத்து பயமுண்டாகும். சாந்தி செய்தால் ஆயுசு விருத்தி ஏற்படும்.

பரணி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகர விருச்சிக லக்கினங்களில் பிறந்து சனி மகம் 1-லும் செவ்வாய் உத்திரம் 1-லும் இருந்தால் வமிசம் வமிசமாக அற்பாயுளே ஏற்படும். சுக்கிரனிந்த லக்கினங்களுக்கு 6, 8-ஆம் இடங்களில் அதாவது மகரத்திற்கு 6-லும் விருச்சிகத்திற் கெட்டிலு மிருந்தால் குரு பாராவிடில் அபமிருத்து ஏற்பட்டு ஜன்ம திசையில் முடிவில் மரணம் நேரும். இதற்கே லக்கினத்தில் குரு இருந்தால் 54 வயதில் மீன கன்னி விருச்சிகாதி மாதங்களில் 1-ல் சூரியனிருக்கும்போது வளர் பிறையில் நிரியாணம் நேரிடும்.

விருச்சிகம் லக்கினமாகி மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மீன சுக்கிரன் மேஷ புதன் ரிஷப குரு மிதுன செவ்வாயிப்படி யிருப்பின் 52, 55 இந்த வயதுகளில் கஷ்ட மடைந்து 75-ல் வளர்பிறையில் நிரியாண மடைவான்.

உத்திரட்டாதியில் சந்திரனும் கடகத்தில் சனியும் இருந்து கும்பலக்கினமாகப் பிறந்தால் 5, 12 இந்த வயதுகளிலும் 32-லும் கண்டம் நேரும். இதற்கு குரு 10-ல் இருந்தால் 56-ம் வயதில் புரட்டாசி மாதத்தில் அல்லது பங்குனி மாதத்தில் செவ்வாய்க் கிழமையில் மரணம் நேரிடும்.

புனர் பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மீனத்தில் குருவும் கன்னியில் சனியுமிருந்தால் 74-வயதுண்டாகும். 49 அல்லது 52-ல் கண்ட முண்டாகும். சிலர் 71-வயது என்கின்றனர்.

கும்ப லக்கினம்.

ரேவதி 3-ல் சந்திரனிருந்து சனி அவிட்டம் 3-வது பாத துலாம்சத்தில் இருந்தால் 56-க்குச் சமமாக 2½-வருஷத்தில் பங்குனி மாதத்தில் நிரியாணம் நடக்கும்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மீன லக்கினமாகப் பிறந்து சனி 5-லும் குரு லக்கினத்திலுமிருந்தால் 57 வயது உண்டாகும்.

ஆயில்யம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் உச்சத்தில் உத்திரட்டாதி 2-லும், சனி பரணி 1-வது பாதத்திலுமிருந்து குருவால் சுக்கிரன் பார்க்கப்பட்டால் மத்திம வயதுண்டாகும்.

உத்திர நக்ஷத்திர 2-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் கடகமாக ஜனித்தால் ராஜ யோக ஜாதகத்தில் 36 வயதும் இதற்கு முன்பே 32-ல் அபமிருத்துவும் உண்டாகும். அச்சமயம் தப்பிப் பிழைத்தாலும் 40 வயதே உண்டாகும்.

மூலம் மூன்ருவது பாத முடிவல்லது பூராடம் ஆரம்ப சந்தியில் சந்திரனிருந்து ஜனித்த மேஷலக்கின ஜாதகனுக்குப் பிறந்த 7,8,11,13, ஆகிய மாதங்களில் மாந்தம், ஜுர மிவைகளால் பீடையுண்டாகும். இதற்குச் செவ்வாய் 6-லும் ரவி ராகு 8-லும் குரு 12-லு மிருந்தால் 45-ம் வயதில் செவ்வாய் தெசையின் முடிவில் அல்லது ராகு தெசை சுய புக்தியில் மார்க்கழி மாதத்தில் தப்பாமல் மரண முண்டாகும்.

ஆயில்யம் 4-வது பாதத்திலல்லது புனர்பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து கும்ப லக்னமாகி, பிறந்தால் உத்திரம் 2-ல் சனியும், மீனத்தில் குருவுமிருந்தாலும் நீச்ச சூரியனுடன் புதன் கூடி யிருந்தாலும் பிறந்த 3-வது வருஷத்தில் பிராண பயமுண்டாகும். இதற்கும் * ரிக்ஷ கண்டம் என்று பெயர், சாந்தி செய்தால் 71 வயது பரமாயுளாக ஜீவித்திருப்பான்.

உத்திரட்டாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து பிறந்தவனுக்கு ஜன்மலக்னம் துலாமாகி குரு 7-ல் இருந்தாலும் சூரியனுடன் கூடி லக்கினத்திலிருந்தாலும் மூல, காச, க்ஷய ரோகாதிகளால் வயது 41-ல் மரணம் சம்பவிக்கும்.

லக்னுதிபதி சுக்கிரனுகி ராகுவுடன் 11-ல் இருந்து திருஓணம் 3-வது பாதத்தில் சந்திரனும் கிருத்திகை நக்ஷத்திரத்தின் 2-வது அல்லது 3-வது பாதத்தில் சனியும் இருந்தால் மத்தியாயுளாக 62 வயதேற்படும்.

பரணி 4-வது பாதச் சந்திரனும் மேஷ லக்னமுமானுல் 2-ல் சனியும் 11-ல் ராகுவும் இருந்தால் 75 வயதுண்டாகும்.

---

* நக்ஷத்திர கண்டங்களில் சேர்க்கையாகும்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மிதுன லக்கினமாகிப் பிறந்து சனி 11-லும் குரு 1-லும் இருந்தால் 68 வயதுண்டாகி சனி தெசை சந்திர புத்தியில் தைமாதத்தில் தேய்பிறைத்திங்களில் துவாதசியில் அதிசாரத்தினல் நிரியாணம் நேரிடும்.

கிருத்திகை நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் சிம்மமாகப் பிறந்த சித்திரை நக்ஷத்திரத்தின் இரண்டாவது பாதத்தில் சூரியனும், 8 மாதிபதியான குரு 12-லும், சனி 9-லுமிருந்தால் 68 வயதுண்டாகிச் சனி திசையில் ராகு புத்தியில் ரிஷப மகர கன்னியா திரிகோண ராசிகளில் ஒன்றில் சூரியன் வரும்போது வளர் பிறை அஷ்டமியில் நிரியாணம் நேரிடும்.

சித்திரை நக்ஷத்திரத்தின் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனியுடன் புதன் கூடி 4-லும் குரு 11-லு மிருந்தால் 68 வயதுண்டாகும். ஷை புததெசை சந்திர புத்தியில் தனூர் மாதத்தில் சுக்கிலபக்ஷ புதன் கிழமையில் துவாதசியில் நடு இரவில் நிரியாணம் நேரும்.

கன்னியாராசியில் சந்திரன் குருவுடன் கூடியிருந்து சனி மிதுனத்தில் இருந்தால் 6-வது திசை சுய புத்தியில் நிரியாணம். பூர்ணுபுள் ஜாதகம்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மிதுனம் லக்கினமாகின் குரு ஷை சந்திரனுடன் கூடியிருந்து, சனி 9-லு மிருந்தால் 70 வயதுண்டாகும்.

சதயம் 3.வது பாதம் சந்திரனிருக்கும் ஜன்ம நக்ஷத்திரமாகி அஷ்டமாதிபதியான சனி அதிமித்ர ராசியிலும் லக்கினுதிபதி லக்னத்திலும் இருந்தால் 67 வயதுண்டாகும், 28, 29, 43, 52 இந்த வயதுகளில் கண்டமுண்டாகி கேது திசை சனி புத்தியில் கன்யாராசி திரிகோணங்களில் சூரியனிருக்கும்போது சுக்கில பக்ஷ வெள்ளிக்கிழமையில் அதிசாரத்தினல் விடியற்காலையில் மரணமுண்டாகும்.

பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினத்தில் மிதுனத்தில் சுக்கிரனிருந்து 1 மாதி, 2-லுமிருந்து சனி 3-லுமிருந்தால் 67 வயதுண்டாகிச் சந்திர திசை முடிவில் நிரியாணம் நேரும்.

மேஷ லக்கின ஆயுள்

பரணி நக்ஷத்திரம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினம் மேஷமாகிப் பிறந்து சனி உச்சத்திலிருந்து 1-மாதி 10-லும் இருந்தால் 53 வயதுண்டாகும், ஐம்பத்துமூன்றில் பங்குனிமீ வளர்பிறை ஏகாதசியில் வெள்ளிக்கிழமை விடியற்காலையில் மரணஞ் சம்பவிக்கும்.

துலாராசியில் சந்திரன் இருந்து 1-மாதி 4-லாவது 10-லாவது இருந்து சனி 12-லுமிருந்தால் 65 வயதுண்டாகும். சிலர் மதம் 68 என்பது, இவனுக்கு கன்னியில் ராகு இருந்தால் 5-வது திசையில் ஷை ராகுபுத்தியில் நிரியாணம் நேரிடும்.

புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து தனுசில் 8-மாதியும் ரிஷபத்தில் சனியுமிருந்தால் 69 அல்லது 70 வயதுண்டாகும். இத்துடன் சுக்கிரன் கடகத்தில் இருந்தால் அந்த திசை சனி புத்தியில் மார்கழி மாதத்தில் நிரியாணம்.

சதயம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 9-ல் 8-மாதியும் சனி மிதுனத்திலுமிருந்து சுக்கிரன் 12-லுமிருந்தால் மேற்படி சுக்கிர தெசை ராகு புத்தியில் ஆடியல்லது கார்த்திகையல்லது பங்குனி மாதத்தில் வளர்பிறையில் வெள்ளிக்கிழமையில் 68 வயதில் சதுர்த்தசியில் தலையில் ரோகத்தினல் மரிப்பான்.

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 8 மாதி 7-லும் சனி 6-லுமிருந்து 11-ல் ராகுவு மிருந்தால் 70 வயதுண்டாகி 7-வது திசை சுயபுத்தியில் முன் சொல்லியபடி ஆடி பங்குனி கார்த்திகை இந்த மாதங்களில் ஒன்றில் சுக்கிலபக்ஷ வியாழக்கிழமை ஏகாதசியில் நிரியாணம் விடியற்காலையில் நேரும்.

அனுஷம் 1-வது பாதத்தில் விருச்சிக ராசியில் சந்திரனும் திருஓணம் 4-ல் குருவும் பூரம் 1-ல் செவ்வாயும் சுவாதி 3-ல் சனியுமிருந்தால் வயது 65 ஆகும்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனும் சுவாதி 2-ல் செவ்வாயும் மூலம் 3-வது பாதத்தில் சனியுமிருந்தால் வயது 67 உண்டாகும், கேட்டை 4-ல் குருவுமிருந்தால் இந்த வயது ஏற்படும்.

கிருத்திகை 4-வது பாதத்தில் சந்திரனும் ரேவதி 2-ல் சனியும் சித்திரை 3-ல் குருவும் அவிட்டம் 3-ல் செவ்வாயு மிருந்தால் 65 வயதுண்டாகும்.

உத்திராடம் 4-ல் சந்திரனும் அசுவனி 3-ல் சனியும் மகம் 2-ல் செவ்வாயும் பரணி 4-ல் குருவு மிருந்தால் மத்திம வய துண்டாகும்.

மகம் 4-ல் சந்திரனும் ரேவதி 1-ல் சனியும் சித்திரை 2-ல் செவ்வாயும் குரு பூரட்டாதி 3-லுமிருந்தால் 67 வயதுண்டாகும்.

அவிட்டம் 2-வது பாதத்தில் சந்திரனும் ஹஸ்தம் 1-வது பாதத்தில் சனியும் அசுவனி 3-ல் குருவும் சுவாதி 1-ல் செவ்வாயு மிருந்தால் மத்திம வயதுண்டாகும்.

மூலம் 2-வது பாதத்தில் சந்திரனும் சனி பூரம் 4-வது பாதத்திலும் குரு உத்திரட்டாதி 1-லும் செவ்வாய் கிருத்திகை 3-வது பாதத்திலுமிருந்தால் வயது மத்திமம்.

மூலம் 3-வது பாதத்தில் சந்திரனும் சித்திரை 1-வது பாதத்தில் குருவும் திருஆதிரை 2-ல் சனியும் சதயம் 1-ல் செவ்வாயு மிருந்தால் வயது 71 உண்டாகும்.

ஆயில்யம் 3-ல் சந்திரனும் கிருத்திகை 3-ல் குருவும் விசாகம் 2-ல் செவ்வாயும் மூலம் 1-ல் சனியுமிருந்தால் 70 வயதுண்டாகும்.

புனர்பூசம் 4-வது பாதத்தில் சந்திரனும் உத்திரட்டாதி 1-ல் செவ்வாயும் கிருத்திகை 1-ல் சனியும் உத்திராடம் 2-ல் குருவுமிருந்தால் 72 வயதுண்டாகும்.

மூலம் 3-வது பாதத்தில் சந்திரனும் திரு ஆதிரை 2-ல் சனியும் சித்திரை 1-ல் குருவும் சதையம் 1-ல் செவ்வாயு மிருந்தால் 71 வயதுண்டாகும்.

சதயம் 4-வது பாதத்தில் சந்திரனும் மிருகசீரிஷம் 3-ல் சனியும் பூரம் 2-ல் குருவும் பூரம் 3-வது பாதத்தில் செவ்வாயு மிருந்தால் 70 வயதுண்டாகும்.

பூரட்டாதி 3-வது பாதத்தில் சந்திரனும் திருஓணம் 3-ல் சனியும் விசாகம் 1-ல் குருவும் ஹஸ்தம் 4-ல் செவ்வாயு மிருந்தால் மிருந்தால் வயது 72 உண்டாகும்.

சுவாதி 2-வது பாதத்தில் சந்திரனும் திருவாதிரை 1-ல் சனியும் திருவாதிரை 3-ல் செவ்வாயும் ரேவதி 8-ல் குருவுமிருந்தால் வயது 75 உண்டாகும்.

பூரம் 4-வது பாதத்தில் சந்திரனும் உத்திரட்டாதி 1-ல் குருவும் உத்திரம் 1-ல் செவ்வாயும் உத்திராடம் 3-ல் சனியு மிருந்தால் வயது 64-ஏற்படும்.

பரணி 2-வது பாதத்தில் சந்திரனும் திரு ஓணம் 4-ல் சனியும் சுவாதி 2-ல் குருவும் செவ்வாய் மகம் 1-லாவது ஆயில்யம் 4-லாவது மிருந்தால் வயது 61 ஆகும்.

ரோகிணி 4-ல் சந்திரனும் பூரட்டாதி 4-ல் குருவும் ரோகிணி 1-ல் செவ்வாயும் உத்திரம் 1-ல் சனியு மிருந்தால் 67 வயதுண்டாகும்.

விசாகம் 4-வது பாதத்தில் சந்திரனும் ஹஸ்தம் 3-ல் குருவும் திரு ஆதிரை 2-ல் சனியும் செவ்வாய் மகரத்திலு மிருந்தால் 66-வயதுண்டாகும்.

ரோகிணி 3-வது பாதச் சந்திரனும் திரு ஆதிரை 4-ல் சனியும் மகம் 1-ல் செவ்வாயு மிருந்தால் 71-வயதுண்டாகும்.

சுவாதி 2-ல் சந்திரனும் திரு ஆதிரை 1-ல் சனியும் ரேவதி 3-ல் குருவும் திருவாதிரை 1-ல் செவ்வாயுமிருந்தால் 70 வயதுண்டாகும்.

திருஓணம் 2-வது பாதத்தில் சந்திரனும் திருஓணம் 4-ல் குருவும் பூரட்டாதி 3-ல் செவ்வாயும் ரேவதி 4-ல் சனியு மிருந்தால் வயது மத்திமமாகும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனும் திருவாதிரை 3-ல் குருவும் சுவாதி 1-ல் சனியும் உத்திரட்டாதி 1-ல் செவ்வாயு மிருந்தால் 55 அல்லது 56 வயதுண்டாகும்.

ரோகிணி 2-வது பாதத்தில் சந்திரனும் ரோகிணி 4-ல் செவ்வாயும் பூராடம் 1-ல் சனியும் திருவாதிரை 3-ல் குருவு மிருந்தால் 61 வயதுண்டாகும்.

விசாகம் 2-வது பாதத்தில் சந்திரனும் சுவாதி 2-ல் குருவும் சனி பரணி 2-லுமிருந்தால் வயது 71 உண்டாகும்.

ரிஷபலக்கின ஆயுள்

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 8 மாதி 10-லும் சுக்ரன் 2-லும் தனி 11-லுமிருந்தால் 67-வயதுண்டாகும்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு கடகத் திலும் சனி கும்பத்திலு மிருந்தால் 56 வயதுண்டாகிக்குரு தெசை யின் கடைசியில் மீன விருச்சிக கடக ராசிகளி லொன்றில் சூரிய னிருக்கும்போது சுக்கில பக்ஷத்தில் திங்கள் கிழமையில் சதுர்த் தசியில் மூல ரோகத்தினல் மரணமடைவான்.

பூரம் 4-வது பாதத்தில் சந்திரனும் கேட்டை 2-ல் செவ்வாயும் புனர்பூசம் 1-ல் சனியும் சுக்கிரன் ரேவதி 3-லும் விசாகம் 2-ல் குருவு மிருந்தால் 67 வயதுண்டாகும்.

விசாகம் 1-வது பாதத்தில் சந்திரனும் திருஓணம் 4-ல் சுக்கி ரனும் பூரம் 1-ல் செவ்வாயும் அசுவனி 1-ல் குருவும் ரேவதி 3-ல் சனியுமிருந்தால் வயது 72 உண்டாகும்.

மிருகசீரிஷம் 2-வது பாதத்தில் சந்திரனும் செவ்வாய் கன் னியா நவாம்சத்திலும் சுவாதி 4-ல் குருவும் புனர்பூசம் 1-ல் சனி யும் திருஆதிரை 4-ல் சுக்கிரனு மிருந்தால் 67 வயதுண்டாகும்.

ரோகிணி 3-வது பாதத்தில் சந்திரனும் ரோகிணி 1-ல் குரு வும் பரணி 1-ல் சனியும் சித்திரை 1-ல் செவ்வாயு மிருந்தால் வயது 72 உண்டாகும்.

பூசம் 3-ல் சந்திரனும் சுவாதி 2-ல் குருவும் புனர்பூசம் 2-ல் சுக்கிரனும் அனுஷம் 1-ல் செவ்வாயும் சதையம் 2-ல் சனியு மிருந் தால்—தீர்க்க வயது உண்டாகும்.

திரு ஆதிரை 3-வது பாதமல்லது புனர்பூசம் 1-வது பாதத் தில் சந்திரனும் ரோகிணி 3-ல் சுக்ரனும் பூரட்டாதி 4-ல் சனியும் பூராடம் 3-ல் குருவும் சதையம் 2-ல் செவ்வாயு மிருந்தால் 72 வய துண்டாகும்.

உத்திராடம் 4-வது பாதத்தில் சந்திரனும் ஆயில்யம் 4-ல் சுக் கிரனும் ரோகிணி 4-ல் செவ்வாயும் அனுஷம் 4-ல் குருவும் சதயம் 1-ல் சனியுமிருந்தால் 64 வயது ஏற்படும்.

பூராடம் 4-வது பாதத்தில் சந்திரனும் உத்திரட்டாதி 4-ல் குருவும் பரணி 4 ல் செவ்வாயும் மகம் 4-ல் சனியுமிருந்து சுக்கிரன் மேஷத்திலு மிருந்தால் 64 வயதுண்டாகும்.

மகம் 1-வது பாதத்தில் சந்திரனும் திருவாதிரை 4-ல் குரு வும் பூசம் 2-ல் செவ்வாயும் சித்திரை 2-ல் சுக்கிரனும் கிருத்

திகை 1-ல் சனியுமிருந்தால் வயது 61-உண்டாகும். இதற்கே ரிஷித்ரய சம்வாதத்தில் 71-வயதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ரோகிணி 4-லேயே சந்திரனும் சனியுமிருந்து சதயம் 4-ல் குருவும் மிதுனராசியில் செவ்வாயும் கிருத்திகை 2-ல் சுக்கிரனுமிருந்தால் 70-வயது சுக்கிர நாடியிலும் ரிஷித்ரய சம்வாதத்தில் 77-வயதும் சொல்லப்படுகிறது.

பூராடம் 1-ல் சந்திரனும் மூலம் 3-ல் சுக்கிரனும் பூராடம் 4-ல் செவ்வாயும் ஆயில்யம் 3-ல் குருவும் ரோகிணி 1-ல் சனியுமிருந்தால் 68-வயதுண்டாகும்.

பூசம் 1-ல் சந்திரனும் ரோகிணி 2-ல் குருவும் உத்திரம் 3-ல் சுக்கிரனும் பரணி 1-ல் சனியும் அசுவனி 4-ல் செவ்வாயுமிருந்தால் 65-வயதுண்டாகும்.

சித்திரை 2-வது பாதத்தில் சந்திரனும் பூசம் 1-ல் குருவும், ரோகிணி 4-ல் சுக்கிரனும், புனர்பூசம் 4-ல் சனியும் திருவாதிரை 3-ல் செவ்வாயுமிருந்தால் வயது 67-உண்டாகும்.

ஆயில்யம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 1-ல் சனியும் கேட்டை 4-ல் குருவும் மேஷத்தில் சுக்கிரனும் துலாத்தில் செவ்வாயுமிருந்தால் வயது 63-உண்டாகும்.

ரோகிணி 1-ல் சந்திரனும் பூரட்டாதி 4-ல் சனியும் சதயம் 1-ல் குருவும் புனர்பூசம் 4-ல் செவ்வாயும் சுக்கிரன் உச்சத்திலுமிருந்தால் மத்திம வயது.

உத்திராடம் 4-ல் சந்திரனும் அசுவனி 1-ல் சுக்கிரனும் உத்திராடம் 1-ல் சனியும் பூசம் 3-ல் குருவுமிருந்து தனுசில் செவ்வாயுமிருந்தால் வயது 71-உண்டாகும்.

சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனும் மூலம் 4-ல் குருவும் கிருத்திகை 2-ல் சனியும் சித்திரை 4-ல் செவ்வாயும் திருவாதிரை 4-ல் சுக்கிரனுமிருந்தால் 77-வயதுண்டாகும்.

உத்திராடம் 1-ல் சந்திரனும் மிதுனத்தில் சுக்கிரனும் மீனத்தில் செவ்வாயும் ஆயில்யம் 1-ல் சனியும் புனர்பூசம் 2-ல் குருவுமிருந்தால் வயது 56-ஏற்படும்.

ஆயில்யம் 2-வது பாதத்தில் சந்திரனும் பூரம் 1-லேயே குருவும் சனியுமிருந்து விசாகம் 4-ல் செவ்வாயும் விசாகம் 3-ல் சுக்கிரனுமிருந்தால் 77-வயதுண்டாகும்.

பரணி 4-விலாவது கிருத்திகை 4-விலாவது சந்திரனிருந்து செவ்வாய் மீனத்திலும் குரு உத்திரட்டாதி 1-லும் சனி பூரம் 1-லும் கிருத்திகை 4-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 65-உண்டாகும்.

பூராடம் 4-ல் சந்திரனும், பரணி 2-ல் குருவும், அவிட்டம் 2-ல் செவ்வாயும், விசாகம் 3-ல் சுக்கிரனும், திருஓணம் 3-ல் சனியுமிருந்தால் 67-வயதுண்டாகும்.

அவிட்டம் 3-வது பாதத்தில் சந்திரனும், சுவாதி 1-ல் புதனும் பூராடம் 1-ல் சனியும், மூலம் 3-ல் சுக்கிரனுமிருந்தாலும், உத்திரம் 4-ல் செவ்வாயிருந்தாலும் வயது 57-உண்டாகும்.

மிதுன லக்கின ஆயுள்

மூலம் 2-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து 3-5-4-10-மாதிகள் லக்கினத்திலும் சனி அனுஷம் 4-ம் பாதத்திலுமிருந்தால் 73-வயதுண்டாகும். மேற்படி குரு தெசை சுக்கிரபுத்தியில் மிதுன துலா கும்பராசிகளில் சூரியன் வரும்போது கிருஷ்ணபக்ஷ வியாழக்கிழமையில் திரயோதசியில் மாலையில் நிரியாணம் நேரும்.

மூலம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து லக்கினதிபதி 4-விலிருந்து 8-மாதி 1-லும் குரு 5-லுமிருந்தால் தனுசு லக்கின ஜாதகருக்கும், 68-வயதுண்டாகி மேற்படி குருதெசை சுயபுத்தியில் மீனமாதத்தில் சுக்கிலபக்ஷ சதுர்த்தசியில் விடியற்காலையில் நிரியாணம் நேரும்.

ஹஸ்தம் 4-வது பாதத்தில் சந்திரனும் சித்திரை 4-ல் புதனும், ஹஸ்தம் 4-வது பாதத்திலேயே சுக்கிரனும், திருவோணம் 3-ல் சனியுமிருந்தால் 55-வயதுண்டாகும்.

கேட்டை 4-வது பாதத்தில் சந்திரனும், சதயம் 4-ல் சுக்கிரனும், திருவோணம் 4-ல் புதனும், ஆயில்யம் 4-ல் சனியுமிருந்தால் 67-வயதுண்டாகும்.

சுவாதி 4-ல் சந்திரனும், அனுஷம் 3-ல் சனியும், ஹஸ்தம் 4-ல் சுக்கிரனும், ஆயில்யம் 3-ல் புதனுமிருந்தால் வயது 75-ஏற்படும்.

சுவாதி 3-ல் சந்திரனும் ரோகிணி 3-ல் புதனும் திரு ஆதிரை 1-ல் சுக்கிரனும் சுவாதி 3-ல் சனியும் இருந்தால் வயது தீர்க்கமாகும்.

ஆயில்யம் 2-வது பாதத்தில் சந்திரனும், அவிட்டம் 3-ல் சனியும், கேட்டை 2-ல் புதனும், விசாகம் 1-ல் சுக்கிரனுமிருந் தால் 72-வயதுண்டாகும்.

திருஆதிரை 2-ல் சந்திரனும் சனியுமிருந்து உத்திராடம் 4-ல் சுக்கிரனும் உத்திரட்டாதி 2-ல் புதனுமிருந்தால் தீர்க்க வயது உண்டாகும்.

சித்திரை 3-ல் சந்திரனிருந்து சுவாதி 2-ல் சுக்கிரனும், அனு ஷம் 4-ல் புதனும், சனி மகரத்தில் உத்திராடம் 2-ல் அல்லது தனுசில் உத்திராடம் 1-ல் இருந்தாலும் 75-வயதுண்டாகும்.

திருஆதிரை 1-ல் சந்திரனிருந்து மகம் 2-ல் சனியும் ரோகிணி 3-ல் புதனும் பூசம் 2-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 55 உண்டாகும்.

அசுவனி 1-ல் சந்திரனிருந்து பூரட்டாதி 4-ல் சனியும் சுவாதி 4-ல் புதனும் அனுஷம் 1-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 61 ஏற்படும்.

ஹஸ்தம் 2-வது பாதச்சந்திரனும் ரேவதி 1-ல் சனியும் மகம் 1-ல் புதனும் பூசம் 2-ல் சுக்ரனுமிருந்தால் 67-வயதேற்படும்.

ரேவதி 4-ல் சந்திரனிருந்து சனியும், ரேவதி 4-ல் இருந்து பரணி 4-ல் புதனும், உத்திரட்டாதி 2-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 72-ஏற்படும்.

பூராடம் 3-ல் சந்திரனும் ரோகிணி 3-ல் புதனும் ரோகிணி 1-ல் சுக்கிரனும் ஆயில்யம் 1-ல் சனியுமிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

விசாகம் 4-வது பாதத்தில் சந்திரனும் விசாகம் 3-வது பாதத்தில் சுக்கிரனும் பரணி 3-ல் சனியும் உத்திராடம் 4-ல் புதனுமிருந்தால் 65-வயதேற்படும்.

கேட்டை 4-வது பாதத்தில் சந்திரனும், பூரட்டாதி 2-ல் சனியும், திருஆதிரை 4-ல் புதனும், மிருகசீரிஷம் 2-ல் சுக்கிரனு மிருந்தால் வயது 75-ஏற்படும்.

உத்திரம் 4-வது பாதத்தில் சந்திரனும், சதயம் 1-ல் புதனும், அவிட்டம் 1-ல் சனியும், அவிட்டம் 2-ல் சுக்கிரனுமிருந்தால் 67-வயதுண்டாகும்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனும், திருஆதிரை 3-ல் புதனும், ஆயில்யம் 1-ல் சுக்கிரனும் பரணி 2-ல் சனியுமிருந்தால் வயது 59-உண்டாகும்.

பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பரணி 4-ல் சனியும், சித்திரை 2-ல் புதனும், ஹஸ்தம் 3-ல் சுக்கிரனுமிருந்தால் 75-வயதுண்டாகும்.

கேட்டை 2-வது பாதத்தில் சந்திரனும் ரேவதி 4-ல் சனியும், ஆயில்யம் 2-ல் புதனும், பூசம் 3-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 65-ஏற்படும்.

பூசம் 4-வது பாதத்தில் சந்திரனும், சுவாதி 3-ல் புதனும், ஆயில்யம் 3-ல் சனியும், அனுஷம் 2-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 56-ஏற்படும்.

சுவாதி 1-வது பாதத்தில் சந்திரனும், சதயம் 1-ல் சனியும், சதயம் 1-லேயே சுக்கிரனுமிருந்து அவிட்டம் 1-ல் புதனிருந்தால் 67-வயதுண்டாகும்.

திருஓணம் 4-வது பாதத்தில் சந்திரனும், பூராடம் 3-வது பாதத்தில் புதனும், திருஓணம் 3-ல் சனியும், விருச்சிகத்தில் சுக்கிரனுமிருந்தால் வயது 72-உண்டாகும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனும், சுவாதி 4-ல் சனியும் ரோகிணி 2-ல் புதசுக்கிரருமிருந்தால் வயது 85-உண்டாகும்.

ஆயில்யம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து அசுவனி 3-ல் சனியும், மகம் 1-ல் சுக்கிரனுமிருந்து உத்திரம் 3-ல் புதனுமிருந்தால் 75-வயதுண்டாகும்.

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனும், சுவாதி 1-ல் சுக்கிரனும், சித்திரை 1-ல் சனியும், அனுஷம் 2-ல் புதனுமிருந்தால் 77-வயதுண்டாகும்.

மிருகசீரிஷம் 2-ல் சந்திரனும் உத்திரம் 3-வது பாதத்தில் புதசுக்கிரரும் கூடியிருந்து, சுவாதி 4-ல் சனியுமிருந்தால் 65-வயதுண்டாகும்.

திருஓணம் 4-வது பாதத்தில் சந்திரனும் மகம் 3-ல் சனியும் மகம் 1-ல் புதனும் பூரம் 4-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 57 உண்டாகும்.

உத்திரட்டாதி 4-ல் சந்திரனிருந்து பூரம் 2-ல் புதனும் பூசம் 1-ல் சுக்கிரனும் பரணி 3-ல் சனியுமிருந்தால் 76 வயதுண்டாகும்.

மிருகசீரிஷம் 1-ல் சந்திரனும், அனுஷம் 3-ல் புதனும், சுவாதி 3-ல் சுக்கிரனும், விசாகம் 2-ல் சனியுமிருந்தால் வயது தீர்க்க உண்டாகும்.

மகம் 4-வது பாதத்தில் சந்திரனும், புனர்பூசம் 2-ல் புதனும், ஆயில்யம் 1-ல் சுக்கிரனும், சதயம் 1-ல் சனியுமிருந்தால் வயது 61 ஏற்படும்.

கடக லக்கின ஆயுள்

அவிட்டம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 4-லும் செவ்வாய் உச்சத்திலுமிருந்தால் கடகலக்கின ஜாதகத்தினரின் வயது 59 அல்லது 60 ஆகும். இத்துடன் புதன் 6-ல் இருந்தால் மேற்படி புத தெசையில் சுக்கிரபுத்தியில் மேஷ சிம்ம தனுர் மாதங்களில் சூரியனிருக்கும்போது சுக்கிலபக்ஷ வெள்ளிக்கிழமையில் சாயங்கால வேளையில் நிரியாண முண்டாகும்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, 8-மாதி 7-லாவது 12-லாவதிருந்தாலும், குரு 3-ல் இருந்தால் 69 வயதுண்டாகி 7-வது தெசை சனி புத்தியில் நிரியாண மடைவர்.

பூராட நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து சனி துலாத்தில் இருந்தால் 70 வயதுண்டாகி, 70-ஆவது வயதில் மாசி மாதம் சுக்கில சதுர்த்தசியில் ஆயில்யமல்லது மகநக்ஷத்திரம் கூடிய தினம் நிரியாணம், முன் ஜன்மம் மிலேச்ச ஜன்மம். பிறகு மேன்மையான ஜன்மம்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-மாதி 1-லும் சித்திரை 3-வது பாதத்தில் சுக்கிரனுமிருந்தால் 65 வயதுண்டாகி, ஆவணி மாதத்தில் வளர்பிறை ஏகாதசியில் ஞாயிற்றுக் கிழமையில் நடு இரவுக்குப் பின் மரணஞ் சம்பவிக்கும்.

கேட்டை 1-வது பாதத்தில் சந்திரனிருந்து, சனி, 9-லும் ராகு 8-லும் இருந்தால் 65 வயதுண்டாகி ராகு தெசை சுயபுத்தி

யில் மாசிமாத வளர்பிறை அஷ்டமியில் ஞாயிறன்று அதிசாரத்தி னல் மரணமுண்டாகும்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, சனி 8-லும் குரு லக் கினத்திலுமிருந்தால் 70 வயதுண்டாகி ஏழாவது திசையில் 70 வயதில் கும்பராசிக்குரிய மாதம் தேய்பிறை சதுர்த்தசி திங்கள் கிழமை ராத்திரியில் நிரியாணம் நேரிடும்.

அனுஷ நக்ஷத்திரத்தில் சந்திரனிருந்து, 10-மாதியுடன் சனி 6-லும், குரு லக்கினத்திலுமிருந்தால் 73 வயதுண்டாகி செவ்வாய் திசை சனி புத்தியில் பங்குனி மாத வளர்பிறை பௌர்ணமி உத் திரமிவைகளின் பிற்பாதியில் மரிப்பார்.

மகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து, சனி 8-லும் குரு லக் கினத்திலுமிருந்தால் 77 வயதுண்டாகி, குரு தெசை முடிவில் மாசி மாதம் வெள்ளிக்கிழமை வளர்பிறை அஷ்டமியில் மரணம் சம்ப விக்கும்.

பரணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 3-ல் சனியும் பூரம் 4-ல் புதனுமிருந்தால் 70 வயதுண்டாகும்.

மூலம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரட்டாதி 4-ல் சனியும் பூசம் 1-ல் புதனுமிருந்தால் வயது 70 உண்டாகும்.

சுவாதி 1-வது பாதத்தில் சந்திரனும் சதயம் 1-ல் சனியும் உத் திராடம் 4-ல் புதனுமிருந்தால் வயது 58 உண்டாகும். சிலர் 59 அல்லது 69 உண்டாகுமென்று சொல்லுகின்றனர்.

பூராடம் 1-வது பாதத்தில் சந்திரனும் மூலம் 3-ல் சனியும், மகம் 4-ல் புதனுமிருந்தால் வயது 72 உண்டாகும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பூரட்டாதி 3-ல் புத னும் ரோகிணி 3-ல் சனியுமிருந்தால் 67 வயதுண்டாகும்.

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பூரம் 4-ல் புதனும் திருஓணம் 3-ல் சனியுமிருந்தால் 65 வயதுண்டாகும்.

ரோகிணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து, திருஓணம் 3-ல் புதனும் விசாகம் 2-ல் சனியுமிருந்தால் வயது மத்திமம் ஏற்படும்.

பூராடம் 1-ல் சந்திரனும், சதயம் 1-ல் சனியும் விசாகம் 1-ல் புதனுமிருந்தால் வயது 64 உண்டாகும்.

ரேவதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்தால் விசாகம் 1-ல் சனியும் கேட்டை 2-ல் புதனுமிருந்தால் வயது 68 உண்டாகும்.

திருஓணம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 4-ல் சனியும் புனர்பூசம் 1-ல் புதனுமிருந்தால் வயது 65 உண்டாகும்.

புனர்பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து ஆயில்யம் 2-ல் சனியும் உத்திரட்டாதி 1-ல் புதனுமிருந்தால் 67 வயதுண்டாகும்.

ஆயில்யம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 4-ல் புதனும் உத்திரட்டாதி 4-ல் சனியுமிருந்தால் 64 வயதே உண்டாகும்.

திருஓணம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து பரணி 1-ல் சனியும் சுவாதி 4-ல் புதனுமிருந்தால் 65 வயதுண்டாகும்.

சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனும் மகம் 1-ல் சனியும் மூலம் 2-ல் புதனுமிருந்தால் 68 வயதுண்டாகும்.

மூலம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சதயம் 3-ல் சனியும் அவிட்டம் 3-ல் புதனுமிருந்தால் வயது 64 உண்டாகும்.

கிருத்திகை 4-ல் சந்திரனிருந்து சித்திரை 3-ல் சனியும் மகம் 2-ல் புதனுமிருந்தால் 70 வயதுண்டாகும்.

ஹஸ்தம் 4-வது பாதத்தில் சந்திரனும் ரோகிணி 1-ல் சனியும் புதன் கன்னியிலுமிருந்தால் 64 வயதுண்டாகும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து மீனத்தில் புதனும் பரணி 1-ல் சனியுமிருந்தால் 68 வயதுண்டாகும்.

உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனும் திருஓணம் 4-ல் சனியும் சித்திரை 3-ல் புதனுமிருந்தால் 62 அல்லது 63 என்று சுக்கிர நாடியிலும், வசிஷ்டாதிரிஷித்ரய சம்வாதத்தில் 67 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பரணி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து ஹஸ்தம் 1-ல் சனியும் ஹஸ்தம் 3-ல் புதனுமிருந்தால் 68 வயதுண்டாகும். 65 வயதே என்பது சிலர் மதம்.

சுவாதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 3-ல் சனியும் புதன் துலாத்திலுமிருந்தால் வயது 65 உண்டாகும்.

விருச்சிக ராசியில் சந்திரனும், கும்பத்தில் சனியுமிருந்தால் வயது பூர்ணம் உண்டாகும்.

கிருத்திகை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 1-ல் சனியும் ரேவதி 3-ல் புதனுமிருந்தால் 71 வயதுண்டாகும்.

பூசம் 1-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து சுவாதி 2-ல் சனியும் கேட்டை 3-ல் புதனுமிருந்தால் 64 வயதுண்டாகும்.

அனுஷம் 4-ல் சந்திரனிருந்து உத்திராடம் 1-ல் புதனும் சதயம் 4-ல் சனியுமிருந்தால் 260 வயதென்று சுக்கிர நாடியிலும், மேற்படி நாடியிலேயே ரிஷித்ரய சம்வாதத்தில் 1000 வருஷம் ஆயுளென்று வசிஷ்டர் மதமாகவும் தெரிகிறது.

பூராடம் 4-ல் சந்திரனிருந்து திருவாதிரை 3-ல் புதனும் அவிட்டம் 1-ல் சனியுமிருந்தால் வயது 72 உண்டாகும்.

பூரம் 1-ல் சந்திரனிருந்து சித்திரை 3-ல் சனியும் சுவாதி 2-ல் புதனுமிருந்தால் 62 வயதேற்படும்.

புனர்பூசம் 3-ல் சந்திரனிருந்து மகம் 4-ல் சனியும் பூரம் 2-ல் புதனுமிருந்தால் வயது 70 உண்டாகும்.

கேட்டை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து பூராடம் 2-வது பாதத்தில் சனியும் மேஷத்தில் புதனுமிருந்தால் வயது 71 உண்டாகும்.

கேட்டை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து, அனுஷம் 3-ல் சனியும் பூராடம் 1-ல் புதனுமிருந்தால் வயது தீர்க்கம் உண்டாகும்.

ரேவதி 2-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து, உத்திரம் 1-ல் சனியும், அனுஷம் 1-ல் புதனுமிருந்தால் வயது 72 தீர்க்கமாக ஏற்படும்.

அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரம் 1-ல் சனியும் பரணி 2-ல் புதனுமிருந்தால் வயது 65 ஏற்படும்.

அசுவனி 3-வது பாதத்தில் சந்திரனும் கிருத்திகை 4-ல் புதனும், புனர்பூசம் 1-ல் சனியுமிருந்தால் வயது 67 உண்டாகும்.

உத்திரட்டாதி 1-ல் சந்திரனிருந்து திருஓணம் 3-ல் சனியும் மூலம் 1-ல் புதனும் இருந்தால் வயது 65 உண்டாகும்.

சிம்ம லக்கின ஆயுள்

கிருத்திகை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து சித்திரை 2-வது பாதத்தில் சூரியனும் 12-ல் குருவும் சனி 9-லும் இருந்தால் 68 வயதுண்டாகும். கன்னியாராசி திரிகோண மாத சூரியனிருக்கும்போது சனி தெசை ராகு புத்தியில் வளர்பிறை அஷ்டமியில் மரணமுண்டாகும்.

மேஷராசியில் சந்திரனிருந்து, குரு பூசம் 3-வது பாதத்திலும் சனி உச்சத்திலுமிருந்தால் (கடகலக்கின ஜாதகருக்கும்) வயது 300 என்று சிலரும், வேறு சிலர் 5-ல் 10-ஆம் ஆதியும் ராகுவும் கூடியிருந்தால் ஆயுளின் முடிவறிய முடியாதென்றும் ஒரு சமயம் 300 வருஷமே ஜீவித்திருந்தாலும் இருக்கக்கூடுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-மாதியும் 1-மாதியும் 5 லிருந்து 10-மாதி 4-ல் இருந்தால் சிம்மலக்கின ஜாதகருடைய வயது 60 பூர்ணமாகும்.

உத்திரம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, 8-மாதி 10-லும் லக்கினாதி 4-லும் சனி 2-லு மிருந்தால் 68 வயதுண்டாகி சனி திசை சந்திர புத்தியில் மீனமாதத்தில் சுக்கிலர திரயோதசியில் புண்ணிய க்ஷேத்திரத்தில் புதவாரத்தில் நிரியாணம் நேரும்.

பூராடம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து அஷ்டமாதிபதி 6-லும் சனி 1-லும் 1-மாதி 4-லுமிருந்தால் 70 வயதுண்டாகும். ஷை சனி திசை சுக்கிரபுத்தியில் மாசிமாதத்தில் திங்கட்கிழமையில் கிருஷ்ணசதுர்த்தசியில் நற் கதி யடைவார்.

கிருத்திகை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 1,10-மாதிகள் 12-லும், குரு 2-லும், சனி 3-லுமிருந்தால் 61 அல்லது 62 வயதுண்டாகிச் சனி தெசையில் நிரியாணம் நேரும். சிலர் சனி திசை புத புத்தியில் நிரியாணம் நேருமென்றும் சொல்லுகிருர்கள்.

கிருத்திகை நக்ஷத்திர 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 3-ல் 8-மாதியும் 1-மாதி 7-லும் சுக்கிரன் 8-லும் சனி 12-லுமிருந்தால் 64 வயதுண்டாகும். 18, 24, 28, 51, 58, இந்த வயதுகளில் கஷ்டமும் நேரிடும். சாந்தி செய்தால் சுகமுண்டாகும். ஷை சனி தெசை கேது புத்தியில் பங்குனிமீ௴ வளர்பிறை புதன்கிழமை பஞ்சமியில் நடுஇரவில் நிரியாண முண்டாகும்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து அஷ்டமாதிபதி 9-லும் சனி 6-லும் சூரியன் கும்பத்திலுமிருந்தால் 67 வய துண்டாகிக் குரு தெசை சனி புத்தியில் மாசிமாத தேய்பிறை சதுர்த்தசியில் வெள்ளிக்கிழமையில் சாயங்காலத்தில் நிரியாணம் நேரும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சித்திரை நக்ஷத்திரத்தின் 2-வது பாதத்தில் சூரியனும் சனி மேற்படி சந்திரனுடனும் குரு கடகத்திலுமிருந்தால் 68 வய துண்டாகி 10-ஆமிடத்தில் கேது இருந்தால் அந்தத் தெசையில் 68 வயதில் மீனமாத சுக்கிலபக்ஷ ஏகாதசியின் பிற்பாதி தினத்தில் விடியற்காலையில் மரண மென்றும், சிலர் துவாதசியில் மரணம் நேருமென்றும் சொல்லுகிறார்கள்.

அசுவனி 2-வது பாதத்தில் சந்திரனிருந்து 1-ல் அஷ்டமாதியும் 10-மாதி 4-லும் சனி 5-லுமிருந்தால் 65 வய துண்டாகி 7-வது தெசையில் மீனமாதத்தில் சுக்கிலபக்ஷ திரயோதசியில் உத்திர நக்ஷத்திரத்தில் விடியற்காலையில் நிரியாணம் நேரிடும்.

ரேவதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 3-லும் 10-மாதி 9-லும் அஷ்டமாதி 6- லுமிருந்தால் 68 வய துண்டாகி 7-வது தெசை குரு புத்தியில் நிரியாணமுண்டாகும்.

அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி 6-லும் குரு 11-லும் சுக்கிரன் 5-லும் சூரியன் 4-லுமிருந்தால் 73 வய துண்டாகிச் சந்திர திசை குரு புத்தியில் பங்குனி மாதத்தில் வியாழக்கிழமையில் அமாவாசையில் சாயங்காலத்தில் நிரியாணம் நடக்கும்.

பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து ஹஸ்தம் 2-ல் சூரியனும் கிருத்திகை 4-ல் குருவும் பூசம் 1-ல் சனியுமிருந்தால் வயது மத்திமம் உண்டாகும்.

மிருகசீரிஷம் 3-ல் சந்திரனும் விசாகம் 1-ல் குருவும் கிருத்திகை 2-ல் சனியும் மிருகசீரிஷம் 1-ல் சூரியனுமிருந்தால் 65 வய துண்டாகும்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு அசுவனி 2-லும் சனி கன்னியிலும் சூரியன் உத்திராடம் 4-லுமிருந்தால் 67 வய துண்டாகும்.

ரேவதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து ரோகிணி 3-ல் சூரியனும் மிருகசீரிஷம் 2-ல் சனியும் பூரம் 2-ல் குருவுமிருந்தால் 51 வயதுண்டாகும்.

புனர்பூசம் 1-ல் சந்திரனிருந்து பூரம் 2-ல் சனியும் உத்திராடம் 3-ல் சூரியனும் பூரம் 2-லேயே குருவுமிருந்தால் 87 வயது உண்டாகும்.

அனுஷம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து குரு பூராடம் 2-லும் சனி சதயம் 2-லும் சூரியன் நீச்ச ராசியிலுமிருந்தால் வயது 66 ஏற்படும்.

சதயம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 4-ல் குருவும் சனியும் கூடியிருந்து மூலம் 1-ல் சூரியனிருந்தால் 64 வயதுண்டாகும்.

பரணி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து, பரணி 3-ல் சனியும் திருஆதிரை 3-ல் குருவுமிருந்து உத்திராடம் 1-ல் சூரியனு மிருந்தால் வயது 64 ஏற்படும்.

பூரட்டாதி 1-ல் சந்திரனிருந்து புனர்பூசம் 4-ல் சூரியனும் ஹஸ்தம் 3-ல் சனியும் அனுஷம் 2-ல் குருவுமிருந்தால் 72 வயது உண்டாகும்.

உத்திராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திராடம் 3-ல் சூரியனும், பூரட்டாதி 3-ல் சனியும், திருஓணம் 4-ல் குருவுமிருந்தால் வயது 70 உண்டாகும்.

பூராடம் 1-ல் சந்திரனும் திருஓணம் 4-ல் குருவும் பூரட்டாதி 2-ல் சனியும் விருச்சிக ராசியில் அனுஷம் 1-ல் சூரியனுமிருந்தால் 65 வயதுண்டாகும். 67 என்பது சிலர் மதம்.

உத்திரம் 3-வது பாதத்தில் சந்திரனும் பூரட்டாதி 2-ல் குருவும் விசாகம் 4-ல் சனியும் சூரியன் தனுசு ராசியிலுமிருந்தால் வயது 71 உண்டாகும். 12, 18, 22, 25, 30, 35, 44, 50, 55, 60 இந்த வயதுகளில் கண்டங்கள் நேரும்.

ரேவதி 1-ல் சந்திரனிருந்து அனுஷம் 3-ல் குருவும் பூரம் 4-ல் சூரியனும் ஹஸ்தம் 4-ல் சனியுமிருந்தால் 65 வயதுண்டாகும்.

விசாகம் 2-ல் சந்திரனும் அசுவனி 4-ல் குருவும் திருஆதிரை 4-ல் சனியும் ரோகிணி 4-ல் சூரியனுமிருந்தால் வயது 61 ஏற்படும்.

சதயம் 4-ல் சந்திரனிருந்து பரணி 4-ல் குருவும் அசுவனி 4-ல் சனியும் கிருத்திகை 2-ல் சூரியனுமிருந்தால் வயது 65 ஏற்படும்.

பூரட்டாதி 2-ல் சந்திரனிருந்து திருஆதிரை 2-ல் சூரியனும் பூரட்டாதி 2-ல் சனியுமிருந்து குரு தனுசு ராசியில் இருந்தால் வயது 61 ஏற்படும்.

சதயம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகம் 4-ல் சனியும் அவிட்டம் 1-ல் குருவும் மகம் 3-ல் சூரியனுமிருந்தால் வயது 65 ஏற்படும்.

கிருத்திகை 1-ல் சந்திரனிருந்து அசுவனி 3-ல் சனியும் விசாகம் 4-ல் குருவும், சதயம் 3-ல் சூரியனுமிருந்தால் வயது 67 ஏற்படும்.

மூலம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து விசாகம் 3-வது பாதத்தில் சனியும் சதயம் 2-ல் குருவும், உத்திரட்டாதி 2-ல் சூரியனுமிருந்தால் வயது 65 ஏற்படும்.

ஆயில்யம் 3-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து பூரட்டாதி 4-ல் குருவும் உத்திரட்டாதி 4-ல் சனியும் மிருகசீரிஷம் 3-ல் சூரியனுமிருந்தால் 71 வயது ஏற்படும்.

மிருகசீரிஷம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரம் 1-ல் குருவும், உத்திரட்டாதி 1-ல் சூரியனும் உத்திரட்டாதி 3-ல் சனியுமிருந்தால் வயது 67 ஏற்படும்.

பூரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து கேட்டை 1-ல் சூரியனும் உத்திரட்டாதி 1-ல் சனியும் உத்திரம் 4-ல் குருவுமிருந்தால் 72 வயதுண்டாகும்.

விசாகம் 4-ல் சந்திரனிருந்து ஆயில்யம் 3-ல் குருவும் மிருகசீரிஷம் 3-ல் சூரியனிருந்து சுவாதி 4-ல் சனியிருந்தால் 71 வயதுண்டாகும்.

சுவாதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து புனர்பூசம் 1-ல் குருவும் மூலம் 4-ல் சனியும், திருவாதிரை 1-ல் சூரியனுமிருந்தால் எழுபது வயதேற்படும்.

சதயம் 2-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து குருவும் சந்திரனும் கூடியுமிருந்து, விசாகம் 3-ல் சனியும் உத்திரட்டாதி 2-ல் சூரியனுமிருந்தால் 67 வயதேற்படும்.

புனர்பூசம் 1-ல் சந்திரனிருந்து பூரம் 2-ல் குருவும் சனியும் கூடியிருந்து உத்திராடம் 3-ல் சூரியனிருந்தால் சித்தாயுளாக 7200 வருஷம் ஆயுளேற்படும்.

திருஓணம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மகம் 1-ல் குருவும், உத்திரட்டாதி 2-ல் சனியும் பூரட்டாதி 3-ல் சூரியனுமிருந்தால் வயது 67 ஏற்படும்.

பூரட்டாதி 3-ல் சந்திரனிருந்து உத்திராடம் 3-ல் சனியும், பூரம் 2-ல் குருவும் புனர்பூசம் 2-ல் சூரியனுமிருந்தால் வயது 65 ஏற்படும்.

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரட்டாதி 1-ல் சனியும், சதயம் 4-ல் சூரியனும், உத்திரம் 1-ல் குருவு மிருந்தால் வயது தீர்க்கமாக ஏற்படும்.

தனுசு ராசியில் சந்திரனும், விருச்சிக ராசியில் சூரியனும், குரு மிதுனத்திலும் சனி துலாத்திலுமிருந்தால் வயது மத்திமம்.

புனர்பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து திருஆதிரை 2-வது பாதத்தில் சனியும் இருந்து ரோகிணி 2-ல் சூரியனும் ஹஸ்தம் 2-ல் குருவுமிருந்தால் 61 வயதேற்படும்.

உத்திராடம் 4-ஆவது பாதத்தில் சந்திரனிருந்து சதயம் 1-ல் சூரியனும் பூரம் 4-ல் சனியும் ஹஸ்தம் 2-ல் குருவுமிருந்தால் மத்திம வயது ஏற்படும்.

மகம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து திருவாதிரை 3-ல் குருவும் மூலம் 2-ல் சனியும் கேட்டை 2-ல் சூரியனுமிருந்தால் வயது 71 உண்டாகும்.

புனர்பூசம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து அசுவனி 1-ல் சூரியனும் குரு கடகத்திலும் சனி துலாத்திலுமிருந்தால் வயது பூர்ணமாக ஏற்படும்.

அவிட்டம் 3-ல் சந்திரனிருந்து சதயம் 1-ல் சனியும் அசுவனி 1-ல் சூரியனும் கேட்டை 4-ல் குருவுமிருந்தால் வயது 63 ஏற்படும்.

திருஆதிரை 1-வது பாதச் சந்திரனிருக்க சதயம் 3-ல் குருவும் விசாகம் 3-ல் சனியும் சிம்மராசியில் சூரியனுமிருந்தால் 75 வயதுண்டாகும்.

மிருகசீரிஷம் 3 வது பாதத்தில் சந்திரனிருந்து கிருத்திகை 2-ல் சூரியனும் அவிட்டம் 2-ல் குருவும் மகம் 2-ல் சனியுமிருந்தால் 56 வயதேற்படும்.

ரேவதி 1-ல் சந்திரனிருந்து பூரம் 4-ல் ரவியும் ஹஸ்தம் 4-ல் சனியும் குரு அனுஷம் 3-லுமிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

கன்னியா லக்கின ஆயுள்

ஹஸ்தம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 1 மாதி 12-லும் 6-ல் அஷ்டமாதிபதியும் சனி 9-லு மிருந்தால் வயது 68 உண்டாகிச் சனி தெசை குரு புத்தியில் மேஷ திரிகோண மாதத்தில் சூரியன் வருங்காலம் சுக்கிலபக்ஷத்தில் குருவாரத்தில் மத்தியானத்தில் நல்ல ஞானத்துடனேயே கிரியாண மேற்படும். இதற்கே வேறு சிலர் அற்பாயு ளுண்டாகு மென்கின்றனர். இதற்கே சூரியன் பூரம் 1-வது பாதத்திலும் சுக்கிரன் சித்திரை 2-வது பாதத்திலும் இருந்து புதன் சிம்மத்திலும் இருந்தாலும் 3, 6, 11, ஆகிய விடங்களில் ராகு இருந்து சுபரால் பார்க்கப்பட்டாலும் வெகு ஆயுளுண்டாகு மென்கிறனர்.

அனுஷம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-மாதி உச்சத்திலும் சனி 4-லும் 1-மாதி 11-லு மிருந்தால் 65-வயதுண்டாகிச் சூரிய தெசை சுக்கிர புத்தியில் ஆவணி மாதம் சுக்கில பக்ஷத்தில் வெள்ளிக்கிழமை மாலையில் கிரியாணம் நேரிடும்.

ரேவதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து 8-மாதி 3-லும் 5-ல் 1-மாதியும் சனி 10-லு மிருந்தால் வயது 70 பூர்ணமாயுண்டாகும். இதற்கே 9-ல் ராகு விருந்தால் ராகு தெசைகேது புத்தியில்மாசிமீ சுக்கிலபக்ஷ துவாதசியில் வெள்ளிக்கிழமையில் அஜீர்ண ரோகத்தினல் கிரியாணம் நேரிடும்.

ரேவதி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து 1-மாதி 1-லும் 8-மாதி 12-லும், குரு 7-லு மிருந்தால் 65 வயதுண்டாகும். இதற்கே ராசியில் ராகு ரிஷபத்திலிருந்தால் மேற்படி ராகு தெசையில் புத புத்தியில் மேஷ திரிகோண ராசியில் சூரியனிருக்கும்

போது சுக்கில பக்ஷ வியாழக்கிழமை மாலையில் நிரியாணமுண்டாகும்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து, அஷ்டமாதிபதி லக்கினத்திலும் லக்கினுதிபதி 12-லும் இருந்தால், 68 வயதுண்டாகி லக்கினுதிபதி தெசையில் அஷ்டமாதிபதி புத்தியில் மேஷ திரிகோண ராசியில் ரவி யிருக்கும்போது கிருஷ்ண பக்ஷத்தில் ஞாயிறன்று மாலையில் மிருத்யு சம்பவிக்கும்.

கும்ப ராசியில் சந்திரனிருந்து லக்கினுதிபதி லக்கினத்திலும் சனி 4-லும் 8-மாதி 7-லு மிருந்தால் 72 வயதுண்டாகும்.

அவிட்டம் 1-ல் சந்திரனிருந்து உத்திராடம் 2-ல் சூரியனும் பூராடம் 3-ல் புதனும் உத்திராடம் 4-ல் சனியும் அனுஷம் 4-ல் செவ்வாயு மிருந்தால் 67 வயதுண்டாகும்.

ஹஸ்தம் 4-ல் சந்திரனிருந்து சுவாதி 4-ல் சூரியனும் புதனும் கூடியிருந்து, மூலம் 3-ல் சனியும் ஹஸ்தம் 2-ல் செவ்வாயு மிருந்தால் வயது 77 உண்டாகும். இதற்கே 68 சிலரும், ஜயமுனி 61-ம் சொல்லியுள்ளார்.

சுவாதி 4-ல் சந்திரனிருந்து திருவோணம் 3-ல் சூரியனும் அவிட்டம் 4-ல் புதனும் சுவாதி 3-ல் சனியும் உத்திரம் 1-ல் செவ்வாயு மிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

மகம் 4-ல் சந்திரனிருந்து பரணி 4-ல் சூரியனும் அவிட்டம் 3-ல் குருவும் ரோகிணி 2-ல் புதனும் உத்திராடம் 1-ல் சனியும் ஆயில்யம் 4-ல் செவ்வாயு மிருந்தால் வயது 61 உண்டாகும்.

சுவாதி 4-ல் சந்திரனிருந்து பரணி 2-ல் சனியும் கேட்டை 1-ல் சூரியனும் மூலம் 2-ல் புதனும் கேட்டை 3-ல் குருவும் ஹஸ்தம் 1-ல் செவ்வாயு மிருந்தால் 65 வயதேற்படும்.

பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து பூரம் 1-ல் சனியும் பூராடம் 2-ல் செவ்வாயும் அவிட்டம் 1-ல் புதனும் சதயம் 2-ல் குருவும் அவிட்டம் 4-ல் சூரியனுமிருந்தால் 67 வயதுண்டாகும்.

சித்திரை 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, கேட்டை 4-ல் சனியும் அனுஷம் 2-ல் செவ்வாயும் கும்பத்தில் புதனும் பூரட்டாதி 4-ல் சூரியனுமிருந்தால் வயது 68 உண்டாகும்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து அனுஷம் 4-ல் செவ்வாயும், மூலம் 1-ல் சனியும் ரேவதி 2-ல் சூரியனுமிருந்து ரேவதி 3-ல் புதனுமிருந்தால் 61 வயதுண்டாகும்.

உத்திரம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 2-ல் செவ்வாயும் உத்திரம் 2-ல் சூரியனும் உத்திரட்டாதி 1-ல் சனியும் ஸிம்மத்தில் புதனுமிருந்தால் 72 வயதுண்டாகும்.

ஆயில்யம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து அனுஷம் 1-ல் செவ்வாயும் கேட்டை 4-ல் சூரியனும் கேட்டை 2-லாவது அனுஷம் 2-லாவது புதனும் திருஓணம் 4-ல் சனியுமிருந்தால் வயது 63 ஏற்படும்.

ரோகிணி 4-வது பாதத்தில் சந்திரனிருந்து பரணி 1-ல் செவ்வாயும், புனர்பூசம் 2-ல் சூரியனும் திருஆதிரை 3-ல் புதனும் அவிட்டம் 4-ல் சனியுமிருந்தால் 72 வயது நேரும்.

பரணி 4-ல் அல்லது பூராடம் 4-ல் சந்திரனிருந்து அவிட்டம் 3-ல் குருவும் மகரத்தில் சூரியனும் கும்பத்தில் சனி செவ்வாயிவர்களு மிருந்தால் 65 வயதேற்படும்.

உத்திரட்டாதி 1-ல் சந்திரனும், சதயம் 4-ல் செவ்வாயும், உத்திராடம் 2-ல் சனியும், பூராடம் 1-ல் சூரியனும், பூராடம் 4-ல் புதனுமிருந்தால் 67 வயதுண்டாகும்,

பூராடம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து பூராடம் 3-ல் சூரியனும், பூராடம் 4-ல் புதனும், ஹஸ்தம் 4-ல் செவ்வாயும், அசுவனி 4-ல் சனியுமிருந்தால் வயது 81 உண்டாகும்.

உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து திருஆதிரை 2-ல் செவ்வாயும் பூராடம் 2-ல் புதனும் உத்திரம் 1-ல் சனியும் தனுசு ராசியில் சூரியனுமிருந்தால் 60, 65, 70-இந்த வயதுகளில் பீடை யடைந்து குணமாகி 75 வயதுண்டாகும்.

விசாகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 3-ல் செவ்வாயும் விசாகம் 2-ல் சனியும் புனர்பூசம் 1-ல் சூரியனும் பூசம் 4-ல் புதனுமிருந்தால் 68 வயதேற்படும்.

சதயம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து ஆயில்யம் 3-ல் செவ்வாயும் திருஆதிரை 4-ல் சூரியனும் மகம் 1-ல் சனியும் கடக ராசியில் புதனுமிருந்தால் 74 வயதுண்டாகும். 77 சிலர் மதம்.

சித்திரை 4-வது பாதத்தில் சந்திரனிருந்து மூலம் 1-ல் சூரியனும், பூராடம் 1-ல் செவ்வாயும் சித்திரை 3-ல் சனியும் மூலம் 3-ல் புதனுமிருந்தால் வயது 72 உண்டாகும்.

பூரட்டாதி 1-ல் சந்திரனிருந்து பரணி 1-ல் சூரியனும் பரணி 4-ல் புதனும், சனி பூரம் 2-லும் சதயம் 1-ல் செவ்வாயு மிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

கேட்டை 3-ல் சந்திரனிருந்து ஆயில்யம் 4-ல் சனியும் விசாகம் 2-ல் செவ்வாயும் பூராடம் 1-ல் புதனும் மூலம் 4-ல் சூரியனு மிருந்தால் வயது 62 ஏற்படும்.

உத்திரட்டாதி 1-ல் சந்திரனிருந்து ரோகிணி 2-ல் சூரியனும் உத்திராடம் 3-ல் சனியும் மிருகசீரிஷம் 4-ல் புதனும் புனர்பூசம் 2-ல் செவ்வாயு மிருந்தால் வயது 65 ஏற்படும்.

விசாகம் 3-ல் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 2-ல் சூரியனும், திருஓணம் 2-ல் செவ்வாயும் பூராடம் 2-ல் சனியும் ரோகிணி 4-ல் புதனுமிருந்தால் 70-வயதேற்படும்.

உத்திராடம் 2-ல் சந்திரனிருந்து பூராடம் 2-ல் சனியும், பூரம் 1-ல் புதனும், ஆயில்யம் 3-ல் சூரியனும், இருந்தால் 55-வயது ஏற்படும்.

ஹஸ்தம் 4-ல் சந்திரனிருந்து ஹஸ்தம் 1-ல் சனியும், கிருத்திகை 1-ல் செவ்வாயும், புனர்பூசம் 3-ல் சூரியனும், பூசம் 4-ல் புதனுமிருந்தால் வயது 61 ஏற்படும்.

சதயம் 1-ல் சந்திரனிருந்து மகம் 2-ல் புதனும், பூசம் 3-ல் சூரியனும், மகம் 3-ல் சனியும், சிம்மத்தில் செவ்வாயு மிருந்தால் 67-வயதேற்படும்.

உத்திராடம் 1-ல் சந்திரனிருந்து ரேவதி 1-ல் சூரியனும், மிருகசீரிஷம் 1-ல் சனியும், அசுவனி 1-ல் புதனும் விசாகம் 3-ல் செவ்வாயுமிருந்தால் வயது 65-ஏற்படும்.

பரணி 1-ல் சந்திரனிருந்து திருஆதிரை 2-ல் சூரியனிருந்து கிருத்திகை 3-ல் செவ்வாயும், மிதுனத்தில் புதனுமிருந்து அசுவனி 1-ல் சனி யிருந்தால் வயது 65 ஏற்படும்.

உத்திரட்டாதி 1-ல் சந்திரனிருந்து ரேவதி 2-ல் சூரியனும் ரேவதி 1-ல் செவ்வாயும் ரேவதி 4-ல் புதனும் கேட்டை 4-ல் சனியுமிருந்தால் வயது 58 ஆகும்.

மூலம் 4-ல் சந்திரனிருந்து புனர்பூசம் 4-ல் சூரியனும், திருஆதிரை 3-ல் சனியும் இருந்தால் 61 வயதேற்படும்.

பூசம் 1-ல் சந்திரனிருந்து மிருகசீரிஷம் 3-ல் புதனும், திரு ஆதிரை 3-ல் சூரியனும், திருவோணம் 4-ல் சனியும், ஆயில்யம் 1-ல் செவ்வாயு மிருந்தால் 63 வயதுண்டாகும்.

மகம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து பரணி 4-ல் சூரியனும், ரோகிணி 2-ல் புதனும், கேட்டை 4-ல் செவ்வாயும், உத்திராடம் 1-ல் சனியுமிருந்தால் வயது 70-உண்டாகும்.

மூலம் 3-ல் சந்திரனிருந்து ஹஸ்தம் 2-ல் சூரியனும், ரோகிணி 2-ல் செவ்வாயும், ஹஸ்தம் 2-ல் புதனும், பூரம் 3-ல் சனியுமிருந்தால் வயது 60 உண்டாகும்.

துலா லக்கின ஆயுள்

உத்திரட்டாதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சுக்கிரன் 11-லாவது 8-லாவது இருந்து, சனி லக்கினத்திலும் 10-ல் குஜனு மிருந்தால் 65-வயதுண்டாகி, பங்குனி மாதத்தில் ஞாயிறல்லது செவ்வாயில் சாயங்காலத்தில் ஞானத்துடன் நிரியாண மேற்படும்.

உத்திர நக்ஷத்திரத்தில் 4-வது பாதத்தில் கன்னியா ராசி யில் சந்திரனிருந்து 12-மாதி 4-லும் சனி 2-லும் சுக்கிரன் 5-லு மிருந்தால், 65-வயதுண்டாகி ஷ வயதில் கும்ப திரிகோண மாதத்தில் சூரியனிருக்கும்போது, சுக்கிலபக்ஷத்தில் வெள்ளிக் கிழமையில் ஆயில்யம் அல்லது மகநக்ஷத்திரத்தில் நிரியாணம் சம் பவிக்கும்.

புனர்பூசம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சனி சுக்கிரர் 7-லிருந்தால் அறுபத்தைந்து வயதுண்டாகி, சுக்கிர தெசை செவ் வாய் புத்தியில் நிரியாணமானது, சித்திரை மாதத்தில் சுக்கிலபக்ஷ சதுர்த்தசியில் வியாழக்கிழமையில் நடு இரவில் சம்பவிக்கும்.

விசாகம் 4-ல் சுக்கிரனும் பூரம் 4-ல் சந்திரனிருந்து ஹஸ்தம் 3-ல் புதனும், சனி திருவாதிரை 2-லுமிருந்தால் வயது பூர்ணமாக உண்டாகும்.

ரேவதி 2-ல் சந்திரனிருந்து மூலம் 3-ல் சுக்கிரனும் விசாகம் 2-ல் புதனும் சதயம் 4-ல் சனியுமிருந்தால் வயது தீர்க்கம் உண் டாகும்.

சந்திரன் ரோகிணி 1-வது பாதத்திலிருந்து சுவாதி 4-ல் புதனும் ஹஸ்தம் 4-ல் சுக்கிரனுமிருந்து சனி புனர்பூசம் 2-லு மிருந்தால் வயது 65 உண்டாகும்.

மகம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து சித்திரை 2-ல் புதனும் ஹஸ்தம் 3-ல் சுக்கிரனும் திருஓணம் 3-ல் சனியுமிருந்தால் வயது 66-உண்டாகும்.

மூலம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து, மூலம் 3-லேயே புதனிருந்து, திருஓணம் 2-ல் சனியும், சுக்கிரன் விசாகம் 3-ல் மிதுனத்தில் நவாசத்திலுமிருந்தால் வயது 70 உண்டாகும்.

பூசம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து உத்திரட்டாதி 1-ல் புதனும். மகம் 4-ல் சனியும் அசுவனி 3-ல் சுக்கிரனுமிருந்தால் வயது 62 உண்டாகும்.

உத்திராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து, சதயம் 1-ல் புதனும், அவிட்டம் 4-ல் சுக்கிரனும், உத்திராடம் 4-ல் சனியுமிருந்தால் வயது 67 உண்டாகும்.

ரேவதி 1-வது பாதத்தில் சந்திரனிருந்து ரேவதி 3-ல் சுக்கிரனும் உத்திராடம் 1-லாவது 2-லாவது புதன் இருந்து அவிட்டம் 3-ல் சனியுமிருந்தால் வயது 64-எற்படும்.

மகம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து, திருஓணம் 2-ல் சனி சுக்கிரரிருந்து அனுஷம் 3-ல் புதனிருந்தால் வயது 75 உண்டாகும்.

பூராடம் 1-வது பாதத்தில் சந்திரனிருந்து புனர்பூசம் 4-ல் சுக்கிரனும், புனர்பூசம் 1-ல் புதனும், பூரம் 1-ல் சனியுமிருந்தால் வயது தீர்க்கம் உண்டாகும்.

கேட்டை 3-வது பாதத்தில் சந்திரனிருந்து பூராடம் 3-ல் சுக்கிரனும், பூசம் 2-ல் சனியும், அவிட்டம் 3-ல் புதனுமிருந்தால் வயது 67 உண்டாகும்.

திருஓணம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, பூராடம் 3-ல் சுக்கிரனும், பூராடம் 4-ல் புதனும், மூலம் 2-ல் சனியுமிருந்தால் வயது 67 உண்டாகும்.

ஹஸ்தம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து, திருஓணம் 1-ல் புதனும், உத்திரம் 2-ல் சனியும் மூலம் 4-ல் சுக்கிரனுமிருந்தால் 62 வயதுண்டாகும்.

அவிட்டம் 3-வது பாதத்தில் சந்திரனிருந்து விசாகம் 1-ல் சுக்கிரனும், கேட்டை 3-ல் புதனும் சுவாதி 2-ல் சனியுமிருந்தால் 67 வயதுண்டாகும்.

உத்திரட்டாதி 3-வது பாதத்தில் சந்திரனிருந்து, உத்திராடம் 3-ல் புதனும், அவிட்டம் 3-ல் சுக்கிரனும் புனர்பூசம் 2-ல் சனியுமிருந்தால் 65-வயதுண்டாகும். 67-என்பது சிலர் மதம்.

பூசம் 2-வது பாதத்தில் சந்திரனிருந்து, உத்திரம் 3-ல் சனியும், திருஓணம் 3-ல் புதனும், உத்திரட்டாதி 1-ல் சுக்கிரனுமிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

ரோகிணி 1-ல் சந்திரனிருந்து, புனர்பூசம் 2-ல் சனியும் சுவாதி 4-ல் புதனும் ஹஸ்தம் 4-ல் சுக்கிரனுமிருந்தால் வயது தீர்க்கம் ஏற்படும்.

மிருகசீரிஷம் 4-வது பாதத்தில் சந்திரனிருந்து, உத்திராடம் 4-ல் புதனும் கேட்டை 4-ல் சுக்கிரனும் பூராடம் 3-ல் சனியுமிருந்தால் 46-வயதுண்டாகும்.

